வெளியீடு: 17-10-2008 Issued: 17-10-2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 25, 2008—தொகுதி 50—எண் 1**

**Friday, the 25th April 2008—Volume 50—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

**[Price Rs. 3.00**

## 25-4-2008

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xix

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-39

2. **விதி 110-ன்கீழ் அறிக்கை—**

வேலூர், ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி, 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் எரிந்தது குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை 39,40-42

*மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு 40-42

3. **தகவல் கோரல்—**

(அ) அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியப் பணிகள் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்யக் கோரிக்கை 40,51-52

திரு. சி. கோவிந்தசாமி 40

திரு. வை. சிவபுண்ணியம் 51,52

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 51,52

பக்கங்கள்


**3. தகவல் கோரல்**—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாட்டு காவல் துறை அதிகாரி திரு. ஜே.கே. திரிபாதி, இ.கா.ப., அவர்களுக்கு பாரதப் பிரதமர் விருது வழங்கப்பட்டிருப்பதற்குப் பாராட்டுத் தெரிவித்தல் — 42-45

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் — 42-43

திரு. ஜி.கே. மணி — 44

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 44-45

(இ) வாகனங்களில் சுழலும் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல் — 45

திரு. சி. ஞானசேகரன் — 45

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 45

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 45

(உ) சிவகங்கை தொகுதி, ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு அடிக்கல் நாட்டுதல் — 52-53

திரு. சு. குணசேகரன் — 52-53

**4. கவன ஈர்ப்பு**—

தளி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி, சாலை வசதி ஏற்படுத்துதல் — 46-50

*திரு. டி. இராமச்சந்திரன் — 46,49-50

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் — 46-48,50




பக்கங்கள்


**5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
(ஆ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) — 53-197

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் — 53,94-95, 99,100,127, 158,183-195

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் — 72,95, 166-182

திரு. ஆர். சின்னசாமி — 95-103

*திரு. கே. திருநாவுக்கரசு — 103-109

திரு. கோவை தங்கம் — 54,73, 109-112, 114-115, 117-122, 124-125

*திரு. தி. வேல்முருகன் — 58, 75, 123-134

திரு. சி. கோவிந்தசாமி — 60,77, 135-137, 139-142,147

| | பக்கங்கள் |
|---|---|
| 5. **மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 47—இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | 53-197 |
| *திரு. கே. உலகநாதன் | 67,88-89, 143-146 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 61,87, 148-152 |
| *திரு. செ. குருசாமி | 152-156 |
| திரு. அருள் அன்பரசு | 63,82, 157-161 |
| *திரு. ந. கணபதி | 92,161-166 |
| 6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 197-198 |


தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228382
சென்னை-600 008
நூலகம்



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுச் சுகண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

18. Minister for Labour .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. Minister for Hindu Religious and Charitable Endowments .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. Minister for Handlooms .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. Minister for School Education .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. Minister for Commercial Taxes .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. Minister for Environment .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. Minister for Forests .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. Minister for Highways .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. Minister for Social Welfare .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. Minister for Animal Husbandry .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. Minister for Adi Dravidar Welfare .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. Minister for Fisheries .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. Minister for Dairy Development .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. Minister for Khadi .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்.,பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. படசுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்.பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

11-96—1a

## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
25. இராமன், டாக்டர் இஎஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. .. பணமாத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பொன்னமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. .. கடலூர்
42. கணபதி, திரு. ந. .. வாழூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அத்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை
61. குலசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்
63. குமாரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. எஸ்.எஸ். - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

| | |
|---|---|
| 109. சேகரன், திரு. கு.ந. | - திருவெறும்பூர் |
| 110. சேகர், திரு. எஸ்.வி. | - மயிலாப்பூர் |
| 111. சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. | - மதுரை மத்தி |
| 113. சௌந்தரபாண்டியன், திரு. அ. | - லால்குடி |
| 114. சௌந்திரபாண்டியன், திரு. அ. | - குன்னூர் (செ.வ.) |
| 115. ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 116. ஞானதாஸ், திரு. ஆர். | - சிவகாசி |
| 117. டில்லி பாபு, திரு. ப. | - அரூர் (செ.வ.) |
| 118. தங்கமணி, திரு. பி. | - திருச்செங்கோடு |
| 119. தங்கம் தென்னரசு, திரு. | - அருப்புக்கோட்டை |
| 120. தங்கவேலன், திரு. சுப. | - கடலாடி |
| 121. தண்டபாணி, திரு. மா. | - வேடசந்தூர் |
| 122. தமிழரசி, திருமதி ஆ. | - சமயநல்லூர் (செ.வ.) |
| 123. தமிழரசு, திரு. அ. | - ஓமலூர் |
| 124. தமிழ்செல்வன், திரு. சி. | - ஏற்காடு (ஆ.வா.) |
| 125. தம்பிதுரை, முனைவர் மு. | - பர்கூர் |
| 126. தர்மலிங்கம், திரு. எல்.பி. | - சத்தியமங்கலம் |
| 127. தாமோதரன், திரு. செ. | - கிணத்துக்கடவு |
| 128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. | - பத்மநாபபுரம் |
| 129. திருநாவுக்கரசு, திரு. சே. | - உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 30. துரைக்கண்ணு, திரு. இரா. | - பாபநாசம் |



| | |
|---|---|
| 131. துரை சந்திரசேகரன், திரு. | - திருவையாறு |
| 132. துரைசாமி, திரு. வி.பெ. | - சங்கரி (செ.வ.) |
| 133. துரைமுருகன், திரு. | - காட்பாடி |
| 134. துரைராஜ், திரு. சி. | - சேடப்பட்டி |
| 135. தேன்மொழி, திருமதி எஸ். | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 137. நெடுஞ்செழியன், டாக்டர் க. | - கபிலர்மலை |
| 138. நெடுஞ்செழியன், திரு. ரெ. | - புதுக்கோட்டை |
| 139. நேரு, திரு. கே.என். | - திருச்சிராப்பள்ளி–2 |
| 140. பதர் சயீத், திருமதி | - திருவல்லிக்கேணி |
| 141. பத்மாவதி, திருமதி பி. | - நன்னிலம் (செ.வ.) |
| 142. பரஞ்ஜோதி, திரு. மு. | - ஸ்ரீரங்கம் |
| 143. பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 144. பலராமன், திரு. பி. | - பொன்னேரி (செ.வ.) |
| 145. பழனிசாமி, திரு. ஆர்.எம். | - மொடக்குறிச்சி |
| 146. பன்னீர்செல்வம், திரு. எம். | - சீர்காழி (செ.வ.) |
| 147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 148. பன்னீர்செல்வம், திரு. ஓ. | - பெரியகுளம் |
| 149. பாண்டுரங்கன், திரு. கு. | - அணைக்கட்டு |
| 150. பாபு, திரு. வி.எஸ். | - புரசைவாக்கம் |
| 151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. | - திருவிடைமருதூர் |
| 152. பாலபாரதி, செல்வி கே. | - திண்டுக்கல் |
| 153. பிச்சாண்டி, திரு. கு. | - திருவண்ணாமலை |

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பீ. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்—I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்–2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. பூ. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 13

## 2008 ஏப்ரல் 25, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி யிடத்தாற் செயின்."*

ஒரு செயலுக்குரிய வழிமுறைகளைக் குறையின்றிச் சிந்தித்துச் செய்யுமிடத்து, அஞ்சாமை ஒன்றைத் தவிர, வேறு துணை தேவையில்லை.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**151—**

### விற்பனை வளாகம்

***15166—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய சென்னையில் தனி வளாகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2008 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழு தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக மாநில அளவில் பொருட்காட்சி மற்றும் விற்பனை அரங்கம் ஒன்று சென்னையில் வள்ளுவர் கோட்டத்தின் அருகில் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 3 இலட்சத்து 63 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் 30 இலட்சம் மகளிர் பயன் அடையும் வகையிலும், 1½ இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு 1½ கோடி ரூபாய் சுழல் நிதி வழங்குவதாகவும், பயிற்சி உதவித் தொகை ரூபாய் 7.50-லிருந்து ரூபாய் 45/- ஆக உயர்த்தியும், அரசு பதவி ஏற்றதிலிருந்து சுமார் 50,000 சுய உதவிக் குழுக்கள் தொடங்கியும், அதிலும் குறிப்பாக, இந்த ஆண்டில் 4 இலட்சம் மகளிர் கொண்ட 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்படும் என்ற நல்ல அறிவிப்பைச் செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, சுமார் 50 இலட்சம் பெண் உறுப்பினர்கள் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களிலே தமிழக அளவிலே இருந்து வருகிறார்கள். இந்த சுய உதவிக் குழுக்கள் குறிப்பாக, கைத்தறித் துணிகள், வெள்ளி ஆபரணங்கள், தோல் பொருட்கள், கொசு வலை, அழகு சாதனப் பொருட்கள் போன்றவற்றை நல்ல தரமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இவர்களுக்கு உரிய சந்தைப்படுத்துதல் தெரியாமையால், உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமல் சுய உதவித் தொழில் பாதிக்கப்பட்ட நிலையிலே இன்றைக்கு இருக்கிறது. போதிய வருவாயின்றி இவர்கள் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே, இவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை இங்கு மாநிலத் தலைநகரான சென்னையிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலும், ஒன்றியத் தலைநகரங்களிலும் இடைத் தரகர்கள் இல்லாமல் நேரடியாக இவர்கள் அந்தப் பொருட்களை விற்பனை செய்வதற்கு [illegible] அரசே வணிக வளாகம் கட்டித் தருமா என்று [illegible] விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. தமிழரசு அவர்கள் இங்கே ஒரு கேள்வியைக் கேட்ட நேரத்தில், 1½ இலட்சம் குழுக்களுக்கு சுழல் நிதியாக 1½ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அது தவறு. அதற்குத் திருத்தத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 150 கோடி ரூபாய் சுழல் நிதியை (மேசையைத் தட்டும் ஒலி) வழங்குவதற்கு இந்த ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. என்னுடைய மானியக் கோரிக்கைக்கு நான் பதில் அளித்துப் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அதேபோல், இந்த விற்பனைக் கட்டடம், வள்ளுவர் கோட்டத்திற்கு அருகிலே கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன்.

ஆக, இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, 29 மாவட்டத் தலைநகரங்களிலும், ஒவ்வொரு தலைநகரத்திலும் தலா ஏறத்தாழ 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்கான வளாகங்கள் ஏற்கெனவே கட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் பூமாலை வணிக வளாகம் என்ற பெயரிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவை தவிர, ஒவ்வொரு வளாகத்திலும் தலா 15 கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இது தவிர, மேலும் 16 கூடுதல் வணிக வளாகங்களும் ஏற்படுத்தப்பட்டு, அவையும் தலா 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 14 மாவட்டங்களிலும் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்போது சென்னையிலே கட்டப்படக்கூடிய இந்த வணிக வளாகத்தைப் பொறுத்தவரையிலே, ஏறக்குறைய 36,300 சதுர மீட்டரிலே அரசு நிலம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் கட்டப்படும் சுய உதவிக் குழு வணிக வளாக மதிப்பீட்டுத் தொகை 10 கோடியே 72 இலட்சம் ரூபாய். அந்த ஒதுக்கீட்டுச் செலவிலே அது கட்டப்படவிருக்கிறது. கடந்த 17-4-2008 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு, இப்போது ஒப்பந்தப்புள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, தகுதியுள்ள ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய அனுமதியோடு விரைவிலே அந்தக் கட்டடப் பணிகளின் துவக்கப் பணிகள் தொடங்கவிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 25

(முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அளவிலே தொடங்கப்படுகிற அந்த வணிக வளாகத்திலே, இடைத் தரகர்கள் இல்லாமல், சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அவர்கள் விற்பனை செய்வதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கித் தருமா என்பதையும், சேலம், ஏற்காடு போன்ற இடங்களிலே பூமாலை வணிக வளாகம் இருப்பதுபோல, சேலம் மாவட்டத்திலே 12 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக, ஓமலூர் ஒன்றியத்திலே 1,300 சுய உதவிக் குழுக்கள் இருக்கின்றன. அதிகமான சுய உதவிக் குழுக்கள் உள்ள ஓமலூரிலே, ஓமலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே, காலியாக உள்ள இடத்திலே, உள்ளாட்சித் துறை வாயிலாக ஒரு வணிக வளாகத்தை அமைச்சர் கட்டித் தருவாரா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரகர் பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக தரகர்கள் பிரச்சினை இருக்கிற செய்திகள். எங்களுக்கும், அரசுக்கும் அவ்வப்போது வந்துகொண்டிருக்கின்றன. அப்படிச் செய்திகள் வருகிறபோது, அவை குறித்து உடனடியாக விசாரிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், அவருடைய பகுதியிலே ஒரு வணிக வளாகம் மகளிர் சுய உதவிக் குழுவிற்காகக் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு முறையாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 25]

**152—**

**கல்லூரி**

***31381—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் வேளாண்மைத் தொழில் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறையின்மூலம் தொழில் கல்லூரி தொடங்குகின்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையிலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் எந்தக் கல்லூரியுமே இல்லை. எனவே, விவசாயக் கல்லூரியாவது, தொழில் கல்லூரியாவது அமைக்க அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் தொகுதியிலே எந்தக் கல்லூரியும் இல்லை; ஆகவே, வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படுமா என்று கேட்டிருந்தால் பரவாயில்லை. அவரது மூலக் கேள்வியே, தொழில் கல்லூரி என்று கேட்டிருக்கின்றார். தொழில் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பே இல்லை. இருந்தாலும், இப்பொழுது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 10 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. B.Sc. (வேளாண்மை), B.Sc. (தோட்டக்கலை), B.Sc. (வனவியல்), B.Sc. (மனையியல்), B.Tech. (தோட்டக்கலை), B.Tech. (வேளாண்மை உயிரியல் தொழில்நுட்பம்), B.Tech. (உயர் தகவலியல்), B.Tech. (வேளாண்மைப் பொறியியல்),

[2008 ஏப்ரல் 25

B.Tech. (உணவு பதப்படுத்தும் பொறியியல்), B.Tech. (சக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), B.Tech. (வேளாண் தகவல் தொழில்நுட்பம்), B.Sc. (வேளாண் வர்த்தக வேளாண்மை) ஆகிய 12 பாடப் பிரிவுகள் தற்போது நடத்தப்படுகின்றன. இந்த 12 பாடப் பிரிவுகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு, அவர்களுக்குரிய வேலைவாய்ப்பு கொடுப்பதிலேகூட முழுமையாக நாம் வழங்க இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லூரி தொடங்க இயலாது. இப்பொழுது இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்தினாலே நடத்தப்படக்கூடிய வேளாண்மைக் கல்லூரியில் இடங்கள் தாராளமாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கல்லூரி அமைக்க முடியவில்லையென்றாலும், எனது பகுதியில் விவசாய நிலங்கள் அதிகமாக இருப்பதாலும், விவசாயம் செய்யும் விவசாயிகள் அதிகமாக இருப்பதாலும், வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஏதாவது ஒரு தொழிற்சாலையாவது அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குத் தனிக் கேள்வியாகப் போட்டால் சரியாக வரும். வேளாண்மைத் தொழில் கல்லூரியைக் கேட்டுவிட்டு ஏன் இதற்குப் போகிறீர்கள்? மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் நான் முன்பே சொன்னேன். வேளாண்மைத் துறையின்மூலம் தொழில் கல்லூரியும் தொடங்க இயலாது; தொழிற்சாலையும் தொடங்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அச்சரப்பாக்கம் தொகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியுள்ள தொகுதி. என்னுடைய தொகுதியிலும் எந்த அரசு நிறுவனமோ; கல்லூரியோ



2008 ஏப்ரல் 25]

இல்லை. குறைந்தபட்சம் வேளாண்மை சம்பந்தப்பட்ட ஒரு தொழிலைத் தொடங்குகின்ற வாய்ப்பையாவது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா? குறிப்பாக, இயற்கை உரம் எதிர்காலத்திலே பயன்படுத்தப்பட வேண்டுமென்று அறியப்படுவதால், அது சம்பந்தப்பட்ட ஒரு தொழிற்சாலையையோ அல்லது கல்லூரியையோ வழங்குவதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டுமானால் 150 கோடி ரூபாயும், 200 ஏக்கர் நிலமும் தேவைப்படும். 150 கோடி ரூபாய்க்கு வேண்டுமானால் நாம் எப்படியாவது உதவிகளைப் பெற்று நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். ஆனால், தேவைப்படுகின்ற அளவுக்கு 200 ஏக்கர் நிலத்தை எந்த இடத்திலும் உடனடியாகக் கையகப்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி முழுமையாக விவசாயத்தை நம்பியிருக்கின்ற தொகுதி. அதைப்போலத்தான், தமிழ்நாட்டில் 56 சதவிகிதம் மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு, எல்லா இடங்களிலும் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை. எதிர்காலத்தில் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி முழுக்க, முழுக்க வேளாண்மைத் தொழிலையே நம்பியிருக்கின்ற தொகுதி. அதேபோல, எங்கள் பகுதியிலே அரசுக் கல்லூரிகள் ஏதும் இல்லை. அங்கே படிக்கின்ற மாணவர்கள் வேறு தொழிலைத் தொடங்கமுடியாமலும், வேறு தொழிலைச் செய்யமுடியாமலும் பரிதவிக்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய மானாமதுரை தொகுதியில் விவசாயிகளுடைய மாணவ,

மாணவிகளின் நலன் கருதி, அந்தப் பகுதியில் ஒரு வேளாண்மைப் பொறியியல் கல்லூரியையோ அல்லது வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரியையோ தொடங்குவார்களா என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அந்தக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு ஏற்ப வனத் துறை நிலம் அதிகமாக என்னுடைய மானாமதுரை பகுதியில் இருக்கின்ற காரணத்தாலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன், கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ம. குணசேகரன்:** நல்ல தண்ணீர் வசதி, மின்சார வசதி, போதுமான போக்குவரத்து வசதி இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பகுதியில் வேளாண்மைப் பொறியியல் கல்லூரியோ அல்லது வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரியோ தொடங்க அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் (குறுக்கீடு) வாய்ப்பு வேண்டாமா?

**திரு. சி. ஞானசேகரன்:** வாய்ப்பு வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது வேளாண்மைக் கல்லூரி தொடங்க வாய்ப்பில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்த வேளையில், ராணிப்பேட்டையில் நவ்லக் என்கிற இடத்தில் விவசாயப் பண்ணை இருக்கின்றது. விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய மாநிலமாக இது இருந்துகொண்டிருக்கிற காரணத்தாலே, எதிர்காலத்தில்--உணவுப் பஞ்சம் வராமல் இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக நாம் விவசாயத்தை ஒட்டியிருக்கக்கூடிய விவசாயக் கல்லூரிகளை ஏற்படுத்தி உடனடியாக நிறைய விவசாயப் பட்டதாரிகளை உருவாக்கி, விவசாய உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? விவசாயப் பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா, எவ்வளவு பேர் வேலை



இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும் அவைக்கு அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவ்லக் எண்ணெய்வித்துப் பண்ணை சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது வேளாண்மைக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றிருப்பவர்கள், பி.எஸ்சி. (விவசாயம்) படித்தவர்கள், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பவர்கள் 4,541 பேர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்திருப்பவர்கள் 926 பேர். பி.எஸ்சி. (தோட்டக்கலை) படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பதிவு செய்திருப்பவர்கள் 590 பேர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்திருப்பவர்கள் 153 பேர்; B.E. (வேளாண்மை) B.Tech. வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பதிவு செய்திருப்பவர்கள் 403 பேர்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்திருப்பவர்கள் 74 பேர்; B.Sc., (வனம்) வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பதிவு செய்திருப்பவர்கள் 75 பேர்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்திருப்பவர்கள் 44 பேர்; B.Sc., (மனையியல்) 11 பேர் வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலமும், 46 பேர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலமும் பதிவு செய்திருக்கின்றார்கள். பழைய மாணவர்கள் 405 பேர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்திருக்கின்றார்கள். வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் பதிவு செய்திருப்பவர்கள் மொத்தம் 5,520 பேர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்திருப்பவர்கள் 1,648 பேர். இதில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மறுசீரமைப்புச் செய்து 2,651 பேர்களுக்குப் பதவி உயர்வு வழங்கியதோடு, காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு, சில பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம்தான் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே, 520 வேளாண்மை அலுவலர்களையும், 17 தோட்டக்கலை அலுவலர்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் தேர்வு செய்ய அரசின் சார்பிலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. காலியாக இருக்கின்ற உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்கள் 1,707. இந்த

1,707 பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. விரைவிலே நியமிக்கப்படுவார்கள்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

**திரு. எஸ். மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பல்லடம் பகுதிக்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் உள்ளது, எப்பொழுது அது துவக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்காயம் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஒப்பந்ததாரர்கள் கோரப்பட்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவைப் பாசனமாக இருந்தாலும்கூட, தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தாற்போல் திருவண்ணாமலை மாவட்டம் அதிக நெல் உற்பத்தி செய்கின்ற மாவட்டம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, 200 ஏக்கர் நிலம் இருந்தால் விவசாயக் கல்லூரி அமைப்பேன் என்று சொல்லியிருக்கிறார். ஊசிமலைக்குப்பம் என்று எங்கள் பகுதியிலே அரசு நிலமே 200 ஏக்கர் இருக்கிறது. அங்கு விவசாயக் கல்லூரி அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 ஏக்கர் நிலம் இருந்தால் வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படும் என்று நான் சொல்லவில்லை. ஒரு கல்லூரி தொடங்குவது என்றால், அந்தக் கல்லூரிக்கு 200 ஏக்கர் நிலம் தேவை, 150 கோடி ரூபாய் தேவை என்றுதான் சொன்னேனே தவிர, 200 ஏக்கர் நிலம் இருந்தால் கல்லூரி தொடங்கப்படும் என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**153—**

**தரம் உயர்த்துதல்**

***13732—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியிலுள்ள கடுகூர் மற்றும் திருமானூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதியிலுள்ள கடுகூர் மற்றும் திருமானூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசாணை (நிலை) எண் 142, சுகாதாரம், நாள் 30-4-2007-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இங்கு கட்டடங்கள் கட்டப் பொதுப் பணித் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, நன்றி சொல்லி, அமருங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் நல்லவர். கேட்டால் இல்லையென்று சொல்லமாட்டார்கள் என்றுதான் கேட்டேன். அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், கடந்த 13 ஆம் தேதியன்று இரவு, திருப்பூருக்குப் பிழைப்பு தேடிச் சென்ற இடத்திலே, எனது தொகுதியிலுள்ள கீழப்பழூருக்கு அருகில் விபத்துக்குள்ளாகி, போதிய மருத்துவ வசதியில்லாமையால் 6 பேர் இறந்துவிட்டார்கள். சம்பவ இடத்திலே இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். அங்கே போதிய மருத்துவ வசதியில்லாமையால், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்ற வழியிலே எஞ்சிய நான்கு பேரும் இறந்துவிட்டார்கள். அதிலே 4 வயதுக் குழந்தையும் அடங்கும். அங்கேயுள்ள திருச்சி-சிதம்பரம் சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, வருகின்ற ஆண்டில் பெரம்பலூர்-மானாமதுரை சாலையும் தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்படுமென்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அரியலூரிலுள்ள அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கும், அதேபோல, கீழப்பழூரிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படவிருக்கின்ற காரணத்தால், அரியலூரில் மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைக்கவேண்டுமென்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை--அது பக்கத்திலேயிருக்கின்ற காரணத்தினால்--பெரம்பலூர் மருத்துவக் கல்லூரி வந்துவிட்டால், எந்தவிதப் பிரச்சினையும் கிடையாது. ஆகவே, அவருடைய கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி. நீங்கள் அமரமூர்த்தியாகப் பேசுங்கள். அமரர் மூர்த்தியாகப் பேசாதீர்கள்.





**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டு, புதிய ஆரம்ப சுகர்தார நிலையங்கள் அமைக்கப்படுமென்று அறிவித்தார்கள். வருகின்ற ஆண்டில் எனது தொகுதியிலுள்ள துருவவாடி, ஏலாக்குறிச்சி, வெல்லூர், சுந்தரக்குடி ஆகிய இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விதிமுறைகளுக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், உறுப்பினர்கள் கேட்பதையெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இது குறித்துப் பரிசீலிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்கம் ஒன்று உள்ளது. அந்த அறுவை சிகிச்சை அரங்கத்திலே குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மட்டும் நடைபெற்று வருகின்றது. மற்ற அறுவை சிகிச்சையென்றால், அங்கேயிருக்கின்ற மருத்துவர்கள், சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்து அனுப்பிவிடுகின்றார்கள். எனவே, நோயாளிகள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அங்குள்ள மருத்துவர்களைக் கேட்டால் இங்கு அறுவை சிகிச்சை மருத்துவர்கள் இல்லையென்று காரணம் கூறுகின்றார்கள். எனவே, எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் நியமனம் செய்யப்படுவார்களா என்று தங்கள்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

[2008 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை செய்வது கிடையாது. ஆனால், தற்சமயம் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, முதன்முறையாக வேலூர் மாவட்டத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, எடப்பாடியிலும் வேண்டுமென்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கடந்த ஏழாண்டு காலமாக நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கின்றேன். எனவே, வருங்காலங்களிலே மதுக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டன. இந்த ஆண்டு, நிதிநிலை அடிப்படையில் தற்போது அனுமதி இல்லை. மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்தவுடன், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.



2008 ஏப்ரல் 25]

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லோயர் அணைக்கட்டு-சோழபுரம் மெயின் ரோடு அதிக விபத்துப் பகுதியாகும். விபத்தில் காயமடைந்தவர்களில், உயிருக்குப் போராடுபவர்களை ஜெயங்கொண்டம் அரசு பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. அங்கு கொண்டு போவதற்குள் அவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது. அதனால், மீன்சுருட்டி மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்சுருட்டிக்கும், ஜெயங்கொண்டத்திற்கும் 10 கிலோ மீட்டர்தான் தூரம் இருக்கிறது. மீன்சுருட்டியிலேயிருந்து காட்டுமன்னார்கோயில் 10 கிலோ மீட்டர்தான். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின் தன்மையை அறிந்து, பிற்காலங்களில் அது பரிசீலக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**154—**

**தொழிற்பிரிவு**

***2009—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு விலக்கு பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்பிரிவு அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 ஏப்ரல் 25

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல்கிணறு விலக்கு பகுதிகளில் அரசு சென்ட் தொழிற்சாலை அமைக்க உத்தேசம் ஏதும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஏற்படுகின்றபோதெல்லாம் தென் மாவட்ட மக்களுக்கு சிறப்பான நல்ல பணிகளைச் செய்து வருகின்றது. குறிப்பாக, குடிநீர் வசதி, அண்ணா பல்கலைக்கழகம், நாங்குநேரியிலே உயர் தொழில்நுட்பப் பூங்கா, கங்கைகொண்டானிலே எல்காட் நிறுவனத்தின்மூலம் கணினித் தொழிற்சாலை என இவ்வாறு பல தொழில்களை நம்முடைய தென் மாவட்ட மக்களுக்குத் தந்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர்மூலம் காவல்கிணறு சந்திப்பில் இந்த ஆண்டு மலர் வணிக வளாகம் அமைப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். என்னுடைய தொகுதி மக்கள், தென் மாவட்ட மக்கள் சார்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அய்யா வீரபாண்டியார் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்டத்தில் மழை, வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டபோது ஓடோடி வந்து விவசாயிகளுடைய துயர் துடைத்த நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்களுடைய திருக்கரத்தினால் விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற திட்டமான அந்த மலர் வணிக வளாகத்திற்கு வருகின்ற மே மாதம் 10 ஆம் தேதி கால்கோள் விழா நடைபெறவிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அந்தப் பகுதியில் அந்தத் தொழிலைத் தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு இந்த நல்ல வேளையிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மலர் அதிகமாக உற்பத்தி செய்கின்ற காரணத்தினால் அந்த இடத்தில் மலர் சார்ந்த தொழில் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 1,254 எக்டேர் நிலப்பரப்பில் 7,927 மெட்ரிக் டன் மலர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில், 5,252 மெட்ரிக் டன் குண்டு மல்லியும், 1,095 மெட்ரிக் டன் ஜாதி மல்லியும், 200 மெட்ரிக் டன் ரோஜா மலரும், 1,380 மெட்ரிக் டன் ஏனைய மலர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறிய ராதாபுரம் வட்டத்தில், 667 எக்டேர் நிலப்பரப்பில் 4,765 மெட்ரிக் டன் மலர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் 931 மெட்ரிக் டன் குண்டு மல்லியும், 35 மெட்ரிக் டன் ரோஜா மலரும், 114 மெட்ரிக் டன் ஜாதி மல்லியும், 1,470 மெட்ரிக் டன் சம்பங்கி மலரும் மற்றும் ஏனைய மலர்கள் 2,715 மெட்ரிக் டன் என்ற அளவிலும் மலர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

மல்லிகைப் பூக்களிலே மூன்று வகைகள் உண்டு. ஊசி மல்லி, குண்டு மல்லி மற்றும் ஜாதி மல்லி. இவற்றில் ஜாதி மல்லி, ஆங்கிலத்தில் Jasminum Grandiflorum எனப்படும் மலரில் மட்டுமே வணிக ரீதியில் வாசனைத் திரவியம் எடுக்க முடியும். ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில் அதிக அளவில் குண்டு மல்லி மட்டுமே பயிரிடப்படுகிறது.

குறைந்தளவில் பயிரிடப்படும் ஜாதி மல்லி, நேரடி உபயோகமாக மகளிரால் பயன்படுத்தப்படுகிறது. மலர்களிலிருந்து வாசனைத் திரவியம் எடுக்கும் தொழிற்சாலையை இராதாபுரத்திலிருந்து 80 கி.மீ. தூரத்தில் உள்ள ஒரு நிறுவனம் மேலநீலிதநல்லூர் என்ற பகுதியில் அமைத்துள்ளது. எனவே, புதிய தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு தற்போது குறைவாக உள்ளது. எனினும், ஜாதி மல்லி சாகுபடி அதிகரிக்கும்பட்சத்தில், தனியார் தொழில் முனைவோர்கள் வாசனைத் திரவியம் அமைக்கும் தொழிற்சாலையைத் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் உதவி, துறை சார்ந்த ஒப்புதல் பெறுதல், மானிய உதவி மற்றும் சந்தை உதவி போன்ற உதவிகளை திருநெல்வேலி மாவட்டத் தொழில் மையம் செய்து கொடுக்கும் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி மல்லிப் பூக்கள்மூலம் வாசனைத் திரவிய தொழிற்சாலையை ஆரம்பிக்க முடியவில்லையென்றாலும், அங்கே உற்பத்தி செய்யப்படும் பலவிதமான மலர்களை வைத்து, மலர் சார்ந்த தொழில் ஆரம்பித்து, மலர்களை process செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்வண்ணம், பக்கத்திலே தூத்துக்குடி துறைமுகம், அதேபோன்று தூத்துக்குடியிலே விமான நிலையம் மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையம் எல்லாம் இருக்கின்ற காரணத்தால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற அந்த வாய்ப்பை உருவாக்குவதற்கு வருங்காலத்தில் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறைமூலமாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இந்த மலர் சாகுபடியினை ஊக்கப்படுத்திடப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலும் வேளாண்மைத் துறைமூலமாக பல்வேறு மலர்களை ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 155, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**155—**

## சுற்றுலாத் தலம்

***30100—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருச்செந்தூர் நகரினை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சுற்றுலாத் துறை எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில்கொண்டு, தேவையான அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை செய்து வருகின்றது.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் ஒரு புராதன நகரமாக இருக்கின்றது. அது மட்டுமல்ல, பாண்டிய மன்னர் காலத்தில் கலைநயத்தோடு கட்டப்பட்டிருக்கின்ற முருகப் பெருமானுடைய திருக்கோயில் அங்கே அமைந்திருக்கிறது. இந்தியாவின் ஒருமைப்பாட்டினை வளர்க்கின்றவகையிலே, தமிழர்களுடைய பண்பாட்டினை வளர்க்கின்றவகையிலே, அங்கு அமைந்திருக்கின்ற இராஜகோபுரத்தினுடைய சிற்பங்கள் எல்லாம் வெளிநாட்டினர் வந்து ரசித்துப் பார்க்கின்றவகையில் அமைந்திருக்கின்றது. அங்கே கடலுக்கு அருகில் இருக்கின்ற நாழிக்கிணறு பகுதி என்பது ஒரு சிறப்பான பகுதியாக, ஒரு சிறிய இடமாக இருந்தாலும், எத்தனை பக்தர்கள் குளித்தாலும், அங்கு அதற்கான தண்ணீர் நாழிக்கிணற்றிலே வருகின்றது. அருகில் கடல் நீர் உப்புத் தண்ணீராக இருந்தாலும், அதன் பக்கத்திலே இருக்கின்ற இதில் தேங்காய்த் தண்ணீர் மாதிரி, இளநீர் போன்று நல்ல தண்ணீர் வருகின்ற ஒரு அற்புதமான நிகழ்வு எல்லாம் அங்கே இருக்கின்றது. புராண காலத்தில் வள்ளி ஒளிந்திருந்ததான ஒரு மலைக் குகையும் அங்கே அமைந்திருக்கிறது. இதையெல்லாம் பார்ப்பதற்காகவும், அங்கு நடைபெறுகின்ற திருவிழாக்களைக் காண்பதற்காகவும், அங்கு கூடுகின்ற பக்தர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக வந்து செல்கின்ற ஒரு பகுதியாக திருச்செந்தூர் நகராம் அமைந்திருக்கிறது. அதற்கு 5 கி.மீ. அருகிலுள்ள

சரித்திரப் புகழ்பெற்ற காவல்மாநகர் 64 தெருக்களைக் கொண்ட, 30 மசூதிகளைக் கொண்ட சிறந்த அழகான கடற்கரையைக் கொண்ட பகுதியாக இருக்கிறது. அது மட்டுமல்ல, தெற்குப் பகுதியில் இருக்கின்ற மணப்பாடு பகுதியைப்பற்றிச் சொல்கின்றபோது, 1542 ஆம் ஆண்டு போர்ச்சுக்கல் நாட்டிலிருந்து கத்தோலிக்க மத குருவாக இருந்த புனித சவேரியார் அவர்கள் மணப்பாடிலே வந்து தங்கி, அந்தக் கடற்கரைப் பகுதியிலுள்ள மீனவ மக்களை எல்லாம் உயர்த்துவதற்கு பல்வேறு வழிவகைகளைக் கண்டு, கத்தோலிக்க மதம் என்பது கடற்கரைப் பகுதியிலே ஏற்படுவதற்கான வழிவகைகளையெல்லாம் கண்டிருக்கின்ற அந்தப் புராதன நிகழ்வுகள் எல்லாம் அங்கே நிகழ்ந்திருக்கின்றன. அந்தவகையிலே திருச்செந்தூர் வருகின்ற பக்தர்கள் பார்க்கின்றமுகமாகவும், இந்தத் திருச்செந்தூரை சுற்றுலாத் தலமாக அமைத்துத் தரவேண்டுமென்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்துவதோடு, அப்படி சுற்றுலாத் தலமாக அறிவிக்க முடியாது என்று சொன்னாலும், சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்றவகையிலே, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை அந்தத் திருச்செந்தூர் நகருக்கு இந்தத் துறையின்மூலம் செய்வதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்செந்தூர் கோயிலைப்பற்றிக் கூறினார்கள். அந்தக் கோயிலைப் பொறுத்தமட்டில், அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயிலாக இருந்து வருகிறது. அந்தக் கோயிலை முறையாக அறநிலையத் துறை பராமரித்தும் வருகிறது. இருந்தாலும்கூட, அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு சாலை வசதிகள், தெரு விளக்குகள், கழிப்பிட வசதிகள் போன்ற வசதிகளை இந்தத் துறை செய்துகொண்டிருக்கிறது. அதேபோன்று, இந்தத் துறையின் சார்பாக திருச்செந்தூர் பகுதியில் சுற்றுலா விடுதி ஒன்று இருக்கிறது. விடுதியைப் பொறுத்தமட்டில், 26 அறைகளை உள்ளடக்கிய அந்த விடுதியில் தங்கக்கூடியவர்களுக்கு வசதி வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று, இந்தத் துறையின் சார்பாக மேம்படுத்தப்படக்கூடிய பணிகள் நடைபெற இருக்கிறது.



அதேபோல, நாழிக்கிணறு பற்றிச் சொன்னார்கள். அந்தப் பகுதிகளில் எல்லாம் தெரு விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதேபோல, மணப்பாடு பகுதியில் உள்ள கிறிஸ்துவ ஆலயத்தைப் பற்றியும் சொன்னார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், இதுபோன்ற இடங்களை இந்தத் துறையின் சார்பாக விளம்பரப்படுத்தி, வெளிநாட்டவர்கள், வெளி மாநிலத்தவர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு இந்தத் துறை பணிகளை மேற்கொண்டிருக்கிறது. இதைத்தான் இந்தத் துறை செய்ய முடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக விடுதிகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். கடந்த காலத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில், அதற்குப் பின்னால், வருகின்ற சுற்றுலாப் பயணிகள், குழந்தைகள் விளையாடுவதற்கான Park-களை அமைப்பதற்காக ரூ.25 இலட்சத்தை ஒதுக்கித் தந்து, அதேபோல மத்திய அரசாங்கத்தினுடைய சுற்றுலாத் துறைமூலமாக ஆதி சங்கரா சுற்றுலா மேம்பாட்டு நிதியிலிருந்து நடைபாதை அமைப்பதற்காக 94 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** அங்கே ஒரு படகுக் குழாம் அமைக்க வேண்டுமென்று ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன, சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையிலே. ஆகவே, அங்கு படகுக் குழாம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் மட்டுமல்ல, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் இதே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், ரோஜ் பூங்காவில் படகு இல்லம் அமைப்பதற்காக 14 இலட்சம் ரூபாய்க்கான கருத்துருவை அனுப்பியிருந்தார்கள். இந்தத் துறையின் சார்பாகப் பரிசீலித்து, சுற்றுலாத் துறையின் சார்பாக 7 இலட்சம் ரூபாய்க்கும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக 7 இலட்சம் ரூபாய்க்கும் அனுமதி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு, அந்தப் படகு இல்லத்தைப் பொறுத்தமட்டில், தூத்துக்குடி துறைமுகத்திற்குச் சொந்தமான பகுதியாக இருந்த காரணத்தால், அதற்கான அனுமதியைத் துறைமுகம் தராத காரணத்தால், அதற்குப் பிறகு, அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆத்தூரில் படகு இல்லம் அமைக்கலாம் என்ற ஒரு கருத்துருவை அனுப்பியிருந்தார்கள். அதற்குப் பிறகு மீண்டும் இப்போது தூத்துக்குடி துறைமுகம் அனுமதியைத் தந்துவிட்டது. எனவே, அங்கேயே படகு இல்லம் அமைக்க வேண்டுமென்ற கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக 14 இலட்சம் ரூபாய் செலவில் அந்தப் பணிகள் நடைபெற இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**156—**

## கட்டடம்

***26383—திருமதி பதர் சயீத்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்ஃபு வாரிய புதிய கட்டடத்தைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை, மண்ணடி, எண் 1, ஜாபர் சாரங் தெருவில் அமைந்துள்ள தமிழ்நாடு வக்ஃபு வாரிய புதிய



அலுவலகக் கட்டடம் 14-3-2008 அன்று வெள்ளிக்கிழமை காலை 11-00 மணியளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, தற்போது அப்புதிய கட்டடம் வக்ஃபு வாரிய அலுவலகமாகச் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 வருடங்களுக்குப் பின்னர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியாலே, சிறுபான்மையினர்களுக்காக இந்த building final-ஆக இப்போது கட்டப்பட்டிருக்கிறது. அந்த building-கூட, 2, 3 room-கள் அதற்குள்ளே இருந்ததை இடித்துவிட்டு, demolish செய்துவிட்டுத்தான், 2 வருடங்களுக்குப் பிறகுதான், இந்த building open செய்யப்பட்டிருக்கிறது. Anyway, அதற்கு நன்றி சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சரிடம் இன்னொரு சின்னக் கேள்வி கேட்கிறேன்; வஃக்பு போர்டு காலேஜ், அந்தக் கல்லூரி மதுரையில் இருக்கிறது. அங்கே பிரின்ஸிபால் இருக்கிறார். Principal-ஐ dismiss செய்திருந்தார்கள், போன போர்டிலே. Sexual harassment and financial irregularities...

*முற்பகல் 10-10*

**HON. SPEAKER:** Madam, it is not connected with the question.

**TMT. BADER SAYEED:** It is related to the administration of the College. I can certainly ask him that question, Sir.

**HON. SPEAKER:** It is not related to the main question. Please sit down.

**TMT. BADER SAYEED:** You are not allowing me to talk.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அதற்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் சொல்லிவிடுங்கள். (குறுக்கீடு) When you are prepared to answer, she may ask the question.

[2008 ஏப்ரல் 25

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** அவர் ஏற்கெனவே சொன்னதற்குப் பதில் சொல்கின்றேன். மதுரை வக்ஃபு வாரியக் கல்லூரிக்குத் தனிக் கேள்வி போடவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ 50 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததை அந்த அம்மா ஆட்சியில்தான் செய்ததாகச் சொன்னார்கள். அதற்கு மட்டும் பதில் சொல்லிவிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃபு வாரியம் இருக்கின்ற இடத்தில், 12-1-1998-ல் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையினால் அந்த இடம் மதிப்பீடு செய்யப்பட்டு, அண்ணாப் பல்கலைக்கழகத்தின் கட்டட நிபுணரை அனுப்ப கோரிக்கை வைக்கப்பட்டு, அதற்கான ஆய்வில் இருந்தது. அதற்குப் பின்னால் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்கள். அதற்குப் பின்னால் அவர்கள் கட்டுவதற்கு முயற்சித்தார்கள். அதிலும்கூட இரண்டு ஆண்டு காலமாகத் திறக்கப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டேயிருக்கின்றார், அது தவறான செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டடம் கட்டுவதற்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதிலும்கூட அந்தப் பணிகள் முடியாத நிலையில், 50 இலட்சம் ரூபாய் வக்ஃபு வாரியத்தின் சார்பாகச் செலுத்தப்பட்டு, அந்தப் பணி நடைபெற்றது. ஆனால், பணிகள் முடியவில்லை. பூரணமாகப் பணிகள் முடிந்து, அடிப்படை வேலைகளெல்லாம் பொதுப் பணித் துறையின்மூலமாக முடிக்கப்பட்டு, 31-12-2007-ல்தான் இந்த அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பின்னால், இந்தக் கட்டடம் கட்டியதற்குப் பின்னால், இந்த ஆட்சியில் புதிய கட்டடத்தின் இறுதிக் கட்டப் பணிகளான பணிப்பகுதிகள், மின்னாக்கி, தொலைபேசி இணைப்புகள், கணினி, குளிர்சாதன வசதி, அலமாரிகள் மற்றும் இதர தளவாடங்கள் அமைக்கவேண்டி இருந்தது. ஏதோ அவர்கள் செலவழித்தார்கள் என்பதற்காக அந்தக் கட்டடத்தைத் திறக்காமல் இல்லை. இந்த அரசு 29.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கித்தான் மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கின்றார்கள்.



2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு அமைச்சரவர்கள், நான் தவறான செய்தியைத் தெரிவித்ததாகச் சொன்னார்கள். நான் தவறான செய்தியைச் சொல்லவில்லை. அது correct இல்லை. தவறான செய்தி என்றால், ரொம்ப serious-ஆக ஆகிவிடும். அது correct இல்லை என்று சொல்கின்றேன். எங்களுடைய அம்மா ஆட்சியில்தான் அதை full-ஆகக் கட்டி முடித்தோம். மே 2006-ல் அந்த building almost over. சில வேலைகள்தான் பாக்கி இருந்தன. அந்த வேலையை முடிக்காமல், இடித்துவிட்டு, two years-க்கு அப்புறம் open பண்ணினார்கள். நான் அதனை reiterate பண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மீண்டும் உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்கின்றார். ஏற்கெனவே அவர்கள் கட்டி முடிக்காத சூழ்நிலையில், அந்த வக்ஃபு வாரியக் கட்டட முகப்பு வாயிலில் கழிப்பிடம் இருந்த காரணத்தால், அங்கேயுள்ள இஸ்லாமியப் பெருமக்கள் ஆட்சேபனை தெரிவித்த காரணத்தால், அந்த டாய்லெட்டை அப்புறப்படுத்திவிட்டு, வேறு இடத்தில் மாற்றி வைத்து முறையாகச் செய்யப்பட்டது. அவர் சொன்னதைப்போலக் காலதாமதம் கிஞ்சிற்றும் இல்லை. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் எல்லாப் பணிகளும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர் உண்மைக்கு மாறான செய்தி என்று சொல்கின்றார். பொதுப் பணித் துறையின் ஆதாரபூர்வமான தகவலை வைத்திருக்கின்றேன். 31-12-2007-ல்தான் அந்தக் கட்டடப் பணி முடிக்கப்பட்டது. கட்டடம் கட்டியதற்குப் பின்னால் உள்ள பணிகளுக்கு மூன்று மாதங்கள் ஆகியிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மைச் சமுதாயத்தின் விடிவெள்ளி, ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த காலத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, மதுரையில் வாழக்கூடிய சிறுபான்மைச் சமுதாய மக்களுக்காக வக்ஃபு வாரியக் கல்லூரி அமைப்பதற்கு ஏறக்குறைய 40 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அந்தக் கல்லூரி

ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியின் 17 ஏக்கர் நிலம் இன்றைக்கு ஆக்கிரமிக்கப்பட்டு, 23 ஏக்கரிலே கல்லூரி இயங்கி வருகின்றது. அந்த 23 ஏக்கரிலும் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 20 இலட்சம் ரூபாய் நிதி அளித்து, இன்றைக்கு அந்தக் கல்லூரி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கௌஸ் பாஷா, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்காதீர்கள்.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** வக்ஃபு வாரியக் கேள்விதான்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வக்ஃபு வாரியக் கேள்வி என்று கல்லூரிக்குப் போய்விட்டீர்கள்.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** அந்த ஆக்கிரமிப்பை முன்பகுதியில் தடுக்கும் விதமாக வணிக வளாகம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா அல்லது பொது மக்கள் பங்களிப்பில் அந்த வணிக வளாகம் அமைப்பதற்கு அனுமதியளிப்பாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃபு கல்லூரியைப் பொறுத்தவரையில், தனியாக ஆட்சிக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அது வக்ஃபு வாரியத்திற்கு உட்பட்ட பிரச்சினை. இருந்தாலும், அவருடைய கோரிக்கை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் மூலமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**HON. SPEAKER:** Tmt. Bader Sayeed, you asked about the sexual harassment in the College. That's why I have disallowed that question. Sit down. *(குறுக்கீடுகள்)* No. Minister பதில் சொல்லிவிட்டீர்களா?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத் அவர்களுடைய கேள்விக்கும் அதே பதில்தான்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**157—**

## முதியோர் காப்பகம்

***22504—திரு. சை. சையது கௌஸ் பாஷா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் முதியோர் காப்பகம் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் அரசால் முதியோர் இல்லங்கள் ஏதும் தற்போது செயல்படுத்தப்படவில்லை. மதுரையில், 2007-2008 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் உள்ள கிளர்சியன் மொர்ஸி ஹோம் என்ற தொண்டு நிறுவனம், மாநில அரசால் தேர்வு செய்யப்பட்டு, மானியம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதேபோல, மத்திய அரசின்வாயிலாக, கேந்திரா ஃபார் இன்டகிரேட்டட் ரூரல் அண்ட் அர்பன் பியூப்பில்ஸ்'ஸ் ஆக்சன் (Kendra for Integrated Rural and Urban People's Action) என்ற முதியோர்களுக்கான தொண்டு நிறுவனத்திற்கும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சை. சையது கௌஸ் பாஷா.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டாக, நாளிதழ்களிலும், வார இதழ்களிலும் முதியோர்கள் படக்கூடிய துன்பத்தையும், துயரத்தையும் குறிக்கின்ற செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், 18-7-2007 அன்று வெளிவந்த தினமலரிலும், 21-7-2007 அன்று வெளிவந்த தினத்தந்தியிலும், ஈரோடு மாவட்டம், திண்டல் பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய சின்னம்மாள் என்பவரை அவருடைய மூன்று மகன்களால், வீட்டில் வைத்துப் பராமரிக்கமுடியாமல், திண்டலை அடுத்த மேட்டுக்கடை அருகே

குப்பை மேட்டில் அவரை வீசிவிட்டுச் சென்ற கொடுமையான செய்தி வந்துள்ளது. அதைத் தொடர்ந்து, 2006 நவம்பர் மாதம், 23 மற்றும் 26 ஆகிய தேதிகளில் வெளிவந்த நக்கீரனில், மதுரை அருகே உசிலம்பட்டியில் நடைபெற்ற கொடூரமான செயல் குறித்து விரிவாக வந்துள்ளது. அந்தச் செய்தியில், தென்னை மரத்தைப் பாதுகாக்கப் பயன்படக்கூடிய அலுமினியம் பாஸ்பேட் அடங்கிய க்யுக்பாஸ் என்னும் கொடிய மாத்திரையை உணவில் கலந்து கொடுத்து பெற்ற பிள்ளைகளே தங்களுடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கௌஸ் பாஷா, question-ஐ short ஆகக் கேளுங்கள்.

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** பெற்றோர்களை, தாய், தந்தையர்களைப் பராமரிக்க முடியாமல் கொன்றுவிடக்கூடிய செயல்கள் நடைபெறுவதாகக் கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட கொடுமைகளை, செயல்களைத் தடுத்திடவும், ஆதரவற்ற நிலையில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர்களைக் காத்திடவும், தமிழகத்தில் மாவட்டத் தலைநகரங்களில் குறைந்தபட்சம் மாவட்டத்திற்கு ஒரு முதியோர் காப்பகம் அரசின் சார்பாக அமைத்து, ஆதரவற்ற முதியோர்களைக் காப்பாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியவாறு, மாறி வரும் சமூகச் சூழ்நிலையில், கூட்டுக் குடும்பத்திலிருந்து தனிக் குடும்பங்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில் இதுபோன்ற பிரச்சினைகள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. அதனைக் கருத்தில்கொண்டு, 2007 ஆம் ஆண்டு, 'மத்திய அரசின் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நலச் சட்டம்' அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்வாயிலாக, தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோர் இல்லம் கட்டுவதற்குரிய நிலம் தேர்வு செய்ய அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். மத்திய அரசும், மாநில அரசும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சையது கௌஸ் பாஷா.

முற்பகல் 10-20

**திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை, முதியோர்களைச் சேர்ப்பதில் பல்வேறு நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் காட்டி, அனைவரையும் சேர்ப்பதற்கு முன்வருவதில்லை. அதனால் அரசின் சார்பிலேயே மாவட்டத் தலைநகரங்களில் முதியோர் காப்பகம் நடத்தி ஆதரவற்ற அனைத்து முதியோர்களையும் நிபந்தனையின்றிச் சேர்க்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. விரைவில் நடைபெறும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**158—**

## கால்நடை மருத்துவமனை

***31791—திரு. செ. புஷ்பராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி திருமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட புதுக்குப்பம் கிராமத்தில் 29-2-2008 அன்று புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வைத்த கோரிக்கையை ஏற்று திருமங்கலம் பஞ்சாயத்து, புதுக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் அமைத்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில், மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டும். கண்டமங்கலம், எறையூர் ஆகிய கால்நடை மருந்தகங்களிலிருந்து இரண்டு நாட்களுக்கு மட்டுமே மருத்துவர்கள் வருகிறார்கள். ஆகவே, நிரந்தரமாக மருத்துவர்களை நியமனம் செய்து, புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்தப் புதிய கால்நடை மருந்தகத்திற்குப் பகுதிநேரமாக உதவி மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அரசு தற்போது 220 கால்நடை உதவி மருத்துவர்களை அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் எடுப்பதற்கு உத்தரவிட்டுள்ளது. அவர்கள் தேர்வு செய்யப்பட்டதும், மேற்படி புதுக்குப்பம் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரமாக மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவர். அதுபோல, அந்தக் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கேட்டார்கள். நிச்சயமாக அதை வரும் ஆண்டில் இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. புஷ்பராஜ்.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி விக்கிரவாண்டி ஒன்றியம், இராதாபுரம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் உள்ளது. இங்கிருந்து கால்நடை மருந்தகத்திற்குச் செல்ல வேண்டுமேயானால், 15 கி.மீ. தூரத்திலுள்ள விக்கிரவாண்டி, 10 கி.மீ. தூரத்திலுள்ள புதுக்குப்பத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதனால், இந்த ஆண்டே இராதாபுரத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி ஒன்றியத்திலுள்ள இராதாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த அரசு அதனைப் பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளை பேரூராட்சிப் பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளை அதிகம் வளர்த்து வருவதால் கால்நடை மருந்தகம் வேண்டும் என்று முன்பு மானியக் கோரிக்கையின்போதுகூட நான் கேட்டேன். அமைச்சர் அவர்கள், ஆவன செய்யப்படும் என்று சொன்னார்கள். இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதனால், உரிய ஆய்வு செய்து கால்நடை மருந்தகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் எண்ணிக்கைக்குமேல் கால்நடைகள் இருக்கிற கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவுப்படி 40 புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. நீங்கள் கூறும் அந்தக் கிள்ளை நகர்ப் பகுதியிலே ஒருவேளை கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்திருக்கலாம். அதனால் நிச்சயம் வரும் ஆண்டில் பரிசீலிக்கப்படும்.

[2008 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியில் பிலிக்கல்பாளையம் ஊராட்சியைச் சுற்றி ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலேயிருந்து 15 கி.மீ. சுற்றளவிற்கு எந்தக் கால்நடை மருத்துவமனையும் இல்லாததால், அங்கு ஒரு கால்நடை மருத்துவமனையைத் துவக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**159—**

## சமுதாயக் கூடம்

***32395—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூர் தொகுதி, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் ஆதி திராவிடர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கும் முன்மொழிவு அரசின் செயற்குறிப்பில் இல்லை.



2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெரூர் வடபாகம் ஊராட்சி, நெரூர் வடபாகம் கிராமத்தில் கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட ஏழை விவசாயக் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் விவசாயக் கூலித் தொழில் செய்து வருகிறார்கள். கரூர் மாவட்டத்திலேயே ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி இந்த நெரூர் வடபாகம் கிராமமாகும். அவர்கள் திருமணம் மற்றும் விசேஷங்கள், சமுதாய நிகழ்ச்சிகள் நடத்துவதென்றால் 15 கி.மீ. தூரத்திலுள்ள கரூர் நகரத்திற்குத்தான் செல்ல வேண்டும். பொருளாதாரத்தில் மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் வசித்து வருகிற நிலைமையில் உள்ளூர் கோயிலில் வெட்டவெளியில்தான் அனைத்து நிகழ்ச்சிகளும் இன்று வரை நடந்து வருகின்றன. எனவே, அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்யும்பொருட்டு, அனைத்து ஊராட்சிகளுக்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கண்ட மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் ஆதி திராவிட மக்களும் பயன்பெறும் வகையில், நெரூர் வடபாகம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தருவதோடு மட்டுமல்லாமல், நபார்டு வங்கியின்மூலம் நெரூர் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிவதோடு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி உதவியுடன் நெரூர் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம், அதாவது பல்நோக்கு மையம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. நபார்டு வங்கி ஒப்புதல் தந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ் அவர்களின்

[2008 ஏப்ரல் 25

கோரிக்கைக்கு ஏற்ப, நெரூர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நபார்டு வங்கி நிதியுதவியின்மூலம் எத்தகைய பணிகள் நடைபெறவிருக்கின்றன என்று கேட்டிருக்கிறார். அதைப்போல, அடிப்படை வசதிகள் பற்றியும் கேட்டிருக்கிறார். நெரூர் பகுதியில் மட்டும் வரும் ஆண்டில் 52.62 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெறவுள்ளன. கரூர் மாவட்டத்தில் மட்டும் 266.78 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெறவுள்ளன. நடப்பு ஆண்டில் கரூர் மாவட்டத்தில், நெரூர் ஆதி திராவிடர் காலனியில் நபார்டு வங்கியின்மூலம் இணைப்புச் சாலை வசதிக்காக 21 இலட்சம் ரூபாய், சிமெண்ட் சாலை வசதிக்காக 4.44 இலட்சம் ரூபாய், கால்வாய் வசதிக்காக 5.87 இலட்சம் ரூபாய், சமுதாயக் கூடம்/பல்நோக்கு மையம் அமைக்க 15.10 இலட்சம் ரூபாய், நெல் அடிக்கும் களம் அமைப்பதற்கு 1.42 இலட்சம் ரூபாய் செலவிலும் இந்தப் பணிகள் எல்லாம் நடைபெற இருக்கின்றன என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியின்மூலம் நெரூர் பகுதியில் அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாயக் கூடம் அமைப்பதற்கு ஆவன செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார்.

**திரு. ம. இராஜ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்த சமயம் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் மற்றும் வேப்பந்தட்டை ஒன்றியங்களிலே சமுதாயக் கூடம் அமைத்துத் தருவதாக உறுதி அளித்தார்கள். அந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலே செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்திற்கு நாங்கள் ஆய்வுக்கு சென்றபோது, வேப்பந்தட்டை ஊரிலிருந்து பொது மக்கள் எல்லாம், எங்களுடைய பகுதிக்கு சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ம. இராஜ்குமார் அவர்களும் அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். அதன் அடிப்படையில், இந்த நிதியாண்டில் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**160—**

## பால் உற்பத்தி

***15528—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பால் வளத்தைப் பெருக்க அரசிடம் புதிய திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விரிவாக்கத் திட்டத்தின்மூலம் கோவை மாவட்டத்தில் பால் வளத்தைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

[2008 ஏப்ரல் 25

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக இருந்த பால் உற்பத்தியாளர்களுடைய கோரிக்கையை ஏற்று, பால் விலையைச் சமீபத்தில் உயர்த்திக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளை முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7.5 சதவிகிதத்திற்குக்கீழ் இதர சத்துக்கள் இருந்தாலும்கூட, இப்போது பால் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். இரண்டு ரூபாய் என்பதை உயர்த்தி, 3 ரூபாய் 50 பைசாவாக வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களும், கிராமப்புற மக்களும் பால் வளத்தில் அதிக அக்கறை செலுத்தி 30 ஆண்டு காலமாக சுமார் 7,500 பால் வளச் சங்கங்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய தற்காலிகப் பணியினை நிரந்தரம் செய்யவும், சம்பளத்தை உயர்த்தவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்த ஆட்சியிலும் இல்லாத அளவுக்கு, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, பசும் பாலுக்கு இரண்டு ரூபாயும், எருமைப் பாலுக்கு 4 ரூபாயும் விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கோவை மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தில் பால் கொள்முதல் மற்றும் விற்பனையை மேம்படுத்தி, பால் கையாளும் திறனை அதிகரிக்கும்பொருட்டு தொலைநோக்குத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் செலவிலான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 25]

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** அது 2011 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 3½ இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் திட்டத்தின் அடிப்படையில், கோவை மாவட்டத்தில் 16 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்தப் பால் குளிர்விப்பான்கள் நிறுவ, மத்திய அரசின் தூய்மையான பால் உற்பத்தித் திட்டத்தின்கீழ் திட்ட மொத்த மதிப்பீடு ரூ.772.97 இலட்சம் என்ற திருத்திய மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மொத்தப் பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு, இயந்திரங்களுக்காக 75 சதவிகிதம் மானியமாகவும், 25 சதவிகிதம் ஒன்றிய நிதியில் இருந்தும் வழங்கப்பட இருக்கிறது.

கீழ்க்கண்ட சங்கங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொங்கலூரில்-இராமம்பாளையம், அவிநாசி-துலுக்கமுத்தூர், பொங்கலூர்-செம்மிபாளையம், மடத்தகுளம் வட்டம்-பாப்பன்குளம், உடுமலை வட்டம்-மானுப்பட்டி, அவிநாசி வட்டம்-செம்மண்டம்பாளையம், சூலூர் வட்டம்-செங்கந்துறை, கிணத்துக்கடவு-ஒக்கிலிப்பாளையம், குடிமங்கலம் வட்டம்-எஸ். வல்லகுண்டாபுரம், பொங்கலூர்-வி.கள்ளிப்பாளையம், திருப்பூர்-சேமலவளை கவுண்டபாளையம், உடுமலைப்பேட்டை-கண்ணமநாயக்கனூர், பல்லடம் வட்டம்-கே. அய்யம்பாளையம், கிணத்துக்கடவு வட்டம்-வடபுதுவூர், காரமடை வட்டம்-வெள்ளியங்காடு, பொள்ளாச்சி வட்டம்-வடக்கிப்பாளையம் ஆகிய இந்த 16 சங்கங்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஒன்றியத்திலிருந்து திருப்பூர் நகர மக்களுக்கு நாள் ஒன்றுக்குத் தற்போது சுமார் 24 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திருப்பூர் வாடிக்கையாளர்களின் நலன் கருதியும், பெருகி வரும் மக்கள் தொகையைக் கணக்கில் கொண்டும், திருப்பூர் பால் குளிர்விப்பு நிலையத்தில் கூடுதலாக பால் குளிர்விப்பு அறை, பால் நிரப்பும் இயந்திரங்கள் போன்றவை நிறுவிட, விரிவாக்கத் திட்டத்தின் அடிப்படையில் 105 இலட்சம் ரூபாய், ஒன்றியம் ஈட்டியுள்ள இலாபத்தில் இருந்து 2008-2009 ஆம் ஆண்டில் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் லிட்டர் பால் திருப்பூரில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், கோவை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு பால் வளத்தைப் பெருக்குவதற்கு, பால் வளச் சங்கங்கள்மூலமாக சிறந்த முறையில் ஏற்பாடு செய்து வருவதாகக் கூறினார்கள். அதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில் என்னுடைய வால்பாறை தொகுதியில், பால் வளத்தைப் பெருக்கவும், பால் உணவுப் பொருட்களைத் தயாரிக்கவும், படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும், நீண்ட காலத் தவணையில், வட்டியில்லாத கடனாக, மானியத்துடன் கறவை மாடுகள் வழங்க அரசு முன் வருமா என்பதைக் கேட்பதோடு, இந்த அரசு ஏற்கெனவே கலர் டி.வி, எரிவாயு அடுப்பு போன்றவற்றை இலவசமாக வழங்கி இருக்கின்றீர்கள். அதேபோல, ரூ.7,000 கோடி கடன் தள்ளுபடி செய்து இருக்கிறீர்கள். ஆகவே, பால் வளத்தைப் பெருக்குவதற்கும், பால் வள உற்பத்தியை அதிகரிக்கவும் தாங்கள் ஏன் இலவசக் கறவை மாடுகளை மானியத்துடன் வழங்குவதற்கு, அதுவும் படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்குப் பால் பண்ணை வைப்பதற்கு உதவி புரிவதற்கு முன்வரக்கூடாது, கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன் வருமா என்பதையும் தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்துடன்கூடிய கறவை மாடுகள் வழங்கக்கூடிய திட்டம் பற்றி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு கலந்து ஆலோசனை செய்து, அதற்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கோவை தங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவர்களுடைய தொகுதியிலே, நாளை அல்லது நாளை மறுநாள் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் கோவை தங்கம் அவர்களே உணவுப் பூங்கா ஒன்றினைத் துவக்கி வைக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Supplementary-க்கு supplementary எல்லாம் கிடையாது, உட்காருங்கள். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-35

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### வேலூர், ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி, 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் எரிந்தது குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் இருப்பதால், அவை குறித்து இரண்டு அமைச்சர்கள் பதிலுரை வழங்க இருக்கிறார்கள். எனவே, ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

வேலூரிலுள்ள ஊரிஸ் மேல்நிலைப் பள்ளியில் வைக்கப்பட்டிருந்த 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் 24-4-2008 அன்று எரிந்ததாக செய்தி வெளியானது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. இ. மகேந்திரன், திரு. ஆர். சாமி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. கோ. அரி, திரு. இரா. குமரகுரு, திரு. ஆர்.டி. கணேசன் ஆகியோர் அ.தி.மு.க. சார்பாகவும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், திரு. டி.கே. ராஜா, திரு. கே.எல். இளவழகன், திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. ப. டில்லி பாபு, திருமதி ஜி. லதா, திரு. கே. மகேந்திரன், திருமதி ரா. லீமா றோஸ் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், ம.தி.மு.க. சார்பாக திரு. வீர. இளவரசன் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. கு. செல்வம் ஆகியோரும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. சி. கோவிந்தசாமி, சொல்லுங்கள்.

## 3. தகவல் கோரல்

### (அ) அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியப் பணிகள் வருவாய்த் துறைக்கு மாற்றப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்யக் கோரிக்கை

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தொழிலாளர் நலத் துறை மானியக் கோரிக்கை என்ற முறையிலும், ஏற்கெனவே முறைசாராத் தொழிலாளர்களின் 14 நல வாரியங்கள், தொழிலாளர் துறையிலே செயல்பட்டு வந்ததை வருவாய்த் துறைக்கு மாற்றியிருப்பதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும், மீண்டும் அந்த நல வாரியப் பணிகள் அனைத்தும் தொழிலாளர் நலத் துறையிலேயே தொடர வேண்டும், அதற்கு அரசு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கின்றோம்.

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

### வேலூர், ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி, 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள்கள் எரிந்தது குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தனை பேர் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கொடுத்திருந்தபோதிலும், இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் இருப்பதால், அவை குறித்து 2 அமைச்சர்கள் பதில் வழங்க இருக்கிறார்கள். ஆகவே, இதன்பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் அறிக்கை தாக்கல் செய்யவிருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியோடு பேரவை விதி 110-ன்கீழ் நான் அறிக்கை ஒன்றினை, விடைத்தாள் திருத்தும் மையத்தில், 10 ஆம் வகுப்பு விடைத்தாள்கள் தீயினால் பாதிக்கப்பட்டது குறித்து இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.



மார்ச் 2008 இடைநிலை மெட்ரிக் பொதுத் தேர்வு முடிந்து, விடைத்தாள்கள் திருத்தும் பணி 18-4-2008 முதல் மாநிலம் முழுவதும் உள்ள 74 மையங்களில் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மையத்திலும் வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 5 பாட விடைத்தாள்கள் மதிப்பீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 24-4-2008 அன்று இரவு 10½ மணி அளவில் வேலூர் ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி விடைத்தாள்கள் திருத்தும் முகாமில் தீ விபத்து ஏற்பட்டதாகச் செய்தி பெறப்பட்டதும், அரசுத் துறைத் தேர்வுகள் இணை இயக்குநர் (மேல்நிலை) மற்றும் துணை இயக்குநர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, தீ விபத்து குறித்து நேரில் பார்வையிட்டு, அதன் அறிக்கையினை அனுப்பியுள்ளதன் அடிப்படையில் இந்த அவையில் இந்த அறிக்கையை நான் வைக்கிறேன்.

24-4-2008 அன்று இரவு சுமார் 7-00 மணிக்கு விடைத்தாள்கள் திருத்தும் பணி முடிக்கப்பெற்று, விடைத்தாள்கள் வைக்கும் அறையைப் பூட்டி, அரக்கு சீலிடப்பட்டு, காவல் துறைப் பாதுகாப்பில் முகாம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இரவு சுமார் 9½ மணி அளவில் பூட்டி சீலிடப்பட்ட அறையில் இருந்து புகை வந்ததை, காவலில் இருந்த காவலர் மற்றும் பள்ளி இரவுக் காவலர் ஆகியோர் கவனித்து, உடனடியாகத் தீயணைப்புத் துறைக்குத் தகவல் அனுப்பியுள்ளனர். உடனடியாகத் தீயணைப்பு வீரர்கள் வந்து அறைக் கதவினை சிறிது உடைத்து, தண்ணீர் பீய்ச்சி, தீயை அணைத்து உள்ளனர். 24-4-2008 அன்று மாலை நிலவரப்படி, கீழ்க்கண்ட விவரப்படி, விடைத்தாள்கள் சேமிக்கும் அறையில் விடைத்தாள்கள் பாட வாரியாக சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அதாவது, தமிழ் இரண்டாம் தாள் 22,327, ஆங்கிலம் இரண்டாம் தாள் 12,888, கணிதம் 3,825, அறிவியல் 3,146, சமூக அறிவியல் 9,316 உருது இரண்டாம் தாள் 360, கணிதம் (உருது வழி) 16, அறிவியல் (உருது வழி) 132, சமூக அறிவியல் (உருது வழி) 10, ஆக மொத்தம் 52,020 விடைத்தாள்கள் அங்கே சேமித்து வைக்கப்பட்டிருந்தன. எதிர்பாராத வகையில் அங்கு தீ விபத்து ஏற்பட்டாலும்கூட நல்ல வேளையாக அங்கு வைக்கப்பட்டிருந்த பல பிரிவு விடைத் தாள்களும் எரிந்து போகாமல் பாதுகாக்கப்பட்டு விட்டன. மேற்கண்ட விடைத்தாள்களில் ஆங்கிலம் இரண்டாம் தாள் விடைத்தாள் மாத்திரம் இருந்த பகுதி தீயினாலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பிற விடைத்தாள்கள் எதுவும் பாதிக்கப்படவில்லை. தீயினால் பாதிக்கப்பட்ட விடைத்தாள்கள் விழுப்புரம் கல்வி மாவட்டத்தைச் சார்ந்தவை ஆகும். இந்தத்

தீ விபத்து குறித்து காவல் துறை மற்றும் வல்லுநர்கள் தீவிர விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டுள்ளதால், சேதமடைந்த விடைத்தாள்கள் விவரம் விசாரணைக்குப் பின்னர் தெரிய வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதுபோன்ற எதிர்பாராத நிகழ்வுகள் கடந்த காலங்களில் நடைபெற்றபோது அரசுத் தேர்வுத் துறை வழக்கமாகக் கடைப்பிடித்து வரும் நடைமுறைகளைப் பின்பற்றி--set procedure—மாணவர்களுக்குப் பரிகாரம் வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட விடைத்தாளுக்கு உரிய மாணவர்கள் மீண்டும் தேர்வு எழுதும் நிலை ஏற்படாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*முற்பகல் 10-40*

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாட்டு காவல் துறை அதிகாரி திரு. ஜே.கே. திரிபாதி, இ.கா.ப., அவர்களுக்கு பாரதப் பிரதமர் விருது வழங்கப்பட்டிருப்பதற்குப் பாராட்டுத் தெரிவித்தல்

**திரு. சி. ஞானசேகரன்:** Mr. Speaker Sir . . .

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. பீட்டர், one minute. உட்காருங்கள். ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) விதி 110-அறிக்கையின்மேலே விவாதம் கிடையாது. I won't allow you. (Interruptions) No, no. No questions on 110 statement. (Interruptions) அடுத்த சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்தால் எழுந்திருங்கள். (குறுக்கீடுகள்) I won't allow you. அடுத்த சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்தால் எழுந்திருங்கள். Otherwise, I won't allow you. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாராளுமன்ற ஜனநாயக மரபில், பாராளுமன்ற, சட்டமன்ற அமைப்புகள், நீதி நிருவாகம், அரசினுடைய நிருவாகத் துறை, பத்திரிகைகள் ஆகியவை நான்கு தூண்களாக வர்ணிக்கப்படுகின்றன. இவற்றிலே அரசினுடைய பணியிலிருக்கின்ற



Civil Service—இந்திய ஆட்சிப் பணியிலேயிருக்கின்ற அதிகாரிகள் சட்டமன்றம், நாடாளுமன்றம் எடுக்கின்ற முடிவுகளுக்கும், அமைச்சரவை எடுக்கின்ற முடிவுகளுக்கும் செயல் வடிவம் கொடுத்து, மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கின்ற அந்தப் பணியை நம்முடைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற Civil Service அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள். அவர்களுடைய பணித் திறத்தை, அரசுப் பணியில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை, நிருவாகப் பணியில் அவர்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை, தொலைநோக்குப் பார்வையினை, நிருவாக அணுகுமுறையில் கால மாற்றத்திற்கேற்ப நடைமுறை யதார்த்தத்துடன் அவர்கள் அறிமுகப்படுத்துகிற புதிய நிர்வாக அணுகுமுறைகளை, அவர்களது பணிவாரியாக இந்தியா முழுவதும் அதைக் கவனித்து, கண்காணித்து மிகச் சிறந்த அரசுப் பணி அதிகாரிகளுக்கு, Civil Service அதிகாரிகளுக்கு நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், Prime Minister's Award for Excellence in Public Administration என்ற விருதினை வழங்கி வருகிறார்கள். அத்தகைய விருது இந்த ஆண்டு, நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறை அதிகாரி திரு. ஜே.கே. திரிபாதி, ஐ.பி.எஸ்., அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது தமிழ்நாட்டிலிருக்கின்ற நமக்கெல்லாம் பெருமை. பொது மக்கள் மத்தியிலே பொறுப்பான காவல் துறை அதிகாரியாக அவர் பணியாற்றியதை அங்கீகாரம் செய்து, பொது மக்களது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்திக்கொள்ளுகின்றபோது, Community Police Module என்ற புதிய அணுகுமுறையை அவர்கள் அறிமுகப்படுத்திய காரணத்தினால், மத்திய அரசு இன்று அதை அங்கீகாரம் செய்து, பிரதம அமைச்சர் அவர்கள், அவருக்கு அந்த Excellence என்கிற அந்த அவார்டையும், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசையும், ஒரு தங்கப் பதக்கத்தையும், பட்டயத்தையும் வழங்கியிருக்கிறார்கள். நல்ல அதிகாரிகளைப் பாராட்ட வேண்டிய கடமை இந்த அவைக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட நல்ல அதிகாரிகளுடைய பணி மேலும் தொடர வேண்டுமென்று வாழ்த்துகின்ற அதே வேளையிலே, தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த அதிகாரிக்கு அகில இந்திய அங்கீகாரம் கிடைத்ததை இந்த அவை பாராட்டி மகிழ்கிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொண்டு, அமர்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேச வேண்டும் . . .

[2008 ஏப்ரல் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எறும்புபோல் சுறுசுறுப்பு, யானை போன்ற நினைவாற்றல், எருதுபோன்ற ஊக்கம், குதிரைபோன்ற விரைவுத் திறன், இவையனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று, மக்கள் நலன் ஒன்றையே உள்ளங்கொண்டு, நாளும் உழைக்கும் உத்தமத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் இந்து சமய அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்துள்ளது, என் வாழ்நாளில் நான் செய்த பாக்கியம் என்று எண்ணுகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1957 ஆம் ஆண்டிலே குளித்தலை சட்டமன்றப் பேரவைக்கான தேர்தலில் முதன்முதலாக நின்று, அந்தத் தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நங்கவரம் பண்ணை மற்றும் பேருந்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினையில் தலையிட்டு, தொழிலாளர்களுடைய உரிமைக்காகவும், மேம்பாட்டிற்காகவும், தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர் நம் மாண்புமிகு முதல்வர் அன்புத் தலைவர் கலைஞர் அவர்கள்.

தொழிலாளர்கள் தினமாக கருதப்படுகின்ற மே 1 ஆம் தேதியை, 'May Day is pay day' என்று அறிவித்து, இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக இருந்தவர் நம் அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். மே 1 ஆம் தேதியை சம்பளத்துடன்கூடிய விடுப்பு தினமாக அறிவித்துப் புரட்சி செய்தவர் நம் முதல்வர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை நிறுவனங்களாக இருக்கின்ற மின்சார வாரியம், போக்குவரத்துக் கழகங்கள், பால் வளத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய துறைகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் எப்போதெல்லாம் முதல்வராக வருகின்றாரோ, அப்போதெல்லாம் குறைந்தபட்ச போனசை விட, அதிகமான போனசாக, அதாவது 20 சதவீதம் போனசை வழங்கி, தொழிலாளர்களுடைய உணர்வுகளை, உழைப்புகளை மதிக்கின்ற ஒரு தலைவராகத் திகழ்கிறார் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.



கருணை அடிப்படையில், பணியில் இருக்கும்போதே இறந்தவர்களுடைய வாரிசுகளை வேலைக்கு அமர்த்தியும், அவர்களுக்கு முழுச் சம்பளம் வழங்கியும், அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றியவர் நம் ஒப்பற்ற தாயுள்ளம் கொண்ட தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள் போன்ற பல்லாயிரக்கணக்கானவர்களுடைய குடும்பங்களின் இதயங்களிலே கொலு வீற்றிருக்கின்ற ஒரு நல்ல தலைவராக நம்முடைய முதல்வர் அவர்கள் வீற்றிருக்கின்றார்கள்.

முதல்வர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்றது தொழிலாளர் முன்னேற்றச் சங்கம். ஆகவேதான், அவர் தலைமையிலே இயங்குகின்ற இந்த இயக்கத்தினுடைய ஒரு அங்கமாக இருக்கின்ற தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்திற்கு அகில இந்திய அளவிலே இன்றைக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதற்குக் காரணமாக விளங்கிக்கொண்டிருப்பவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முடி திருத்துவோர் நல வாரியம், சலவைத் தொழிலாளர் நல வாரியம், சாலைகளிலே செருப்புத் தைக்கின்ற தொழிலாளர்களுக்கு நல வாரியம், தோல் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு நல வாரியம், வீட்டுப் பணியாளர்களுக்கு நல வாரியம், பனை மரத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் என இப்படி எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுடைய நலனுக்காக நல வாரியம் கண்டவர்தான் நம்முடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13-5-2006-ல் கலைஞர் அரசு அமைந்த பிறகு அமைப்புசாராத் தொழிலாளர்களாக 6-1-2008 வரை 19 மாதங்களில் 1 கோடியே 80 இலட்சத்து 83 ஆயிரத்து 329 தொழிலாளர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து சாதனை படைத்துள்ளது டாக்டர் கலைஞர் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட சமுதாய மக்களின் குழந்தைகள் படிப்பிற்கும், தொழிற் பயிற்சிக்கும், வேலைவாய்ப்பு பெறுவதற்கும் உதவி செய்தவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

தொழிலாளர்களுடைய நலனைக் கண்காணிக்க குழு அமைக்க ஆணை பிறப்பித்தவர் நம்முடைய தலைவர்.

தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டம், மருத்துவப் பயன், பேறு காலப் பயன், இயலாமையால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயன்கள் எனப் பல்வேறு பயன்களை அள்ளித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழக ஆட்சியில் தொழிற்சாலை ஆய்வாளர்கள் பொது மக்களுக்குப் பயனுள்ள செயல் முறை விளக்கங்களை அளித்து வருவது பாராட்டைப் பெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு தொழில் நிறுவனங்களோடு 17,583 கோடி ரூபாய் அளவில் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது நம்முடைய தலைவர் கலைஞர் அரசு. இந்த இரண்டு ஆண்டுகளில் 13-க்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஹூண்டாய் கார் தொழிற்சாலை, டெல் கம்ப்யூட்டர்ஸ், மோட்டரோலா, சாம்சங், மோசர் பியர், சிக்நெட் சோலார் போன்ற தொழிற்சாலைகளை உருவாக்கியதன் பயனால், 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய நிலையை உருவாக்கியிருப்பவர் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலைவாய்ப்பு உறுதி--அவர்களுக்குத் தொழில் பாதுகாப்பு. அது மட்டுமல்லாமல், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குக்கூட நல வாரியம் அமைத்து, அத்தகைய தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் மரணம் அடைந்தால், அந்தக் குடும்பம் நல்ல முறையிலே எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல் வாழ்க்கை நடத்துவதற்குப் பொருளாதார உதவியைப் பெற்றுத் தருகின்ற நல வாரியங்களைத் தந்தவர் நம்முடைய உன்னதத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம்.ஆர்.எப். தொழிலாளர்கள் போராடியபோது, தொழிலாளர்கள் பிரச்சினை தீர்க்கப்படவில்லையென்றால், எம்.ஆர்.எப். நிறுவனத்தையே அரசுடைமையாக்குவோம் என்று அறிவித்து, தொழிலாளர் பிரச்சினையைக் கருணையோடு தீர்த்தவர் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.



தனியார் தொழிற்சாலைகளில் பணியிடங்களில்கூட 27 சதவீதம் இட ஒதுக்கீடு தந்து சமூக நீதிக்காகப் போராடியவர் நம்முடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்தவர்களுக்குப் புதுப்பிக்கின்ற சலுகைகளை வழங்கி உரிமையைப் பெற்றுத் தந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத இளைஞர்களுக்கு 1994 ஆம் ஆண்டு முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்ட வேலையில்லாக் கால நிவாரணத் தொகை தற்போது தலைவர் கலைஞர் ஆட்சியில் செயல்படுத்தப்படுகிறது.

முற்பகல் 11-30

நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

*"சாலையோரத்திலே வேலையற்றதுகள்*
*வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள்*
*வேந்தே! அதுதான் காலக் குறி"*

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களைப்பற்றி வேதனைப்பட்டார். ஆனால், இன்றைக்குக் கலைஞர் அவர்கள் அந்த இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றும்வண்ணம் மாதாந்திர உதவித் தொகையை வழங்கி, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்துள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, பட்டதாரிகள் ஆகிய வேலைவாய்ப்பற்ற பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூபாய் 150, 200, 300 என வழங்கி, அவர்கள் நூல்களை வாங்கிப் படிக்கவும், வேலைக்கு விண்ணப்பங்களை வாங்கி அனுப்புவதற்கும், இவர்கள் வாழ்க்கையிலே விரக்தி அடைந்துவிடக்கூடாது என்பதற்காகவும் அவரது நெஞ்சத்திலே உதித்ததுதான் இந்தத் திட்டம்.

வேலைவாய்ப்பற்ற 3,53,488 பேருக்கு 117 கோடி ரூபாய் அளவில் உதவித் தொகை வழங்குவதால், இன்றைக்குப் பலன் பெற்று வருவது இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமே. வேறு எந்த மாநிலத்திலாவது இந்த முறையைப் பின்பற்றியது உண்டா என்றால்,

இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், வேலைவாய்ப்பில் தடையாணை போட்டு, கடந்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கு இனி இடம் இல்லையென்று கறுப்புச் சட்டம் (Black Act) போட்ட ஆட்சி கடந்த கால ஆட்சி. ஆனால், வேலை நியமனத் தடைச் சட்டத்தை நீக்கி, 5 ஆண்டு வயது வரம்பைத் தளர்த்தி, அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு உத்தரவிட்டவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களில் பணியாற்ற அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களைக் கூடுதலாக உருவாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மெக்கானிக், பாடி பில்டிங், வெல்டிங், எலக்ட்ரிகல், கருமார் ஆகியோரையும் சேர்த்து தமிழகம் முழுவதும் ஒரு கோடி நபர்கள் வேலை செய்கிறார்கள். இவர்களுக்குத் தனி நல வாரியம் அமைக்க வேண்டியும், நகைக் கடை, பல்பொருள் அங்காடி, மருந்தக நிறுவனம், நிதி நிறுவனம், மண்டிகள் ஆகியவற்றில் வேலை செய்யும் ஊழியர்களுக்குத் தனி நல வாரியம் அமைக்க வேண்டியும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரங்களைக் கண்ட சரித்திர நாயகர் தலைவர் கலைஞர் அவர்கள்--பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் 1929 ஆம் ஆண்டில் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில், 'எல்லோரும் அர்ச்சகர் ஆகலாம், எல்லோரும் ஆண்டவனை வழிபடலாம், இதிலே சாதி வேறுபாடு தேவையில்லை' என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்--தந்தை பெரியாரின் கனவை நனவாக்கும்விதமாக அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்திக்கொண்டிருப்பவர் தலைவர் கலைஞர். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்வகையில், நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு, 207 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களில் 76 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், 55 மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், 34 ஆதி திராவிடர் மாணவர்களும், 42 பிற வகுப்பு மாணவர்களும்



பயிற்சி பெற்று வருகின்றனர். கலைஞர் அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்தில் ரூ.37 கோடி செலவில் 1,685 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான உளுந்தூர்பேட்டை தொகுதியில் 17 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உயர் கல்வி பயில்வதற்கு 70, 80 கி.மீ. தொலைவில் விழுப்புரம், திண்டிவனம், கடலூர் போன்ற அரசுக் கலைக் கல்லூரிகளை நாடவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, இந்த மாணவர்கள் உயர் கல்வி பெற மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இந்த மாணவர்களுக்கு உளுந்தூர்பேட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையம் அருகில் சுமார் 20 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் தரிசாக உள்ளது. இந்த இடத்தில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை உருவாக்க வேண்டுமாய் தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தியாகதுருகம் பகுதி மக்களின் கோரிக்கையாக, தியாகதுருகத்தில் தியணைப்பு அலுவலகம் உருவாக்கித் தர வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் என்னும் கலங்கரை விளக்கத்தின் ஒளிபெற்று வாழ்வில் நாம் உயர்வோம் என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம். உங்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும், எங்களுடைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், எங்களை வழிநடத்திச் செல்லுகின்ற மக்கள் தளபதி திரு. ஜி.கே. வாசன் அவர்களுக்கும், எங்களுக்கு ஆலோசனை வழங்குகின்ற சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும், கொறடா திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும்,

துணை கொறடா திரு. சி. ஞானசேகரன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று, இந்தியாவிலேயே ஒரு குடும்பத்திற்கு ஒரு வேலைத் திட்டத்தை அறிவித்து சிறப்பான முறையிலே ஏற்பாடு செய்திருக்கின்ற, வழிகாட்டியாக இருக்கின்ற அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-35*

தமிழகத்தில் நாள்தோறும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குத் திட்டம் தீட்டி, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கும், இளைஞிகளுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற மிகப் பெரிய ஒரு சாதனையைச் செய்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 77 ரூபாய் கூலி. ஆனால், அண்ணா தி.மு.க. ஆட்சியில் 2001-லே ஆட்சிக்கு வந்தபோது, ஏற்கெனவே கொடுத்து வந்த சம்பளத்தில் 5 ரூபாயைப் பிடிப்பதற்கு நிருவாகத்திற்கு உறுதுணையாக இருந்ததே அண்ணா தி.மு.க. ஆட்சிதான். (குறுக்கீடுகள்) பேசுங்கள், புத்தகம் இருக்கிறது. பேசுவதற்கு, எதை வேண்டுமானாலும் நான் விவாதம் செய்வதற்குத் தயாராக வந்திருக்கிறேன். எதை வேண்டுமானாலும் விவாதம் செய்யலாம். 2001-லே அண்ணா தி.மு.க. ஆட்சியிலே 5 ரூபாயைப் பிடித்தம் செய்ததற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சாமி, திரு. கோவை தங்கத்திடம் போய்-(குறுக்கீடு) பாருங்கள், ஆதாரம், எவ்வளவு ஆதாரம் வைத்திருக்கிறார்!

**திரு. கோவை தங்கம்:** அண்ணா தி.மு.க. ஆட்சியில்தான் 5 ரூபாயைப் பிடித்தார்கள். 2001-ல் யாருடைய ஆட்சி? (குறுக்கீடுகள்) 2001-ல் யாருடைய ஆட்சி? அண்ணா தி.மு.க. ஆட்சி. அண்ணா. தி.மு.க. ஆட்சியிலேதான் தேயிலைத் தோட்ட நிருவாகத்திலே 5 ரூபாயைப் பிடித்தார்கள். இரண்டாவது, 2001-லிருந்து அண்ணா தி.மு.க. ஆட்சி முடிய (குறுக்கீடுகள்) நீங்கள் சும்மா சத்தம் போட்டுப்



பிரயோஜனமே இல்லை. அண்ணா தி.மு.க. ஆட்சியில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு ரூபாய் சம்பள உயர்வாவது கிடைத்திருக்கிறதா என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்லட்டும். ஒரு ரூபாய் அவர்கள் ஆட்சியிலே சம்பள உயர்வு கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. (குறுக்கீடுகள்) இருங்கள். சப்ஜெக்ட்டே இதுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாய்ப்புத் தருகிறேன். திரு. செங்கோட்டையன், வந்துட்டாரய்யா, வந்துட்டாரு! (சிரிப்பு)

**திரு. கோவை தங்கம்:** சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புப் புத்தகம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், வந்துட்டாரய்யா!

**திரு. கோவை தங்கம்:** ஆதாரம் இருக்கிறது. ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆதாரம். அவர், கோவை தங்கம் இல்லை, அவர் சொக்கத் தங்கம். ஆதாரத்தைக் கையில் வைத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கோவை தங்கம்:** இதோ பாருங்கள். அண்ணா தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புப் புத்தகம். (குறுக்கீடுகள்) சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புப் புத்தகம், பக்கம் 110. 2005 ஆம் ஆண்டு. 4-4-2005 ஆம் தேதி. (குறுக்கீடுகள்) பாருங்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் சொல்கிறார், நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் நன்றாகத்தான் கேட்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** "மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டுமென்கின்ற அந்த உயரிய மனப்பான்மை கொண்டுதான். மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு சிறப்பு

நீதிமன்றத்தை அமைத்து, அதற்கு நீதிபதியையும் நியமனம் செய்திருக்கின்றார்கள். எனவே, அந்த நீதியை வழங்க வேண்டியது, அந்த நீதிபதியினுடைய பொறுப்பு. அதைத்தான் அந்த நீதிபதி செய்ய வேண்டும்." என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. செங்கோட்டையன் பேசுகிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது, நீதிபதியைக் கொண்டு அதை விசாரித்து அந்தப் பகுதியில் இருக்கிற தொழிலாளர்களுக்கு, எஸ்டேட் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றுதான் அவர் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர--நீங்கள், சொக்கத் தங்கம் என்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) சொக்கத் தங்கமாக அவர் இருந்த காரணத்தாலேதான் அவர் கட்சியிலிருந்து, பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார் என்பதையும், அவர் உண்ணாவிரதம் இருந்தார் என்பதையும் நாடு அறியும். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** This is not fair.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் ஒரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். இதோ பாருங்கள். இரண்டு மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) போராட்டத்தைக் குறித்து Personal accusation எல்லாம் வேண்டாம்.

***திரு. டி. சுதர்சனம்:** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொறடா அவர்கள் இங்கே சொன்னார், சொக்கத் தங்கம் கட்சியைவிட்டு நீக்கப்பட்டார் என்று. தவறான தகவலை இந்த அவைக்கு...

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Personal-ஆக யாரும் எதுவும் பேசாதீர்கள்.



(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்தனர்)

**திரு. டி. சுதர்சனம்:** தவறான தகவலை அ.தி.மு.க.வின் கொறடா அவர்கள் இங்கே தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். கட்சியிலிருந்து அவர் நீக்கப்படவில்லை. இருந்தாலும், அவர்களுடைய கட்சியைப் பொறுத்தவரை, தினம் தினம் ஒருவரை மாற்றுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மறுநாள் மீண்டும் சேர்ப்பார்கள். அந்த நிலைமை அவர்களிடம் இருக்கின்றது. ஆனால் நம் கோவை தங்கம், 7 ஆண்டு காலமாக மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார். இது ஒன்று. மற்றொன்று, அவர்கள் கட்சியைவிட்டு நீக்கப்பட்ட ஒருவரை, அரசியல் ஆலோசகர் என்ற புதிய பெயரில் உருவாக்கி, கொண்டு வந்து சேர்த்து, அரசியல் ஆலோசகர் என்று சொல்லி, அந்தப் பதவியைக் கொடுப்பார்கள். கொடுத்துவிட்டு, அவரை எந்தவிதமான பணியையும் செய்யவிடாமல் விடுவார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்சியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டவர், கட்சியைவிட்டு எப்போதும் நீக்கப்படவில்லை. அதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். (குறுக்கீடுகள்) எங்கே நீக்கி இருக்கின்றார்கள்? உங்களுக்குத் தெரியாமல் உளறக்கூடாது. தெரிந்தால் சொல்லுங்கள், இருந்தால் எடுத்துக் காட்டுங்கள். எங்கே நீக்கி இருக்கின்றார்கள்? சொல்வது எதையும் தவறாகச் சொல்லக்கூடாது. நான் சொல்வது என்னவென்றால், கோவை தங்கம் கட்சியைவிட்டு நீக்கப்பட்டார் என்று சொல்லவில்லை. சொக்கத் தங்கம் என்று நீங்கள் சொன்னீர்கள். அவருடைய பொறுப்பை எடுத்துவிட்டதால், அவர் அந்தக் கட்சியை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தது போன்ற சரித்திரம் எங்கள் கட்சியில் என்றைக்கும் நடக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், ஒரு உதாரணம் சொல்லிவிட்டீர்கள். மானியக் கோரிக்கைமீது தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் வால்பாறைக்கு வந்தார்கள். (குறுக்கீடுகள்) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், மானியக் கோரிக்கையையொட்டிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் சில கருத்துகளைச் சொன்னார்கள். அதற்கு அ.தி.மு.க.வின் சார்பிலே மறுப்புத் தெரிவித்துவிட்டார்கள். ஆனால், தொடர்ந்து அ.தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக விளக்கம் கேட்கவேண்டுமென்றால், சபையை நடத்த முடியாது. எனவே, கோவை தங்கம் அவர்களைப் பேச அனுமதிக்கும்படிக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவை தங்கம். (குறுக்கீடுகள்)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் 9 ஆம் தேதி அ.தி.மு.க.வின் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே ஒரு செய்தியை வெளியிட்டிருக்கின்றார்கள். என்னவென்று சொன்னால், 10 ஆம் தேதி வால்பாறையில் ஆர்ப்பாட்டம். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் சம்பளம் வழங்கவேண்டுமென்று ஆர்ப்பாட்டம் என்று அறிவித்திருக்கின்றார்கள். இதை நான் வரவேற்கின்றேன். (குறுக்கீடு) ஆனால், யார் அறிவிக்கின்றார்? முதலாளிகளுக்கு எதிராக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். வரவேற்கின்றேன். ஆனால், முன்னாள் முதலமைச்சருடைய கோடநாடு எஸ்டேட்டில் எவ்வளவு சம்பளம் தருகின்றார்கள்? 100 ரூபாய் தருகின்றார்களா? (குறுக்கீடு) 100 ரூபாய் கொடுக்கின்றார்களா? (குறுக்கீடுகள்) 100 ரூபாய் கொடுக்கின்றார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)



**திரு. கோவை தங்கம்:** பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல் அய்யா. (குறுக்கீடு) பதில் சொல் அய்யா. பதில் சொல்லுங்கள் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன் நின்று கொண்டிருக்கின்றார், மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** பதில் சொல் பார்க்கலாம். முதலில் நீ 100 ரூபாய் சம்பளம் கொடு. அதற்குப் பிறகு வால்பாறைக்கு வந்து 100 ரூபாய் கேளு. மனசாட்சி இருந்தால் நீங்கள் கோடநாடு எஸ்டேட்டில் நாளைக்கே கொடுக்கச் சொல்லுங்கள், வரவேற்கின்றேன். (குறுக்கீடுகள்) 100 ரூபாய் கொடுக்கச் சொல்லுங்கள், வரவேற்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாரும் ஒருமையில் பேசாதீர்கள். Personal accusation பண்ணாதீர்கள். (குறுக்கீடுகள்) தனிப்பட்ட முறையில் விமர்சனம் பண்ணக் கூடாது. (குறுக்கீடுகள்) எல்லோரும் அவரவர் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் அமருங்கள். எல்லோரும் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் உட்கார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. வேலுமணி, எல்லோரும் பின்னால் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், அ.தி.மு.க. உறுப்பினர்களும் உணர்ச்சி வயப்படவேண்டிய அவசியம் இல்லை. கோவை தங்கம் அவர்கள் பேசுகின்றபோது (குறுக்கீடுகள்) கொஞ்சம் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கோவை தங்கம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். முதலில் அமைச்சர் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** வால்பாறையில் தொழிலாளர்களுக்கு 100 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று அ.தி.மு.க.வினர் போராட்டம் நடத்துகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். அவர் கேட்பதெல்லாம், வால்பாறையிலே தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்குக் கூலி 100 ரூபாய் கேட்கிறீர்களே, அதைப்போலவே, கோடநாடு எஸ்டேட்டில் இருக்கக்கூடிய தேயிலைத் தொழிலாளர்களுக்கும் 100 ரூபாய் கொடுப்பீர்களா என்று கேட்கிறார். (குறுக்கீடுகள்) அதற்கு நம்முடைய அ.தி.மு.க. கொறடா அவர்கள், கோடநாடு எஸ்டேட்டிலே 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று சொல்லலாம் அல்லது கொடுக்கப்படும் என்று சொல்லலாம். அதைவிட்டுவிட்டு, அனைவரும் எழுந்து நின்று பேசினால், எப்படி அவையை நடத்துவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை, அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல. ஆனால், வால்பாறையை மொத்தமாகப் பேசுவது, குன்னூரிலே இருக்கின்ற கோடநாடை மட்டும் பேசுவது, அப்படியென்றால் உங்களுடைய எஸ்டேட்டுகள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைப்பற்றித் தனியாகப் பேசலாமா? (குறுக்கீடுகள்) இருங்கள். நான் பேசி விடுகிறேன். ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் அமைதியாக இருங்கள். Please.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஆகவே, அவர் கேட்ட கேள்வி, ஒரு குறிப்பிட்ட இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டுவதுதான் எங்களுக்கு உணர்வுபூர்வமாகத் தெரிகிறதே தவிர, வால்பாறையிலே கொடுங்கள், ஊட்டியில் கொடுங்கள் என்று குன்னூரில் கொடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஒரு கேட்கட்டும், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. ஒரு particular பெயரைச் சொல்லி, வேண்டுமென்றே கேட்பதுதான், வேண்டுமென்றே எங்களைத் திசை திருப்புகின்ற வகையிலும், சபையைச் சரியான முறையில் நடத்துவதற்கு வழியில்லாமலும் செய்வதைத்தான் செய்துகொண்டிருக்கிறாரே தவிர--நான் கேட்பது, ஒரு குறிப்பிட்ட பெயரை ஏன் சொல்லவேண்டும் என்றுதான் கேட்கிறேன். அதுவும் எதற்காக குறிப்பிட்டார்? என்ன காரணம் அதிலே? என்ன உள்நோக்கம் இருக்கிறது? அது மட்டுமல்ல, இதுபோன்று ஜால்ரா போட்டுக்கொண்டு இருந்ததால், அவரது கட்சியிலே இன்றைக்குப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாரே தவிர, வேறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) இந்த ஜால்ரா போடுவதை நிறுத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்). திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு நீதிமன்றம் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சின்னசாமி, உங்களைக் கூப்பிடவில்லை முதலில் உட்காருங்கள். கையை நீட்டிப் பேசாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும்.

**திரு. கோவை தங்கம்:** சிறப்பு நீதிமன்றம், இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான் கேட்பது எல்லாம், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், சீக்கிரம் உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. கோவை தங்கம்:** நான் இன்னும் பேசவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம் ஒரே ஒரு கேள்வி. இப்பொழுது சிறப்பு நீதிமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற ஆட்சியில் நான் கேட்டது, சிறப்பு நீதிமன்றம் செயலிழந்து கிடந்தது. ஆகவே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீங்கள் தலையிட்டு சம்பளத்தைத் தாருங்கள் என்று நான் கேட்டேன். அப்பொழுது அவர்கள், பாருங்கள், பக்கம் 116-ல் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று கேட்டால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், ஆரம்பத்திலேயே நீங்கள் காண்பித்தீர்கள். நீங்கள் பேசிவிட்டீர்கள். *(குறுக்கீடு)*

**திரு. கோவை தங்கம்:** அது வேறு, இது வேறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You go to the next subject.

**திரு. கோவை தங்கம்:** அந்த subject தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வதைக் கேளுங்கள். அடுத்த subject-க்குப் போங்கள். திரு. கோவை தங்கம். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11-50*

**திரு. கோவை தங்கம்:** "மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் தொடர்பான பிரச்சினையை இங்கே எழுப்பியுள்ளார். சில ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடிக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் வகையில், இந்த அரசு இந்தப் பிரச்சினையை சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் முடிவிற்கு--Special Industrial Tribunal முடிவிற்கு அனுப்ப ஆணையிட்டுள்ளது"

"...இந்தச் சிறப்பு நடவடிக்கையின் வாயிலாக, தமிழக அரசு அதிக அளவில் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய துறைகளில் சுமுகமான



தீர்வு ஏற்படுவதற்கு வழிவகை செய்துள்ளது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தீர்ப்பாயத்தின் முடிவிற்கு ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், தற்போது அரசு நேரடி சமரசப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள இயலாது." நான் வரவேற்கிறேன், வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. *(குறுக்கீடுகள்)*

**திரு. கோவை தங்கம்:** வரவேற்கிறேன் என்றுதான் சொல்கிறேன். ஆனால் அந்தச் சிறப்பு நீதிமன்றம் இப்போது இருக்கிறபோது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வால்பாறையிலே ஆர்ப்பாட்டம் செய்ய அறிவித்திருக்கிறார்கள் என்பதைத் தான் சொல்ல வருகிறேன். அதைத் தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பரவாயில்லை, நீங்கள் next subject-க்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், நேரம் கொடுங்கள். அவருக்கு நேரம் வேண்டுமல்லவா?

**திரு. கோவை தங்கம்:** 1997 ஆம் ஆண்டு . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு சப்ஜெக்ட்டுக்குப் போகச் சொல்லியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. கோவை தங்கம்:** 1997 ஆம் ஆண்டு 77 ரூபாய், 2008-லும், அதாவது இப்போதும் 77 ரூபாய். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுடைய உத்தரவின் பேரில் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்களை அழைத்து, சென்ற 6 மாதத்தில் மட்டும் 18 முறை சென்னைக்கும், கோவைக்கும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் மட்டும் 10 முறை பேசியிருக்கிறார்கள். 10 முறை, 18 முறை பேசுவதற்கு நான் 18 முறை தொழிற்சங்கத் தலைவர்கள் 40 பேர், 60 பேர் என்று சென்னைக்கும், கோவைக்கும் அழைத்து வந்து அந்தப் பேச்சுவார்த்தையிலே தலையிட வைத்து, நிருவாகம் ஒத்துக்கொள்ளவில்லை என்பதால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினேன். மறியல் போராட்டம் நடத்தினேன். அதற்குப் பிறகு . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. அமரமூர்த்தி, please, நீங்கள் உட்காருங்கள். திரு. அமரமூர்த்தி, இங்கே என்னைப் பார்த்துப் பேச வேண்டும் நீங்கள். (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 102 ரூபாய் இன்று தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த உறுப்பினரும் என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) இங்கே பாருங்கள், திரு. அமரமூர்த்தி, என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டுமே தவிர, உறுப்பினருக்கு உறுப்பினர் நேராகப் பேசிக்கொள்ளக் கூடாது. (குறுக்கீடு) No, No. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் தங்கம் அவர்கள் தவறாக ஒரு சில வார்த்தைகளை உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னபோது எங்களுடைய தலைவரும், நாங்களும் இருந்து, அவரை அதைப்போலப் பேசுவது சரியல்ல என்று சொல்லி, அவரை மானியக் கோரிக்கை சம்பந்தமாகப் பேசச் சொல்லியிருக்கிறோம். இப்போது அவர் தொடர்ந்து பேசி வருகிறார். கடந்த காலங்களில் இந்தச் சட்டமன்றத்தில் நடந்த விவாதங்களில் அவர் எழுப்பிய கோரிக்கைகளையும், அதற்கு அன்றையதினம் பொறுப்பேற்றிருந்த அரசில் முதலமைச்சராக இருந்தவரும், மற்ற அமைச்சர்களும் என்ன பதில் சொன்னார்கள் என்பதைக் குறிப்பிட்டு, இன்று அந்தத் துறை சம்பந்தமான எவ்வளவு பெரிய முன்னேற்றங்கள் நடந்திருக்கின்றன என்பதைப் பேசுவதுதான் இந்த மானியக் கோரிக்கையின் நோக்கம். அப்படி அவர் பேசுகிறபோது அவருக்கு ஒரு அமைதியான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பின்னால் இருந்து அவரைப் பேசவிடாமல் இடையூறு செய்வது ஜனநாயக மரபுகளுக்கு எதிரானது என்பதையும் நான் இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைதியாக இருங்கள் Please. நீங்கள் அடுத்த subject-க்குப் போங்கள், உரையைத் தொடருங்கள்.



**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு 77 ரூபாய் கூலி, இப்போதும் 77 ரூபாய் கூலி. அதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. அன்பரசன் அவர்கள் மிகவும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களும், கொறடா அவர்களும், Deputy கொறடா அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரிடம் மட்டும் 7 முறை அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். வற்புறுத்தி, இன்றைக்கு 102 ரூபாய் நோட்டிஃபிகேஷனை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்றால், அது மிகப் பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நான் பாராட்டுகிறேன்.

அதோடு, 18 கிலோ பறித்தால் வால்பாறையில் இருக்கிற முதலாளிகள்—பேரவைத் தலைவர் அவர்களே இங்கே கவனியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் பேச்சைத் தொடருங்கள். நான் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

**திரு. கோவை தங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 40 கிலோ பறித்தால்தான் 77 ரூபாய். ஆனால் வால்பாறையில் இருக்கிற முதலாளிகள் அருகில் இருக்கக்கூடிய அவர்களுடைய எஸ்டேட்டுக்கு கேரளாவிலும், கர்நாடகத்திலும் 18 கிலோ பறித்தாலே 94 ரூபாய் கொடுத்தார்கள். இந்த அநியாயம், அக்கிரமங்களை எதிர்த்துத்தான், இந்த 7 ஆண்டு காலம் தொடர்ந்து போராடி, இப்போது 102 ரூபாய் சம்பளம் கிடைக்கின்ற மாதிரி அரசாங்கத்திடம் வாதாடி, கெஞ்சிக் கூத்தாடி இன்றைக்கு 102 ரூபாய் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதிலே குறிப்பாக வற்புறுத்திய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த, உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-55*

அதோடு, எங்களுடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்கள் மட்டும் மூன்று முறை கோவையிலே அந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரையும்

கூப்பிட்டு, 125 ரூபாய் ஒரு நாளைக்கு சம்பளம் வாங்குவதற்கு நீங்கள் எந்தப் போராட்டம் நடத்தினாலும் அதற்கு நான் ஆதரவு தருகிறேன் என்று கூறினார்கள். அவருக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள்,

**திரு. கோவை தங்கம்:** என்னைப் பேசவே விடவில்லை. ஒன்றுமே பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பேச வேண்டியது இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் தண்ணீர் குடித்துக்கொண்டே இருக்கிறீர்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தேயிலைத் தோட்டத் தொழிலாளி ஒரு நாளைக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

***திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானியத்தில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு) One minute. கோவை தங்கம், நீங்கள் உரையை முடியுங்கள். ஒரு நிமிடம் தருகிறேன், அதற்குள் பேசி முடியுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** ஒரு நாளைக்கு வால்பாறையிலே இருக்கிற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 40 கிலோ பறித்தால், 4 கிலோ தேயிலைக்கு ஒரு கிலோ டீத்தூள் ஆகிறது. ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதித்துக் கொடுக்கிறான். அட்டைப் பூச்சிக் கடியிலும், மழையிலும், வெயிலிலும், கொட்டுகின்ற பனியிலும், யானைகள், சிறுத்தைப் புலிகள், கரடி என்று உயிரைப் பணயம் வைத்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் செத்துச் செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளுக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன். 102 ரூபாய் சம்பளம் போதாது. ரூ.110 சம்பளத்தைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடு)

***திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, இந்து சமய அறநிலையத் துறை மானியத்தில் பேசுவதற்கு (குறுக்கீடு) வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், எழுந்து, எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? திரு. வேல்முருகன் ஒரு நிமிடம். திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, கோடநாடு எஸ்டேட்டிலே 100 ரூபாய் தருவார்களா என்ற ஒரு கேள்வி இருக்கிறது. நீங்கள் வேண்டும் என்றால், யார், யார் எந்த எஸ்டேட்டிலே எப்படி இருக்கிறது என்பதை--தொழிலாளர் நலத் துறை இருக்கிறது, தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதைப் பேசிக்கொள்ள வேண்டிய முடிவு அங்கே இருக்கிறது. ஆகவே அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், (குறுக்கீடு) ஒரு நிமிடம், கோடநாடு எஸ்டேட் என்பது not an unparliamentary word. உங்கள் முன்னாள் முதல்வருடைய பெயர் வேண்டாம் என்று சொல்லச் சொல்கிறீர்கள், அவ்வளவுதானே? (குறுக்கீடுகள்) உங்கள் முன்னாள் முதல்வருடைய பெயர் அதில் வேண்டாம் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடநாடு எஸ்டேட் என்று சொன்னாலே அவரது பெயர் வருவதுதான் அர்த்தமே தவிர, நீங்கள் அவர் பெயரை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெப்படி? No, no. (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பெயரைச் சொல்வது இல்லை. (குறுக்கீடு) பெயரைச் சொல்லி உங்களை நாங்கள் பேசிக்கொண்டிருக்கலாமா? பெயரைச் சொல்லாமல். நான் உங்களைப் பேசிக்கொண்டிருக்கலாமா, தயவுசெய்து அது வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் வந்துவிட்டீர்களா இப்போது? வாருங்கள், வாருங்கள்.

இப்போதுதானே வந்திருக்கிறீர்கள், நன்றாகத் தூங்கி எழுந்து வாருங்கள். (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், வால்பாறையில் 3,500 ஏக்கர் நிலங்களை முதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அந்த நிலத்தை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், திரு. கோவை தங்கம். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அமைப்புசாராத் தொழிலாளர்களின் 14 நல வாரியங்களை தொழிலாளர் துறையில் இருந்து வருவாய்த் துறைக்கு ஒப்படைத்திருப்பதால், தொழிலாளர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியும், பதற்றமும் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த மாற்றத்தின் காரணம் என்று அரசு சொல்வது, அதில் சில தவறுகள் நடைபெறுவதாகவும், சில முறைகேடுகள் நடைபெறுவதாகவும் (குறுக்கீடுகள்) ஆதலால் பயனாளிகளை அடையாளப்படுத்தி, அவர்களை முறைப்படுத்தி அதற்குப் பிறகு சலுகை பெறுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம், திரு. கோவை தங்கம். (குறுக்கீடு) நேரம் தருகிறேன், கொஞ்சம் பொறுங்கள், அமைதியாக இருங்கள்.

**திரு. கோவை தங்கம்:** வால்பாறையிலே 3,500 ஏக்கர் அரசு நிலங்களைத் தேயிலைத் தோட்ட நிர்வாகம் ஆக்கிரமிப்பு செய்து இருக்கின்றார்கள். 3,500 ஏக்கரை அரசாங்கம் எடுத்து தேயிலைத் தோட்டத் தொழிலாளிக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பிற்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கிடையாது.

100 வருடங்களுக்கு முன்பாகக் கட்டிய வீடுகள்தான் அவை. நாள்தோறும் அங்கு யானைகள் வருகின்றன. அவை ஒரு தட்டுத் தட்டினால் அந்த லைனே விழுந்து விடுகிறது. அந்த அளவுக்கு மிகவும் பழுதடைந்த வீடுகள். ஆகவே, அரசு



இதிலே தலையிட்டு அந்தப் பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் TANTEA தொழிலாளர்கள் கடந்த 7 ஆண்டுகளாக சம்பள உயர்வு இல்லாமல் இருந்தார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இப்போது 18 கிலோவிற்கு 87 ரூபாய் 20 பைசா சம்பளம் வாங்குகிறார்கள். அதையே . . .

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. வேல்முருகன். (குறுக்கீடு) No interruption.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதோடு 5-வது முறையாக எனக்கு வாய்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். இங்கு கோவை தங்கம் அவர்கள் நம்முடைய தோட்டத் தொழிலாளர்கள்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். நானும் அதுபோன்று ஒரு மிக முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் எத்தனையோ ஆட்சிகள் மாறி, மாறி இந்த நாட்டை ஆண்டபோதிலும்கூட இதுவரையிலும் முந்திரி என்கின்ற ஒரு தொழில் தமிழகத்தில் 5 மாவட்டங்களில், கிட்டத்தட்ட 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அதை நம்பி வாழ்கின்றன. அந்தத் தொழிலுக்கான எந்தவிதமான ஒரு கவனத்தையும் இந்த அரசு இதுவரையில் ஈர்க்கவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் நான் 5 ஆண்டு காலம் தொடர்ந்து வலியுறுத்தியும்கூட, அதற்கு மூட்டைக்கு 5,000 ரூபாய் விலை நிர்ணயம் என்பதும், அந்த முந்திரித் தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கிற ஆதங்கத்தை இங்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலே நான் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு மூட்டை முந்திரியை உற்பத்தி செய்வதற்கு அங்கேயிருக்கிற தொழிலாளர்கள் ரூபாய் 5,000 முதல் 10,000 வரை செலவு செய்கின்றார்கள். அப்படி அவர்கள் செலவு செய்து உற்பத்தி செய்கின்ற முந்திரிக்கான விலை மூட்டைக்கு ரூபாய் 5,000 என்று குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைத்தேன். நான் வேண்டுகோள் வைத்த நிலையிலேயே அது இருந்து கொண்டிருக்கிறது. அதேபோல, அந்த முந்திரித் தொழிலாளர்கள் எல்லாம் பல ஆண்டு காலத்திற்கு முன்பாகவே இந்தத் தொழிலில் நமக்கு இலாபம் ஏற்படவில்லை, விவசாயிகள் நஷ்டம்

அடைகிறார்கள் என்ற காரணத்தைக் கூறி, அவர்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைக்காட்டிலும் இன்றைக்கு பல்வேறு நல வாரியங்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு அவர்களுக்கான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, பல்வேறு நன்மைகளைச் செய்கின்ற இந்த அரசு இதுவரையிலும் இந்த முந்திரித் தொழிலாளர்கள், முந்திரியைச் சார்ந்த எண்ணெய் உற்பத்தியைச் செய்கின்றவர்கள், முந்திரியைப் பதப்படுத்துபவர்கள், முந்திரியை உடைக்கின்றவர்கள், முந்திரி தோலைப் பிரித்தெடுப்பவர்கள் என்று பல்வேறு தொழிலைச் சார்ந்த தொழிலாளர்கள், பெண்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். அவர்களுக்கான பணிப் பாதுகாப்பு என்பதும் அவர்களுக்கு அரசு தருகின்ற நலத் திட்டங்கள் இதுவரையில் சென்றடைகிறதா என்று சொன்னால், இதுவரையிலும் எந்தவொரு முந்திரித் தொழிலாளிக்கும் இந்த அரசினுடைய உதவிகள் சென்றடையாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் அந்த நிலையை மாற்றி மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் கோடிக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் பயனடைகின்ற இந்தக் காலத்தில், அந்த முந்திரித் தொழிலாளர்களும் பயனடைவதற்கான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் திரு. ஆற்காட்டார் அவர்கள் எம்.ஆர்.எப். தொழிலாளர்கள் பிரச்சினையைப்பற்றி நான் இந்த மாமன்றத்திலே பேசுகிறபோது, ஒருவார காலத்திற்குள் எம்.ஆர்.எப். திறக்கப்படவில்லை என்று சொன்னால், அந்த எம்.ஆர்.எப். நிருவனத்தை இந்த அரசு அரசுடைமையாக்கும் என்று சொன்னார். சொல்லி விட்டு எந்த நிலையில் எந்தப் பிரச்சினைக்காக எம்.ஆர்.எப். மூடப்பட்டதோ, அதே நிலையில் அங்கு தொழிலாளர்களுடைய உரிமையும், அவர்கள் கோரிக்கையும் பாதுகாக்கின்ற வகையில் அவர்களுடைய பழிவாங்கும் நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டு, அவர்கள் உரிமை நிலைநாட்டப்படும் என்று அறிவித்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், ஒரு வார காலத்திற்குள் எம்.ஆர்.எப் . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரில் தொழிற்சாலை திறக்கப்பட்டது. அதற்குப் பிறகு நிருவாகத்தினரும், தொழிலாளர்களுடைய சில பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும், என்னையும் பேசித் தீருங்கள் என்று சொன்னார். அதற்கு அப்புறம் நிருவாகத்தையும், தொழிலாளர்களையும் நாங்கள் பேசக் கூப்பிடுகிறோம். அதற்கு அவர்கள் நாங்களே பேசித் தீர்த்துக்கொள்கிறோம் என்று சொல்லி, அவர்கள் இதுவரையில் வரவில்லை. இரண்டு பேருமே நாங்களே பேசித் தீர்த்துக்கொள்கிறோம், பேசித் தீர்த்து முடிந்த பிறகு உங்களிடம் வருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, நாங்கள் இதிலே தலையிட்டு விரைவிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கூட சொன்னார், ஒரு வாரத்தில் இந்தப் பிரச்சினையை முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற நல்ல தகவலைச் சொன்னார். இப்போதும் அந்தத் தகவலை அவையிலே பதிவு செய்திருக்கிறார். அதற்காக நன்றி சொல்கிறேன். மூத்த அமைச்சர் மாண்புமிகு ஆற்காட்டார் இதுபற்றிச் சொல்கின்றபோது, எந்த நிலையில், எந்தப் பிரச்சினைக்காக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டதோ, அதே நிலையில் அதைத் திறப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார். அதற்காக பல கட்ட முயற்சிகளை எடுத்து அதன் தொழிலதிபர்களையும், முதலாளிகளையும், தொழிலாளிகளையும் அழைத்துப் பேசி திறக்க வைத்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர்களுக்கும் நன்றியைச் சொல்கிறோம். 30 தொழிலாளர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு, 2 நிரந்தரத் தொழிலாளர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டு ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்து அவர்கள் உற்பத்தி செய்கின்றார்கள். அது தடுத்து நிறுத்தப்பட்டு,

அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். 30 தொழிலாளர்கள் பணிக்கு எடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நிலுவையில் இருக்கிறது. எந்தக் கோரிக்கைக்காகப் போராட்டம் நடைபெற்றதோ அந்தக் கோரிக்கை இன்னும் நிலுவையில் இருக்கின்றது. அதையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அரக்கோணம் எம்.ஆர்.எப். தொழிலாளர் பிரச்சினை. 20 ஆண்டு காலமாக அந்தத் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இன்றைக்கு பல்வேறு அரசாணைகளைப் பிறப்பித்தும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூவர் குழு அமைத்து அந்தப் பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வரவேண்டுமென்று சொல்லியும், அந்த எம்.ஆர்.எப். நிருவாகம் தான்தோன்றித்தனமாக அரசுக்கும் அடங்காமல், அரசு ஆணையரின் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் தொழிலாளர்களுடைய சட்ட விதிகளுக்கும் அடங்காமல் அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள். அரசாணை பிறப்பிக்கின்றபோது, தடை வாங்குவதற்காக உயர் நீதிமன்றம் செல்கின்றார்கள். உயர் நீதிமன்றம் அரசு எடுத்த முடிவு சரியானது என்று நெற்றியடி அடித்த பிறகும்கூட, தன்னைத் திருத்திக்கொள்ளாமல் இன்றும் அந்தப் பழிவாங்கும் போக்கு நடந்துகொண்டிருக்கிறது. இதுவரையிலும், அந்தத் தொழிலாளர்களிலே 11 பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் குடும்பம் இன்றைக்கு நடுரோட்டிலே நின்றுகொண்டிருப்பதாகக் கவலை கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்தால், நிச்சயம் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் எல்லாம் சென்று பார்த்துவிட்டு, இன்று சர்வதேச நீதிமன்றம் என்று சொல்லப்படுகின்ற I.L.O. நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கொண்டுவந்து, நம்முடைய அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திற்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துவிட்டு, சர்வதேச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புப் பிரகாரம்கூட தங்களுக்கு வாழ்வு பிறக்காமல் இன்னும் அல்லாடிக் கொண்டிருக்கிறார்களே, அந்த அரக்கோணம் எம்.ஆர்.எப். தொழிலாளர்களுடைய பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-05*

அதேபோல, இன்றைக்கு கோவை PRICOL பிரச்சினையைப் பற்றிக்கூட அமைச்சர் முன்பு அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். அந்த கோவை PRICOL பிரச்சினை என்பது இன்றைக்கு அந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையிலும் அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய உரிமைகளை நசுக்குவதும், அவர்களுடைய பணிப் பாதுகாப்பைக் கெடுப்பதும், 1,150-க்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் தொழிலாளர்கள் அனைவரையும் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நிறுத்திவிட்டு, இன்றைக்கு அவர்கள் நடு ரோட்டிலே இருக்கின்றார்கள். . அரசு அவர்களுக்கு ஓர் ஆவணத்தை, நம்முடைய ஆணையர் அவர்களுக்குத் தருகின்றபோது, கோவை PRICOL நிருவாகம் சொல்கிறது, அவர்களுடைய 8 துணை நிறுவனங்கள், அவர்களுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நம்முடைய கமர்ஷியல் டாக்ஸ் துறையினுடைய நம்முடைய அரசு கம்பெனிகள் பதிவுச் சட்டத்திலே அந்த 8 துணை நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டு அதற்கான ஆணைகளை அரசு வழங்கியிருக்கிறது. அது என் கையிலே இருக்கிறது. ஆனால், அரசுக்குச் சொல்கின்றபோது அந்தத் துணை நிறுவனங்கள் எங்களுக்குச் சொந்தமானது இல்லை, எங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அந்தத் தொழிலாளர்கள் எக்கேடு கெட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை என்கிற ஒரு போக்கை, பொய்யாக அரசுக்குச் சொல்கின்ற ஒரு அவலத்தை இந்த நாட்டினுடைய மிகப் பெரிய நிறுவனங்கள் செய்து கொண்டிருக்கின்றன. இந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக நான் இங்கே சொல்கிறேன்; அந்த நிறுவனம் மிகப் பெரிய தொழிலாளர் விரோதப் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. எம்.ஆர்.எப். நிறுவனம் மிகப் பெரிய தொழிலாளர் விரோதப் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது. என்.எல்.சி. நிறுவனம், மத்திய அரசு நிறுவனம் தொழிலாளர் விரோதப் போக்கைக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆதலால், நம்முடைய அரசையும், முதலமைச்சர் அவர்களையும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், அதிகாரிப் பெருமக்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்; நம்முடைய மேற்கு வங்கத்தில் இருப்பதைப்போல, 1993 ஆம் ஆண்டு தொழிலாளர்களுடைய பதிவுச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய உரிமைகளுக்காக அந்தச் சட்டத்தின்மூலம்

பதிவு செய்யப்படுகின்ற நிறுவனங்கள் எந்தவொரு தொழிலாளர்களுடைய விரோதப் போக்கைக் கடைப்பிடித்தாலும் இருந்தாலும் அந்த நிறுவனம் அரசு கொண்டு வந்த அந்தச் சட்டத்தின் பிரகாரம் கட்டுப்பட்டாக வேண்டும். தன்னுடைய கைப் பிடிக்குள்ளேயே அது இருக்க வேண்டுமென்றதொரு நிலையினை அந்த மாநில அரசு கொண்டு வந்திருக்கிறது. அதே சட்டத்தை நம்முடைய அரசும் கொண்டு வந்து தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோள். இந்தத் தொழிலாளர் துறை ஆணையம் என்பதே ஒரு அதிகாரமில்லாத ஒரு ஆணையமாக இருக்கிறது. செயலாளருக்கும் அதிகாரம் இல்லை. இன்றைக்கு இந்த PRICOL மட்டும் நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு தொழிலாளர்களுடைய உரிமையைக் காப்பதற்காக அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தொழிலாளர்களுடைய விரோதப் போக்கை அந்த நிருவாகம் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக, 4 அரசாணைகளை நமது அரசு வெளியிட்டிருக்கிறது. அந்த 4 அரசாணைகளையும் தூக்கி குப்பைத் தொட்டியிலே போடுகின்ற நிறுவனங்கள் இந்த நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால், அந்த நிருவாகத்தை அடக்குவதற்கு அரசாங்கத்தினுடைய கைப்பிடிக்குள் கொண்டுவருவதற்கு, அரசு வழிகாட்டி நெறிமுறைகளோடு அந்த நிருவாகம் தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அதுபோன்ற நிறுவனங்கள்மீது கடமையான நடவடிக்கை எடுப்பதற்கான சட்டத் திருத்தங்களை நம்முடைய அரசு கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த அரசுப் போக்குவரத்துத் துறையிலே நம்முடைய அண்ணன் திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள் இருக்கின்ற அந்தப் பகுதியிலே, போக்குவரத்துத் துறையினுடைய தொழிலாளர்களுக்கு என்று ஒரு கூட்டுறவு சொசைட்டியை form பண்ணி அவர்களுக்கெல்லாம் ஒரு இடத்தை வாங்கினார்கள். அந்த இடத்தை வாங்குகின்றபோது ஒவ்வொரு தொழிலாளியிடமும் அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகத்திலே 50,000 ரூபாய் பிடித்தம் செய்தார்கள்.



அப்படிப் பிடித்தம் செய்தவர்கள், கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாயை ஊழல் செய்து அந்த இடத்தை இதுவரையிலும் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்காமல் இருக்கின்றார்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய அந்தப் பயிற்சித் துறையிலே இருக்கின்ற அந்தத் துறையினுடைய கட்டுப்பாட்டிலேயுள்ள, அந்தக் கூட்டுறவு அமைப்பில் அதற்கு உடந்தையாக சில அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள். இதுவரையிலும் பணமும் அவர்களுக்குச் செல்லவில்லை. அந்த வீட்டுமனைகளும் அவர்களுக்கு செல்லாமல் அவர்கள் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர் வர்க்கத்திற்கு நம்முடைய தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் விரைவில் ஒரு சுமூகத் தீர்வை எட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சினை. 20 ஆண்டுகாலம் 13,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள்--மத்திய, மாநில அரசுச் சட்டங்கள் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலும் கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் அரசு சொல்கிற சட்டங்கள், தொழிலாளர்களுடைய உரிமைகள் காக்கப்பட வேண்டும், தொழிலாளர்களுடைய உரிமைகள் நசுக்கப்படுகின்றபோது அரசு அதைத் தூக்கி நிறுத்துவதற்காக கொள்கைத் திட்டங்கள் இருக்கின்றன என்ற அறிவிப்புகளெல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு மத்திய அரசு நிறுவனமே 20 ஆண்டு காலத்திற்கும் மேலாக அந்தத் தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையிலே பணியிலே வைத்துக்கொண்டு, அவர்களைப் பழிவாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பணி நிரந்தரம் இல்லை, மருத்துவச் சேவைகள் இல்லை. அவர்களுக்கு வீடுகள் கிடையாது. அவர்களுக்கு போனஸ் கிடையாது என்கிற ஒரு ஒடுக்குமுறையைக் கையாண்டுகொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கும் ஒரு தீர்வு காணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடலூர், சேத்தியாத்தோப்பு நம்முடைய வேங்கையின் மைந்தனுடைய தந்தையார் பெயரிலே இருக்கிற எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 610 உறுப்பினர்களைக் கொண்டு, தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட வேண்டிய இடத்திலே வெறும் 150 பேர்களைக் கொண்டு உற்பத்தி

செய்துகொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான தொழிலாளர் தோழர்களுக்கான பணியிடம் நிரப்பப்படாமல் இருக்கிறது. அவற்றை நிரப்புவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 178 தொழிலாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பையும், பணி நிரந்தரத்தையும் வழங்கி, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-10

பண்ருட்டி தொகுதியில் இருக்கின்ற முந்திரித் தொழிலாளர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் அவர்கள் எல்லோருடைய உரிமைகளை பாதுகாக்கக் கூடியவகையில் அந்தப் பகுதியில் ஒரு வேலைவாய்ப்புப் பயிற்சி அலுவலகத்தை உருவாக்கி, இந்த அரசு அந்தத் தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை. அவர்களுக்குப் பணி பாதுகாப்பு இல்லாமலும், அதேபோல், மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான குடும்பத்தை காப்பற்றிக்கொள்வதற்கான எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். நம்முடைய அரசு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூ. 150, ரூ. 200, ரூ.300 என்று வழங்குகிறீர்களே, அந்தத் தொகையைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுங்கள். இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் மாதத்திற்கு ஏதாவது ஒரு தொகையைக் கொடுத்து, அவர்கள் வாழ்விலே ஒளியேற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவாய்ப்புத் துறையைப் பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால், நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து, அறுநூற்று முப்பத்து ஒன்று பேர் கிட்டத்தட்ட 50,00,000 இளைஞர்கள் இன்றைக்கு படித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு, வேலையில்லாமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு உருவாக்குவதற்கு--13



நிறுவனங்களை கொண்டு வந்திருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுடைய வேலைவாய்ப்புப் பணியைப் பாதுகாக்கின்ற வகையில் அந்தத் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டு முறையைக் கண்டிப்பாக அமல்படுத்திட வேண்டும். இந்த மிகப் பெரிய தொழிற்சாலைகளிலே இந்த மக்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சென்னையில் இருக்கக்கூடிய இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில், கோயில்கள், கடைகள், வீடுகளில் ஏழையெளிய பாட்டாளி வர்க்கம், ரிக்ஷா ஓட்டுபவர்கள், கூலித் தொழிலாளர்கள், ஏழையெளிய மக்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு பலமடங்கு வாடகை உயர்த்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. அவர்கள் பேரணி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வீட்டுமனை நலதாரர்கள் நலச் சங்கம் என்று சொல்லி சங்கம் வைத்துக்கொண்டு போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்விலே கொஞ்சம் கருணை காட்டவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு இந்த அமைப்பு சாராத் தொழிலாளர்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். 14 அமைப்பு சாரா தொழிலாளர்கள்... (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். மூன்று துறை 15 நிமிடங்கள்... (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். 15 நிமிடங்கள். முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி இந்த பஞ்சாலைத் தொழிலாளர் பிரச்சினை, மூடப்பட்ட தொழிலாளர்கள் பிரச்சினை தமிழ்நாடு முழுக்க மூடிக்கிடக்கின்ற தொழிலாளர்களுடைய அந்த வாழ்வில் ஒளியேற்றுவதற்கு இந்த அரசு சரியான ஒரு நடவடிக்கை எடுத்து அவர்களுடைய பணிப் பாதுகாப்பையும், அந்தத் தொழிலாளர்களுடைய உரிமைகளைக் காப்பதற்கான நடவடிக்கையை நம்முடைய அரசுச் செயலாளர் அவர்களும், அரசுத் துறை ஆணையாளர்களும், நம்முடைய அமைச்சர் தலைமையில் அமைக்கக்கூடிய உயர்மட்டக் குழுவினுடைய உத்தரவுகளை செயல்படுத்துவதற்கு இந்த நாட்டினுடைய

தனியார் ஆலைகள் முன்வரவேண்டும், அவ்வாறு வராதபட்சத்தில் நம்முடைய தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் அவர்களின் உத்தரவிற்கிணங்க மற்றத் துறை அமைச்சர்களுடைய ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள். (குறுக்கீடு) No. No. நீங்கள் ஒரு நிமிடம், ஒரு நிமிடம் என்று கேட்டுக்கொண்டே இருப்பீர்கள். போதும். உங்களுக்கு sufficient time கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) போதும். நீங்கள் 12 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் grudge செய்துகொண்டு இருக்காதீர்கள். உட்காருங்கள். No. No. (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இங்கே சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபின் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் பேச வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் மட்டும் பேசினால் போதாது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்புசாரா தொழிலாளர்கள் விஷயத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, இங்கே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள்கூட வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நாங்கள் வெளிநடப்புச் செய்யவில்லை. தாயுள்ளம்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைக்கிறோம். அந்தப் பிரிவு என்பதை நீங்கள் தடுத்து நிறுத்தி, அந்தத் தொழிலாளர்களுடைய உரிமையை நீங்கள் காக்க வேண்டும். அதேபோல், தொழிலாளர்களுடைய உரிமையைப் பாதுகாக்கவேண்டும் என்று சொன்னால், அந்தத் துறையினுடைய செயலாளர், ஆணையாளர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும். உதாரணத்திற்கு, அரசினுடைய ... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடு) No. 15 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள்



நீங்கள்; மற்றவர்கள் எல்லாம் பேசவேண்டாமா? (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபிறகு, தொழிலாளர் நலத் துறையின்மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களோடு, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பல நல்ல முன் முயற்சிகளை மேற்கொண்டு வருவது ஒரு நல்ல வரவேற்கத்தக்க நிகழ்வாகும். குறிப்பாக வால்பாறை தோட்டத் தொழிலாளர்களுடைய ஊதியப் பிரச்சினை, எம்.ஆர்.எப். தொழிற்சாலையைத் திறக்க இந்த அரசு எடுத்த நடவடிக்கை, ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் கம்பெனியினுடைய பிரச்சினையில் தலையிட்டு 10 (b) அரசு அறிவித்தது, பிரிக்கால் தொழிலாளர்களுடைய பிரச்சினைக்காக 10 (b) அறிவித்தது உள்ளிட்ட பல்வேறு முன்முயற்சிகளை தொழிலாளர்களுடைய நலன் கருதி இந்த அரசும், தொழிலாளர் நலத் துறையும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், முன்முயற்சி மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

*பிற்பகல் 12-15*

அதைப்போல, தொடர்ந்து இன்றைக்கு முக்கியமானதொரு பிரச்சினையாக தமிழகத்திலே முன்னுக்கு வந்திருக்கிற பிரச்சினை, முறைசாரா தொழிலாளர்களுடைய நல வாரியப் பிரச்சினை. கடந்தகால ஆட்சியிலே எல்லா வாரியங்களையும் ஒன்றாக மாற்றி, அந்த வாரியத்தினுடைய செயல்பாடு, செயல்படாமல் முடமாக்கப்பட்டது. தற்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, தனித் தனியாக ஒவ்வொரு துறை வாரியாக வாரியங்களை உருவாக்கி, 14 நல வாரியங்கள்—தொழிலாளர் நலத் துறையின்மூலமாக இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. அதிலே சில மாற்றங்களைச் செய்வதற்காக, இந்த அரசினுடைய நல வாரிய சில பணிகளை வருவாய்த் துறைக்கு மாற்ற அரசு முடிவெடுத்துள்ளது. ஆகவே, இந்த முயற்சி நடைமுறைப்படுத்தப்படுகிறபோது, இன்றைக்கு வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய ஊழியர்கள் மத்தியில் ஒரு கடுமையான வேலைப் பளு ஏற்கெனவே இருக்கிறது. சாதாரணமாக

அரசு அறிவிக்கிற பல்வேறு நலத் திட்ட உதவிகள்கூட உரிய காலத்திலே அவர்களுக்குப் போய்ச் சேருவதிலே நடைமுறை சிரமங்கள் இருக்கின்றன. குறிப்பாக முதியோர் உதவித் தொகைகூட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலேயிருந்து எழுப்பப்படுகிற ஒரு பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், நான் இடையிட்டு இந்த வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வருவாய்த் துறைக்கு மாற்றப்படவில்லை. வருவாய்த் துறையினுடைய உதவிகளோடு, அதனுடைய பணியாளர்களுடைய உதவிகளோடு இந்தத் துறைதான் அதைக் கவனிக்க இருக்கிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. துறை முழுமையாக மாற்றப்பட்டுவிட்டதாக நானும் சொல்லவில்லை. அதனுடைய சில பணிகள், அந்தத் துறையிலிருந்து வருவாய்த் துறைக்கு, அவர்களுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். ஆகவே, வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு இருக்கிற கடுமையான பணி, வேலை சுமையின் காரணமாக, இந்த இலட்சக்கணக்கான முறைசாராத் தொழிலாளர்களுடைய இந்தப் பிரச்சினையும் அவர்கள் கையில் ஒப்படைக்கிறபோது, அந்த வாரியத்தினுடைய நலன்களைப் பெறுவதிலே, உறுப்பினர்களாகச் சேர்வதிலே பல காலதாமங்கள் ஏற்பட்டு, அதனுடைய செயல்பாடு பாதிப்புக்கு ஆளாகும் என்ற காரணத்தினாலேதான் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி இதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் காலையிலேயே இந்தப் பிரச்சினையை எழுப்பி வெளிநடப்புச் செய்த காரணத்தால், நான் மேலும் ஒரு விளக்கம் சொல்கிறேன். நடைமுறையில் ஏதேனும் சிக்கல் இருக்குமானால், தாமதம் ஏற்படுவதற்கு அந்த வருவாய்த் துறையினுடைய செயல்பாடுகள்



காரணமாக இருக்குமானால், அதை மாற்றுவதற்கு என்ன செய்வது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவை முன்னவர் அவர்கள் சொல்லிய விளக்கத்திற்கு நன்றி. நாங்கள் என்ன வலியுறுத்த விரும்புகிறோம் என்று சொன்னால், இப்பொழுது வாரியத்தில் பதிவு செய்யக்கூடியவர்களுக்கு அநேகமாகப் பதிவுக்கான கட்டணம் எதுவும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவாலே வசூலிக்கப்படுவதில்லை, நல்ல நிகழ்வு. ஆனால், இந்தத் தொழிலாளர் நலத் துறையிலே எல்லாப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்கிறபொழுது 1,000 அல்லது 1,200 ஊழியர்களைக் கூடுதலாக நியமிக்கவேண்டிய தேவை ஏற்படும். அவர்களுக்கு முழுமையாக வட்ட அளவிலே அந்தப் பொறுப்புக்களைக் கொடுத்து, தவறுகள் நிகழாதவண்ணம் அதை முறையாக நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நீண்ட நாளாகப் பேசப்பட்டு, போராட்டங்கள் நடைபெற்று, ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்து, இன்று அவையிலும் காலையிலிருந்து இதுவரையிலே தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. அவை முன்னவர் அவர்களும் அதற்கு விளக்கம் தந்திருக்கிறார். அமைச்சர்களும் அதுபற்றி விளக்கம் கூறியிருக்கிறார்கள். இதற்கிடையிலே வெளிநடப்பும் நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, மற்றுமுள்ள கட்சியினரால் நடத்தப்பட்டிருக்கிறது. நான் ஜனநாயக ரீதியில் அவற்றையெல்லாம் மதிக்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் ஒன்று, இப்பொழுது நடைபெறுகிற, தொழிலாளர் நலத் துறையின் சார்பாக நடைபெறுகிற இந்த இயக்கம், அதாவது இந்த இயக்கம் என்று குறிப்பிடுவது, அமைப்புசாராத் தொழிலாளர்களுடைய இயக்கத்தைச் சொல்கிறேன். அந்த இயக்கம் என்னென்ன வகையில் தவறுகளை வேண்டுமென்றே அல்லது திரித்தே இணைக்கிறது என்பதை விவாதித்து எடுத்துக் கூற நான் விரும்புகின்றேன். விவாதிப்பதற்கு இப்பொழுது நேரம் போதாது; இடமும் சரியல்ல.

ஆனால் அதை அமைச்சர்கள் மட்டத்திலும், தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டத்திலும், அமைப்புசாராத் தொழிலாளர்களினுடைய பிரதிநிதிகள் மட்டத்திலும் விவாதித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது என்று கருதுகின்றேன். இப்பொழுது தொழிலாளர் துறை மாத்திரமே இதை நிருவகிக்க முடியுமா என்ற அந்தக் கேள்விக்கு, வெளிநடப்புச் செய்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வெளியிடப்பட்ட தட்டச்சு செய்யப்பட்ட அறிக்கையில் ஒரு வாசகத்தை இணைத்திருக்கிறார்கள். "தொழிலாளர் நலத் துறையில் கூடுதலாகத் தேவைப்படும் பணியாளர்களை நியமித்து, அந்த நல வாரியங்களின் பணிகளைத் தொழிலாளர் நலத் துறையே தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதே தங்களுடைய வேண்டுகோள், கோரிக்கை" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு அதிகக் காலமாகும் என்று சொல்லமுடியாவிட்டாலும், வெகு விரைவிலே, நாளைக்கே அதை நாங்கள் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த முடியும் என்பதற்கு அவகாசம் இல்லை. அதற்கு நீங்கள் அவகாசம் தர வேண்டும். அந்த அவகாசம் தருகின்ற வகையில், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், இவற்றை ஒத்திவைக்க வேண்டும். நாங்களும் அதைச் சிந்திப்பதற்கு எங்களுக்கு நீங்கள் அவகாசம் தர வேண்டும். இதற்கு இடையிலே ஒன்றை மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு இந்த அமைப்புசாராத் தொழிலாளர்களில், ஆங்கிலத்திலே சொல்வார்கள், duplication என்று. அப்படிப் பல உறுப்பினர்கள், வெளிநாடுகளிலேயிருந்தும்கூட, பக்கத்திலே உள்ள நாடுகளிலேயிருந்துகூட இலட்சக்கணக்கானவர்கள் உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்தே இந்த நல வாரியங்கள் பயன் விளைவிக்கக்கூடிய அளவிற்கு நம்மிடத்திலே பொருளாதார வசதியும் இல்லை; அது நல்ல நிலையை, நல்ல ஒரு நாணயத்தை, நாம் எந்தக் குறிக்கோளுக்காக இதை ஆரம்பித்திருக்கிறோமோ, அது நிறைவேறச் செய்யாது என்கிற அச்சமும் எங்களுக்கு இருக்கிறது. நிச்சயமாக duplication வராத அளவிற்கு நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறோம் என்று தொழிற்சங்கத்தினுடைய தலைவர்கள் உறுதி சொல்வார்களேயானால், உத்தரவாதம் அளிப்பார்களேயானால், இதைப்பற்றி நிச்சயமாகச் சிந்தித்து, நல்ல முடிவை உங்கள் விருப்பம்போல் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**திரு. A. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் அளித்திருக்கக்கூடிய இந்த விளக்கத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நிச்சயமாக, அதிலே நடைபெறுகிற தவறுகள் தொடர வேண்டுமென்று என்றைக்கும் நாங்கள் விரும்பியதும் இல்லை; கருதியதும் இல்லை. அது தடுக்கப்பட வேண்டும்; அது முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிலே உங்களோடு நாங்களும் ஒத்த கருத்தோடுதான் இருக்கின்றோம். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இதற்கான மாற்று வழி என்ன என்பதை, நீங்கள் சொன்னதுபோல், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்ற துறை சார்ந்த அதிகாரிகள், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையெல்லாம் கலந்துபேசி, ஒரு நல்ல முடிவெடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அந்த வகையில் இந்த நல வாரியப் பிரச்சினை சம்பந்தமாகக்கூட நான் சில யோசனைகளைச் சொல்ல வந்தேன். முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பின்னாலே கலந்துபேசி, உரிய முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிற காரணத்தினாலே அந்த ஆலோசனைக்குள்ளே நான் இப்போது செல்ல விரும்பவில்லை. ஆகவே நல்ல முடிவை நிச்சயம் எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு நான் அடுத்த செய்திக்கு செல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குப் பல்வேறு வெளிநாட்டுக் கம்பெனிகள் நம்முடைய நாட்டிற்குள்ளே வந்து தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தொழிலும் நடத்தி வருகிறது. அதில் வேலைவாய்ப்பு இடைக்கிறது, நல்ல நிலைதான், வரவேற்கலாம். ஆனால், அதேநேரத்தில் இன்றைக்கு அந்தத் தொழிற்சாலைகள், பன்னாட்டு கம்பெனிகள் தமிழ்நாட்டிற்குள்ளே, குறிப்பாக, சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளில் பல்வேறு தொழிற்சாலைகள் வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் ஏற்கெனவே இருக்கக்கூடிய, அரசாங்கத்தாலே ஏற்றுக்கொண்டு, நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய தொழில் தகராறு சட்டத்தை முற்றிலும் நிராகரிக்கக்கூடிய ஒரு சூழல் என்பது இந்த ஆலைகளிலே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் விரும்பி தாங்கள் ஏற்றுக்கொள்கிற ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்க முயற்சித்நால்கூட அந்தத் தொழிலாளர்களைப் பழிவாங்குவது, வேறு இடங்களுக்கு இட மாற்றம் செய்வது அல்லது இடைநீக்கம் செய்வது போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் இன்றைக்கு அந்த நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக, நம்முடைய சென்னையைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் இருக்கக்கூடிய ஹூண்டாய் மோட்டார் தொழிற்சாலை

கம்பெனி, உங்களுக்குத் தெரியும். பல பேர் இப்பொழுது அதிலே வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த வேலை நீக்கம் மட்டுமல்ல. நீதிமன்ற உத்தரவுபடிகூட அங்கே கொடியேற்றுவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. காவல் துறை அதற்கு தடைவிதிக்கிறது. காவல் துறையில் ஏற்கெனவே உயர் அதிகாரியாக பணியாற்றிய I.G., கணபதி என்பவர் இன்றைக்கு ஓய்வுபெற்ற பிறகு அந்த ஆலையினுடைய நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார். ஆகவே, அவர் சொல்வதைத்தான் இன்றைக்குக் காஞ்சிபுரம் மாவட்டக் காவல் துறை கேட்கிறது என்ற ஒரு நிலை அங்கேயிருக்கிற காரணத்தினாலே தொழிலாளர்களுடைய உரிமைகள் முற்றிலும் அந்த நிருவாகத்தாலே மறுக்கப்படுகிறது.

*பிற்பகல் 12-25*

அதேபோல காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்டிருக்கிற Orchid Chemicals என்று சொல்லப்படுகிற நிறுவனத்தில் சங்கம் வைத்ததற்காக 210 பேர் வேலைநீக்கம், 100 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அதிலே தலையிட்டு 10 (b) சட்டம் எல்லாம் போட்டிருக்கிறார்கள்; வரவேற்கத்தக்கது. ஆனால் அந்தச் சட்டத்தையும் அந்த நிருவாகம் உதாசீனப்படுத்திக்கொண்டு அவர்களுக்கு வேலை கொடுக்க இன்றுவரையிலும் மறுத்து வருகிற நிலைமை என்பது தொடர்கிறது. ஸ்ரீபெரும்புதூரிலே Mailey Hydro Power நிறுவனம் என்கிற நிறுவனம்—அதில் 65 பேர் வேலைநீக்கம், 23 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு விரிவான பட்டியல் கையில் இருக்கிறது. ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாட்டிலே தமிழக அரசாங்கத்தால், இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற தொழிற் தகராறு சட்டத்தையே முற்றிலும் ஏற்றுக்கொள்ள மறுத்து, சங்கம் வைக்கிற உரிமையைக் காலில் போட்டு நசுக்குகிற நிருவாகங்கள் தொழிலாளர்களைப் பழி வாங்குகிறார்கள் என்றால், அது ஏதோ தொழிலாளர்களுக்கு எதிராக விடப்பட்ட சவாலாக நான் கருதவில்லை; அரசினுடைய சட்டத்திற்கே புறம்பாகச் செயல்படுகிறார்கள்; அரசுக்கு விடுகிற சவாலாகவே அந்த ஆலை நிருவாகங்கள் இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறன. ஆகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு இதுபோன்று தொழிற் சங்கம் வைத்துக்கொள்வதான உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.



கோவையிலே C.R.I. Pump, PRICOL நிறுவனம், Tharani Sugars என்று பல்வேறு நிறுவனங்களில் வேறு எந்தக் கோரிக்கையும் இல்லை. தொழிலாளிக்கு குறைந்த கூலி கொடுக்கிறார்கள். ஆகவே கூலி உயர்வுக்காக ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் வைத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாமல், அந்தத் தொழிலாளிகளைப் பழி வாங்குகிற போக்கு இன்றைக்கு அதிகரித்திருக்கிறது. ஆகவே, அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஏற்கெனவே நம்முடைய வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, இன்றைக்கு நம்முடைய கலைஞர் அவர்கள், ஏற்கெனவே முதல்வராக இருந்தபோது இந்தத் தொழிற் சங்க உரிமையைப் பாதுகாக்க, தொழிற் சங்கத்தை அங்கீகரிப்பதற்கான ஒரு சட்டம் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, மேற்கு வங்கம், மகாராஷ்டிரா போன்ற அரசுகள்கூட ஏற்கெனவே அப்படி ஒரு சட்டத்தை இயற்றியிருக்கின்றன. இங்கேயும் அப்படி ஒரு சட்டம் கொண்டுவருவதற்கு தங்களுடைய அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது என்பதை நாங்கள் அறிவோம். அந்தத் தொழிலாளர்களுடைய நல வாரியத்திலேகூட அதுபற்றி ஆய்வெல்லாம் செய்து பரிந்துரையும் செய்யப்பட்டது. ஆனால் இடையிலே ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பிறகு அந்தச் சட்டம் வரவில்லை. ஆகவே இந்த முறை மீண்டும் நீங்கள் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தினாலே அப்படி ஒரு சட்டம் கொண்டுவந்து தொழிலாளர்களுடைய நலனை, தொழிற்சங்க உரிமையைப் பாதுகாப்பதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* இரண்டு நிமிடங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. சி. கோவிந்தசாமி:** இன்னும் இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நிமிடங்கள் இல்லை.

**திரு. சி. கோவிந்தசாமி:** அறநிலையத் துறை சம்பந்தமாக, இன்றைக்கு நீண்ட காலமாகவே கிடப்பில் இருக்கிற பிரச்சினை. அறநிலையத் துறைக்குச் சொந்தமான காலியிடத்திலே இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு முன்னாலே வீடு கட்டிக் குடியிருந்து வரக்கூடியவர்களுக்கு இப்போது நில மதிப்பைக் கணக்கிட்டு,

அந்த நில வாடகை என்பதை ரூ.7,000 என்றும், திருவான்மியூரிலே இருக்கிற ஒரு பகுதியில் ரூ.7,000 என்றும், அவ்வை சண்முகம் சாலையிலே ரூ.17,500 என்றும், அதுபோக நிலுவைத் தொகை என்ற பெயராலே 10 இலட்சம் ரூபாய் கட்டவேண்டும் என்றெல்லாம் இன்றைக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அது மக்கள் மத்தியிலே கடுமையான அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும்.

அதைப்போல, கோயில் நிலம் என்று தெரியாமல் சிலர் விற்பனை செய்த இடத்தை வாங்கி அதிலே வீடு கட்டி வாழ்ந்து வரக்கூடியவர்களுக்கு இன்றைக்கு நீதிமன்றம் தலையிட்டு அறநிலையத் துறை இடம் என்ற காரணத்தினாலே விலை கொடுத்து வாங்கிய இடத்திலேகூட அவர்கள் குடிநீர் இணைப்பு, மின்சார இணைப்பு போன்ற எதையுமே பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இதுபோன்ற பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பழனிக்கு அருகிலே (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம் தலைவர் அவர்களே, பழனிக்கு அருகிலே அறநிலையத் துறையின்மூலம் இந்த நகரத்தை விரிவுபடுத்துவதற்காக அங்கேயிருக்கிற விவசாய நிலம் 250 ஏக்கரை அந்த பழனி நிர்வாகம் மேற்கொள்ள, கையகப்படுத்த முயற்சி எடுப்பதாகச் சொல்கிறார்கள் விவசாயிகள். முப்போகம் விளைகிற நிலம் அது. ஆனால், 150 ஏக்கர் நிலம் நம்முடைய அறநிலையத் துறைக்கே சொந்தமான இடம் அருகிலே இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டும். விவசாய நிலங்களை எடுப்பதைத் தயவுசெய்து அவர்கள் கைவிட வேண்டும். அறநிலையத் துறைக்குச் சொந்தமான கல்வி நிறுவனங்களில் பணியாற்றக்கூடியவர்கள் அவர்களுக்கான (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். ஆசிரியர்களுக்கான தேர்வு முறை என்பது இது ஒரு அரசுத் துறை என்ற முறையிலே ஏற்கெனவே தேர்வு வாரியத்தின்மூலமாக T.R.B. மூலமாக அந்தத் தேர்வுகள் நடப்பதற்கான உறுதிப்பாட்டை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. Please, இன்னும் நிறையப் பேர் பேச வேண்டும்.



***திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

உடலுழைப்புத் தொழிலாளர் வாரியங்களை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கக்கூடாது என்பதைப்பற்றி இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நல்ல பல கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதை நான் வரவேற்கிறேன்.

தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை கேள்விக்குறியாகிவிட்டது. தொழிற் சங்கம் இல்லாத சங்கம்பற்றி நினைத்தாலே, வேலை நீக்கம்; தொழிற் சங்கம் இல்லாத சூழ்நிலை என்பது தமிழகத்தில் வேர்ப் பிடித்து வளர்ந்து வருகிறது. தொழிற் சங்கம் அமைப்பதைத் தடுக்கிற போக்கு, சட்டப்படி தொழிலாளர் விரோத முறையாகும். இதன்படி, முதலாளிக்குத் தண்டனை வழங்கமுடியும். ஆனால், தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை—சட்டப்படி உரிமை வழங்குமாறு நிருவாகத்தை எடுத்துரைக்கவேண்டிய தொழிலாளர் நலத் துறை—நிருவாகத்தின் சட்ட விரோதச் செயல்களை அனுசரித்துப் போகுமாறு தொழிற் சங்கங்களுக்கு அறிவுறுத்தும் போக்கு இருக்கிறது. இது மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளில் நிரந்தரத் தொழிலாளர்களைப் பணி அமர்த்துவதில்லை. ஏற்கெனவே, நிரந்தரத் தொழிலாளர்கள் பணியில் இருந்தால், நெருக்கடி கொடுத்து வெளியேற்றப்படுகின்றனர். Contract தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றது. ஒப்பந்தத் தொழிலாளர்களை சட்ட விரோதமாக நியமித்து, விதிமுறைகள் மீறப்படுகின்றன. குறைந்த கூலியும், அதிக வேலை நேரமும் இவர்கள்மீது திணிக்கப்படுகின்றன. இன்னும் ஒரு வாரத்தில் மே தினம் வருகிறது. மே தினப் பூங்காவை அமைத்தவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான். 8 மணி நேரம் வேலை என்பது மே தினத்தின் அடிநாதம். ஆனால், 10 மணி நேரம், 12 மணி நேரம் வேலை என்பது பல தொழிற்சாலைகளில் நடைமுறையாகிவிட்டது; இது மாற்றப்பட வேண்டும்.

ஆலை மூடல்கள் செய்து தொழிலாளர்களை வீதியில் தள்ளி வருகின்றனர். வேலை பார்த்த நாட்களுக்குச் சம்பளம், பணிக் கொடை, Provident Fund எதுவும் கிடைக்காமல், நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளுக்குப் பரிதவிக்கும் நிலை தொடர்ந்து அதிகரிக்கிறது. மூடப்பட்ட ஆலைகளைத் திறக்க அ.தி.மு.க. அரசு காலத்தில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவை ஒரு பரிந்துரையைக்கூட அளிக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது.

தொழிலாளர்கள் தொழிற் சங்கம் அமைத்து, அதற்குப் பெரும்பான்மை இருந்தால், சங்கத்தை நிர்வாகம் அங்கீகரிக்கவேண்டும். போக்குவரத்துக் கழகங்களில் இரகசிய வாக்கெடுப்புமூலம் அரசு, தொழிற் சங்கங்களை அங்கீகரித்துள்ளது. இந்த நடைமுறையைத் தொழிற் சங்கச் சட்டத்திலே சேர்க்கவேண்டும். மேற்கு வங்கம், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இத்தகைய சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலும் முன்பு இந்த முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு மேற்கொண்டது. ஆனால், இடையில் நின்று போனது. மீண்டும் அதைத் தொடங்கி, சங்க அங்கீகாரத்தைச் சட்டப்பூர்வமானதாக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பஞ்சாலைகளில் 'சுமங்கலி' திட்டம் என்ற பெயரில், திருமணமாகாத இளம் பெண்களை மூன்று ஆண்டுகள் ஆலைகளுக்குள்ளேயே வேலை வாங்கும் முறை உள்ளது. இது வேகமாகப் பரவி வருகிறது. இதுபற்றியும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஓராண்டாக இவை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலத் துறையின் பணிகள் ஒவ்வொன்றாக வருவாய்த் துறையிடம் விடப்படுவது மிகவும் ஆபத்தானதாகும். நாகரிகப் பஞ்சாலைத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து 6 மாதத்திற்குள் தீர்ப்பு அளிக்குமாறு அரசாங்கத்தால் நிறுவப்பட்ட தனித் தொழில் தீர்ப்பாயம், 6 ஆண்டுகள் ஆகியும் தீர்ப்பு தரவில்லை. எந்தத் தீர்ப்பையும் தரமுடியாத நிலைக்கு, முதலாளிகள் அதனை நெருக்கிக் கொண்டுள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியும், முதலாளிகள் ஒத்துழைக்கவில்லை.



பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க அரசு எடுத்த முயற்சியையும், நீதிமன்றத் தடையைப் பெற்று நிறுத்திவிட்டனர். அரசுக்கு எதிராக யுத்தம் நடத்தும் இப்போக்கை உரிய வகையில் அரசு கையாளவேண்டும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பள உயர்வு கிடைக்கத் துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

E.S.I. மருத்துவமனைகளில் தொழிலாளர்கள் மிகவும் மரியாதைக் குறைவாக நடத்தப்படுகின்றனர். E.S.I. சட்ட நலன்களைத் தொழிலாளர்கள் பெறமுடியவில்லை. Apprentice காலத்தை 6 மாத காலமாகக் குறைக்கவேண்டும். பல ஆண்டுகள் apprentice-களாகவே வேலை கொடுத்து, குறைந்த கூலி தருவதைத் தடுக்கவேண்டும். இதற்கென உரிய சட்டத் திருத்தத்தை அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சினையில், சட்டப் பேரவையில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்; இதையேற்றுத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். கோரிக்கைக்குத் தீர்வு காண துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை குறித்து சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள கோயில் மடம் போன்றவற்றிற்கு, நகர்ப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் ஏராளமான நிலங்கள் உள்ளன. குறிப்பாக, கோயில் மடங்களுக்குச் சொந்தமாக உள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களில், குத்தகை அடிப்படையில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். பருவ நிலை சார்ந்த வேளாண்மைத் தொழிலில் குத்தகைப் பாக்கி என்ற பெயரில், நில வெளியேற்றம் நடைபெறுகிறது; இதைத் தடுக்கவேண்டும். இந்த மோசமான நிலையை மாற்றியமைக்க, குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைக் குறைந்த விலையில் சொந்தமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-35*

தமிழ்நாடு அரசு, ஒரு குடும்பம் ஒரு இடத்தில் 5 ஆண்டுகள் வாழ்ந்துவந்தால் அந்த இடத்திற்குப் பட்டா வழங்கி, குடியிருப்பவர்களுக்குச் சொந்தமாக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி

வருகிறது. வரவேற்கத்தக்க இந்தத் திட்டத்தைப்போல், கோயில், மடம் போன்ற அமைப்புகளுக்குச் சொந்தமான இடங்களில் வீடு கட்டி வாழ்ந்து வருபவர்களுக்கு நியாயமான விலையில், அவர்களுக்குச் சொந்தமாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அறநிலையத் துறைக்கு அல்லது ஆலய நிருவாகத்திற்குக் கிடைக்கும் நிதியாதாரத்தை வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக வைத்து கிடைக்கும் வட்டியிலிருந்து நிலதானம் செய்தவர்களின் நோக்கத்தை நிறைவேற்றி வரலாம் என்பதை அரசு கருதிப் பார்க்க வேண்டும்.

இதேபோல, வர்த்தகக் கடைகள் அமைந்துள்ள பகுதிகளில் வசூலிக்கப்படும் வாடகை பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது வியாபாரிகளுக்குக் கடுமையான சுமையாகியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, உயர்த்தப்பட்ட வாடகையைக் குறைத்து, அனைவருக்கும் இணக்கமாக, ஏற்கத்தக்க ஒரு வழிமுறையை உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறோம்.

கோயில் பூசாரிகளின் நலனைப் பேணுவதற்கு இந்த அரசு கவனம் செலுத்தியுள்ளது. அவர்களுக்கு ஓய்வூதியம் அளித்து வருகிறது. இதேபோல, கோயில் கலைஞர்களான தவில், நாதஸ்வரம் போன்ற இசைக் கலைஞர்களின் மாத ஊதியத்தை உயர்த்தி அறிவித்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத் திருக்கோயில்களில் வழங்கப்படும் அரசு மானியம், வருடம் ரூ.15 இலட்சமாக இருப்பதை, ஒரு கோடி ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு, கிராமக் கோயில்களுக்கு வழங்கப்படும் ரூபாய் 25 ஆயிரத்தை ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. வேல்முருகன், நீங்கள் 13 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் அப்புறம் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) என்ன திருமதி யசோதா? சொல்லுங்கள்.



**திருமதி டி. யசோதா:** ஒரு சிறிய clarification. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற Hyundai company-யினுடைய துணைத் தலைவர், முன்னாள் காவல் துறை அதிகாரியாக இருந்திருக்கலாம். அவருக்காக இப்போது இருக்கின்ற மாவட்டக் காவல் துறை அதிகாரி செயல்படுவதாக ஒரு தவறான தகவலை இந்த மாமன்றத்திலே பதிய வைத்திருப்பதை தயவுசெய்து நீக்குமாறு உங்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** காவல் துறை அதிகாரி, ஓய்வு பெற்ற I.G. திரு. கணபதி அவர்கள், அந்த நிருவாகத்தின் பொறுப்பில் இருக்கிற காரணத்தினால், ஏற்கெனவே பதவியில் இருந்த தன்னுடைய செல்வாக்கை, அந்தக் காவல் துறையின்மீது அவர் நிர்பந்தப்படுத்துகிறார் என்று நான் குறிப்பிட்டேன். அதை நான் நிரூபிக்கக்கூட தயாராக இருக்கிறேன். ஆகவே, அது ஒன்றும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிற பிரச்சினையல்ல. நடைமுறையில், தினசரி அங்கு நடந்துகொண்டிருக்கிற விஷயத்தைத்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன். அரசு வேண்டுமானால், அதன்மீது உரிய விவரங்களைச் சேகரித்து, அதில் உண்மை என்ன என்று கண்டறியட்டும். அதைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலே இருக்கின்ற எனக்கு அங்கு என்ன நடக்கின்றது என்று தெரியும். சில அரசியல் கட்சிகள் அங்கே தொழிற்சங்கங்களை உருவாக்கி, அங்கே தொழில் அமைதியைக் குலைப்பதற்காக எடுக்கின்ற நடவடிக்கைகளை, காவல் துறையினர் நியாயமான முறையிலேதான் சந்திக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற D.S.P. அவர்கள்கூட, உள்ளே இருக்கின்ற அதிகாரியை மிகக் கடுமையாகப் பேசியிருக்கின்றார்கள். இவை அத்தனையும் நான் அங்கேயிருக்கின்ற காரணத்தினாலே எனக்குத் தெரியும். அவர் நிரூபிக்கின்ற வகையிலே நிரூபிக்கட்டும். ஆனாலுங்கூட, அங்கு அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் என்ற பெயராலே

நுழையுமேயென்றால் அங்கே பன்னாட்டு நிறுவனங்கள் செயலிழந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கவனப்படுத்த விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு நீங்கள் பேசிக்கொள்ளலாம். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. சிவபுண்ணியம்? (குறுக்கீடு). சரி, சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். வெளிநாட்டுக் கம்பெனிகள், தொழிற்சங்கங்கள் வைத்தால் அவர்கள் வராமல் போய்விடுவார்கள் என்று சொன்னால், வெளிநாட்டு கம்பெனிகள் வந்து தொழிலாளர்களை நசுக்குவதை ஏற்றுக்கொண்டு தொழிற்சங்கங்கள் அதில் ஈடுபடக்கூடாது என்று கருதுகிறாரா? அது என்ன கருத்து என்றே புரியவில்லை. தமிழ்நாட்டில் இந்த நிலை வருகிறது என்று சொன்னால், இது ஒரு மோசமான விளைவை ஏற்படுத்திவிடும். ஒரு தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்பது என்னுடைய குற்றச்சாட்டு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.



**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு எந்த அளவுக்குத் தொழிலாளர்கள்மீது அக்கறை இருக்கின்றதோ, அதைவிட அதிகமான பற்று எங்களுக்கும் இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. நா. இராமகிருஷ்ணன். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** நாங்கள் கேட்பது மாநில அரசைப் பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசிவிட்டார். அடுத்தாற்போல் திரு. நன்மாறன் பேச எழுந்திருக்கிறார், No. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) No, No, திரு. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அமைக்கின்ற அனைத்துத் தொழிற்சார்ந்த குழுக்களிலும் MLF தொழிற்சங்கத்திற்கு (குறுக்கீடு) நான் எழுந்திருந்து, எழுந்திருந்து பத்து தடவை உட்கார்ந்துவிட்டேன். எனக்கே கால், கைகள் வலிக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். மற்றவர்கள் பேசுவதற்கு வழிவிடுங்கள். Please.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** MLF தொழிற்சங்கத்திற்கு உரிய பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். கட்சி பேதமின்றி, பாரபட்சமின்றி MLF தொழிற்சங்கத்திற்கு உரிய பிரதிநிதித்துவத்தை இந்த அரசு வழங்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல தமிழகத்திலே உள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்காக ஊதிய உடன்பாடு 15-12-1993-ல் ஏற்பட்டது. அது 1998 ஆம் ஆண்டு காலாவதியாகிவிட்டது. புதிய உடன்பாட்டிற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு, அது தீர்வு

ஏற்படாமல் கடந்த 2001 ஆம் ஆண்டு அரசாணை எண் 688-ன் அடிப்படையில் தொழில் தீர்ப்பாயம் விசாரணைக்கு விடப்பட்டது. தொழில் தீர்ப்பாயம் இதுவரைக்கும் எந்தவிதமான முறையான விசாரணையும் நடத்தாமல் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளுக்குத் தீர்வு காணவில்லை. வழக்கு நிலுவையிலே உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், உங்கள் இருக்கையைவிட்டு எழுந்து வந்து திருமதி யசோதா இருக்கைக்கு வந்து அவர்களிடம் என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? தூண்டிவிடுகிறீர்களா? உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இந்த நிலையில் அரசாணை எண் 688-ன் அடிப்படையில் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால உயர்வு, ஊதிய உயர்வு தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், தொடர்ந்து பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஆனால் இதுவரைக்கும் அந்தத் தீர்ப்பாயத்திலுள்ள வழக்குகளையும் விரைவுபடுத்தவில்லை, இடைக்கால ஊதிய உயர்வும் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்த வழக்கை விரைவுபடுத்தியும் இடைக்கால ஊதிய உயர்வு எல்லா பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல பஞ்சாலைகளில் பணிபுரிகின்ற நிரந்தரத் தொழிலாளர்களை அகற்றிவிட்டு, தற்சமயம் புதிய தொழிலாளர்களை நியமிக்கின்ற போக்கு என்பது வருந்தத்தக்கச் செயலாகும். தினக்கூலி என்ற வகையிலேயும், apprenticeship என்ற வகையிலேயும், contract labour என்ற வகையிலேயும் நியாயமற்ற முறையில் சட்டத்திற்கு விரோதமாக ஐந்தாண்டுகளுக்குமேல் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்து அவர்களை ஒடுக்குவது என்பதும் நிரந்தரத் தொழிலாளர்களை முடமாக்குவது என்பதும் வேதனை தருகின்ற ஒன்றாகும். இவர்களுக்கு வேலைக்குரிய சம்பளம் ரூபாய் 250 வழங்காமல் நாள் ஒன்றுக்கு 25 ரூபாயும் அதிகபட்சமாக 100 ரூபாயும் வழங்குவது தொழிலாளர்களுக்குச் செய்கின்ற துரோகமாகும்.

பஞ்சாலைத் தொழிற்சாலைகளைக் குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் கொண்டுவர முன்வரைவு அறிவிக்கை



அரசாணை (Ms.) எண் 18-ன்படி. 2005 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல அரசு உத்தரவுகள் வெளியிடப்பட்டன. இதனை அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஏற்றுக்கொண்டது. ஆனால், இன்றைய தேதி வரையில் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணய அறிவிப்பு வெளியிடப்படாமல் உள்ளது என்பது வருந்தத்தக்கச் செயலாகும்.

அதைப்போல, நூற்பாலைகளில் கேம்ப் கூலி என்று அழைக்கப்படும் திருமண உதவி வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் ஒளிவுமறைவின்றி இளம் பெண்கள் ஈவு இரக்கமின்றி சுரண்டப்படுகின்றார்கள். இளம் பெண்கள், பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு, கேம்ப் கூலி என்ற பெயரில் நூற்பாலைகளில் 24 மணி நேரமும் அடைக்கப்படுகின்றார்கள். மூன்றாண்டுகளுக்குக் கட்டாயம் வேலை என்று சொல்லிவிட்டு இரவு பகல் பாராமல் அந்த இளம் பெண்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குகின்றார்கள். மூன்றாண்டுகள் முடிந்த பின்பு ரூபாய் 25,000 திருமண உதவித் திட்டமாக வழங்குவது என்று சொல்லப்பட்டும்கூட, அது முறையாக வழங்கப்படவில்லை. பாலியல் பலாத்காரம் நடைபெறுகின்றது. உச்சநீதிமன்ற ஆணையின்படி பாலியல் கொடுமைத் தடுப்புக் குழு அமைக்கப்படவில்லை. அவர்களுக்கு நாள் ஒன்றுக்குத் தரப்படும் ஊதியம் என்பது மிகச் சொற்பமான தொகையாகும். முதலாம் ஆண்டு 25 ரூபாயும், இரண்டாம் ஆண்டு 40 ரூபாயும், மூன்றாம் ஆண்டு 60 ரூபாயும் வழங்கப்படுவது நியாயமற்றது. எனவே, கேம்ப் கூலி முறையைத் தடை செய்து பணியாற்றும் தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்கி, நிரந்தரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் பணிவான வேண்டுகோள். கடந்த 20 ஆம் தேதியன்று, கண்ணகி கோயிலில் சித்திராப் பௌர்ணமித் திருவிழா நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில், தமிழகக் காவல் துறையினர் முற்றிலுமாக அகற்றப்பட்டிருக்கின்றார்கள். கேரள போலீசார் காலணிகளை அணிந்து கோயிலுக்குள் சென்று, அங்கேயிருந்த பக்தர்களின் மனதைப் புண்படுத்தியிருக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் கண்ணகி கோயிலில் வழிபாட்டு முறை என்பது, ஓதுவார்கள் மூலமாக, தமிழக அர்ச்சகர்கள் மூலமாக வழிபாட்டு

முறை நடைபெற்று வருகின்றது. ஆனால் தற்சமயம், அவர்களை அகற்றிவிட்டு, அப்புறப்படுத்திவிட்டு, நம்பூதிரிகள் அர்ச்சனை செய்திருக்கிறார்கள். இது கண்டிக்கத்தக்கது. தமிழக எல்லைக்குள் அமைந்திருக்கின்ற அந்த கண்ணகி கோயில் நமக்குச் சொந்தம். (மணியடிக்கப்பெற்றது) நான் பேசவேயில்லையே? இப்பொழுதுதான் பேசவே ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசவேயில்லையா? அப்படியென்றால், இவ்வளவு நேரம் பேசியது பேச்சேயில்லையா?

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். 1965 ஆம் ஆண்டு நாகசாமி அவர்கள், அந்தக் கண்ணகி கோயிலை ஆய்வு செய்து, அது தமிழக எல்லைக்குள் உட்பட்டது என்று தெரிவித்திருக்கின்றார்கள். அதைப்போல, ராஜு என்பவர் ஆய்வு செய்து, அந்தக் கோயில், தமிழ்க் கலை, கலாச்சாரப் பண்பாட்டிற்கு உட்பட்டது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைப்போல, நீர் வழிந்தோடும் முறையில், தமிழக எல்லைக்குள்தான் கண்ணகி கோயில் அமைந்துள்ளது என்று தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, நம் உரிமையை மீட்டு, நாம் வழிபடுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு விரைந்து எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

***திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"தமிழ்த்தாய் கை தட்டுகிறாள்,*
*உன் கை பட்டு செம்மொழியானேன் என்று.*
*அலைகள் கை தட்டுகின்றன,*
*அண்ணாவே ஆளுகிறார் என்று.*
*குடியரசு கை தட்டுகிறது,*
*பெரியார் கலைஞருக்குள் இருக்கிறார் என்று.*
*கண்ணாடித் தொட்டியில் மீன்களை வீட்டுக்குள் வைத்தார்,*
*உன்னைத் தவிர இந்த அருந்ததியினரை யார் வீட்டுக்குள் விட்டார்?*
*அறியாசனம், அருந்ததியர் சனம்.*
*உன் ஒதுக்கீட்டால் அரியாசனம் தந்தவன் நீ.*
*எனது ஆயுளையும் பெற்று, என் தலைவனே,*
*வாழ்க! வாழ்க!! நீ."* (மேசையைத் தட்டும் ஒலி)



பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள், வணக்கங்கள்.

அந்தியூர் தொகுதியில், அந்தியூர் பேரூராட்சி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மூன்றாவது காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்குமாறு அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். பர்கூர் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத்தரம், கல்வி ஆகியவை மேம்பட, அங்கே அரசு ஐ.டி.ஐ. தொழிற்பேட்டையையும், அந்தியூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் மலை தாமரைக் கரையிலிருந்து தேவர் மலைக்கும், தாமரைக் கரையிலிருந்து கொங்கடைக்கும் தார்ச்சாலை அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பர்கூர் மலை அடிவாரத்திலிருந்து அந்தியூர் கொள்ளேகால் செல்லும் பாதை மிகவும் குறுகலாக இருப்பதால், போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இதை இருவழிப் பாதையாகத் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இயற்கை எழில்வாய்ந்த அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தியூரைத் தனித் தாலுகாவாக ஆக்கியும், தொழிற்பேட்டை தந்தும், அந்தியூரை உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்ற முக்கிய துறைகளில் ஒன்று தொழிலாளர் நலத் துறை. நாட்டில் தொழில் அமைதியை ஏற்படுத்தி, தொழில் வளத்தைப் பெருக்கி, தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்குமிடையே சுமூகமான உறவு நிலவுவதற்கு, தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றைக் கண்டிப்பாக அமல்படுத்திட வேண்டுமென்பதிலே தலைவர் கலைஞர் அவர்கள் மிகவும் அக்கறையாக இருக்கிறார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களைச் சந்திப்பதற்கே பேரணிகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. போராடுகின்ற

தொழிலாளர்களுக்கு எவ்விதப் பாதுகாப்புமில்லை என்னும் ஓர் இருண்ட கால நிலை, கடந்த ஆட்சியில் இருந்ததை யாரும் மறந்துவிட முடியாது, மறக்கவும் இயலாது. ஆனால், இன்றைய கழக ஆட்சியில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை அனைவரும், எப்போதும், எந்த நேரத்திலும் சந்தித்து கோரிக்கைகளைத் தருகின்றார்கள்.

“கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், கேட்கின்ற யாவரும் பெற்றுக்கொள்கிறார்கள்” என்றார், இயேசு. அதைப்போல, தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொண்டு, அனைத்துப் பிரச்சினைகளையும் தலைவர் கலைஞர் அவர்கள் உடனுக்குடன் தீர்த்து வைக்கிறார்கள். தொழிலாளர்களின் நிலை குறித்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நம் மாநில அளவில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. தொழிலாளர் துறை அலுவலர்களின் பணிகள் திறனாய்வு செய்யப்பட்டு, துறை மேலும் சிறப்பாக செயல்பட தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

*பிற்பகல் 12-50*

தமிழகத்தில் எந்தத் துறையிலும் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படக்கூடாது. அச்சுறுத்தப்படக்கூடாது, தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய சலுகைகள், பயன்கள் உடனடியாக வந்து சேர வேண்டும் என்பதில் தொழிலாளர் நலம் காக்கும் இந்த அரசு உறுதியாகச் செயல்பட்டு வருகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறைக்கு 5 அமைச்சர்களும் ஏழு முறை மாற்றப்பட்டார்கள். இதனால், தொழிற்சங்க பிரதிநிதிகள் முதலமைச்சரிடமோ துறையின் அமைச்சரிடமோ நேரில் சந்தித்து தங்களுடைய பிரச்சினைகளை, குறைகளைத் தெரிவிக்க முடியாத சூழ்நிலையால் தமிழகத்தில் தொழிலாளர்களுடைய எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல், தொழிலாளர் வர்க்கம் மிகவும் பாதிக்கப்பட்டது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

ஆனால், திராவிட இயக்கம் தோன்றியிருக்காவிட்டால், தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் நான் சந்திக்காமல் இருந்திருந்தால், இன்று நான் ஒரு பொதுவுடைமை இயக்கவாதியாகவே இருந்திருப்பேன் என்று கூறியவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள். தொழிலாளர்களின் பாதுகாவலராக அவர் தொடர்ந்து திகழ்ந்து வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)



பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சார வாரியம் போன்ற அரசு துறைகளில் பணியாற்றிய ஆயிரக்கணக்கான ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தியவரும் நமது தலைவர் கலைஞர்தான்.

தனியாரிடமிருந்து, பேருந்துகளை நாட்டுடைமையாக்கியதுடன், அவற்றை அரசுப் போக்குவரத்துக் கழகங்களாக்கி, ஏழையெளிய மக்கள் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு மேலாக வாழ்வில் வளம் பெற பொதுவுடைமைத் தத்துவத்தை நிறைவேற்றியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அ.தி.மு.க. ஆட்சியில் பழி வாங்கப்பட்ட பால் வளத் தொழிலாளர்கள் 1,500 பேருக்கு வேலை வழங்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தஞ்சையில் பலபேர் இரத்தம் சிந்தி பாடுபட்ட விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கை நிறைவேற அவர்களுக்கு குடியிருப்பு மனைப் பட்டாக்களை ஒரு துளி மையினால் வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் கேட்டு நடத்திய போராட்டத்தை தொழிலாளர்களுக்குச் சாதகமாக முடித்துக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

மத்திய அரசில் பங்கேற்று கூட்டாட்சியாக இருந்தாலும், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் விற்பதைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர்களுக்காகக் குரல் கொடுத்து வெற்றி கண்டவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மணியடிக்கப்பெற்றது)

உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தை ஊதியத்துடன் கூடிய விடுமுறையாக அறிவித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

மே தின நினைவுச் சின்னத்தை நிறுவி, நேப்பியர் பூங்காவை மே தினப் பூங்காவாக உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

குறைந்தபட்ச போனஸ் 8.33 சதவீதம் என்பதை வலியுறுத்திக் கொண்டுவந்து அமல்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். தற்போது போக்குவரத்துத் துறை, மின்சாரத் துறை ஊழியர்களுக்கு 20 சதவீதம் போனஸ் கொடுத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

**"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"**

என்று அய்யன் திருவள்ளுவரே சொல்லியிருக்கிறார். திருவள்ளுவர் சொல்கிறார், செய்வதைவிட சொல்வது சுலபம் என்று. ஆனால், தேர்தல் கால வாக்குறுதிகளை தலைவர் கலைஞர் அவர்கள் அப்படியே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில் சிறப்பாக செயலாற்றிவரும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களின் அரசின் தலைமையிலான தொழிலாளர் நலத் துறையின் அமைப்புசாரா நல வாரியங்கள், ஏழைத் தொழிலாளர்களை வாழ்விக்கின்றவை. அமைப்புசாரா நல வாரியத்தின் உறுப்பினர்கள் அரசின் அனைத்துப் பயன்களையும் பெற, தொழிலாளர் உதவி ஆய்வாளர் வழியாகத்தான் தொழிலாளர்களுக்குப் பயன் செய்கிற நிலை இருக்கிறது.

மேலும், பிற மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வந்து பணி செய்துவருகின்றவர்கள் வாரிய உறுப்பினர்கள் ஆவதாலும், ஒரே நபர் இரு அமைப்புசாரா நல வாரியத்தில் உறுப்பினர் ஆவதாலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குருசாமி, முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கிட்டு) முடியுங்கள், பேசி முடியுங்கள்.

**திரு. செ. குருசாமி:** பேச்சை முடித்துவிடுகிறேன். போலி உறுப்பினர்களைத் தடுக்கவும், முறைகேடுகளைத் தடுக்கவும், யார் யார் என்னென்ன தொழில்கள் செய்கிறார்கள் என அறிந்து கொள்ளவும் வருவாய்த் துறைமூலம் சில பணிகளை வழங்கி கிராம நிருவாக அதிகாரிகள்வழியாக அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பயன் கிடைக்க வழி செய்வது அவசியமாகும்.

கழக ஆட்சியில் எந்தத் தொழிலாளர்களும் போராடவில்லை. காரணம் தொழிலாளர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்பே அவர்களது தேவைகளை நிறைவேற்றக்கூடியவர் நமது தலைவர் கலைஞர் அவர்கள் என்று கூறி, கழக ஆட்சியில் தொழிலாளர்களுக்கு வழங்கிய பயன் பொதிகைச் சாரலாய்! வளர்பிறை வெளிச்சமாய்! தாய்மை மேகமாய்! வாரி வாரித் தந்த சலுகை, நறுமணம் வீசும் மல்லிகை என்று கூறி வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகத் திருமகள் அன்னை சோனியா காந்தி அவர்களை வணங்கி, அறநிலையத் துறையின் சார்பாக மற்றும் தொழிலாளர் நலத் துறையின் சார்பாக மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த சட்டமன்றக் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், அதேபோல, இந்தச் சட்டசபையை, சத்த சபையாக மாற்ற நினைக்கும் மற்ற கட்சிகளுக்கு தன் சிரிப்பால் மணியடித்து, சபைக்கே நாயகராக விளங்கும் சபாநாயகருக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்."**

ஆகா! இவனைப் பிள்ளையாகப் பெற்றது இவன் தந்தை பெற்ற பெரும் பேறு என்று ஒரு மகன் புகழப்படுவதுதான் அவர் தன்னுடைய தந்தைக்குச் செய்யக்கூடிய கைமாறு எனப்படும். அப்படி சிறப்பாகச் செயல்பட்டு உள்ளாட்சியிலே நல்லாட்சியை செய்து பல சாதனை படைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு பொது கோரிக்கையாக, அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் நவீன இந்தியாவை உருவாக்கும் முயற்சியோடு, தமிழகத்திலே தேர்தல் பிரச்சாரத்திற்காக வந்தபோது விடுதலைப் புலிகளின் இயக்கத்தினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டார். அவருடைய உடல் சென்னை, அரசு பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. எனவே, அமரர் ராஜீவ் காந்தியின் நினைவை போற்றும்விதமாக, சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்கு "அமரர் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை" என்ற பெயர் சூட்டவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

*பிற்பகல் 12-55*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களின் சார்பாக ஒன்று. காரைக்குடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்

திருக்கோயிலுக்கு தங்க ரதம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு. பெரியகருப்பன் அவர்களுக்கு காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய சோளிங்கர் மற்றும் பள்ளிப்பட்டு பகுதியில், விசைத்தறித் தொழிலாளர்கள் மற்றும் நெசவாளர்கள் 17-4-2008 முதல் கூலி உயர்வினைக் கேட்டு தொடர் வேலைநிறுத்தம் செய்து வருகின்றார்கள். இதுதொடர்பாக, அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, கரூரில் உள்ள தமிழ்நாடு காகித ... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு மற்றும் சோளிங்கர் தொகுதியில், தொடர்ந்து 7 நாட்களாக விசைத்தறி நெசவாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இது தொடர்பாக நம்முடைய தொழிலாளர் நலத் துறை என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்தில், சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் விசைத்தறியில், லுங்கிகள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் கூலி உயர்வு மற்றும் போனஸ் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 17-4-2008 முதல் வேலை நிறுத்தம் செய்துவருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்கள். திருத்தணி வருவாய்க் கோட்டாட்சியர் முன்பாக, 22-4-2008 அன்று பேச்சு வார்த்தை தொடங்கப்பட்டது. அன்றைய பேச்சுவார்த்தையில் நிர்வாகத் தரப்பிலிருந்து யாரும் கலந்துகொள்ளாததால், நாளைய தினம் அதாவது, 26-4-2008 அன்று மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பேச்சுவார்த்தையின்மூலம், நிச்சயமாக, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** சோளிங்கர், அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயங்களுக்கு ரோப் கார் வசதி செய்து தரப்படும் என்ற ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பை முதல்வர் அவர்கள் வெளியிட்டார்கள். ஆனால், அவ்வறிவிப்பு வெளியிடப்பட்டு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளாகிவிட்டநிலையில், இன்னும் அப்பணிகள் தொடங்கப்படவில்லை. உடனடியாக அந்த ரோப் கார் பணிகளைத் தொடங்கவேண்டுமென்று வலியுறுத்துகின்றேன். அதேபோல, இந்தப் பணிகளை விரைவாக முடிக்கவும், பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து தரவும், ஆலயத்திற்கு அறங்காவலர் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பழனி திருக்கோயிலில் உள்ளதுபோல, அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில், ஒரு அரசு கலைக் கல்லூரியை சோளிங்கரில் ஏற்படுத்தித்தர அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி ஒன்றை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏராளமான கோயில் நிலங்கள் அறநிலையத் துறையின்மூலம் பராமரிக்கப்படுகின்றது. அரசு கணக்கெடுப்பின்படி 4,78,957 ஏக்கர் புன்செய், நன்செய், மானாவாரி நிலங்கள் உள்ளன. அதில் 20,046 கட்டடங்கள் உள்ளன. இதில் 38 ஆயிரம் குத்தகைதாரர்கள் உள்ளார்கள். இவ்வளவு இருந்தும் இவற்றிலிருந்து, அரசுக்கு வருவாய் என்பது மிகச் சொற்பமாக இருக்கிறது. காரணம், அரசு நிலத்தை வைத்திருப்பவர்கள் அதற்குரிய குத்தகைத் தொகையை முறையாக செலுத்துவதில்லை. மேலும் 50 ஆண்டுகளுக்கு முன்னால், என்ன குத்தகை நிர்ணயிக்கப்பட்டதோ அதுதான் இன்றுவரை வசூலிக்கப்படுகின்றது. ஆனால், இந்த நிலத்தை உள்குத்தகைக்குவிட்டு, கோயில் வருவாயை ஒரு சிலர் அனுபவித்து வருகிறார்கள். ஆகவே, தமிழக அரசு மொத்த கோயில் நிலங்களின் கணக்கெடுப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படுகின்ற குத்தகை ஆகியவற்றை மறுசீராய்வு செய்து, கோயில் வருவாயினைப் பெருக்குவதோடு, திருக்கோயில் நிலங்களை அபகரித்துள்ளவர்களிடமிருந்து மீட்க வேண்டும். எங்களை போன்றவர்கள் சிவன் சொத்து, குல நாசம் என்போம். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, பராசக்தி திரைப்படத்தில், “கோயில்கள் கூடாது என்பது அல்ல, அது கொடியவர்களின்

கூடாரமாக மாறிவிடக் கூடாது" என்று ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்கள். அந்த அடிப்படையில், கொடியவர்களின் கூடாரமாக மாறியுள்ள கோயில் நிலங்களை, கோயில்களை, கோயில் சொத்துகளை மீட்கின்றவகையிலே, அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்து, போர்க்கால அடிப்படையில் ஒரு ஆய்வினை மேற்கொண்டு, அக்குழுவிடமிருந்து பரிந்துரைகளைப்பெற்று ஒரு புதிய கோயில் நிலப் பாதுகாப்பு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரை கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஸ்தபதி ஆலோசகர் என்று இரண்டு சிற்பிகள் ஒப்பந்தப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர். இவர்களுக்குத் தொகுப்பு ஊதியமாக இதுவரை ரூ.4,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதுதவிர, தமிழ்நாடு முழுவதும் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 5 ஸ்தபதிகள் ஒப்பந்தப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இந்த 5 மண்டல ஸ்தபதிகளின் ஒப்பந்த காலம் முடிவடைந்து இன்று வரை யாரும் நியமிக்கப்படவில்லை.

ஆனால், அண்டை மாநிலமான ஆந்திராவில், ஸ்தபதி பிரிவு என்று ஒரு பிரிவையே உருவாக்கி, 120 சிற்பிகள் அங்கே இளநிலைப் பொறியாளர்கள் அந்தஸ்தில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், தமிழகத்தில் உள்ள கோயில்கள், தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழ் கலாச்சாரம் ஆகியவற்றின் பல்கலைக்கழகங்களாகவே விளங்குகின்றன.

பிற்பகல் 1-00

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய முயற்சியால் மாமல்லபுரத்தில் ஒரு சிற்பக் கல்லூரியைத் தொடங்கினார்கள். இக்கல்லூரியில் ஆலயக் கட்டுமானம் மற்றும் சிற்பத் தொழில்நுட்பம் பயின்ற, பட்டம் பெற்ற பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மாணவர்கள் அரசுப் பணி கிடைக்காமல் தனியாக சிற்பத் தொழிலைச் செய்து வருகிறார்கள். ஆகவே, இவர்கள் வாழ்வில் ஒளியேற்றுகின்ற வகையில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள இணை, துணை ஆணையர் பொறுப்பில் உள்ள கோயில்களில் இவர்களை இளநிலைப் பொறியாளர்களாக நியமிக்க வேண்டும். இதற்கு முன்னுதாரணமாக கலை, பண்பாட்டுத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள வள்ளுவர் கோட்டம், பூம்புகார் போன்ற இடங்களில் இரண்டு சிற்பிகள், சிற்ப



சாஸ்திரம் பயின்றவர்கள் நியமிக்கப்படுவதால், கோயில்களில் அதன் பழமை மாறாமல் (மணியடிக்கப்பெற்றது) கடைசி வரி. ஒரேயொரு நிமிடம்.

கரூரில் உள்ள தமிழ்நாடு காகித நிறுவனத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். ஆனால், அங்கே 400 தொழிலாளர்கள் Not on Roll என்ற அடிப்படையில் அவர்களுக்கு நியாயமான ஊதியத்தை சரியாக வழங்குவதில்லை. அதேபோல, அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்; அவர்களுக்கும் On Roll அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி.

***திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, இந்து சமய அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த அரசியல் இமயமாம், புகழ் மணக்கும் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள், மன உறுதி மிக்க மணிச்சுடராம், தொழிலாளர்களின் பாதுகாவலராகத் திகழும் சமூக நீதி காத்த வீராங்கனை, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக வழிநடத்திட்ட தங்கத் தாரகை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

முதன்முதலில் இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தளவில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலம்தான் அத்துறையின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்பதை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்ட அன்னதானத் திட்டம் தற்சமயம் முறையாக நடைபெறவில்லை என்பதனைப் பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருக்கோயில்களில் செயல் அலுவலராக பெண்களை நியமனம் செய்தது பெண்ணினப் பேரொளி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். திருக்கோயில்களில் பணிபுரிகின்ற செயல்

அலுவலர்களுக்கு அரசு கொடுக்கின்ற சம்பளத்தை பின்னர் திருக்கோயில் நிதியிலிருந்து அரசுக்குத் திரும்ப செலுத்த வேண்டிய நிலை இருந்தது. பல திருக்கோயில்களில் போதிய நிதி வசதியில்லாததால், அரசுக்குக் கடனாளியாகவே இருந்தனர். இந்த நிலையை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முறையாக அரசு நிதியிலிருந்து நேரடியாக அந்தத் திருக்கோயில்களின் செயல் அலுவலர்களின் சம்பளத்தை வழங்குவதற்கு சட்டப்பிரிவு 12(2)-க்கு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்.

திருக்கோயில்களில் பணிபுரிகின்ற பணியாளர்கள் ஓய்வுபெற்ற பிறகு அவர்களுக்கு எந்த வாழ்வாதார நிலையும் இல்லாமல் இருந்தது. முதன்முதலில் திருக்கோயிலின் பணியாளர்களுக்கு வாழ்வாதார உரிமையை அளிக்கும் வகையில் திருக்கோயிலின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளித்து, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தமிழ்நாட்டிலே மலைகள்மீது இருக்கும் திருக்கோயில்களுக்கு கம்பிவட ஊர்திகள் இல்லாமல் இருந்த நிலையில், முதன்முதலில் பழநி மலை அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு 4 கோடி ரூபாய் செலவில் கம்பிவட ஊர்தியை ஏற்படுத்தி, பக்தர்களுக்கு எளிதாக சாமியைத் தரிசிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 கிலோ மீட்டர் வான் வழி தூரத்திற்கு பழநிக்கும் கொடைக்கானலுக்கும் இடையே உள்ள மலைப் பகுதிக்கு கம்பிவட ஊர்தி வசதி செய்து தரவும், அதேபோன்று சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நாராயணசாமி திருக்கோயிலுக்கு, மலையின் அடிவாரத்திலிருந்து மலையின் மேற்குப் பகுதிக்குச் செல்வதற்கு 4 கோடி ரூபாய் செலவில் கம்பிவட ஊர்தி வசதி செய்து தரவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டம் தீட்டியிருந்தார்கள்.

தமிழகம் முழுவதும் கோயில்களில் உள்ள குளங்கள் தூர் வாரப்படாமல் உள்ளன. அறநிலையத் துறையில் போதிய நிதி இல்லாத காரணத்தால், இதுபோன்ற பணிகள் நடைபெறுவதில்லை. எனவே, அரசு சிறப்பு நிதி ஒதுக்கி, அனைத்துக் கோயில்களிலும் உள்ள தெப்பக்குளங்களைத் தூர் வார வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதியில் உள்ள திருவக்கரை அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் வக்ரகாளியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கு சுற்றுலாத் துறையின்மூலம் ரூ.59.15 இலட்சம் செலவில் பணிகள் செய்திட சுற்றுலாத் துறை தெரிவிக்கும் இடத்தில் பேருந்து நிலையம் கட்டுதல், அந்தப் பேருந்து நிலையத்தில் கழிப்பிடம், குளியலறை, பக்தர்கள் மண்டபம் போன்ற பணிகள் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை குறிப்பிடும் இடம் கோயிலுக்கு வெகு தொலைவில், திருவக்கரை ஊருக்கு வெளியில் சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு பணிகளைச் செய்தால் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஒரு பலனும் இல்லை. எனவே, கோயிலுக்கு வரும் பக்தர்களின் நலன் கருதி, கோயில் வளாகத்திற்குப் பக்கத்தில் மேற்கண்ட பணிகளைச் செய்திடவேண்டும்.

பிற்பகல் 1-05

பௌர்ணமி விழா நாட்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவதால் இரவு நேரங்களில் சமய சொற்பொழிவு, பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திடவேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்த திட்டங்களெல்லாம் என்னவாயிற்று? எதுவும் நடைபெறவில்லை. வழக்கம்போல் வெற்று அறிவிப்புகளாகத்தான் உள்ளதே தவிர, எந்தப் பணிகளும் நடந்ததாகத் தெரியவில்லை. தமிழகமெங்கும் உள்ள வருமானம் இல்லாத கோயில்களுக்கு மின் கட்டணத்தை அரசே ஏற்கவேண்டும் அல்லது இலவச மின்சாரம் வழங்கவேண்டும். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் கிராமப்புறங்களில் உள்ள கோயில்களை புனரமைக்க, தலா ரூ. 25 ஆயிரம் நிதி ஒதுக்கி, தமிழகமெங்கும் உள்ள பல ஆயிரக்கணக்கான கோயில்களை சீரமைத்து சாதனை படைத்தார்கள். அந்த புரட்சிகரமான திட்டத்தின் தற்போதைய நிலை என்ன? நடைபெற்ற பணிகளுக்கான நகலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும். அந்தத் திட்டம் தொடரவேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகமெங்கும் உள்ள திருக்கோயில்களில் திருத்தேர் செய்ய நிதி ஒதுக்கி உத்தரவிடப்பட்டது. பல கோயில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி, பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. பல கோயில்களின் நிலை என்னவென்றே தெரியவில்லை. எனது வானூர் தொகுதிக்குட்பட்ட

ஒழுந்தியான்பட்டு அரசலீஸ்வரர் திருக்கோயிலுக்கும், புளிச்சப்பள்ளம் சுந்தர ஜோதீஸ்வரர் திருக்கோயிலுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழுதடைந்த திருத்தேர்களைச் சீரமைக்கத் தலா ரூ.10 இலட்சம் வீதம், இரண்டு கோயில்களுக்கும் ரூ. 20 இலட்சம் நிதி ஒதுக்கினார்கள். ஆனால், இதுவரையில் அந்தத் திருத்தேர்கள் சரிசெய்யப்படவில்லை. அமைச்சர் அவர்கள் பதிலுரையில் இதற்குப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த திருத்தேர்கள் எல்லாம் புறக்கணிக்காமல் உருவாக்கப்படவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

திருக்கோயில்களுக்குப் பாதுகாப்புப் படை என்ற பெயரில் 6,453 காவலர்கள் நியமிக்கப்பட்டும், தற்போது உங்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு தமிழகக் கோயில்களில் நடைபெற்ற நிகழ்வுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நீங்கள் பொறுப்பேற்றதிலிருந்து கிட்டத்தட்ட 15, 16 திருக்கோயில்களில் திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன, உண்டியல்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. சிலைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த சில நாட்களுக்கு முன்பு, 16-4-2008 அன்று கபாலீஸ்வரர் திருக்கோயில் உண்டியல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டம், எனது வானூர் தொகுதியில் நெடுஞ்சாலை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் பல ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் திருவக்கரை-கொடுக்கூர் இடையில் உள்ள சங்கராபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தரைப் பாலம் சமீபத்தில் பெய்த கனமழையினால் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் 15 கிராமங்கள் போக்குவரத்தின்றி பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, 15 கிராம மக்களின் நலன் கருதி, மேலே குறிப்பிட்ட ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தரவேண்டுமாய் இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டத்தில் ஒரு பகுதி மட்டும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு,



திருச்சிற்றம்பலம் கூட்ரோடில் ஒரு வாடகைக் கட்டடத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை இயங்கி வருகின்றது. ஆபத்து நிறைந்த கல் குவாரிகளும், கிரஷர்களும் அதிகமாக உள்ள வானூர் தொகுதி முழுவதும் இ.எஸ்.ஐ. திட்டத்தை விரிவுபடுத்தி, திருச்சிற்றம்பலம் கூட்ரோட்டில் இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்டி தொழிலாளர்களுக்கு மருத்துவ சேவை அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு பின்பற்றுவதைப்போல, தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு அளிக்கும்பொழுது இடஒதுக்கீடு அடிப்படையில் பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை தேடித் தரும் துறையிலே அனுமதிக்கப்பட்ட 1,101 பணியிடங்களில் 413 பணியிடங்கள் காலியாக உள்ளன. வேலையில்லாதவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு 281 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அதில் 81 ஊழியர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டுள்ளனர். 200 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியிடங்கள் நிரப்பப்படாத காரணத்தால் வேலைவாய்ப்பு அலுவலகங்களை நாடி வரும் வேலை கிடைக்காத இளைஞர்கள், இளம் பெண்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் உப்புவேலூர்-ஞானக்கால்மேடு சாலையில் 15 கிராமங்கள் உள்ளடங்கியுள்ளன. அந்தச் சாலையினைச் செப்பனிடாத காரணத்தால் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் அடிக்கடி நிறுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் சாலையினைச் செப்பனிடக் கோரி அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டும், இதுவரை சாலை செப்பனிடப்படாமல் உள்ளது. இதை உடனடியாக சரிசெய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-10

அதேபோன்று, பொன்னேரி தொகுதியில் உள்ள மீஞ்சூர் மற்றும் பஞ்செட்டி பகுதிகளில், அதிகமான தொழிற்சாலைகள் இருப்பதால், 15,000 தொழிலாளர்கள் இருப்பதால், F.S.I. ஒன்று இந்தப் பகுதிக்கு அமைத்துத் தரவேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கரூர் சட்டமன்றத் தொகுதியில் இயங்கிவரும், தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில், ஒப்பந்தத் தொழிலாளர்களாக, 2,026 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக

பணியமர்த்த வேண்டும். ஒப்பந்தத் தொழிலாளர்களில், 1,650 தொழிலாளர்களுக்கு எல்லா சலுகைகளும் கிடைக்கிறது. 376 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு எந்தச் சலுகையும் வழங்காமல் இருவிதக் கொள்கையாக உள்ளது, அதைக் களையவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிசயமே அதிசயிக்கும் தலைவா, ஆயிரம் பிறை கண்ட அற்புதத் தலைவா, நெஞ்சை வெல்லும் சிலப்பதிகாரமும், வாஞ்சை மிக்க வான் புகழ் வள்ளுவமும், பண்டைத் தொல்காப்பியமும், தென்பாண்டிச் சிங்கமும், ரோமாபுரி பாண்டியனும், சங்கத் தமிழும் தந்த ஐந்தாம் தமிழ்ச் சங்கமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஐம்பெருங் காப்பியம் என ஐம்பெரும் முழக்கம் தந்த, ஐந்தமிழ் அறிஞரே, ஐந்தாம் முறை தமிழ்நாட்டை ஆளும் முதல்வரே, அன்பில் விளைந்த ஆரமுதே, தித்திக்கும் தெள்ளமுதே, தெள்ளமுதின் மேலான முத்திக் கனியே, இமைப்பொழுதும் என் நெஞ்சைவிட்டு நீங்கா என்னுயிர்த் தலைவரே, (மேசையைத் தட்டும் ஒலி) தன் மதிப்பு இயக்கத்தின் தன்னிகரில்லா மாண்புமிகு இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களையும், என் உயிராகவும், உணர்வாகவும் திகழும், இளைஞர்களின் இதய வானத்தின் உதயசூரியன், மாண்புமிகு தளபதி அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி), கழகப் பொருளாளர் மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும், முதன்மைச் செயலாளர் அண்ணன் மாண்புமிகு துரைமுருகன் அவர்களையும் வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

அன்பும், கருணையும், எங்கே நிறைந்துள்ளதோ, அங்குதான் இறைவன் இருக்கின்றான் என்று பல மகான்கள் கூறியுள்ளார்கள். எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணி, எல்லா உயிர்களிடத்திலும் அன்பும், கருணையும் காட்டுவது, இறைவனுக்குச் செய்யும் பணியாகும். அந்தப் பணியை, கலைஞர் அரசு செய்து வருகிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



மக்கள் குரலே, மகேசன் குரல் என்பதற்கு ஏற்றாற்போல், மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல்வராக மட்டுமல்லாமல், மகேசனாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல்வராகவும், தலைவர் கலைஞர் உள்ளார் என்பதைக் கம்பீரத்தோடு இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டவன்மீது நம்பிக்கை இல்லாதவர்தான் நம்முடைய முதல்வர் என்றாலும், ஆண்டவனின் நம்பிக்கைக்குரிய முதல்வராக, ஆண்டவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதல்வராக கலைஞர் உள்ளார், என்பதை நமது ஆன்மீகச் சான்றோர்கள் ஏற்றுக்கொண்டு, பாராட்டியுள்ளார்கள் என்பதையும், இந்த சபைக்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புக்கும், கருணைக்கும் உள்ள நுட்பமான வேறுபாட்டை, வேலூருக்கு அருகிலுள்ள பொற்கோவில் வளாகத்தில் நடந்த ஒரு விழாவில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிக அழகாக விளக்கியதைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றவர்களில் நானும் ஒருவன். உயிர்களிடத்தில் அன்பு காட்டுவது நன்று என்றால், கருணை செலுத்துவது அதைவிட மேலானது என்றார் நம் முதல்வர். அந்த உரையின் அடிப்படையில், இந்து சமய அறநிலையத் துறை செயலாற்றிவருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டாண்டு கால பொற்கால ஆட்சியில், முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில், திருக்கோயில்களின் வளர்ச்சிக்கும், திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு விழாக்கள் நடத்துவதற்கும், திருக்கோயில் பணியாளர்களின் நலனுக்கும், இந்து சமய அறநிலையத் துறை செயல்படுத்தியுள்ள திட்டங்கள் எண்ணிலடங்காது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்றால், திருக்கோயில்களிலே வளர்ச்சிப் பணிகள் எதுவும் நடக்காது என்று ஒருசிலர், இன்னும் உண்மைக்கு மாறாகப் பேசிவருகின்றனர்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நன்னீராட்டு வைபவம் நடைபெற வேண்டுமென்பது பொதுவான நியதி. அந்த வகையிலே, கடந்த சில ஆண்டுகளில், திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பீட்டை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 16.33 கோடியும், 2002-2003 ஆம் ஆண்டில் ரூபாய் 19.32 கோடியும், 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய்

32.87 கோடியும், 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 26.48 கோடியும், 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.49.83 கோடியும், 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 36 கோடியும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டில் மட்டும் திருக்கோயில்களின் மேம்பாட்டிற்காகவும், பக்தர்களின் வசதிக்காகவும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு 121 கோடி ரூபாய் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

அதாவது கடந்த 5 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு ரூபாய் 144.83 கோடி ஆகும். ஆனால் நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பு ரூபாய் 157 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் 5 ஆண்டுகளில் செய்ததை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இத்துறை இரண்டே ஆண்டுகளில் விஞ்சி வெற்றி நடை போட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கோயில் என்றாலும், அங்கு திருப்பணிகள் என்றாலும், அது தங்களுக்கே வழங்கப்பட்ட பட்டா என்றும், அதைத் தங்களால்தான் சிறப்பாகச் செய்ய முடியும் என்றும் தம்பட்டம் அடித்துக்கொள்பவர்கள் உண்டு. நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை பொறுத்தமட்டில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அல்லும் பகலும் அயராது பாடுபடுபவர். மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல், கடமையே கண்ணாகக் கொண்டு மக்கள் தொண்டாற்றும் முதல்வர் கலைஞர் தலைமையிலான இந்த நல்லாட்சியில் தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலுள்ள திருக்கோயில்களில் எல்லாம் குடமுழுக்கு விழாக்கள் தினந்தோறும் நடைபெறும் திருக்காட்சியை நாம் இன்று காண்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டு காலத்தில் மட்டும் 2,239 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது,



சராசரி நாளொன்றுக்கு 3 கோயில்கள் என்ற கணக்கில், இந்த அரசு குடமுழுக்கு விழாக்களை நடத்தி வந்திருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் 23-4-2008 ஒரு நாளில் மட்டும் 22 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டு ஆண்டு காலத்தில் 2,239 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ள இந்தச் சாதனை உண்மையா என்றுகூட கேள்விகள் எழலாம். ஆனால், நடக்காது என்று மாற்றாரால் ஆருடம் சொல்லப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் நடத்திக் காட்டி, வரலாறு படைத்து வருபவர் நமது முதல்வர் கலைஞர் அவர்கள். அவரது ஆட்சியில் தமிழகத்தில் வரலாறு காணாத அளவில் குடமுழுக்கு வைபவங்கள் நடந்து வருவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்காக ஆண்டுதோறும் அரசு வழங்கி வந்த மானியத் தொகை வெறும் 45 இலட்ச ரூபாயாக இருந்தது. இதை நான்காவது முறை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் 1998 ஆம் ஆண்டில்தான் ரூபாய் 75 இலட்சமாக உயர்த்தித் தந்தார்கள். அதன் பின்பு ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் திருக்கோயில்களுக்கு அரசு மானியத் தொகை வழங்கும் காட்சியில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. ஆனால், மீண்டும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறை ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, இந்த மானியத் தொகையை ரூபாய் 75 இலட்சத்திலிருந்து 3 கோடி ரூபாயாக உயர்த்தி, கடந்த 25-1-2008 அன்று ஆணையிட்டுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எப்படியெல்லாம் நிதியாதாரங்களைத் திரட்டி புதுப் புது திட்டங்களைச் செயல்படுத்தினால் திருக்கோயில்களில் குடமுழுக்கு வைபவங்கள் அதிகரிக்கும் என்பதை நன்கு அறிந்தவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். நான் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்ததைப் போல புராதன சின்னங்கள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் 48 திருக்கோயில்களில் திருப்பணி செய்திட 9.87 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது இந்த ஆட்சிக் காலத்தில்தான். நிதி வசதியுள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் செய்தும், நல்லெண்ணம் படைத்த நன்கொடையாளர்களை ஊக்குவித்தும் பல 100 திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடிப் பரவப்பட்ட ஆனால் நீண்ட நெடுங்காலமாகக் குடமுழுக்கே கண்டிராத 30 திருக்கோயில்களுக்கு ரூபாய் 3.29 கோடி ஒதுக்கி இன்றைக்குத் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருக்கோயிலுக்குள்ளே திருக்கோயில் நிதி, திருக்கோயிலுக்கு வெளியே உள்ளாட்சித் துறை மற்றும் சுற்றுலாத் துறைகளின் நிதி என்ற அடிப்படையில் பல புகழ்பெற்ற திருக்கோயில்களில் பக்தர்களுடைய நலனுக்காக வசதிகள் செய்து தரப்படுகின்றன.

'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று நம் கலைஞர் அவர்கள் தமிழ்ப் பற்றை நமது நாடி நரம்புகளிலெல்லாம் ஏற்றி, தமிழ் உணர்வை நம்மிடையே ஊற்றாகப் பெருகச் செய்து தமிழுக்குச் செம்மொழி நிலையைப் பெற்றுத் தந்து, தமிழ்த் தாயின் தவப் புதல்வனாகத் திகழ்கின்றார். அவரது இந்த ஆட்சிக் காலத்தில்தான், திருக்கோயில்களில் தமிழுக்கு சிம்மாசனம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று தமிழ் அர்ச்சனை இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த காலம் மாறி, தமிழில் அர்ச்சனை செய்யப்படும், தமிழில் குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்படும். தமிழில் தேவாரத் திருமுறைகள் திருக்கோயில்களில் ஓதப்படும் என்பதையெல்லாம் முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டுகிறது.

*பிற்பகல் 1-20*

திருக்கோயில்களைப் பொறுத்தமட்டில், ஒரு சாரார் தமிழைத் தீண்டாத மொழியாகக் கருதி வந்த நிலையை மாற்றி, இன்றைக்குத் தில்லையில் சிற்றம்பல மேடையில் தமிழை ஒலிக்கச் செய்த பெருமை நம் முதல்வர் கலைஞர் அவர்களையே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஒரு கருவியாக இருந்த திரு. ஆறுமுகசாமி அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை கொடுத்து, முதலமைச்சர் அவர்கள் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்த அரசின் நிலைப்பாட்டை அறிந்த தில்லை தீட்சிதர்கள், இன்றைக்கு அவர்களாகவே திருச்சிற்றம்பல மேடையில் பக்தர்கள் தமிழ் திருமறைகளைப் பாடுவதை வரவேற்று, அவர்களுக்கு கோயில் மரியாதையும் செய்திருக்கின்றார்கள் என்றால், அது நம் முதல்வர் கலைஞர் தலைமையிலான இந்த அரசுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே



நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையின் சார்பில் ஓதுவார் பயிற்சி நிலையம் இல்லாத ஒரு குறையைப் போக்கும் வகையில், பழநி திருக்கோயில் சார்பில் ஓதுவார் பயிற்சி மையம் ஒன்று தொடங்கப்படும் என்று சென்ற ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது நான் தெரிவித்தேன். அதன்படி உரிய அரசாணை வெளியிடப்பட்டு, ஓதுவார் பயிற்சி மையம் தொடங்குவதற்கானப் பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சொற்றமிழால் என்னைப் பாடுக என்று சிவபெருமான் சுந்தர மூர்த்தி நாயனாரை விரும்பி கேட்டுக் கொண்டதாக பெரிய புராணத்திலே காண முடிகிறது. தமிழ்ப் பாடல்களான மாலைகளை, ஆழ்வார்கள் இறைவனுக்கு சூட்டி மகிழ்ந்ததாகத் திவ்யப் பிரபந்தமும் கூறுகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த தமிழில் உள்ள திருமறைகளையும், பிரபந்தத்தையும் திருக்கோயில்களின், பண்ணோடு ஓதுவதற்கு, இந்த ஓதுவார் பயிற்சி நிலையங்கள் நிச்சயமாக வழி வகுக்கும். இட்டார், இடாதார் என்ற இரு வகையினர் தவிர, வேறு ஜாதிகள் இல்லையென ஔவையார் பாடி, பல நூறு ஆண்டுகள் கடந்த பின்பும், "ஜாதிகள் இல்லையடி பாப்பா, குல தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்" என்று பாரதி பாடி சற்றொப்ப 100 ஆண்டுகள் கடந்த பின்பும், சாதிகளின் பெயரால், மக்களிடமிருந்து இறைவனைப் பிரிக்கும் முயற்சி இருப்பதை இனியும் அனுமதிக்கக்கூடாது என்பதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

அங்கிங்கெனாதபடி, எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி நின்றுள்ள இறைவன்முன், படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் சமம், என்ற நிலையில் அந்த இறைவனுக்குப் பூசைகள் செய்வதில் சாதி ஒரு காரணியாக இருக்கக் கூடாது என முடிவு செய்து, உரிய தகுதியும், பயிற்சியும் பெற்ற இந்து மதத்தைச் சார்ந்த அனைவரும், இந்துத் திருக்கோயில்களில் அர்ச்சகராகப் பணிபுரியலாம் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயச் சீர்திருத்தப் பாதையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தி உள்ளது. தற்போது 6 இடங்களில் நடைபெற்று வரும் அர்ச்சகர் பயிற்சி நிலையங்களில் மொத்தம் 207 பேர், அர்ச்சகர் பயிற்சி பெற்று வருகின்றனர். இந்தத் திட்டத்தில் அரசின் இட ஒதுக்கீட்டு

ஆணையைப் பின்பற்றியதால், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 76 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 55 பேரும், ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த 34 பேரும் இப்பயிற்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர். வரும் ஜூன் திங்களுடன் இப்பயிற்சிக் காலம் முடிந்து, திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்படும் தகுதியை இவர்கள் பெற உள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம். ஆதி திராவிட மக்கள் திருக்கோயிலுக்குள் நுழைந்து வழிபடும் உரிமையைப் பெற, தந்தை பெரியார் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, திருக்கோயில் நுழைவுச் சட்டம் 1947-ல் இயற்றப்பட்டது. இன்றைக்கு அந்த ஆதி திராவிட மக்களை, திருக்கோயிலில் அர்ச்சகராகவே ஆக்கலாம் என்ற நிலையை நம் முதல்வர் கலைஞர் அவர்கள் உருவாக்கி உள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குத் தந்தை பெரியார் அவர்கள் நம்மிடையே இருந்திருந்தால், தலைவர் கலைஞர் அவர்களை ஆரத்தழுவி என் நெஞ்சில் உறுத்தும் முள்ளை அகற்றிவிட்டீர்கள் என்று வாழ்த்தி, மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருப்பார். தந்தை பெரியாரின் சிந்தனைகளை, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செயல்படுத்துகின்ற இந்தக் காலக் கட்டத்தில், தலைவர் கலைஞரின் அடியொட்டி நடக்கும் வாய்ப்பை இத்துறையின் அமைச்சர் என்கின்ற முறையில் எனக்கு அளித்தமைக்காக நான் என் நன்றி மலர்களை முதல்வர் கலைஞர் அவர்களின் பொற்பாதங்களில் தூவுகிறேன்.

திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்வதைப்போல, அவற்றின் சொத்துக்களைப் பாதுகாப்பதும் முக்கியமானது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு எல்லாவிதமான முனைப்பான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைத் தவறுதலாக, தனியார் பெயரில் பட்டா மாற்றப்பட்டதைத் திருத்துவதற்காக, 2 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள், தற்போது ஒருவர் கோவையிலும், மற்றொருவர் மதுரையிலும் நியமிக்கப்பட்டு, இந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் நீண்ட காலமாகக் கூட்டாகக் குடியிருந்து வருவோர் பிரச்சினைகளைப் பரிசீலித்து,



அத்தகைய நிலங்கள் திருக்கோயில்களின் நேரடிப் பயன்பாட்டிற்குத் தேவையில்லை என்றால், அந்தக் குடியிருப்புதாரர்களை விதிமுறைகளின்படி திருக்கோயிலின் வாடகைதாரர்களாக அங்கீகரிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் 21,000 குடும்பங்கள் பயன்பெறுவதோடு, திருக்கோயில்களுக்கும் கணிசமான வருமானமும் கிடைக்கும். திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள், கட்டடங்கள் முதலியவற்றில் குடியிருப்போர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விகிதம் மிகவும் அதிகம் என்றும், பொதுவாக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்தப்படும் வாடகை உயர்வைக் குறைக்க வேண்டுமென்றும் பரவலாக கோரிக்கைகள் அரசுக்கு வந்தன. இதே மாமன்றத்திலும் இதுபற்றி கோரிக்கைகள் வைக்கப்பட்டன. இவற்றின் அடிப்படையிலும், இத்துறைக்கான ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளில், கட்டடங்களில் குடியிருப்பவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகை விகிதத்தைப் பாதியாகக் குறைத்தும், குடியிருப்பவர்களுக்கும், வணிகர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை விதிக்கப்படும் வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாக குறைத்தும் இவ்வரசு 9-11-2007 அன்று ஆணையிட்டுள்ளது. இதன் காரணமாக, 56,265 நபர்கள் பயனடைகின்றனர்.

திருக்கோயில்களில் காணிக்கையாக வழங்கப்படும் கால்நடைகளைத் திருக்கோயிலுள்ள பசு மடத்தில் பராமரிக்க வேண்டும் அல்லது இந்திய விலங்குகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கோசாலைகளுக்கு அனுப்பி, உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் விற்பனை செய்யக்கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து, கோசாலைகளுக்குக் கால்நடைகள் இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. இவ்வாறு கோசாலைகளுக்கு அனுப்பப்பட்ட கால்நடைகளும் விற்பனை செய்யப்படுவதாகப் புகார் எழுந்தமையால் அதுவும் நிறுத்தப்பட்டது. இதனால், திருக்கோயில்களில் பராமரிக்கப்பட வேண்டிய கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமானது. ஒருசில இளங் கன்றுகளும், நோயுற்ற மாடுகளும் இறக்க நேரிட்டன. இந்நிலையைத் தவிர்த்திட பழநி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணைகளை உருவாக்கவும், ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர்களை நியமித்து, இந்த கால்நடைகளைப் பராமரிக்கவும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், அர்ச்சகர்கள், பூசாரிகள்

போன்றோருக்கும் இலவசமாக கால்நடைகளை வளர்ப்பதற்கு வழங்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் களவு, கொள்ளை போன்றவை நிகழாமல் தடுப்பதற்காகத் திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டு, அதில் காவல் துறையைச் சார்ந்த 904 காவலர்கள், 1,933 முன்னாள் இராணுவ வீரர்கள் பணிபுரிகின்றனர். 246 திருக்கோயில்களில் திருட்டு எச்சரிக்கை மணி பொறுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான நகைகள் முதலிய விலைமதிப்புள்ள பொருட்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், எங்கேனும் ஓரிரு இடங்களில் களவு, கொள்ளை போன்ற சம்பவங்கள் நிகழ்ந்து விடுகின்றன. திருக்கோயில்களில் உண்டியல் திருட்டு போன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்காக காவல் துறையுடன் கலந்தாலோசித்து ஒவ்வொரு திருக்கோயிலுக்குமான பாதுகாப்பு ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்டு, முழுமையான ஒரு பாதுகாப்புத் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இதில் முதல்கட்டமாக, நிதிவசதியற்ற திருக்கோயில்களில் உள்ள உண்டியல்களைப் பாதுகாக்கவும், தெய்வத் திருமேனிகளைப் பாதுகாக்கவும், திருட்டு எச்சரிக்கை மணி பொறுத்துவதற்கு உதவிடும் வகையில் நிதிவசதி உள்ள திருக்கோயில்களிலிருந்து நிதிமாற்றம்மூலம் ரூ.5 கோடி நிதி திரட்டி ஒரு மைய நிதி உருவாக்கப்படும். இதில் கிடைக்கும் வட்டி வருமானத்தில் இருந்தும், நன்கொடையாளர்கள் உதவியைப் பெற்றும், நிதி வசதி பெற்ற திருக்கோயில்களில் திருட்டு எச்சரிக்கை மணி பொறுத்தப்படும். கிராமப்புறங்களில் சிறிய திருக்கோயில்களில் உள்ள தொன்மைவாய்ந்த திருமேனிகளைப் பாதுகாப்பதற்கு என்று இதுவரை 16 சிலைப் பாதுகாப்பு மையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டில் கூடுதலாக மேலும் 5 இடங்களில் சிலை பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் கலைஞர் அவர்களின் நல்லாட்சியில், இந்து சமய அறநிலையத் துறை நிறைவேற்றியுள்ள அரும்பணிகள் அனைத்தையும் பட்டியலிட்டு நான் படித்தால், அதற்கு நேரம் போதாது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலோடு, 2008-2009 ஆம் ஆண்டில் இத்துறை நிறைவேற்ற வேண்டிய திட்டங்களின் பட்டியலை அறிவிப்புகளாக● அச்சிட்டு அவற்றிலிருந்து ஒரு

●331 முதல் 347 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சிலவற்றை மட்டும் உங்கள் அனுமதியோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அனைத்தையும் நான் இந்த அவையில் படித்ததாகக் கருதிப் பதிவு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன். தற்போது தமிழ்நாட்டில் 10,947 திருக்கோயில்களில் ஒரு கால பூசை திட்டம் செயல்பாட்டில் உள்ளன. இன்னும் ஒரு கால பூசை திட்டத்தின்கீழ் நிதியுதவி தேவைப்படும் திருக்கோயில்களின் எண்ணிக்கை 1,567 மட்டுமே. ஆக. இந்த 1,567 திருக்கோயில்களுக்கும் இந்த ஆண்டியிலேயே ஒரு கால பூசை திட்டத்தில் கொண்டுவரப்பட்டு இத்துறையில் ஒரு கால பூசைகூட இல்லாத திருக்கோயில்கள் எதுவும் இல்லையென்ற வரலாறு படைக்கப்படும். தற்போது திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்பட்டு வரும் 34 கருணை இல்லங்கள் அந்தந்த திருக்கோயில்கள் நிதியிலிருந்து மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். மேலும், அதிக அளவில் ஆதரவற்ற சிறுவர், சிறுமியர் பயன்பெறும் வகையில், கூடுதலாக, 10 கருணை இல்லங்கள் திருக்கோயில்கள் சார்பில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** இந்த அரசு பொறுப்பேற்றவுடன் முதல்வர் கலைஞர் அவர்கள் கிராமக் கோயில் பூசாரிகளின் நலனுக்காக ஒரு தனி வாரியத்தை நிறுவி ஆணையிட்டார்கள். இந்த வாரியம் இரண்டு முறை கூடி, பல்வேறு திட்டங்கள் பற்றிக் கலந்தாலோசித்துள்ளது. இந்த வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டு, இதுவரை 14,357 கிராமக் கோயில் பூசாரிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி தொடருவதோடு, உறுப்பினர்களுக்குப் பல்வேறு உதவிகளும் வழங்கப்படும்.

ஆதி திராவிட மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள, ஆயிரம் சிறிய திருக்கோயில்களில் தலா 25,000/- ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்க்கும் பணிகள் 2.5 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இதற்குத் தேவையான நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம்மூலம் நிதி பெறப்படும்.

"ஒழுக்கம் விழுப்பம் தருவதால் அதை உயிரினும் மேலானதாகக் காக்க வேண்டும்" என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க, இளம் வயதில் இத்துறையின் சிறுவர் சிறுமியர்களுக்கு நன்னெறி புகட்டும் வகையில்,

கட்டுப்பாட்டில் உள்ள 485 திருக்கோயில்களில் தற்போது ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை நேரங்களில் சிறுவர், சிறுமியர்களுக்கு ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்த வகுப்பு இனி சனிக்கிழமைகளிலும் நடத்தப்படும் வகையில் இந்தத் திட்டம் விரிவாக்கப்படும்.

"உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்", "உடம்பார் அழியின் உயிரார் அழிவர், திடம்படு மெய்ஞானம் சேரவும் மாட்டார்" என்ற திருமூலரின் வாக்கின்படி, உடல் நலத்தையும், மன நலத்தையும் பேணிக் காப்பது இன்றியமையாததாகும். இதைக் கருத்தில்கொண்டு, உரிய இடவசதி உள்ள 50 பெரிய திருக்கோயில்களில் தினந்தோறும் காலை வேளைகளில் யோகாசனப் பயிற்சி செய்வதற்கும், அமைதியாக தியானம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

தற்போது சேக்கிழார், திருஞானசம்பந்தர், ஔவையார், தாயுமானவர் போன்ற அருளாளர்களுக்கு ஆண்டுதோறும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. அதைப்போல, இந்த நிதியாண்டு முதல் அனைத்து நாயன்மார்கள், ஆழ்வார்கள், இராமானுஜர் முதலிய அருளாளர்களுக்கும் அவர்களுக்கு உரிய நாளில், உரிய இடத்தில் ஆண்டுதோறும் சிறப்பு விழாக்கள் நடத்தப்படும். இதற்கு ஆகும் செலவு, இந்து சமய அறநிலையத் துறையின் பொது நல நிதியிலிருந்து வழங்கப்படும்.

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிதி வசதி இல்லாத 2,000 கிராமத் திருக்கோயில்களில், பக்தர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும்வகையில் திருவிழா நாட்களிலும், மற்ற நாட்களிலும் காலை / மாலை வேளைகளிலும் பக்தி இசை ஒலிபரப்பிட ஒலிபெருக்கி வசதி ஏற்படுத்தித் தரப்படும். நிதி வசதியுள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் செய்தும், நன்கொடையாளர்கள் மூலமும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நிதி வசதியும், இட வசதியுமுள்ள 100 முக்கியத் திருக்கோயில்களில் பக்தர்களின் பயன்பாட்டுக்காக நூலகங்கள் அமைக்கப்படும். இந்த நூலகங்களில் ஆன்மீக இதழ்கள், நூல்கள் முதலியன அந்தந்தத் திருக்கோயில் செலவில் வாங்கி வைக்கப்படும்.

தமிழில் நல்ல ஆன்மிக / நீதி நூல்கள் வெளியிடப்படுவதை ஊக்குவிக்கும்பொருட்டு, தமிழில் வெளியிடப்படும் சிறந்த நூல்களுக்கு இத்துறையின் பொது நல நிதியிலிருந்து ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்படும்.



தமிழில் உள்ள சிறந்த ஆன்மிக, நீதி நூல்களை வாங்கி, வெளிநாட்டில் உள்ள திருக்கோயில்களுக்கு நன்கொடையாகவும் அளிக்கப்படும்.

இந்து சமய அறநிலையத் துறையால் நடத்தப்படும் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி, குழித்துறை தேவி குமாரி மகளிர் கல்லூரி, மேலையூர் பூம்புகார் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வசதியாக, கட்டடங்கள், ஆய்வகங்கள், நூலகம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், கணினிகள் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்காகவும், இக்கல்லூரிகளின் வளர்ச்சிக்காகவும், ஆண்டுதோறும் தலா ரூ.1.5 இலட்சம் வீதம் ரூ. 45 இலட்சம் அளிக்கப்படும். இதற்காக நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றத்தின்மூலம் உதவி பெற்று ரூ. 5 கோடி அளவில் மைய நிதி உருவாக்கப்படும். (குறுக்கீடுகள்)

திருக்கோயில்களால் நடத்தப்படும் 36 பள்ளிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காக, பள்ளிகளிலும் 5 கோடி ரூபாய் நிதி திரட்டி ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (குறுக்கீடு)

அதேபோல, முக்கியமானதாக திருக்கோயில்களில் தங்கத் தேர் என்பது ஒரு தனிச் சிறப்புடைய, திருக்கோயிலுக்குப் பெருமை சேர்க்கத்தக்க ஒன்றாகும். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்; எங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தேர்த் திருப்பணிகளாக இருக்கட்டும், தங்கத் தேராக இருக்கட்டும், திருக்கோயில்களுக்கான பணிகளாக இருக்கட்டும் எல்லாம் சிறப்பாக நடந்தன என்று சொன்னார்கள். அவர்களுக்காக நான் இங்கே ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 2006 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்பதற்கு முன்பு 27 திருக்கோயில்களில் தங்கத்தேர் இருந்தது. ஆனால், இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் எட்டு திருக்கோயில்களில் புதியதாக தங்கத் தேர் செய்யப்பட்டு, தங்கத் தேர் உலா நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்த நிதியாண்டில் மேலும் 14 திருக்கோயில்களுக்குத் தங்கத் தேர் திருப்பணிக்கான பூர்வாங்கப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தங்கள் தொகுதிகளில் உள்ள திருக்கோயில் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகளை தாங்கள் பேசும்போதும், அதேபோல வெட்டுத் தீர்மானங்களாகவும், இங்கே வைத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் அனைத்தையும், நான் எனது கவனத்தில் கொண்டுள்ளேன். ஏறத்தாழ 308 வெட்டுத் தீர்மானங்கள் இங்கே வந்திருக்கின்றன. அவற்றிலே கொள்கையை விளக்கும் வகையில் 24 வெட்டுத் தீர்மானங்களும், அடிப்படை வசதிகளுக்காக 50 வெட்டுத் தீர்மானங்களும், திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்வதற்காக 33 வெட்டுத் தீர்மானங்களும், திருக்கோயிலை சீரமைக்க நிதியுதவி கோருவதற்கு 34 வெட்டுத் தீர்மானங்களும், ஆதி திராவிடர் கோயில்களுக்கு வழங்கும் நிதியுதவியை அதிகரிப்பதற்காக 25 வெட்டுத் தீர்மானங்களும், ஆக, 308 வெட்டுத் தீர்மானங்களும், கவனத்தில்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலோடு, இங்கே 87 அறிவிப்புகள் துறையின் சார்பிலே அச்சிடப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒருசிலவற்றை நான் படித்திருந்தாலும்கூட, காலத்தின் அருமை கருதி, அச்சிட்டு வழங்கப்பட்டிருக்கக்கூடிய 87 அறிவிப்புகளையும் இந்த அவையிலே நான் படித்து அறிவித்ததாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பிலே பதிவு செய்திடவேண்டுமெனப் பேரவைத் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான் பதிலுரையில் அளித்துள்ள விளக்கங்களும், பதில்களும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்தி தரும் என்ற நம்பிக்கையுடன், பதிலுரையில் ஏதேனும் கோரிக்கைகள் விடுபட்டிருப்பின், அதனையும் இவ்வரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதையும் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வெட்டுத் தீர்மானத்தில், சிறப்பு மிக்க சென்னை



மாநகரத்திலே அமைந்திருக்கின்ற மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலைப் பற்றிப் பத்து நாட்களுக்கு முன்னாலேயே, அந்த உண்டியல் திருட்டுப் போனதைப்பற்றி கொடுத்திருந்தோம். அங்கே காவலர் இருந்தும் அது எப்படி திருட்டுப் போயிற்று? அது மட்டுமல்ல, நூற்றுக்கணக்கானவர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். விசாரணையின் நடவடிக்கை என்ன? இந்த அரசு என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதை உங்கள்மூலமாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு, கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கிறோம் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் செங்கோட்டையன் அவர்கள், இங்கே ஒரு விவரத்தைக் கேட்டிருக்கிறார்கள், மயிலைக் கோயிலிலே நடைபெற்ற அந்த உண்டியல் திருட்டைப்பற்றி. திருக்கோயில்களிலே திருட்டுகள் நடைபெறுவது என்பது, ஏதோ, இதுவரை நடைபெறாமல் இருந்து, இப்பொழுதுதான் நடைபெற்றது என்று அர்த்தம் அல்ல. இருந்தாலும்கூட, அவர்களும் பத்தாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்திருக்கிறார்கள். 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை மொத்தம் அந்த 5 ஆண்டு காலத்திலே 582 களவுகள் அங்கே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் திருக்கோயில்களிலே நடைபெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்) கேட்டதற்குச் சொல்கிறேன். எல்லோரும் அமைதியாக இருங்கள். நீங்கள் கேட்கும்போது அமைதியாக இருக்கிறோம் அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த அரசும், இந்தத் துறையும், அந்தத் திருட்டு நடைபெறக்கூடாத ஒன்று, நடைபெற்றிருக்கிறது, அதைக் கண்டுபிடிப்பதிலே காவல் துறையினுடைய ஒத்துழைப்போடு, காவல் துறையினிடத்திலே அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நான் மேலும் ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். அந்த உண்டியல் திருட்டு நடைபெற்ற இடத்தை நானும், துறையினுடைய அதிகாரிகளும் நேரில் சென்று பார்த்தோம். காவல் துறையினர் முழுமையாக அந்தப் பணியிலே ஈடுபட்டு. உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விசாரணை சம்பந்தப்பட்ட அந்த இடத்தில், நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அந்தப் பணத்தைத் கொள்ளையடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்தக் கொள்ளையன் வந்திருந்தால், 7,500 ரூபாயில் - 500 ரூபாய், 100 ரூபாய் நோட்டுகள் எல்லாம் அந்த உண்டியலிலே இருக்கிறது. அந்த உண்டியல் உடைக்கப்பட்டிருந்த இடத்தில் ரூ. 7,500/- ல் ரூ. 500/- நோட்டும், ரூ. 100/- நோட்டும் இருந்தது. ஆகவே, அந்தக் கொள்ளையன் வந்தது எந்த நோக்கத்தில் வந்தான் என்று தெரியவில்லை. ஒருவேளை சட்டமன்றத்தில் இதுபோன்ற பிரச்சினைகளைப் பேசவேண்டும் என்பதற்காக அங்கே வந்தானா என்பதும் தெரியவில்லை. இருந்தாலும், உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை தமிழ்நாடு காவல் துறை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்ற அந்தத் துறை நிச்சயமாக கண்டுபிடித்துத் தரும். அந்தத் தகவல் கிடைத்தவுடன் இந்தச் சபையிலே அந்தத் தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, எல்லாம் பேசி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எங்களது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர், அருமைத் தோழர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபொழுது குறிப்பிட்ட பழநியில் விவசாயிகளுக்குச் சொந்தமான 250 ஏக்கர் நிலம் தேவஸ்தானம் கேட்டுக்கொண்டதற்கிணங்க எடுக்க இருப்பதாக ஒரு செய்தி பரவிக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவோ இருக்கிறது. தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் இருக்கிறபொழுது, விவசாயிகளுக்குச் சொந்தமான விளை நிலங்களை எடுக்க வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய உறுப்பினர்கள் பலரும் திருக்கோயில்களுடைய நிலங்களை அதைப் பயன்படுத்தியவர்களுக்குத் தரவேண்டும், அதிலும் குறைந்த விலையில் தரவேண்டும், நீண்டகாலமாக அனுபவிக்கிறார்கள் என்றெல்லாம் உரிமை கொண்டாடினார்கள். அதற்கு நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி



நண்பர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனால், நான் அவர்களிடத்திலே ஒன்று கேட்டுக்கொள்வது என்னவென்றால், பழநி நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய திருக்கோயில்களில் வளர்ந்து வருகின்ற, பிரசித்திபெற்றத் திருக்கோயில். அந்தத் திருக்கோயிலுக்கு இப்பொழுது வரக்கூடிய பக்தர்களுடைய எண்ணிக்கை பன்மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஆகவே, வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் போன்றவற்றை நாம் செய்து கொடுக்க வேண்டியது ஒரு அரசினுடைய கடமை. அந்தவகையிலே, திருக்கோயிலைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல அவ்வளவு இடம் அதற்குத் தேவையில்லை. இப்பொழுது அந்தத் திருக்கோயில் நடவடிக்கைகளுக்குத் தேவையான இடங்கள் இருந்தாலும்கூட, எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு, சில இடங்கள் அந்தப் பகுதியிலே தேவைப்படுவது உண்மைதான். அதற்காக அவரே குறிப்பிட்டுச் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, திருக்கோயிலுக்குச் சொந்தமான இடமும் அந்தப் பகுதியிலே நிலங்கள்--நல்ல விளை நிலங்கள் இருக்கிறது. அதை பரிவர்த்தனை முறையிலே மாற்றிக்கொள்ளவும் செய்யலாம். அதேநேரத்தில், அவர்கள் என்ன தொகை--விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் என்ன தொகையை அவர்கள் எதிர்பார்க்கிறார்களோ அந்தத் தொகையைக் கொடுப்பதற்கும், பேச்சுவார்த்தை மூலம்தான் செய்யப்போகின்றோமே தவிர, இதிலே தடாலடியாக எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. ஆகவே, அந்தத் திருக்கோயிலுக்குத் தேவையான இடத்தைப் பெற்றுத் தருவதில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களும் அக்கறையோடு இருந்து அதைச் செய்து தரவேண்டும் என்று உங்கள்மூலமாக இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியில் கேளுங்கள். (குறுக்கீடுகள்) Labour Minister அமைச்சர் பேசி முடித்துவிட்டுமே! (குறுக்கீடுகள்) சரி, திரு. செந்தில் பாலாஜி, பேசி முடித்துவிட்டும். (குறுக்கீடுகள்) சரி, திரு. செந்தில் பாலாஜி, சொல்லுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கோயில் நிலங்களாகவும், மூக்கணாங்குறிச்சி என்ற ஊராட்சி, ஊராட்சி முழுவதுமுள்ள நிலங்களும் கோயில் நிலங்களாகும். அறநிலையத் துறைமூலம் பட்டியல் வெளியிடப்பட்டு, இன்று பல

மாதங்களாக பத்திரப் பதிவு நடைபெறாமல் உள்ளது. இதுகுறித்து அந்த இடங்களில் கட்டப்பட்ட வீடுகளுக்கு அரசின் சார்பில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதேபோல மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு போன்றவை வழங்கப்பட்டுள்ளன. எனவே, அந்த இடங்களில் பத்திரப் பதிவைச் செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் திருக்கோயிலுக்கு, அந்த நிலத்திற்காக யாரும் வாதாடுவதாகத் தெரியவில்லை. திருக்கோயில் நிலங்கள் தங்களுக்கு வேண்டும். பயன்படுத்தியவர்களுக்கு வேண்டும் என்றுதான் இங்கே கோரிக்கைகள் வைக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிடும்பொழுதுகூட திருக்கோயில் நிலம் என்று தெரியாமல் வாங்கிவிட்டோம்; ஆனால், இப்பொழுது அந்த நிலத்தைத் திருக்கோயிலுக்குச் சேர்க்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது என்று; தெரியாமல் வாங்கியதற்கு யார் அதற்குக் காரணம் என்பதையும், தெரியாமல் வாங்குவதற்குக் கோயில் நிலம்தான் கிடைத்ததா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். இருந்தாலும், அவற்றைப்பற்றி நாம் பேசித் தீர்த்துக்கொள்வோம். அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதும் அதைப்போன்றுதான். ஒரு திருக்கோயிலினுடைய வளர்ச்சிக்கு, அங்கு வரக்கூடிய பக்தர்களுடைய அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காக ஒரு சில ஏக்கர் நிலங்கள் தேவை என்று, உரிய விலையைக் கொடுத்தோ அல்லது பரிமாற்றம் முறையிலே அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று சொல்லியும்கூட, எந்தவிதமான பூர்வாங்க நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பாக வருகிறார்கள். ஆனால், திருக்கோயிலினுடைய நிலங்களை அவர்கள் அனுபவித்து, அதிலே வீடுகளைக் கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு உரிமையாக்கித் தரவேண்டும் என்பது எந்தவகையிலே நியாயம் என்பதையும், இருந்தாலும் சூழ்நிலை அடிப்படையில் அவற்றை மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்பது இந்த அரசினுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.



பிற்பகல் 1-45

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்றலைத் தீண்டியதில்லை, ஆனால் தீயைத் தாண்டியிருக்கிறேன்" என்கிற வைர வரிகளுக்கு இலக்கணமாய்த் திகழும், ஒப்பாரும், மிக்காருமில்லாத் தலைவர், அன்னையாய், தந்தையாய், மனித நேயத்தின் மொத்த வடிவமாய், மக்களை அரவணைத்து, வாழும் வள்ளுவராய், பெரியார், அண்ணா உருவில் தமிழை, தமிழ் இனத்தை கட்டிக்காத்து, 'வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்கின்ற வள்ளலாரின் வழி நின்று, அரசியலில் புதிய நெறி படைத்து, தமிழகத்தை வழி நடத்தி, மனித இனத்தில் புதிய மாற்றம் காணப் புறப்பட்ட புரட்சியாளரே; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் கருணையின் வடிவே, உன்னைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிகரற்ற ஆற்றல், நேர்மையின் குன்று, இனமான ஏந்தல் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களையும், உள்ளாட்சியில் இமாலயத் திட்டங்கள், ஏற்றமிகு முடிவுகள், ஒவ்வொரு மணித்துளியும் நாடு, மக்கள், மொழி, இனம் என சூளுரைத்து, 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' காண தலைவர் கலைஞர் அவர்களின் வழிநின்று, நாளும் பொழுதும் பாடுபட்டுவரும் என் அரசியல் வழிகாட்டி அண்ணன் தளபதி அவர்களையும் வணங்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களையும், மாண்புமிகு நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். இந்த மானியக் கோரிக்கையை மூன்றாவது முறையாக இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்ற வாய்ப்பினை எனக்கு நல்கிய தலைவர் கலைஞர் அவர்களின் காலடியில் என் நன்றி மலர்களைத் தூவி மீண்டும் பணிந்து வணங்குகிறேன்.

நாட்டின் தொழில் முன்னேற்றத்தையொட்டி தொழிலாளர் வாழ்வு வளம் பெறவும், தொழில் அமைதி நீடித்து நிலவிடவும், தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தினருக்கும் இடையே சுமூகமான உறவு பேணப்படுவதற்கும் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை உறுதுணையாக உள்ளது. மேலும், இத்துறை இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பை ஏற்படுத்தி, அவர்களது எதிர்கால

வாழ்விற்கு வழிகாட்டியாக இருந்து, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்கிடும் முக்கியத் துறைகளில் ஒன்றாக விளங்கி வருகிறது.

தொழிலாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, 1969 ஆம் ஆண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் முதல்முறையாக, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, தொழில், தொழிலாளர் நலம், கூட்டுறவு என்ற மூன்று துறைகளும் ஒரே துறையாக இருந்ததைப் பிரித்து, தொழிலாளர் நலத்திற்கென, தனித் துறையையும், தனி அமைச்சகத்தையும் உருவாக்கிய பெருமை உழைப்பவர் போற்றும் உத்தமத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களையேச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் எந்த நிலையிலும் தொழிலாளர்கள் வாழ்வு பாதிக்கப்படக்கூடாது; அவர்களது உழைப்பு சுரண்டப்படக்கூடாது; அவர்கள் அச்சுறுத்தப்படக்கூடாது; அவர்களுக்கு முறையாக சேர வேண்டிய பயன்கள், சலுகைகள், உடனடியாகப் போய்ச் சேர வேண்டும் என்பதிலும், உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதிலும், தொழிலாளர்களின் உற்றத் தோழனாக விளங்கும் தலைவர் கலைஞர் அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

தொழில் அமைதியைக் காத்து, தொழில் வளம் பெருக்கி, தொழிலாளர் நலன் மேம்படுத்த வேண்டும் என்பதை கலைஞர் அரசு குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்துறை மேற்கொள்ளும் சமரச பேச்சுவார்த்தைகள்மூலம் தொழில் உறவுகள் மேம்படுத்தப்படுகின்றன. கடந்த 2007 ஆம் ஆண்டில் 56 வேலைநிறுத்தங்கள் மற்றும் 11 கதவடைப்புகள் தொடர்பான தொழில் தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன. அந்தவகையில், தொழில் அமைதியைக் காப்பதற்கு, சட்டத்தில் அரசுக்கு வழங்கப்பட்ட சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்த இந்த அரசு தவறியதில்லை.

சுமார் 3,500 தொழிலாளர்கள் பணிபுரியும் PRICOL நிறுவனத்தில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் மற்றும் நிர்வாகத்தின் கதவடைப்பு, ஆர்கிட் கெமிகல்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட வேலை மறுப்பு, எம்.ஆர்.எப். நிறுவனம் அறிவித்த காலவரையற்ற கதவடைப்பு ஆகிய நிகழ்வுகளால் ஏற்பட்ட தொழில் அமைதியின்மையைத் தவிர்க்க, தொழில் தகராறுகள் சட்டப் பிரிவு 10(b) மற்றும் 10(3)-ன்கீழ் அரசுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி,



தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,371 தொழில் தாவாக்களில், தொழிலாளர் துறை அலுவலர்களால் சமரச ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; மற்றும் வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. இதிலிருந்து தொழிலாளர்களின் நலனைப் பேணிக்காக்கும் அரசாக, கலைஞர் அரசு திகழ்கிறது என்பதை அனைவரும் தெரிந்துகொள்ளலாம்.

ஆலையில் பணியாற்றும், தொழிலாளர்களின் நலன்களைக் காப்பதோடு மட்டுமல்லாமல், அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்விலும், ஒளிவிளக்கேற்றி அவர்களது வாழ்வை வளப்படுத்திய அரசு கலைஞருடைய அரசு.

தமிழகத்தில் உள்ள மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 91 சதவிகிதம் பேர் அமைப்புசாரா தொழிலாளர்கள் ஆவர். அமைப்புசாராத் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களுக்குச் சமூக பாதுகாப்பு அளிப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1973 ஆம் ஆண்டு ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவின் பரிந்துரையின்பேரில்தான், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சட்டம் உருவாக்கப்பட்டது. பின்னர் 17-3-1999 அன்று தலைவர் கலைஞர் அவர்கள் உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தைத் தொடங்கி வைத்தார்கள். 2000 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மேலும் 9 நல வாரியங்களை தனித்தனியாக உருவாக்கினார். அந்த வாரியங்கள் சிறப்பாகச் செயல்பட தலைவர் கலைஞர் அவர்கள் 1 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கித் தந்தார்.

பிற்பகல் 1-50

ஆனால், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற தொழிலாளர்கள் விரோத அ.தி.மு.க. அரசு 10 வாரியங்களை ஒன்றாக்கியதால், அமைப்புசாராத் தொழிலாளர்களின் வாழ்வு சீரழிக்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் மீண்டும் நல்லாட்சி அமைந்தவுடன், 10 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் தனித் தனியாக உருவாக்கப்பட்டன.

மண்பாண்டத் தொழிலாளர்கள், பொற்கொல்லர்கள் மற்றும் வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு புதியதாக மூன்று வாரியங்கள் உருவாக்கப்பட்டு, 14 வாரியங்களும் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

மேலும் இந்த வாரியங்கள் சிறப்பாகச் செயல்பட, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 14 கோடியே 68 ஆயிரத்து 213 ரூபாயை முதல்வர் கலைஞர் அவர்கள் ஒதுக்கித் தந்தார் என்பதையும், தொழிலாளர் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் கலைஞர் ஆட்சியில்தான் தொழிலாளர் நல வாரியங்கள் சிறப்பாகச் செயல்பட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

ஆனால் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் இந்த வாரியங்கள் செயல்பட எந்த நிதியையும் ஒதுக்கவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

முந்தைய 5 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டுமானம் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியங்களில் 12 இலட்சத்து 89 ஆயிரத்து 40 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்திருந்தனர்.

ஆனால், இரண்டு ஆண்டு கால கலைஞர் ஆட்சியில் மட்டும், 16 இலட்சத்து 99ஆயிரத்து 227 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 1 இலட்சத்து 31 ஆயிரத்து 142 தொழிலாளர்களுக்கு 36 கோடியே 43 இலட்சத்து 9 ஆயிரத்து 918 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

ஆனால், இரண்டு ஆண்டு கால தலைவர் கலைஞர் ஆட்சியில் மட்டும், 2 இலட்சத்து 71 ஆயிரத்து 964 தொழிலாளர்களுக்கு, 70 கோடியே 58 இலட்சத்து ஆயிரத்து 449 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலிருந்து நம்முடைய கலைஞருடைய இரண்டு ஆண்டு கால நல்லாட்சியில், பயன்பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட உதவித் தொகை இரண்டு மடங்காக உயர்ந்துள்ளதை இங்கே தெரிவித்துக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.



அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்கள். வருவாய்த் துறைக்குச் சில பணிகள் ஒப்படைப்பதுபற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெளிவான விளக்கம் இங்கே அளித்திருக்கிறார்கள். அதனால் அந்த விவரங்களையெல்லாம் இங்கே நான் கூற விரும்பவில்லை.

வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் உதவியோடு இந்தத் திட்டம் முன்னோடித் திட்ட அடிப்படையில் முதல் கட்டமாக காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசின் 25 சதவீதப் பங்களிப்பாக 5 கோடியே 24 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள், 1972 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக நல வாரியம் அமைக்க முதன்முதலில் சட்டம் கொண்டுவந்து, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தை ஏற்படுத்தினார்.

முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தத் தொழிலாளர் நல வாரியம், கலைஞர் ஆட்சியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

பஞ்சாலைத் தொழிலாளர்கள். பஞ்சாலைத் தொழிலாளர்கள்பற்றி நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசினார்கள். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு 1999 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்தபோதிலும், ஊதிய உயர்வு தொடர்பான வழக்கு சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தில் நடைபெற்று வருவதால், இப்பிரச்சினையில் அரசு நேரடியாகத் தலையிட இயலாத நிலை உள்ளது.

இருப்பினும், இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவுரையின்படி, தொடர்ந்து பஞ்சாலை நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி வருகிறோம்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனையின்படி, கடந்த 22-2-2008 அன்று மாண்புமிகு நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுடைய முன்னிலையிலே பஞ்சாலை நிர்வாகத்துடனும் மற்றும் தொழிற்சங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் பிரச்சினைகளான குறைந்தபட்ச ஊதியம், நிர்ணயம் செய்வது, ஊதிய உயர்வு, வேலை பழகுனர், பிரச்சினை போன்றவற்றை அரசு பரிசீலனை செய்து தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பான பிரச்சினை அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு அனுப்பப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முதல்வரின் ஆணையின்பேரில், அமைச்சர் என்ற முறையில், பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண நான் பலமுறை நிருவாகத்துடனும் தொழிற்சங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தினேன். மேலும், இரு தரப்பினரும் தங்களுக்குள் நேரடி பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு தொடர்பான பிரச்சினை நீண்டநாட்களாக நிலுவையில் இருந்து வருகிறது. அண்ணன் கோவை தங்கம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த நிலையில் 14-3-2008 அன்று குறைந்தபட்ட ஊதியம் நிர்ணயம் செய்து முதல்நிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த முதல்நிலை அறிவிக்கை உறுதி செய்யப்பட்ட பின்னர், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை ஊதியம் 78 ரூபாய் மற்றும் அகவிலைப்படி 23 ரூபாய் 52 பைசாவையும் சேர்த்து தின ஊதியமாக 101 ரூபாய் 52 பைசா வழங்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றிட, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு உறுதிபூண்டு, தமிழகத்தைக் குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கத் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், வீட்டுவேலை மற்றும் தொழில் நிறுவனங்களில் குழந்தைத்



தொழிலாளர் பணிபுரிவதைத் தடை செய்வதற்கான ஆணையைத் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளவும், பயிற்சிகள் அளிக்கவும், தமிழக அரசு 2007-2008 ஆம் ஆண்டிற்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் சிறப்பாகச் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்குவிக்க, பரிசுத் தொகை மற்றும் கேடயங்கள் தமிழக அரசால் வழங்கப்படவுள்ளது.

தலைவர் கலைஞர் அவர்களின் கடந்த இரண்டு ஆண்டுக் கால ஆட்சியில், 4,724 தொழிற்சாலைகள், தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. இதன்காரணமாக, 1,06,378 தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் சட்டத்தின் வரையறைக்குள் கொண்டு வரப்பட்டனர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளில், 17,583 கோடி ரூபாய் முதலீட்டில், 13 அயல்நாட்டுத் தொழில் நிறுவனங்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள்மூலம், 1,41,640 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

படித்து, வேலைதேடும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் பதிவு செய்து, வேலை அளிப்பவருக்குத் தேவைப்படும் காலிப் பணியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரை செய்யும் பணியை வேலைவாய்ப்புத் துறை செய்து வருகிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட பணி நியமனத் தடை ஆணையால், இனி அ.தி.மு.க. ஆட்சியில் வேலையே கிடைக்காது என எண்ணி, வேலைவாய்ப்பு அலுவலகத்தில், தங்களைப் பதிவு செய்துகொள்ளாமலும், ஏற்கெனவே பதிவு செய்தவர்கள் தங்கள் பதிவுகளைப் புதுப்பித்துக்கொள்ளாமலும் விட்டுவிட்டனர். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, கருணையுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள், புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு அறிவித்தச் சிறப்புச் சலுகையால், கடந்த இரண்டாண்டுகளில் 3,80,138 நபர்கள் விடுபட்டுப்போன பதிவுகளைப் புதுப்பித்துக் கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பணி நியமனத் தடை ஆணையால், வேதனையோடு இருந்த இளைஞர்களின் எதிர்காலத்தை

எண்ணி, அந்தத் தடையாணையை இரத்துச் செய்து, அவர்களின் இருண்ட வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைத்தவர் நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். இதன் பயனாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,81,371 நபர்கள் வேலை வாய்ப்பகம், கருணை அடிப்படை மற்றும் அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலமாக வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பல்வேறு துறைகளில் பணி நியமனங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கடந்த 2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக ஏங்கிக் காத்திருப்போரின் துயர் துடைக்கும் நோக்கில், அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தாயுள்ளம் கொண்ட நமது தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். 10 ஆம் வகுப்பு, பிளஸ்-2 மற்றும் பட்டம் பயின்றவர்களுக்கு மாதம் தலா ரூ.150/-, ரூ.200/-, ரூ.300/- என உதவித் தொகை அறிவிக்கப்பட்டு, கடந்த 31-03-2008 வரை 116 கோடியே 59 இலட்சத்து 23 ஆயிரத்து 454 ரூபாய், 3,53,488 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**"கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்"**
**"கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்"**

என்ற பழமொழிக்கேற்ப, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதுவாக, வேலைவாய்ப்புத் திறன் எய்தும் பயிற்சி 8 கோடி ரூபாய் செலவில், 50,000 இளைஞர்களுக்குப் பல்வேறு தொழிற் பிரிவின்கீழ் இலவசமாகத் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

"சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்பது நமது தலைவர் கலைஞர் அவர்களின் தாரக மந்திரம். கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட ஆண்டிமடம், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை போன்ற பின்தங்கிய பகுதிகளில் 8 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில், 3 புதிய தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகின்றன. சேலம், கிண்டி (மகளிர்), வேலூர், மதுரை, பேட்டை, கிண்டி, செங்கல்பட்டு, வட சென்னை, தஞ்சாவூர், கடலூர், கோயம்புத்தூர் (மகளிர்) மற்றும் தூத்துக்குடி ஆகிய 12 தொழிற் பயிற்சி நிலையங்கள் திறன்மிகு



மையங்களாக மேம்படுத்தப்பட்டு, பல்துறைத் தொழில்நுட்பப் பயிற்சி மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அதற்காகத் தலா 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பகங்களைக் கணினிமயமாக்கி ஒருங்கிணைக்கும் பணிக்காக, கலைஞர் அரசால் 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிவோருக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அயல்நாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் நலன் குறித்த விவரங்களைக் கவனிக்கவும், கண்காணிக்கவும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் ஒரு நிர்வாகப் பிரிவை ஏற்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள், 183 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகங்கள், 2 பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்மூலம் மருத்துவச் சேவை அளிக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் மொத்தம் உள்ள 640 மருத்துவர் பணியிடங்களில், 135 மருத்துவர் பணியிடங்கள் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிரப்பப்படாமல் காலியாக இருந்தன.

பிற்பகல் 2-00

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுபேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் காலியாக இருந்த 135 மருத்துவப் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, மருத்துவப் பணிகள் தொழிலாளர்களுக்குத் தொய்வின்றிச் செம்மையாக நடைபெற்று வருகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மூலம் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளையும், மாண்புமிகு தலைவர் கலைஞருடைய தலைமையிலான தொழிலாளர் நலன் காக்கும் இந்த அரசு

நிறைவேற்றியுள்ளது என்பதையும் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008-2009 ஆம் நிதியாண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், சில முக்கியத் திட்டங்களுக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தற்போது அனுமதி வழங்கியுள்ளார்கள். அதில் சில திட்டங்கள்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டடப் பராமரிப்பிற்காக 1 கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது. அதிலே, அம்பத்தூருக்கு மட்டும் 62 இலட்சம் ரூபாய் compound wall கட்டுவதற்காக செலவிடப்படும்.

கோயம்புத்தூர், சென்னை, திருச்சி, சிவகாசி, ஓசூர், வேலூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மருத்துவச் சாதனங்கள் வாங்குவதற்காக ரூபாய் 87 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

ஏற்கெனவே உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், புதிய மற்றும் கூடுதல் தொழிற் பயிற்சிப் பிரிவுகள் தொடங்க 50 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

தொழிலாளர் துறையின்மூலம் சாதாரண தராசுகளுக்குப் பதிலாக மின்னணு செயல்முறைத் திட்ட தராசுகளை வாங்குவதற்காக 28 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலோடு, துறையின் 23 அறிவிப்புகளில், முக்கிய சில அறிவிப்புகளை மட்டும் இங்கே நான் அறிவிக்க விரும்புகிறேன்.

தற்போது பட்ட மேல்படிப்பு, தொழிற்சார் கல்வி மற்றும் நிருவாகத் தகுதிக்கான பட்டம் பெற்றவர்கள், பதிவு செய்யவும், அவர்களை வேலைகளுக்காகப் பரிந்துரை செய்யவும், மாநில அளவில், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்களின் துயர் துடைக்கும் நோக்கில், தென் மாவட்டங்களில் உள்ள மனுதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மதுரையில் கிளை அலுவலகம் ஒன்று துவங்கப்படும்.

2001-2006 ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்கள், தங்கள் பதிவினைப் புதுப்பித்துக்கொள்ளவும், தங்களது முந்தைய பதிவு மூப்பினைத் திரும்பப் பெறவும், தாமதத்தைப் பொறுத்து,



சிறப்புப் புதுப்பித்தல் சலுகையினை அரசு வழங்கி ஆணையிட்டது. இதுவரை 3 இலட்சத்து 80 ஆயிரத்து 138 பதிவுதாரர்கள் பயன் பெற்றுள்ளனர். தற்போது 2007 ஆம் ஆண்டிற்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். இதனால் சுமார் 40 ஆயிரம் மனுதாரர்கள் பயன்பெறுவார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை அதிகரிக்கவும், மனித வளத்தை மேம்படுத்தவும், கட்டுமானக் கலைக் கழகம் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தொழிலாளர் துறையில் 10 வருடங்கள் பணி முடித்த 45 தின ஊதியக் காவலர்களின் பணி வரன்முறை செய்யப்படும்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயின்ற முன்னாள் குழந்தைத் தொழிலாளர்கள் 50 பேருக்கு, அவர்கள் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும்போது, மாதம் ரூ.250 வீதம் உதவித் தொகையாக இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றுவதற்காக, குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்பு முறையினைச் செயல்படுத்துவதற்கு, உணர்வூட்டல் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒப்புதலோடு, 26 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும்.

இண்டஸ் மற்றும் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் இயங்கும் 17 மாவட்டங்களில் உள்ள சிறப்புப் பள்ளிகளில் மாவட்டத்திற்கு ஓர் ஆசிரியர் வீதம் சிறந்த ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூபாய் 3000/-ம், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் சித்த மருத்துப் பிரிவுகள், சிவகாசி, ஓசூர் மற்றும் திருச்சி தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைகளில் தொடங்கப்படும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் யோகா மருத்துவப் பிரிவுகள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் தொடங்கப்படும்.

இன்றைக்கு இங்கே உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ஆர். சின்னசாமி, திரு. கே.திருநாவுக்கரசு, திரு. கோவை தங்கம், திரு. இ. வேல்முருகன், அண்ணன் திரு. சி. கோவிந்தசாமி, திரு. கே. உலகநாதன், திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. செ. குருசாமி, திரு. அருள் அன்பரசு மற்றும் திரு. ந. கணபதி போன்ற நம்முடைய உறுப்பினர்களெல்லாம் தொழிலாளர் நலத் துறை சார்பாக இன்றைக்கு இருக்கிற பிரச்சினைகள், கோரிக்கைகளையெல்லாம் இங்கே வைத்திருக்கிறார்கள். ஆக, மொத்தம் 385 வெட்டுத் தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன. அவற்றையெல்லாம் நாங்கள் படித்துப் பார்த்திருக்கிறோம். எதிர்காலத்தில், தேவைகளை நிறைவு செய்கிற பணிகளையெல்லாம் நிச்சயமாக முடித்துத் தருவோம் என்ற உறுதியை இந்த நேரத்திலே நான் தெரிவித்து, தொழிலாளர் நல மானியக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே அறிவிப்புகளில் அறிவிக்க விடுபட்ட மற்ற அறிவிப்புகளோடு அனைத்தையும் ● நான் இங்கே படித்ததாகக் கருதி, அதைப் பதிவு செய்துகொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, உறுப்பினர்கள், தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்) மணி 2-04 ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) சரி. திரு. கோவை தங்கம், சொல்லுங்கள்.

பிற்பகல் 2-05

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக சம்பளம் ரூபாய் 101-50 பைசா வழங்கி உதவிபுரிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுக்கும், இதற்கு உதவிபுரிந்த தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

● 349 முதல் 354 வரையிலான பக்கங்களில் இணைப்பு-IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது அந்த எஸ்டேட் தொழிலாளர்களுக்காக கூலி உயர்வு ரூபாய் 101-50 பைசா வழங்கப்படும் என்று சொன்னார்கள். அது எப்போது அமல்படுத்தப்படும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மற்றொன்று, பெரும்பாலான எஸ்டேட்டுகள் அரசுக்குச் சொந்தமான நிலங்களில் குத்தகைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அரசு நிலங்களாக இருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற நிலமற்று இருக்கின்ற தொழிலாளர்கள் அதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு எல்லாம் இருப்பதற்குக்கூட இடம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை அரசு கவனத்தில்கொண்டு அந்த நிலத்தை தொழிலாளர்களுக்கு மூன்று மூன்று சென்ட் நிலம் குடியிருப்பதற்கு அந்தந்தப் பகுதியிலே வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பள உயர்வு பிரச்சினையைப் பொறுத்தவரையிலே குறைந்தபட்ச ஊதியம் முதல் நிலை அறிக்கைதான் வெளியிடப்பட்டிருக்கிறது. 60 நாட்களுக்குப் பிறகுதான் அதை சட்டமாக--அதாவது objection எதுவும் இல்லையென்று சொன்னால், சட்டமாகப் பெற முடியும். ஆகவே 60 நாட்களுக்குப் பிறகுதான் இந்த அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இடம் கொடுப்பது என்பது தொழிலாளர் நலத் துறையில் கிடையாது. அது வருவாய்த் துறைக்கு சம்பந்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 404,73,03,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 3,32,91,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை. (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.



"இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.54,70,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,60,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (28-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

---

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2006-2007 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

123. மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

124. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய வரவு-செலவுத் திட்டச் செயலாக்கம், 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

125. மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

126. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

127. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சாதனைகள், 2006-2007, 2007-2008. (தமிழ்)

128. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)





## இணைப்பு I

(94 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### முன்னுரை

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தொழிலாளர் நலன், உற்பத்தி, தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம், சமூகப் பாதுகாப்பு குறித்த சமூகப் பொருளாதார தன்மைகளைப் பன்முக வழிகளில் கவனித்து வருகிறது. உயர் உற்பத்தியடையவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், தகுந்த பயிற்சிகள்மூலம் திறனை மேம்படுத்துதல் மிகவும் முக்கியமானதாகும். அமைப்பு மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள், பெண் தொழிலாளர்கள், அயல்நாட்டில் வேலை நாடி குடிபெயர்வோர் ஆகியோரின் நலனைப் பேணுதல், பாதுகாத்தல் மற்றும் வேலை தேடுவோர்க்கு பணி செய்தல் ஆகியவற்றில் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. மேற்கண்ட நோக்கங்களை அடைய இத்துறை, தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தியும் மற்றும் தொழிலாளர் நலன், சமூகப் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் பாதுகாப்பு, வேலைவாய்ப்புப் பணிகள், வாழ்க்கை தொழிற்பயிற்சி குறித்த திட்டங்களைச் செயல்படுத்தியும் வருகிறது.

இத்துறையின்கீழ் தொழிலாளர் ஆணையரகம், தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகம், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன், 12 தனி நல வாரியங்கள், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி) இயக்குநரகம், ஆகியவை இயங்கி வருகின்றன.

[2008 ஏப்ரல் 25

தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைத்தல், தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துதல், தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுதல், அமைப்பு மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை தொழிலாளர் ஆணையரகம் கவனித்து வருகிறது.

தொழிலாளர் மேம்பாடு, உடல் நலன், பாதுகாப்பு மற்றும் பயிற்சி ஆகியவற்றில் அக்கறை கொண்டு பல்வேறு சட்டங்களின்கீழ் அமலாக்கப் பணிகளை தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வகம் மேற்கொண்டு வருகிறது.

அனைத்து காப்பீட்டாளர்களுக்கும் மருத்துவ வசதிகள் வழங்குவதில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் அக்கறை கொண்டுள்ளது. இத்திட்டம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி ஆணையரகத்தில் இரு பிரிவுகள் உள்ளன. வேலைவாய்ப்புப் பிரிவு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இணைவமைவு மூலம் வேலைவாய்ப்புப் பணிகளைச் செய்து வருகிறது. பயிற்சிப் பிரிவு, அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற் பள்ளிகளில் வழங்கப்படும் தொழில்நுட்பப் பயிற்சிகளைக் கண்காணித்து வருகிறது.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் முக்கியமாக அயல் நாட்டு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதற்கு நிறுவப்பட்டது. மேலும், பொது மக்கள் தனியார் வேலைவாய்ப்பு முகவர்களால் சுரண்டப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள்.

மேற்கண்ட பல்வேறு அமைப்புகள் தொடர்பான திட்டங்கள் மற்றும் பிற தன்மைகள் குறித்து வரும் அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன.

2008-2009 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள புதிய திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 25]

**2008–2009 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட புதிய திட்டங்கள்**

| வ. எண் | திட்டங்களின் விவரம் | செலவினம் ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **தலைமைச் செயலகம்**<br>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் உபயோகத்திற்காக கணினிகள், மின் அச்சு இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். | 13.00 |
| 2 | **தொழிலாளர்**<br>தொழிலாளர் துறையின் மாவட்ட அளவிலான அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்குதல். | 7.50 |
| 3 | சாதாரண செயல்முறை திட்ட தராசுகளுக்கு பதிலாக மின்னணு செயல்முறை திட்ட தராசுகளை வழங்குதல். | 28.00 |
| 4 | **வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி**<br>25 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நீள மர பெஞ்சுகள் வழங்குதல். | 6.25 |
| 5 | 17 வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு பொது ஒலி பெருக்கி கொள்முதல் செய்தல். | 2.72 |
| 6 | 6 சிறப்பு அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு வழங்குதல். | 1.86 |
| 7 | மதுரை மண்டலத் துணை இயக்குநர் (வேலை வாய்ப்பு) அலுவலகத்திற்கு பழுதடைந்த ஜீப்பிற்கு பதிலாக புதிய ஜீப் கொள்முதல் செய்தல். | 7.00 |

| | | |
|---|---|---|
| 8 | அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டட பராமரிப்பு. | 100.00 |
| 9 | ஏற்கெனவே உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் புதிய / கூடுதல் அலகு தொழிற் பிரிவுகள் துவங்குதல். | 50.00 |
| 10 | ஆணையரகத் தேர்வுக் குழுமத்திற்கு கணினி மற்றும் பிரிண்டர் கொள்முதல் செய்தல். | 1.50 |
| 11 | ஐந்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஐ.எஸ்.ஓ. சான்றிதழ் பெறுதல். | 5.00 |
| 12 | **தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை**<br>20 தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு 20 கணினிகள், உதிரிபாகங்கள் மற்றும் மேஜை, நாற்காலிகளும் 6 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வர் அலுவலகங்களுக்கு பழைய கணினிகளுக்குப் பதிலாக புதிய கணினிகள் வாங்குதல் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் அகண்ட அலைவரிசை மோடத்துடன் கூடிய இணையவலை பொருத்துதல். | 13.72 |
| 13 | **மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)**<br>கோயம்புத்தூர், சென்னை, திருச்சி, சிவகாசி, ஒசூர், வேலூர் மற்றும் மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மருத்துவச் சாதனங்கள் வாங்குதல். | 87.40 |
| | மொத்தம் | 323.95 |



# அத்தியாயம்–I

## தொழிலாளர் துறை

*1.1.* தொழிலாளர் கொள்கை தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் பணிநிலைகளை அபிவிருத்தி செய்தல், மனித வள மேம்பாட்டினையும் நல்ல தொழில் உறவு வளர தகுந்த சூழ்நிலைகளை உருவாக்குதல், மாநிலத்தில் தொழில் அமைதியை நிலைநாட்டல், தொழிலாளர் நலச் சட்டங்களை சீரிய முறையில் அமல்படுத்துதல் மற்றும் அனைத்து தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு அளித்தல், ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். தொழிலாளர்கள் மாநிலத்தின் மிகச் சிறந்த உடமைகளில் ஒன்று என்பதை இந்த அரசு உணர்ந்துள்ளது. அவர்களது திறமை வீணாகக் கூடாது. தொழிலாளர் வர்க்கத்தில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் அமைப்புசாராத் தொழிலாளர்கள் என்பதையும், இவ்வமைப்புசாராத் தொழிலாளர்கள் இந்திய நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் பெரும் பங்காற்றி வருகின்றனர் என்பதையும் அரசு அறிந்துள்ளது. அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபட்டுள்ள எண்ணற்ற தொழிலாளர்களின் நலனைப் பேணிக் காக்க அரசு சிறப்பு அக்கறை செலுத்தி வருகிறது.

*1.2.* நுகர்வோராக இருக்கும் ஒவ்வொரு குடிமகனது நலனையும் இத்துறை அனைத்து வகையில் பேணிக் காத்து வருகிறது. நுகர்வோர் நலனைப் பாதுகாத்திடும் வகையில், *1985* ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமலாக்கம்) சட்டம் மற்றும் *1977* ஆம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருள்) விதிகள் ஆகியவற்றை தொழிலாளர் துறை தீவிரமாக அமல்படுத்தி வருகிறது.

*1.3.* அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்க *28* தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தும் உன்னதமான பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 25

1.4. இவ்வாறு தொழிலாளர் உறவை உறுதிபடுத்தவும், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்கள் நலன், நுகர்வோர் நலன் பாதுகாத்தல் மற்றும் பல்வேறு சட்டங்களை அமல்படுத்தும் நோக்கத்திற்காக தொழிலாளர் ஆணையர் தலைமையில் தொழிலாளர் துறை இயங்கி வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலுக்கென இம்மாநிலத்தில் கூடுதல் தொழிலாளர் ஆணையர் உள்ளார். தொழிலாளர் ஆணையருக்கு உதவி புரிய தலைமை-யிடத்தில் இரு தொழிலாளர் இணை ஆணையர்களும் மற்றும் மூன்று தொழிலாளர் துணை ஆணையர்களும் உள்ளனர். தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தவும், தொழிலாளர் நலன் காக்கவும் நான்கு மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் மற்றும் ஒன்பது வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் உள்ளனர்.

## அ. தொழில் உறவுகள்

1.5. நவீன தொழில் சமுதாயத்தில், தொழில் உறவு நுண்மையான மற்றும் பிரச்சினைகள் கலந்ததாக உள்ளது. அரசின், போற்றத்தக்க அணுகுமுறையின் காரணமாக தொழிலாளர் நலன் மேம்பாடு அடைந்துள்ளதோடு, வேகமான தொழில் வளர்ச்சியும், தொழில் உறவில் ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையும் இம்மாநிலத்தில் நிலவி வருகிறது. இந்த சமன்பாட்டு நிலை நிலவுவதை சீர்குலைக்கும் தொழிற்தகராறுகளை தீர்வு செய்வதில், தொழில்நுட்ப அறிவுடைய திறமையான பேச்சுவார்த்தைகள் மூலமாகவும், அடிப்படை யுக்திகளைக் கையாண்டு உரிய தருணத்தில் தலையிடுவதன் மூலமாகவும், தொழிலாளர் துறை அலுவலர்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றனர்.

1.6. இந்த ஆண்டில் நடைபெற்ற வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்புகளின் எண்ணிக்கை முறையே 56 மற்றும் 10 ஆகும். கடந்த ஆண்டின் நிலுவையையும் சேர்த்து 56 வேலைநிறுத்தங்கள் மற்றும் 11 கதவடைப்பு தொடர்பான தொழிற்தாவாக்கள் தீர்த்து வைக்கப்பட்டன.



2008 ஏப்ரல் 25]

1.7. இந்த ஆண்டில் தொழிற்தாவாக்களில் 5,444 தீர்த்து வைக்கப்பட்டன. 1947 ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன்கீழ் இந்த ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட முக்கிய தொழிற்தகராறுகள் பின்வருமாறு :

1. கேட்டர்பில்லர் இந்தியா பிரைவேட் லிட்., திருவள்ளூர்.
2. தமிழ்நாடு மின்சார வாரியம்
3. டன்லப் இந்தியா லிட், அம்பத்தூர்.
4. சைரன் ஜிப்பாஸ்டினர்ஸ், மானாமதுரை.

1.8. 2007 ஆம் ஆண்டில், போனஸ் தொடர்புடைய தொழிற்தாவாக்களை, தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் மிகுந்த கவனத்துடன் கையாண்டதன் விளைவாக போனஸ் தொடர்புடைய பெரும்பாலான பிரச்சினைகள் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டன.

### தொழிலாளர் நீதிமன்றங்கள்

1.9. தொழிலாளர் நீதிமன்றங்கள், 1947 ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்ட அட்டவணை இரண்டில் விவரிக்கப்பட்டுள்ள இனங்கள்மீது தீர்ப்பு வழங்குகின்றன. மாநிலத்தில் கீழ்க்கண்ட பத்து தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

| வ. எண் | தொழிலாளர் நீதிமன்றம் | ஆட்சி எல்லை |
|---|---|---|
| 1. | முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், சென்னை | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| 2. | கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், I சென்னை | |
| 3. | கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், II சென்னை | |

[2008 ஏப்ரல் 25

| | | |
|---|---|---|
| 4. | தொழிலாளர் நீதிமன்றம், வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் |
| 5. | தொழிலாளர் நீதிமன்றம், சேலம் | சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 6. | தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 7. | தொழிலாளர் நீதிமன்றம், கடலூர். | கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் |
| 8. | தொழிலாளர் நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் |
| 9. | தொழிலாளர் நீதிமன்றம், மதுரை. | மதுரை, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் தேனி மாவட்டங்கள் |
| 10. | தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி. | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |



2008 ஏப்ரல் 25]

சட்டப்படியான நிவாரணத்தை தொழிலாளர்கள் விரைந்து பெறுவதற்காக மேலும், கீழ்க்கண்ட இரண்டு தொழிலாளர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | தொழிலாளர் நீதிமன்றம் | ஆட்சி எல்லை |
|---|---|---|
| 1. | கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் – III, சென்னை | சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| 2. | கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் – II வேலூர். | வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் |

**தொழில் தீர்ப்பாயம்**

1.10. சென்னையைத் தலைமையிடமாகக்கொண்டு ஒரு தொழில் தீர்ப்பாயம் இயங்கி வருகின்றது. தொழிற்தகராறுகள் சட்டம், 1947 அட்டவணை இரண்டு மற்றும் மூன்றில் விவரிக்கப்பட்டுள்ள இனங்கள்மீது தீர்ப்பு வழங்குகிறது.

**மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்**

1.11. மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம், நிருவாகம், தொழிற்சங்கம், அரசு தரப்புப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு உயர்நிலைக் குழு ஆகும். இவ்வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் ஆவார். தொழிலாளர்களின் பொதுப் பிரச்சனைகள் மற்றும் தொழிலாளர் சட்ட விதி திருத்தங்கள் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் இவ்வாரியக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு, அரசுக்கு பரிந்துரைகளை வழங்கி வருகிறது.

**தொழில் நல்லுறவு பரிசுத் திட்டம்**

1.12. அரசு, தொழில் நல்லுறவினை மேம்படுத்தும் நோக்கில், தொழில் நல்லுறவை சிறப்பாகப் பேணும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கத்தினரை தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்க தொழில் நல்லுறவு பரிசுத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி

தலைமையில் அமைக்கப்பட்ட தொழில் நல்லுறவு பரிசுக் குழுவை திருத்தி அமைத்து, செயல்பட்டு வருகிறது.

## ஆ. அமலாக்கம்

1.13. தொழிற்தகராறுகளைத் தீர்த்து வைத்தல் மற்றும் சமரசம் செய்தல் ஆகிய பணிகளுடன் இத்துறை 28 தொழிற் சட்டங்களை அமலாக்கம் செய்து வருகிறது. தொழிலாளர் துறையில் உள்ள அமலாக்க இயந்திரம், தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் எடையளவுகள் சட்டங்கள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய சிறப்பாய்வுகள் மேற்கொண்டு வருகிறது. இச்சட்டங்களில் இடம் பெற்றுள்ள நோக்கங்களை அடைவதற்கு தொடர்புடைய தரப்பினர்களை சட்டத்திற்கு இணங்கச் செய்தல் அல்லது கடைப்பிடிக்காமைக்காக வழக்கு தொடர்வது அமலாக்க அலுவலர்களின் தலையாயக் கடமையாகும். இக்குறிக்கோளினை மனதில் கொண்டு, பல்வேறு தரப்பட்ட தொழிலாளர் நலச் சட்டங்களில் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளைத் தொழிலாளர்கள் அடைவதை உறுதி செய்ய இத்துறை சட்டப்பூர்வமாக செயல்பட்டு வருகிறது. பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள், வரவு செலவுத் திட்ட செயலாக்க குறிப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் துறையினால் அமல்படுத்தப்பட்டு வரும் முக்கிய தொழிலாளர் நலச் சட்டங்கள் பின்வருமாறு :—

### தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

1.14. இச்சட்டம் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்திட உருவாக்கப்பட்டதாகும். மாநிலத்தில் மொத்தம் 3,16,252 கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. 2007 ஆம் ஆண்டில், 2,90,902 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மொத்தம் 25,134 வழக்குகள் முடிக்கப்பட்டன. அவற்றுள் 24,755 வழக்குகளில் இணக்கக் கட்டணத் தொகையாக ரூ. 16,31,640/- துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 379 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு, ரூ.29,610/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.



133 மேல்முறையீட்டு மனுக்கள் மேல்முறையீட்டு அலுவலர்களால் முடிக்கப்பட்டன.

### தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

1.15. இச்சட்டம் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்திட உருவாக்கப்பட்டதாகும். மாநிலத்தில் மொத்தம் 27,571 உணவு நிறுவனங்கள் உள்ளன. 2007 ஆம் ஆண்டில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து ரூ.10,94,858/- உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 40,781 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2,675 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ. 2,06,550/- இணக்கக் கட்டணத் தொகையாக துறையினால் வசூலிக்கப்பட்டுள்ளது. 215 வழக்குகளில் நீதிமன்றங்களால் ரூ. 12,150/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

1.16. இம்மாநிலத்திலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள் அளித்திட இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில், மொத்தம் 98,139 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 6,787 வழக்குகள் முடிக்கப்பட்டு, அவற்றில் 6,180 வழக்குகளில் ரூ. 3,77,710/- இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களால் முடிக்கப்பட்ட 607 வழக்குகளில் ரூ.6,050/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

### சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936

1.17. வேலையளிப்போர் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை உரிய காலத்தில் வழங்கவும், வழங்கப்படும் ஊதியத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்களை செய்வதைத் தடுத்திடும் வகையில் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில், மொத்தம் 31,205 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்களை விசாரித்து ஆணைகள் வழங்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக வட்டாரத் தொழிலாளர் துணை

ஆணையர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டில், 99 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ. 9,26,05,590/- ஊதியமாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

**ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970**

*1.18.* ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை வரைமுறைப்படுத்தவும், சில தொழில்களில் அவற்றின் தன்மையைப் பொறுத்து நீக்கம் செய்திடும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில், 3,309 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 390 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 487 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதிவுக் கட்டணம் மற்றும் உரிமக் கட்டணமாக மொத்தம் ரூ.4,71,105/- பெறப்பட்டுள்ளது.

*1.19.* இச்சட்டத்தைச் செயல்படுத்துவதால் எழக்கூடிய பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை வழங்க தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் என்ற முத்தரப்புக் குழு செயல்படுகிறது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981**

*1.20.* தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்குவதே இச்சட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். 2007 ஆம் ஆண்டில் 2,171 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன, இச்சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட 890 மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 208 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961**

*1.21.* ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் ஒவ்வொரு மோட்டார் நிறுவன உரிமையாளரும்



இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வேண்டும். 2007 ஆம் ஆண்டின் இறுதியில், பதிவு செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் எண்ணிக்கை 2,030 ஆகும். அதில் 1,16,320 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ரூ. 3,72,086/- பதிவுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 5,026 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 286 வழக்குகள் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டு, ரூ.1,19,650/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

**உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் இதர பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955**

*1.22.* இச்சட்டம் உழைக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை நிறுவனங்களின் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பை முறைப்படுத்திட இயற்றப்பட்டதாகும். இத்தொழிலாளர்களுக்கான மணிசானா ஊதியக் குழு அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்துவதை கண்காணிக்கும் பொருட்டு, அரசு ஒரு முத்தரப்புக் குழுவினை அமைத்துள்ளது. இச்சட்டத்தின்கீழ் 2007 ஆம் ஆண்டில், அமலாக்க அலுவலர்களால் 113 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தொழில் வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946**

*1.23.* இச்சட்டம் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித்தன்மைகள் குறித்து வேலையளிப்போர் அவர்களின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தெரிவிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டில், 369 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**தொழிற்சங்கங்கள் சட்டம், 1926**

*1.24.* தொழிற்சங்கங்கள் பதிவு செய்தல் குறித்து இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மண்டல தொழிலாளர் துணை ஆணையர்கள் தொழிற்சங்கங்களை பதிவு செய்யும் கூடுதல் பதிவாளராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டில், 812 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.1,02,900/- பதிவுக்

கட்டணமாகவும், ரூ.5,250/- திருத்தக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளது. இதுவரை 10,819 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

1.25. தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள் தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் வகை செய்கிறது. ஐந்து எக்டேர் மற்றும் அதற்கு மேல் உள்ள 15 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் காபி, இரப்பர், தேயிலை மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு வசதி, தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இலவச மருத்துவ வசதி, பாதுகாப்பு உடை, குடிநீர் வழங்கிட இச்சட்டத்தில் வழிவகை உள்ளது.

1.26. தோட்டத் தொழிலாளர்களின் வீட்டு வசதி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்பொருட்டு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு நிருவாகம், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசுத்தரப்பு பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமுறையான தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் என்ற முத்தரப்புக் குழு செயல்பட்டு வருகிறது.

1.27. தமிழகத்திலுள்ள மொத்தத் தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 68,285 எக்டேர் ஆகும். தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 76,813 ஆகும். (29,711 ஆண்கள் மற்றும் 47,102 பெண்கள்) பதிவு பெற்ற மொத்த தோட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 688 ஆகும். 2007 ஆம் ஆண்டில் 4,604 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் 156 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, ரூ.44,550/- அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

1.28. தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளின் அமலாக்கத்திலுள்ள பிரச்சினைகளை களையும் பொருட்டு, தொழிலாளர் ஆணையர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு என்ற முத்தரப்புக் குழு செயல்பட்டு வருகிறது.





## இ. குறைந்தபட்ச ஊதியம்

1.29. 1948 ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், ஒரு முறை அல்லது அறிவிக்கை முறையினை பின்பற்றி குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை அரசு நிர்ணயம் / மறுநிர்ணயம் செய்ய வேண்டும். இச்சட்டத்தின்கீழ் அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில்களுக்கு நான்காண்டுகளுக்கொருமுறை குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை மறுநிர்ணயம் செய்யலாமெனவும் இதற்கான நடவடிக்கைகளை முதல் நிர்ணயம் / கடைசி மறு நிர்ணயம் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிந்தவுடன் மேற்கொள்ள வேண்டுமெனவும், அரசு ஆணையிட்டுள்ளது. விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டும் பொருட்டு, குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்யும்பொழுது அடிப்படை ஊதியத்துடன், விலைவாசிக் குறியீட்டுடன் இணைக்கப்பட்ட மாறும் அகவிலைப்படியும் அரசு நிர்ணயம் செய்கிறது.

1.30. 1-09-2007 முதல் எந்தவொரு தொழிற்சாலையிலும் வழங்கப்படும் தின ஊதியம், தேசிய குறைந்த அளவு ஊதியம் ரூ.80/-க்கு குறையாமல் இருக்க வேண்டும் என்பதே மத்திய அரசின் தற்போதைய கொள்கையாகும்.

1.31. குறைந்த பட்ச ஊதிய சட்ட அட்டவணையில் 91 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பஞ்சாலைத் தொழில் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணை பகுதி-I-ல் சேர்க்கப்பட்டுள்ளது.

1.32. 2007 ஆம் ஆண்டில், கீழே கொடுக்கப்பட்ட தொழில் இனங்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. தோல் பதனிடுதல் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்
2. புகையிலை (பீடி தயாரித்தல் உட்பட) உற்பத்தியில் பீடி சுருட்டும் தொழிலாளர்களுக்கு உறுதி செய்யும் காலவீத ஊதியம் வழங்குதல்
3. செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழில்
4. பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்

[2008 ஏப்ரல் 25

1.33. 2007 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்ய அரசால் முதனிலை அறிவிக்கைகள் வெளியிடப்படுள்ளன.

1. புகையிலை (பீடி சுருட்டும்) தயாரிப்பு தொழில்.
2. பாலிதீன் பதப்படுத்தப்பட்ட ஃபோம் வகைகள் மற்றும் பிளாஸ்டிக் தயாரிப்பு தொழில்
3. உணவு பதப்படுத்தும் தொழில்
4. கயிறு தயாரிக்கும் தொழில்
5. செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில்
6. புகையிலை தயாரிப்பு (மூக்குப் பொடி தொழில்)
7. அரிசி ஆலைகள், மாவு ஆலைகள் மற்றும் பருப்பு ஆலைகள்
8. வாசனை மற்றும் மெல்லும் புகையிலை தயாரிப்பு தொழில்
9. ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி
10. காப்பிக்கொட்டை பதப்படுத்துதல்
11. பொது மோட்டார் போக்குவரத்து
12. சோப்பு தயாரித்தல்
13. அப்பளம் தயாரித்தல்
14. மர ஆலைத் தொழில்
15. பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்

1.34. 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டப் பிரிவு 20(1)-ன்படி, கேட்பு மனுக்களை விசாரணை செய்ய 9 மண்டல தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரம் பெற்றவர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 1,044 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு; மொத்தம் ரூ.13,99,63,944/- கேட்பு மனுதாரர்களுக்கு ஊதியமாக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. இத்துறையின் அமலாக்க அலுவலர்களால் 1,22,311 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 25]

## ஈ. சமூகப் பாதுகாப்பு

தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக கீழ்க்கண்ட சட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### பணிக்கொடை பட்டுவாடாச் சட்டம், 1972

1.35. தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது அல்லது ஐந்து வருடம் தொடர்ச்சியாக பணிபுரிந்த தொழிலாளர்கள் பணிமுடிப்பு செய்யப்படும்போது, பணிக்கொடை வழங்கிட இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இறப்பு அல்லது விபத்தினால் ஊனம் அல்லது நோய் ஆகியவற்றிற்கும் பணிக்கொடை வழங்கப்படுகிறது. இச்சட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ரூ.3.5 இலட்சம் பணிக்கொடை வழங்கப்படுகிறது.

1.36. மண்டல தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். 2007 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 2,701 மனுக்களில் 1,024 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.1,43,81,554/- மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. 127 மேல்முறையீட்டு மனுக்கள் மேல்முறையீட்டு அலுவலர்களால் முடிக்கப்பட்டன.

### போனஸ் பட்டுவாடாச் சட்டம், 1965

1.37. இச்சட்டம், 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும். போனஸ் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்கள் எண்ணிக்கை, 10-க்குக் குறையும் நேர்வுகளிலும், நிறுவனங்கள் தொடர்ந்து போனஸ் வழங்க வேண்டும். நஷ்டத்தில் இயங்கினாலும் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச போனஸ் 8.33 % வழங்க வேண்டும். இச்சட்டம் ஒரு நிறுவனம் இலாபத்தில் இயங்கும்போது கணக்கிட்டு வழங்கப்பட வேண்டிய

[2008 ஏப்ரல் 25

போனஸ் குறித்த வரைமுறை ஒன்றை வகுத்துள்ளது. ஒவ்வொரு தொழிலாளியின் வருமானமும் மாதமொன்றுக்கு ரூ. 3,500/-க்கு மேற்படாமல் இருந்தால் மற்றும் ஓராண்டிற்கு 30 நாட்களுக்கு குறையாமல் பணிபுரிந்திருந்தால் அவர் போனஸ் பெறத் தகுதியுடையவர் ஆவார். தற்போது ஊதிய உச்ச வரம்பு மாதம் ரூ.10,000/- என உயர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் மாதம் ரூ.3,500/- எனக் கணக்கிடப்பட்டு போனஸ் வழங்கப்படுகிறது. இச்சட்டத்தின்கீழ் அதிகபட்சமாக வழங்கப்பட வேண்டிய போனஸ் 20% ஆகும்.

### மகப்பேறு நலச் சட்டம், 1961

*1.38.* மகப்பேறு நலச் சட்டம், *1961*, மகப்பேறு காலத்தில் பெண் தொழிலாளர்களின் பணி நிலையினை முறைப்படுத்துகிறது. இச்சட்டத்தின்படி, மகப்பேறு காலங்களில் குழந்தைப் பேற்றிற்காக 12 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அதாவது குழந்தை பிறப்பதற்கு முன் 6 வாரங்களும், குழந்தை பிறந்த பிறகு 6 வாரங்களும் மருத்துவச் சான்றிதழின் பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு, கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு முதலிய சலுகைகள் உள்ளன. மேலும், பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக அளிக்கவில்லையெனில், மருத்துவப் போனஸ் வழங்க சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில், 8,524 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 8 வழக்குகள் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.18,000/- கேட்பு மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

### சம ஊதியச் சட்டம், 1976

*1.39.* சம ஊதியச் சட்டம், *1976*, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கவும் மற்றும் வேலைவாய்ப்புத் தொடர்புடைய இனங்களில் பாலியலின் அடிப்படையிலான வேற்றுமையைத் தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்டதாகும். தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசுச் செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்டு சம ஊதிய ஆலோசனைக் குழு என்ற முத்தரப்புக் குழு செயல்பட்டு வருகிறது. 2007 ஆம் ஆண்டில், 11,602 ஆய்வுகள்



2008 ஏப்ரல் 25]

அமலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 12 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ. 1,610/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

*1.40.* தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம், *1981*, தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு, விசாரணை நிலுவையில் இருக்கும் காலத்தில் வேலையளிப்பவர் சட்டப்படி பிழைப்பூதியம் வழங்க வேண்டி இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மண்டல தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் அலுவலர்களாகவும், மண்டல தொழிலாளர் துணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ் 285 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.31,70,701/- கேட்பு மனுதாரர்களுக்கு பட்டுவாடா செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 21 மேல்முறையீட்டு மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

### வேலையாள் இழப்பீட்டுச் சட்டம், 1923

*1.41.* தொழிலாளர்கள் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்படும் நேர்வில், அவர்கள் வருவாய் ஈட்டும் தகுதி இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. வட்டார தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின்கீழ் பெறப்படும் மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு முடிவெடுக்க ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

*1.42.* தீர்ப்பின்படியான இழப்பீட்டுத் தொகை வேலையளிப்பவர்களால் வைப்பீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட இழப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும். இழப்பீட்டுத் தொகை வேலையளிப்பவர்களால் வைப்பீடு செய்யாத நேர்வுகளில் வருவாய் வசூல் சட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க தொழிலாளர் துணை ஆணையர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர். 2007 ஆம் ஆண்டில், 2,868 வழக்குகள் முடிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு மொத்தம் ரூ.22,39,36,549/-இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 25

## உ. பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்

### பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966

1.43. பொருளாதாரத்தில் நலிவுற்ற பீடித் தொழிலாளர்களின் நலனில் இத்துறை அக்கறை கொண்டு, நலச் சட்டங்கள் வாயிலாக பல்வேறு பயன்களை வழங்கி வருகிறது. தமிழகத்தில் உள்ள 1989 பீடி நிறுவனங்களில், 8,991 தொழிலகத் தொழிலாளர்களும், 2,36,839 வீட்டுத் தொழிலாளர்களும் உள்ளனர். 2007 ஆம் ஆண்டில் 4,411 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 641 வழக்குகளில், 370 வழக்குகள் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டு, ரூ. 88,050/- அபராதத் தொகை விதிக்கப்பட்டது. உரிமக் கட்டணமாக ரூ. 1,65,567/- வசூல் செய்யப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்

1.44. தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார தரத்தை உயர்த்தும் நோக்கத்தில் மத்திய அரசின் "திருத்திய ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம், 2007" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசால் 1-4-2007 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஒரு வீடு கட்டுவதற்கான செலவு ரூ. 45,000/-. இதில் மத்திய அரசின் மானியத் தொகை ரூ. 40,000/-. மாநில அரசு ரூ. 5,000/-த்தை பயனீட்டாளர் பங்காக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடைய பீடித் தொழிலாளர்கள் சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இத்திட்டத்தின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் / மாநில அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக மீண்டும் மத்திய அரசின் நல ஆணையர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பயனீட்டாளர்கள் அவர்களின் வீட்டினை தாங்களே கட்டிக் கொள்ள வேண்டும். மத்திய அரசின் மானியத் தொகை, அவர்களுக்கு நல ஆணையரால் தவணை முறையில் வழங்கப்படும்.

1.45. 2007-2008 ஆம் ஆண்டு, திருத்திய ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்களின் வீட்டு வசதித் திட்டம், 2007-ன்கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் 223 வீடுகள் கட்ட மத்திய அரசு நிர்வாக ஒப்புதல்



2008 ஏப்ரல் 25]

அளித்துள்ளது. மாநில அரசு வீடு ஒன்றுக்கு ரூபாய் 5,000/- வீதம் 223 பயனீட்டாளர்கள் பயனடையும் வகையில் ரூ. 11,15,000/- மானியமாக வழங்கியுள்ளது.

## ஊ. எடைகள் மற்றும் அளவைகள்

### எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985

1.46. தமிழ்நாடு மாநில முழுமைக்கும், தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்), சென்னை அவர்கள் எடைகள் மற்றும் அளவைகள் கட்டுப்பாட்டு அலுவலராக அறிவிக்கப்பட்டுள்ளார். எடைகள் மற்றும் அளவைகள் தரம் (அமலாக்கம்) சட்டம், 1985 மற்றும் எடைகள் மற்றும் அளவைகள் தரம் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977 ஆகியவற்றை அமலாக்கம் செய்வது எடைகள் மற்றும் அளவைகள் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் அவரது களப் பணியாளர்களின் கடமையாகும். தரப்படுத்தப்படாத மற்றும் முத்திரையிடாத எடைகள் மற்றும் அளவைகள், தொழில் அல்லது வர்த்தகப் பிரிவில் பயன்படுத்த தடை செய்யப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில் ரூ. 2,62,400/- உரிமக் கட்டணமாகவும், ரூ. 11,46,95,403/- முத்திரைக் கட்டணமாகவும் வசூல் செய்யப்பட்டுள்ளது. 3,84,559 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 18,478 வழக்குகள் முடிக்கப்பட்டன. இவற்றில் 18,424 வழக்குகளில் ரூ. 37,94,267/- இணக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. 54 வழக்குகள் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டு, ரூ. 47,500/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

### எடைகள் மற்றும் அளவைகள் தரம் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 1977

1.47. 2007 ஆம் ஆண்டில் ரூ.3,37,500/- பதிவுக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆய்வர்களால் 1,42,240 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 9,555 நிறுவனங்களில் காணப்பட்ட முரண்பாடுகளுக்காக இணக்கக் கட்டணமாக ரூ.18,48,622/- வசூலிக்கப்பட்டுள்ளது. எட்டு (8) வழக்குகள் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டு, ரூ.9,300/- அபராதத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 25

# அத்தியாயம்—II

## தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

2.1. தமிழ்நாடு அரசு குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதில் முழுமையான முனைப்புடனும் தீவிர ஈடுபாட்டுடனும் முறையாகவும், திறமையாகவும் செயல்பட்டு குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றது.

## குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான செயல் திட்டம்

2.2. குழந்தைத் தொழிலாளர் முறையினை எல்லா பணிகளிலிருந்தும் அகற்றுதலை குறிக்கோளாகக் கொண்டு மாநில செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாநில செயல் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிதல்/ கணக்கெடுத்தல், மீட்டு மறுவாழ்வளித்து முறையான வழிமுறைக்குக் கொண்டு வருதல் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. செயல்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கல்வி அம்சம், குழந்தைத் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் சட்டங்களை அமலாக்கம் செய்தல், பல்வேறு வறுமை ஒழிப்பு நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து வழங்குதல் ஆகியவை அடங்கியுள்ளன.

2.3. குழந்தைத் தொழிலாளர்களுக்கான செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்பொருட்டு 2003 முதல் 2007 வரையில் ஆண்டுக்கு ரூபாய் இருபத்தைந்து இலட்சம் என ரூ. 1.25 கோடியினை அரசு மானியமாக ஒதுக்கீடு செய்து மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கத்தினை உருவாக்கியுள்ளது. மேற்கூறப்பட்ட சங்கமானது, சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சித் திட்டங்களுக்காகவும் செலவிடப்படுகிறது. மேலும், குழந்தைத் தொழிலாளர் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் 2007 ஆம் ஆண்டில் அரசு ரூ. 50 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது.



2008 ஏப்ரல் 25]

2.4. ஒவ்வொரு மாவட்டமும் தங்கள் மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்காக ஒரு செயல்திட்டத்தினை வகுக்கிறது. அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வளிக்க முனைப்புடன் செயல்படுகின்றனர்.

2.5. அரசு, குழந்தைத் தொழிலாளர் அற்ற மாவட்டம் என அறிவிக்க வழிமுறைகள் வெளியிட்டுள்ளது.

2.6. சிவகங்கை, இராமநாதபுரம், தஞ்சாவூர், பெரம்பலூர், கடலூர், புதுக்கோட்டை, விழுப்புரம், மதுரை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்கள் தங்களது மாவட்டத்தினை குழந்தைத் தொழிலாளர்கள் இல்லாத மாவட்டம் என் அறிவிப்பு செய்ய கருத்துரு அனுப்பியிருந்தனர். அரசு வெளியிட்டுள்ள வழிமுறைகளை முறையாகப் பின்பற்றி இம்மாவட்டங்களைக் குழந்தைத் தொழிலாளர்கள் அற்ற மாவட்டங்களாக அறிவிக்குமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

## சிறப்பாகப் பணியாற்றும் உள்ளாட்சிகளுக்கு விருது வழங்குதல்

2.7. குழந்தைத் தொழிலாளர்களை அகற்றுதலில் சிறப்பாகப் பணியாற்றும் உள்ளாட்சிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்க அரசு முடிவு செய்து அதற்கான ஆணை வெளியிட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களை அகற்றுதலில் சிறப்பாகப் பணியாற்றுகின்ற உள்ளாட்சிகளைத் தேர்வு செய்வதற்கான அளவுகோல் மற்றும் வழிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## சட்ட அமலாக்கம்

2.8. குழந்தைத் தொழிலாளர்களை அகற்றும் செயல்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக சட்ட அமலாக்கம் உள்ளது. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடை செய்யும் பின்வரும் பல்வேறு சட்டங்களை தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை ஆய்வர்கள் அமல்படுத்தி வருகின்றனர்:

- குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986.

[2008 ஏப்ரல் 25

- தொழிற்சாலைகள் சட்டம், 1948.
- மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961.
- பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1966.
- தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947.

2.9. 2007 ஆம் ஆண்டில் 809 வழக்குகள் குழந்தைத் தொழிலாளர் சட்டம் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களின்கீழ் தொடரப்பட்டு அவற்றில் 231 வழக்குகளில் சிறைத் தண்டனை, அபராதம் ரூ. 1,98,95,757/- விதிக்கப்பட்டது.

**அபாயகரத் தொழில்களில் குழந்தைத் தொழிலாளர் சட்ட அமலாக்கம் செய்யும் மாவட்டக் குழு**

2.10. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அபாயகரத் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிய கால நிர்ணயம் செய்யப்பட்டு அவர்களை அத்தொழிலிலிருந்து விடுவித்து மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வர் இம்மாவட்டக் குழுக்களின் உறுப்பினர் செயலர் ஆவார். அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அபாயகரத் தொழில்களாகப் பதிவு செய்யப்பட்ட / பதிவு செய்யப்படாத நிறுவனங்களை ஆய்வுக் குழுக்கள் ஆய்வு செய்கின்றன.

2.11. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்காக அமைக்கப்பட்ட 11-10-2006 அன்று நடைபெற்ற மாநில அதிகாரக் கூட்டத்தில், குழந்தைத் தொழிலாளர்களை அகற்ற வருவாய்க் கோட்ட அலுவலர்களை பொறுப்பாக்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி அனைத்து மாவட்டங்களிலும் வருவாய்க் கோட்ட அலுவலர்கள், குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து மறுவாழ்வு அளிக்க திடீர் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.



2008 ஏப்ரல் 25]

**மாவட்ட அளவிலான தடுப்புப் படை**

2.12. மாவட்ட அளவிலான தடுப்புப் படை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து மீட்டு மறுவாழ்வு அளிக்கின்றது. நடைமுறையில் உள்ள மாவட்ட அளவிலான அமலாக்க குழுக்களுக்குப் பதிலாக இது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தடுப்புப் படையினில் இரு அரசு சார்பல்லாத பிரதிநிதிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**வீட்டு வேலை மற்றும் உணவகங்களில் குழந்தைத் தொழிலினை தடை செய்து அறிவிக்கை**

2.13. வீட்டு வேலை மற்றும் உணவகங்களில் குழந்தைத் தொழிலினை தடை செய்து 10-10-2006 அன்று மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதன்படி வீட்டு வேலை மற்றும் உணவகங்களில் குழந்தைத் தொழிலினை அகற்றும் செயல்திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

2.14. மேற்கூறப்பட்ட செயல்திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் வீட்டு வேலை மற்றும் உணவகங்களில் குழந்தைத் தொழிலாளர்களை அகற்ற செயல்திட்டங்களைத் தீட்டியுள்ளனர்.
- மாவட்டங்களில் உள்ள எல்லா அடுக்கு மாடிக் குடியிருப்பு உரிமையாளர் சங்கங்கள், உணவக உரிமையாளர் சங்கங்கள் ஆகியோர்களுடன் இதன் முக்கியத்துவத்தின் கூர்உணர்வினை ஏற்படுத்த, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும் மாநில அளவில் தொழிலாளர் ஆணையரும் கூட்டங்களை நடத்தினர்.
- விளம்பர போர்டுகள், அறிவிப்புகள், மின்சார இரயில்களில் வரைபடங்கள், உள்ளூர் தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் ஆகியவை செய்யப்பட்டன.

[2008 ஏப்ரல் 25

- மாநில அளவில் உரிமையாளர்களுக்கென கருத்துக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- அரசு சார்பில்லாத நிறுவனங்கள், வேலையளிப்போர் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், குழந்தைத் தொழிலாளர்கள் முறையை அகற்றுவதற்காக ஒத்துழைக்க வேண்டி 14-6-2007 அன்று சென்னையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

- வீட்டு வேலை மற்றும் உணவகங்களில், குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றவும் மற்றும் இச்செயல்பாட்டினை நடைமுறைப்படுத்துதல் குறித்தும் அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர்கள், உணவக உரிமையாளர்கள் மற்றும் வேலையளிப்போர் சங்கங்கள் ஆகியவற்றுடன் 23-11-2007 அன்று விவாதிக்கப்பட்டது.

- வீட்டு வேலை தொழிலாளர்களின் நலனுக்காக தனியாக நல வாரியம் அமைக்கப்பட்டு, 25,999 வீட்டு வேலைத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு ரூ. 80,77,706/-க்கு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குழந்தைத் தொழிலாளர்கள் இல்லை என அடுக்குமாடி உரிமையாளர் சங்கம் மூலம் சான்று பெறுவதை தொழிலாளர் துறை கண்காணிக்கின்றது.

**விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

2.15. ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 12 ஆம் நாள் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கென உறுதிமொழி வெளியிடப்பட்டு அனைத்து அரசுத் துறைகள், தொழிற்சாலைகள், பள்ளிகள் உறுதி எடுத்துக்கொள்கின்றன.

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், புத்தக வெளியீடுகள், சுவரொட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன. பேருந்துகளில் விளம்பரங்கள் மற்றும் பொது இடங்களில் போர்டுகள் வைக்கப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 25]

- சென்னை சென்ட்ரலிலிருந்து புறப்படும் இரு மின்சார இரயில்களில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு செய்திகள் எழுதப்பட்டுள்ளன.

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு உருவாக்கிய "தொலைந்த குழந்தைப் பருவம்" என்ற தமிழ்த் திரைப்படம் வெளியிடப்பட்டது.

- 12-06-2007 அன்று குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம் தமிழகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டது. சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இன்டஸ் திட்டத்தின்மூலம் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு குறித்த பொருட்காட்சியும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. முறையான கல்வி பயின்ற பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பினில் அதிக மதிப்பெண் பெற்ற குழந்தைத் தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

- 14-11-2007 அன்று தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சுவரினில் "குழந்தை உரிமைகள்" படங்களை மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களே வரைந்தனர்.

- 14-11-2007 அன்று சென்னையில் சில குடிசைப் பகுதிகளில் நடைபெற்ற மனித சங்கிலி நிகழ்ச்சியில் தொழிலாளர் துறை அலுவலர்கள், பள்ளிக் குழந்தைகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் கலந்து கொண்டன.

**தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட செயல்பாடுகள்**

2.16. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் 12 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. அவை சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகும். அதன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

* இதுவரை மீட்கப்பட்ட 59,034 குழந்தைகள் முறையான கல்வியில் சேர்க்கப்பட்டனர்.

* தற்போது சிறப்புப் பள்ளிக் குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட உள்ளனர்.

* தற்போது 15,043 மீட்கப்பட்ட குழந்தைகள் 429 சிறப்புப் பள்ளிகளில் பயில்கின்றனர்.

* சிறப்புப் பள்ளி குழந்தைகளுக்கு மதிய சத்துணவும், மாதம் ரூ.100/- உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

* ஒரு ஜதை இலவச சீருடை அரசால் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

* இலவச பேருந்து பயண அட்டை தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசால் வழங்கப்படுகிறது.

* முறையான உடல் பரிசோதனை மருத்துவ துறையினரால் நடத்தப்படுகிறது.

**சுய உதவிக் குழுக்கள்**

2.17. அனைத்து தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட மாவட்டங்களில், குழந்தைத் தொழிலாளர்களின் தாய்மார்களைக் கொண்டு மொத்தம் 735 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களின் பொருளாதார வாழ்க்கைத் தரம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**முறையான கல்வி பயிலும் குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த தொடர் நடவடிக்கை**

தருமபுரியில் முறையான பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளை சிறப்புப் பள்ளிகளின் ஆசிரியர்கள் கவனிக்கின்றனர். 83 விழுக்காடு முறையான கல்வி பயிலும் குழந்தைகள் தொடர்ந்து கல்வி பயிலுவது கண்டறியப்பட்டது. இது யுனிசெப் உதவிமூலம் நடைபெறுகிறது. இத்திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



**குழந்தைத் தொழிலாளர் தொடர் கண்காணிப்பு**

* கிருஷ்ணகிரி மாவட்டத்தில் யுனிசெப் உதவியுடன் கிராம நல குழு அமைக்கப்பட்டு குழந்தைத் தொழிலாளர்கள் முறையான கல்வி பயில்வதைக் கண்காணிக்கிறது. மேலும் குழந்தைத் தொழிலாளர் முறையினைத் தடுத்து வருகிறது.

* குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பள்ளிகளை விட்டு வெளியேறும் குழந்தைகள் ஆகியோரை கண்காணித்திட கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் இதற்கென மென்பொருளினை உருவாக்கியுள்ளார்.

**இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

2.18. இந்திய அமெரிக்க தொழிலாளர் துறை கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆகஸ்டு 2004 முதல் தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்களில் சர்வதேச தொழிலாளர் அமைப்புமூலமாக மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவை திருவள்ளூர், காஞ்சிபுரம், நாமக்கல், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகும். இத்திட்ட விவரங்கள் வருமாறு:—

* 5,633 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் 158 இடைமாற்று கல்வி நிலையங்களில் பயில்கின்றனர்.

* மீட்கப்பட்ட 9,847 குழந்தைத் தொழிலாளர்கள் முறையான கல்வி பயில்கின்றனர்.

* முகப்பு அட்டை பராமரிக்கப்படுகிறது. முன்னேற்ற அட்டைகள் காலாண்டுக்கு ஒருமுறை பராமரிக்கப்படுகிறது.

* மதிய சத்துணவு, மாதம் ரூ.100/-, ஒரு ஜதை சீருடை அரசால் வழங்கப்படுகிறது. இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

* தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

* 14 வயது முதல் 17 வயது வரையுள்ள வளர் இளம் பருவத்தினருக்கு, 24 தொழில்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைமூலம் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 25

* ஐந்து மாவட்டங்களில் தொழில் பள்ளிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது.

* 5,195 வளர் இளம் பருவத்தினர் தொழிற் பயிற்சி பெற்றுள்ளனர். இரு சக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் பழுதுபார்த்தல், குழாய் பொருத்துதல், வீட்டு மின் ஒயர் பொருத்துதல், வீடு பராமரித்தல், சமையல் தொழில்நுட்பம் போன்றவை கற்பிக்கப்படுகின்றது.

* 2,943 பேர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

* சர்வ சிக்ஷ அபியான் திட்டம்மூலம் குழந்தைத் தொழிலாளர்கள் பொதுக் கல்வி பெற்று வருகின்றனர்.

* 40 முன்னிலை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

* முன்னிலைப் பள்ளிகளில் நடவடிக்கை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

* கல்வியில் பின்தங்கியுள்ள குழந்தைத் தொழிலாளர்களுக்கு தன்னார்வலர்கள் சிறப்புப் பாடங்கள் நடத்துவதுடன், மாலை வேளைகளில் விளையாட்டு மற்றும் இசையையும் கற்பிக்கின்றனர்.

2.19. மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களது குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்ய மாற்று வழியாக 245 சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**கண்காணிப்பு**

2.20. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான கண்காணிப்பு வழிமுறைகள் தமிழ்நாட்டில் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு:

* குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றும் மாநில அதிகார அமைப்பிற்கு தலைமைச் செயலர் தலைவர் ஆவார்.

* இண்டஸ் திட்டத்தை மாநில திட்ட வழிகாட்டுக் குழு மேற்பார்வையிடுகிறது.



2008 ஏப்ரல் 25]

* தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தை மாநில கண்காணிப்புக் குழு மேற்பார்வையிடுகிறது.

* அரசுச் செயலாளர்கள், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக மாநில அரசு நியமித்துள்ளது. "குழந்தைத் தொழிலாளர்" என்ற பொருள், ஆய்வு செய்யப்படும் பொருள்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்—III

### அமைப்புசார் பிரிவு

### அ. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

3.1. அமைப்புசார் தொழிலாளர்களுக்கு பல நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக 1972 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நிறுவப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு ஐந்து வேலையளிப்போர் பிரதிநிதிகள், ஐந்து தொழிலாளர் பிரதிநிதிகள், நான்கு அரசு பிரதிநிதிகள், மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் இரண்டு பெண் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இவ்வாரியம் 1975 முதல் செயல்பட்டு வருகின்றது.

**தொழிலாளர் நல நிதி**

3.2. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள் மற்றும் உணவு நிறுவனங்களின் வேலையளிப்போரிடமிருந்து பங்களிப்பைப் பெறுகிறது. மேற்கண்ட நிறுவனங்களின் தொழிலாளர்கள் வருடத்திற்கு ரூ.5/-ம், அவர்களுக்காக வேலையளிப்பவர்கள் வருடமொன்றிற்கு ஒரு தொழிலாளிக்கு, பங்களிப்பாக ரூ.10/-ம் செலுத்துகின்றனர். தமிழ்நாடு அரசும் தொழிலாளர்கள் செலுத்தும் பங்களிப்புக்குச் சமமாக பங்களிப்பு வழங்குகிறது. இது தவிர தொழிலாளர் சட்டங்களை மீறும் நிறுவனங்களிடமிருந்து நீதிமன்றங்களால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் தொழிலாளர்கள் சட்டங்களை மீறும் நிறுவனங்களிடம் தொழிலாளர் துறையினரால் வசூலிக்கப்படும்

இணக்கக் கட்டணம் ஆகியவற்றை இவ்வாரியம் பெறுகிறது. இவ்வாரியத்தால், 71 இடங்களில் தொழிலாளர் நல மையங்கள் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் நடத்தப்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல வாரியத்தால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :—

**தையற் பயிற்சி**

3.3. அனைத்துத் தொழிலாளர் நல மையங்களிலும், தொழிலாளர்களைச் சார்ந்த பெண் உறுப்பினர்களுக்கு, ஓராண்டு தையற் பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சி காலத்தில் இவர்களுக்கு மாதம் ரூ.150/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது மற்றும் இவர்களுக்கான தேர்வுக் கட்டணம் வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மேலும், ஒவ்வொரு மையத்திலும் மேல்நிலை மற்றும் கீழ்நிலை தையற் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவிகளுக்கு புதிய தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகிறது. இதுவரை 3,336 பயிற்சியாளர்கள் பயனடைந்துள்ளார்கள். ரூ.36,98,429/- இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது. இதுவரை மதிப்பெண்கள் அதிகம் பெற்ற 283 பேர்களுக்கு தையல் இயந்திரம் வாங்க ரூ.6,94,500/- செலவழிக்கப்பட்டுள்ளது.

**கல்வி உதவித் தொகை**

3.4. தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கீழ்க்கண்டவாறு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது :—

| | | ஆண்டு ஒன்றுக்கு |
|---|---|---|
| 1. | இளங்கலை மருத்துவப் பட்டப் படிப்பு | ரூ.2400/- |
| 2. | இளங்கலை பொறியியல் பட்டப் படிப்பு | ரூ.2400/- |
| 3. | இளங்கலை சட்டப் பட்டப் படிப்பு | ரூ.2400/- |
| 4. | இளங்கலை விவசாயப் பட்டப் படிப்பு | ரூ.2400/- |
| 5. | தொழிற்பயிற்சி கல்வி | ரூ.1000/- |
| 6. | மேல்நிலைக் கல்வி | ரூ.1200/- |
| 7. | பொறியியல் பட்டயக் கல்வி | ரூ.1440/- |
| 8. | மருத்துவ பட்டயக் கல்வி | ரூ.1440/- |



இத்திட்டத்தின்கீழ் பொறியியல், மருத்துவம், சட்டம் மற்றும் விவசாய பட்டப் படிப்புகள் படிக்கும் 191 மாணவர்களுக்கு உதவித் தொகை ரூ.3,93,120/- வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொழிற் பயிற்சி மற்றும் மேல்நிலை கல்வி பயிலும் 133 மாணவர்களுக்கு ரூ.1,58,000/- வழங்கப்பட்டுள்ளது.

**கல்வி ஊக்கத் தொகை**

3.5. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.1,000/-மும், இரண்டாம் மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.500/-ம் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் 54 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.46,000/- ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**புத்தக உதவித் தொகை**

3.6. வாரியம் 154 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ரூ.68,360/- புத்தக உதவித் தொகையாக வழங்கியுள்ளது. இது தவிர, 17 தொழிலாளர்களின் குழந்தைகள் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சி பெற ரூ.5,355/- செலவிடப்பட்டுள்ளது.

**அடிப்படை கணினி பயிற்சி**

3.7. தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தோரும் அடிப்படைக் கணினி பயிற்சி பெற ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கு 5 பேர் வீதம் ரூ.1,000/- உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 3 பயனாளிகளுக்கு ரூ.3,000/- மீளப்பெறும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**படிப்பகங்கள்**

3.8. தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு படிப்பகத்திற்கும் இரண்டு தமிழ் தினசரி மற்றும் இரண்டு வார இதழ்கள் வாங்கப்படுகிறது. இந்த படிப்பகங்களில் 2,261 பயனாளிகள் படித்துப் பயன்பெற்றுள்ளார்கள். இத்திட்டத்திற்காக ரூ.1,46,529/- செலவிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 25

**மூக்குக் கண்ணாடி உதவித் தொகை**

3.9. மூக்குக் கண்ணாடி வாங்கியதற்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 400/- வரை ஈடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 745 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். ரூ.3,29,300/- மீளப்பெறும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**காது கேட்கும் கருவி, மூன்று சக்கர வண்டி மற்றும் செயற்கை உறுப்பு**

3.10. காது கேளாத தொழிலாளர்களுக்கு காது கேட்கும் கருவி வாங்கியதற்கான தொகையை ஈடுசெய்யும் வகையில் ரூ.1,000/- வரை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 15 தொழிலாளர்களுக்கு ரூ.14,400/- மீளப்பெறும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஈமச்சடங்கு உதவித் தொகை**

3.11. இவ்வாண்டில் 105 தொழிலாளர்களின் வாரிசுதாரர்களிடம் ஈமச்சடங்கு தொகை தலா ரூ.1,500/- வீதம் மொத்தம் ரூ.1,57,500/- வழங்கப்பட்டுள்ளது.

**காசநோய்ப் பிரிவு**

3.12. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தாம்பரம், ஆசாரிப்பள்ளம், திருப்பூர், ஆஸ்டின்பட்டி மற்றும் கீழ்பெண்ணாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள காசநோய் மருத்துவமனைகளில் தொழிலாளர்களுக்காகப் படுக்கைகளுடன் கூடிய தனிப் பிரிவுகளைக் கட்டியுள்ளது.

**குழந்தைகள் காப்பகம்**

3.13. இம்மாநிலத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் 55 இடங்களில் குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்படுகின்றன. இக்காப்பகங்களில், 2 முதல் 5 வயது வரை உள்ள 2,421 தொழிலாளர்களின் குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், குழந்தைகளுக்கு சத்தான உணவு மற்றும் பால் தினமும் வழங்கப்படுகிறது. இதைத் தவிர வாரம் மூன்று முறை முட்டை மற்றும் இரண்டு முறை பழங்கள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு ஆண்டிற்கு 2 ஜதை டெரிக்காட்டன் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. இதைத் தவிர்த்து மருத்துவர்களால் குறிப்பிட்ட கால இடைவெளியில் குழந்தைகளுக்கு மருத்துவ



2008 ஏப்ரல் 25]

பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் அக்குழந்தைகளுக்கு பயிற்சி பெற்ற பாலசேவிகாக்களால் அடிப்படைக் கல்வி கற்றுத் தரப்படுகிறது. இத்திட்டத்திற்காக இவ்வாண்டு ரூ.12,38,587/- செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஓய்வு இல்லம்**

3.14. தொழிற்சங்க பணிநிமித்தமாக சென்னைக்கு வரும் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்கு ஏதுவாக சென்னையில் ஒரு ஓய்வு இல்லம் கட்டப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் 6,729 தொழிற்சங்கத் தலைவர்கள் தங்கி பயனடைந்துள்ளனர். இவ்வில்லத்தினைப் பராமரிப்பதற்கும் இதர செலவினங்களுக்காகவும் ரூ. 5,90,353/- செலவிடப்பட்டுள்ளது.

**விடுப்பு ஓய்வில்லங்கள்**

3.15. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் மாமல்லபுரம், குற்றாலம், வால்பாறை ஆகிய இடங்களில் மிகக் குறைந்த வாடகையில் தொழிலாளர்கள் குடும்பத்தாருடன் தங்குவதற்கு வசதியாக ஓய்வில்லங்கள் கட்டப்பட்டுள்ளன. இக்காலத்தில் 9,309 நபர்கள் தங்கி பயனடைந்துள்ளனர்.

**உழைப்பவர் உலகம்**

3.16. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் "உழைப்பவர் உலகம்" என்ற மாத இதழ் தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் பொது மக்கள் படித்து பயன்பெறும் வகையில் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் நீதிமன்ற தீர்ப்புகள், தொழிலாளர் சட்டம், வினா விடை, விலைவாசி குறியீடுகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. தற்போது 4,995 சந்தாதாரர்கள் இதனைப் படித்து பயன் பெற்றுள்ளனர். இந்த இதழ் வெளியிட ரூ.2,71,805/- செலவிடப்பட்டுள்ளது.

3.17. இவ்வாரியத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் 30,554 நபர்கள் பயனடைந்துள்ளனர் இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.73,33,588/- ஆகும்.

## அத்தியாயம்—IV

## அமைப்புசாராப் பிரிவு

4.1. தொழிலாளர் சக்தியில் அமைப்புசாராப் பிரிவு முக்கியப் பங்கு வகிக்கிறது. தொழிலாளர்களில், குறிப்பாக அமைப்புசாரா தொழிலாளர்கள் மேம்பாட்டிற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

**நல வாரியங்கள்**

**1. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் பிற நல வாரியங்கள்.**

4.2. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள் மற்றும் பணி முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 6-ன்கீழ் இச்சட்டத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், 17-3-1999 அன்று நிறுவப்பட்டது.

அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி அவர்கள் நலனை உறுதி செய்ய தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் கீழ்க்காணும் தனி நல வாரியங்கள் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

(i) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்

(ii) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்

(iii) தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்

(iv) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்

(v) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்

(vi) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்

(vii) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம்

(viii) தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்



(ix) தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்

(x) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்

(xi) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்

(xii) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்நல வாரியம்

1-9-2006 முதல் பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

4.3 31-3-2008 அன்றுள்ள நிலவரப்படி, 17,81,630 தொழிலாளர்கள் மேற்காணும் நலவாரியங்களில் பதிவு செய்துள்ளனர்.

4.4 2007-2008 ஆம் ஆண்டில் இந்நல வாரியங்களுக்கு ரூபாய் 13.98 கோடி மானியமாக அரசு வழங்கியுள்ளது.

4.5. 2007-2008 ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியத்தால் பங்களிப்புத் தொகையாக ரூ.3,73,37,000/- பெறப்பட்டுள்ளது.

4.6. நல உதவிகளான கல்வி உதவி, மகப்பேறு உதவி மற்றும் ஈமச்சடங்கு உதவி ஆகியவை பயனாளிகளை விரைவில் சென்றடைய 8-10-2007 முதல் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு ஒப்பளிக்கும் அதிகாரப் பரவல் செய்யப்பட்டுள்ளது.

4.7. ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவு செய்வதையும், கேட்பு மனுக்களை குறித்த காலத்திற்குள் தீர்வு செய்வதையும், நல உதவிகள் வழங்குவதையும் ,கண்காணித்து உறுதி செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

4.8. கீழ்க்காணும் திட்டங்கள் இந்நல வாரியங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**விபத்து இறப்பு மற்றும் விபத்தின் காரணமாக செயலிழப்பு**

4.9. பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர் விபத்தினால் மரணமடைந்தால் அவரது நியமனதாரருக்கு ரூபாய் 1 இலட்சம் வழங்கப்படுகிறது. விபத்தினால் கை, கால் இழப்பு, கண்ணிழப்பு போன்ற இழப்புகளின் தன்மைக்கேற்ப ரூபாய் 1 இலட்சம் வரையிலான இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

**இயற்கை மரணம்**

4.10. பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர் மரணமடைந்தால், அவரது நியமனதாரருக்கு ரூபாய் 15,000/- வழங்கப்படுகிறது.

**ஈமச்சடங்கு உதவி**

4.11. பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர் இயற்கையாகவோ அல்லது விபத்தினாலோ மரணமடைந்தால் அவரது ஈமச்சடங்கிற்கு உதவித் தொகை ரூபாய் 2,000/- அவரது நியமனதாரருக்கு வழங்கப்படுகிறது.

**கல்வி உதவி**

4.12. பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளரின் மகள் பத்தாம் வகுப்பு மற்றும் பதினொன்றாம் வகுப்பு படித்து வந்தால் ரூபாய் 1,000/-மும், பன்னிரண்டாம் வகுப்பு பயின்று வந்தால் ரூபாய் 1,500/-ம் கல்வி உதவியாக வழங்கப்படுகிறது. மேலும், அவரது மகன்/மகள் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருப்பின் முறையே ரூபாய் 1,000/- மற்றும் ரூபாய் 1,500/- கல்வி உதவியாக வழங்கப்படுகிறது.

தொழிற்கல்வி, பட்டக் கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயின்று வரும் தொழிலாளரின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை ரூபாய் 1,000/- முதல் ரூபாய் 4,000/- வரையிலும், விடுதிகளில் தங்கிப் படிக்கும் குழந்தைகளாக இருப்பின் ரூபாய் 1,200/- முதல் ரூபாய் 6,000/- வரையிலும் வழங்கப்படுகிறது.

**திருமண உதவி**

4.13. பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளரின் திருமணத்திற்கும் மற்றும் அவரது மகன் / மகளின் திருமணத்திற்கும் உதவித் தொகையாக ரூபாய் 2,000/- வழங்கப்படுகிறது.

**மூக்குக் கண்ணாடி வாங்கிடும் தொகையை மீளப்பெறும் உதவி**

4.14. ஒவ்வொரு ஆண்டும் 2,000 தொழிலாளர்களுக்கு ரூபாய் 500/- வீதம் மூக்குக் கண்ணாடி வாங்கிடும் தொகையை மீளப் பெறும் உதவி வழங்கப்படுகிறது.





**மகப்பேறு உதவி**

4.15. பதிவு செய்துள்ள பெண் உடலுழைப்புத் தொழிலாளருக்கு மகப்பேறு உதவித் தொகையாக ரூபாய் 6,000/-ம் மற்றும் கருச் சிதைவு அல்லது கருக் கலைப்பு ஆகியவற்றிற்காக ரூபாய் 3,000/-ம் வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியம்**

4.16. பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர் 60 வயதைப் பூர்த்தி செய்த பின்னர் மாதந்தோறும் ரூபாய் 300/- வீதம் ஓய்வூதியமாக வழங்கிடும் திட்டம் 1-9-2006 முதற்கொண்டு அரசால் முதன்முறையாக தொடங்கப்பட்டது. இம்மாதாந்திர ஓய்வூதியம் 1-7-2007 முதல் ரூபாய் 400/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

4.17. 1-4-2007 முதல் 31-3-2008 வரையில் பல்வேறு நல வாரியங்கள் கீழ் பதிவு செய்தவர்கள், பயனாளிகள் மற்றும் ஒப்பளிக்கப்பட்ட உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | வாரியத்தின் பெயர் | பதிவு பெற்ற தொழிலாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம் | 3,01,953 | 44,082 | 10,00,50,823 |
| 2. | தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் | 23,127 | 1,239 | 30,34,743 |
| 3. | தமிழ்நாடு சலவை தொழிலாளர் நல வாரியம் | 14,290 | 1,510 | 36,50,185 |
| 4. | தமிழ்நாடு முடி திருத்துவோர் நல வாரியம் | 7,342 | 792 | 20,13,569 |
| 5. | தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம் | 1,05,875 | 21,395 | 4,87,84,316 |
| 6. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம் | 18,852 | 1,971 | 42,38,140 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம் | 10,246 | 500 | 7,40,560 |
| 8. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நல வாரியம் | 51,297 | 9,391 | 2,32,24,857 |
| 9. | தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியம் | 3,596 | 261 | 8,58,741 |
| 10. | தமிழ்நாடு ஓவியர் நல வாரியம் | 1,266 | 34 | 1,21,725 |
| 11. | தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் | 5,552 | 182 | 6,74,502 |
| 12. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் | 7,180 | 133 | 5,37,004 |
| 13. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம் | 25,999 | 3,629 | 80,77,706 |
| | மொத்தம் | 5,76,575 | 85,119 | 19,60,04,871 |

**2. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

4.18. 1994 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவர் ஆவார்.

4.19. 1-9-2006 முதல் பதிவுக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

4.20. 1-4-2007 முதல் 31-3-2008 வரையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் பங்களிப்புத் தொகையாக ரூ.47,79,78,982/- பெறப்பட்டுள்ளது.



4.21. மேற்கூறப்பட்ட காலத்தில், இவ்வாரியத்தில் 3,84,854 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 16,54,107/-.

4.22. இவ்வாரியத்தால் நடைமுறைபடுத்தப்படும் திட்டங்கள்

| வ. எண். | | உதவியின் விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | | விபத்து காப்பீடு திட்டம்<br>(அ) விபத்து இறப்பு | 1,00,000/- |
| | | (ஆ) விபத்து ஊனம் | மருத்துவரால் நிர்ணயிக்கப்படும் செயலிழப்பு சதவீதத்தைப் பொறுத்து<br>15,000/- |
| 2. | | இயற்கை மரணம் | 2,000/- |
| 3. | | ஈமச்சடங்கு | |
| 4. | | கல்வி உதவித் தொகை | |
| | (அ) | 10 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/- |
| | (ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி (மகன்/மகள்) | 1,000/- |
| | (இ) | 11 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/- |
| | (ஈ) | 12 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/- |
| | (உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி (மகன்/மகள்) | 1,500/- |
| | (ஊ) | முறையான பட்டப் படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,500/-<br>1,750/- |
| | (எ) | முறையான பட்ட மேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 2,000/-<br>3,000/- |
| | (ஏ) | தொழில் நுட்பப் பட்டப் படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 2,000/-<br>4,000/- |
| | (ஐ) | தொழில்நுட்பப் பட்ட மேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/-<br>6,000/- |

| | | | |
|---|---|---|---|
| | (ஓ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு விடுதியில் தங்கிப்படித்தால் | 1,000/–<br>1,200/– |
| | (ஔ) | திருமண உதவி | 2,000/– |
| 5. | | மகப்பேறு உதவி (மாதம் ரூ.1,000/– வீதம்) (பெண் தொழிலாளர்களுக்கு மட்டும்)<br>கருக்கலைப்பு / கருச் சிதைவு | 6,000/–<br>3,000/– |
| 6. | | மூக்குக் கண்ணாடி வாங்கிடும் தொகையை மீளப்பெறும் உதவி | 500/–க்கு மிகாமல் |
| 7. | | ஓய்வூதியம் | 400/–<br>(மாதம் ஒன்றுக்கு) |

*4.23. 1-4-2007* முதல் *31-03-2008* வரையில் பல்வேறு நலத் திட்டங்களின்கீழ், *54,368* பயனாளிகளுக்கு ரூபாய் *16,67,52,455/-* மதிப்பீட்டிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

*4.24. 1-4-2007* முதல் *31-3-2008* வரையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மூலமாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட நல உதவிகள் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | உதவி விவரம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | விபத்து மரணம் மற்றும் ஈமச் சடங்கு | 70 | 71,40,000 |
| 2. | காய விபத்து | .. | .. |
| 3. | இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு | 4,244 | 7,16,60,000 |
| 4. | திருமண உதவித் தொகை | 6,851 | 1,37,02,000 |
| 5. | மகப்பேறு உதவித் தொகை | 1,040 | 57,01,000 |
| 6. | கல்வி உதவித் தொகை | | |
| | 10 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 6,145 | 61,45,000 |
| | 11 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 4,534 | 45,34,000 |
| | 12 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 4,273 | 64,09,500 |
| | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 9,652 | 96,52,000 |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 5,884 | 88,26,000 |
| | உயர் கல்வி | 9,397 | 1,59,29,293 |
| 7. | கண் கண்ணாடி உதவித் தொகை | 1,182 | 5,77,158 |
| 8. | ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகை | 1,096 | 1,64,76,504 |
| | மொத்தம் | 54,368 | 16,67,52,455 |



### 3. மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

*4.25.* வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் அமைப்புசாராத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக காப்பீடு வழங்கும் நோக்கத்துடன் "ராஷ்ட்ரீய ஸ்வஸ்த்ய பீமா யோஜனா" என்ற தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மத்திய அரசால் *1-10-2007* அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் தொழிலாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு (குடும்ப நபர்கள் *5* வீதம்) மருத்துவ சிகிச்சைகளுக்காக ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.*30,000*/-க்கு காப்பீடு செய்யப்படும். *2008-2009* ஆம் ஆண்டிலிருந்து அடுத்த *5* ஆண்டுகளுக்கு வறுமைக் கோட்டிற்குக்கீழ்

உள்ள அனைத்துக் குடும்பங்களும் இத்திட்டத்தின்கீழ் கவரப்படுவார்கள். இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்ய ஒவ்வொரு பயனாளியின் குடும்பத்திற்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் செலுத்தப்பட வேண்டிய மொத்த பிரிமியத் தொகையான ரூ.750/-ல் 75% தொகையினை, (ரூ.565/-க்கு மிகாமல்) மத்திய அரசு ஏற்று பங்களிக்கும், மீதமுள்ள 25% பிரிமியத் தொகையையும் மற்றும் (ஆண்டொன்றிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.185) பிற கூடுதல் பிரிமியத் தொகை ஏதுமிருப்பின் அச்செலவினங்களை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற பயனாளிகளுக்கு மின்னணு பதிவு அட்டை வழங்கப்படும். இதற்கான செலவினத்தை மத்திய அரசு ஏற்கும். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு ஆகும் நிர்வாகச் செலவினம் மற்றும் இதர செலவினங்கள் மாநில அரசால் ஏற்கப்படவேண்டும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஒவ்வொரு குடும்பத்திடமிருந்து ஆண்டொன்றிற்கு பதிவுக் கட்டணமாக/பதிவினை புதுப்பிக்கும் கட்டணமாக ரூ. 30-ஐ வசூல் செய்ய வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழான பயன்களில் மருத்துவ நிலையங்களால் பணப்பற்று ஏதுமின்றி கவரப்பட்ட நோய்கள், உள்நோயாளிச் சிகிச்சைச் செலவினங்கள், பொதுவான எல்லாவகை நோய்களுக்கும் சிகிச்சையளித்தல், முன்னரே நோயுற்றவர்களுக்கும் சிகிச்சையளிக்க கவரப்படுதல் மற்றும் சிகிச்சைக்காக மேற்கொள்ளும் பயணச் செலவினத்தில் ஒவ்வொரு பயணத்திற்கும் அதிகபட்சமாக ரூ.100/- வீதம், ஆண்டிற்கு மொத்தமாக ரூ. 1,000/-த்திற்கும் மிகாமல் வழங்குதல் போன்றவையும் அடங்கும்.

4.26. இத்திட்டம், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி நடைமுறைப்படுத்த கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்திட தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஒருங்கிணைப்பு முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம்—V

## தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை

5.1. தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை, பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் மேம்பாட்டிற்காக சேவை புரிந்து வருகிறது. இத்துறையானது கீழ்க்கண்ட தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்தி வருகிறது:—

1. தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950.
2. சம்பளப் பட்டுவாடாச் சட்டம் 1936 மற்றும் விதிகள்.
3. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) சட்டம் 1958 மற்றும் விதிகள்.
4. குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1948 மற்றும் விதிகள்.
5. மகப்பேறு நலச் சட்டம் 1961 மற்றும் விதிகள்.
6. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் 1970 மற்றும் விதிகள்.
7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு பணி நிரந்தர தகுதி நிலை வழங்கல்) சட்டம் 1981 மற்றும் விதிகள்.
8. சம ஊதியச் சட்டம் 1976 மற்றும் விதிகள்.
9. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம் 1981 மற்றும் விதிகள்.
10. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் 1972 மற்றும் விதிகள்.
11. குழந்தைத் தொழிலாளர் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986 மற்றும் விதிகள்.
12. தொழிலாளர் நலச் சட்டங்கள் (ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரிப்பதிலிருந்து சில நிறுவனங்களுக்கு விதிவிலக்கு) சட்டம் 1988.
13. மாநிலம் விட்டு மாநிலம் குடிபெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1979 மற்றும் விதிகள்.
14. பணிக்கொடை பட்டுவாடா சட்டம் 1972 மற்றும் விதிகள்.
15. உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள் 1989.

[2008 ஏப்ரல் 25

5.2. தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆய்வகம் கீழ்க்கண்ட முக்கிய இரண்டு பணிகளைச் செய்து வருகிறது :—

அ. முறைப்படுத்தும் பணிகள்

ஆ. தொழிலியல் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் பயிற்சி

**அ. முறைப்படுத்தும் பணிகள்**

5.3. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் நல வசதிகள் ஆகியவற்றை வரையறை செய்துள்ள ஒரு தொழில்நுட்பமான சட்டம் ஆகும். தொழிலாளர் நலச் சட்டங்களின் பயன்கள் தொழிலாளர்களை அதிக அளவில் சென்றடைய அனைத்து முயற்சிகளும் இவ்வாய்வகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆய்வுகள்**

5.4. அபாயகரமான மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் உடல் நலன்கள் குறித்து கண்காணிக்கப்பட வேண்டும் மற்றும் காலமுறைதோறும் உறுதி செய்யப்பட வேண்டுமென்பதால் அபாயகரமான மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறைகளில் ஈடுபட்டிருக்கும் தொழிற்சாலைகள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்யப்படுகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் தீ மற்றும் வெடிக்கும் அபாயத்தைக் குறைக்கவும், குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துதலை நீக்கிடவும், இத்தொழிற்சாலைகளில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருப்பினும் பொதுவாக இத்துறையால் சிறு தொழில் நிறுவனங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றன.

5.5. இதைத் தவிர பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் நல ஏற்பாடுகளை சிறந்த முறையில் கண்காணிக்க சிறப்பு, விடுமுறை மற்றும் சோதனை ஆய்வுகள் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றன.



2008 ஏப்ரல் 25]

**பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கான குழு ஆய்வுகள்**

5.6. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பட்டாசுத் தொழிற்சாலைகளில் அதிக உற்பத்திகள் செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இத்தகைய அதிக அளவு நடவடிக்கை காரணமாக வெடி விபத்துக்கள் மற்றும் விபத்துக்கள் நிகழ தீபாவளி சமயத்தில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, இக்காலங்களில் இதற்கென சிறப்பு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு பாதுகாப்பான பணிநிலைமைகளையும், பாதுகாப்பு வேலைமுறைகளையும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் கண்காணித்து வருகிறது.

**விபத்துக்கள்**

5.7. பாதுகாப்பு அளவீடு மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு செயல்பாடுகள் கூடுதலாக்கப்பட்டதன் விளைவாக பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும், கடும் விபத்து நிகழ்வுகளின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

5.8. 2005, 2006 மற்றும் 2007 ஆண்டுகளில் நடந்த விபத்துக்கள் குறித்த விவரம் பின்வருமாறு :—

| வருடம் | பதிவு செய்யப்பட்ட தொழிற் சாலைகள் எண்ணிக்கை | தொழிலாளர்கள் எண்ணிக்கை | மரண விபத்துக்கள் | மரணமற்ற விபத்துக்கள் |
|---|---|---|---|---|
| 2005 | 36,867 | 13,20,613 | 50 | 1,545 |
| 2006 | 38,976 | 13,69,376 | 48 | 1,198 |
| 2007 | 41,591 | 14,26,991 | 60 | 1,089 |

[2008 ஏப்ரல் 25

**தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான கூட்டுத் தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

5.9. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக கூட்டுத் தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்து காரணமாக பார்வை, கை, கால் இழப்பு அல்லது இறப்பு நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விபத்துக் காப்பீட்டுப் பயன், தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டுமன்றி 24 மணிநேர அடிப்படையில் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இறப்பு நேரிட்டால் காப்பீட்டுத் தொகையாக ரூ. 50,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2007 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 1,85,583 தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் உரிமை கோரிய நபர்களுக்கு ரூ. 23,50,000/- வழங்கப்பட்டுள்ளது.

**1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்ட அமலாக்கம்**

5.10. தொழிலாளர்களின் ஊதிய நிலையினைப் பாதுகாக்கும் வகையில், தொழிற்சாலைகளில் வழக்கமாக மேற்கொள்ளும் ஆய்வுகளைத் தவிர, குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்கும் குறைவாக வழங்கப்படும் நிர்வாகத்தினர் மீது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் அதிக அளவில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில், 2007 ஆம் ஆண்டில், 63 நீதிமன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ. 31,104/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**இதர தொடர்புடைய சட்டங்கள் அமலாக்கம்**

5.11. மேற்குறிப்பிட்ட சட்டங்களுடன், சம்பளப் பட்டுவாடாச் சட்டம், தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைச் சட்டம், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், பிழைப்பூதியச் சட்டம், ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (நிரந்தரத் தகுதி வழங்குதல்) சட்டம், மகப்பேறு



2008 ஏப்ரல் 25]

நலச் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

**குழந்தைத் தொழிலாளர் முறை நீக்குதல்**

5.12. தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் பணிக்கமர்த்துவதை தடை செய்ய 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 67-ல் கட்டளையிட்டபடி இத்துறையால் கடுமையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது. குற்றம் இழைத்த வேலை அளிப்பவர்கள்மீது வழக்குகள் தாக்கல் செய்யப்படும்போது 1948 தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 92-ல் உள்ளதைவிட 1986 ஆம் வருட குழந்தைத் தொழிலாளர் (தடை செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 14 மற்றும் 15-ன்கீழ் குறிப்பிட்டுள்ள தண்டனைகள் கடுமையானவையென்பதால் அவற்றை விதிக்கும் வகையில் தாக்கல் செய்யப்படுகின்றன. 2007 ஆம் ஆண்டு 12 வழக்குகள் குழந்தைத் தொழிலாளர் பணிக்கமர்த்தப்பட்டமைக்கு தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 67-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.1,72,000/- வசூலிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர ஒவ்வொரு மாதம் குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அபாயகரமான தொழில்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை அறவே நீக்கிடும் வகையில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 2007 ஆம் ஆண்டில் 15,839 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆ. தொழிலியல் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பயிற்சிப் பணிகள்**

**ஊறுவிளைவிக்கும் செயல்முறைத் தொழிற்சாலைகள்**

5.13. 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின் முதல் அட்டவணையின்கீழ், 29 வகையான தொழில்கள், ஊறுவிளைவிக்கும் தொழில்களாக பட்டியலிடப்பட்டுள்ளன. இத்தொழில்களில் தனிக் கவனம் செலுத்தப்படாவிடில், பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களால் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்திற்குக் கேடுவிளைவிக்கும் அல்லது சுற்றுச்சூழல் மாசுபடும். இவ்வகையான தொழிற்சாலைகளில் முழுமையான தொழிலியல் பாதுகாப்பு மற்றும் உடல் நலத்தை உறுதி செய்யும்பொருட்டு, அதிகப்படியான கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன.

5.14. சில ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில், கட்டுப்படுத்த இயலாத உற்பத்தி முறைகளினால் தொழிலாளர்களுக்கும், அருகில் வசிக்கும் பொது மக்களுக்கும் பெரும் அபாயத்தை விளைவிப்பதுடன், சுற்றுச்சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தும் இத்தகைய தொழிற்சாலைகள் "பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் 143 தொழிற்சாலைகள் "பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

5.15. தலைமையகத்தில் "பெரும் விபத்து மற்றும் இன்னல் தடுப்புக் குழு" ஒன்று, தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளரின் தலைமையில் 1988 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்குழுவானது பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து ஆய்வு செய்வதுடன் தொழில் அபாயத்தைத் தடுக்கக்கூடிய தகுந்த பாதுகாப்பு வழிமுறைகளை நிருவாகங்களுக்கு பரிந்துரைக்கிறது. இக்குழுவினால் இணக்க தகுதி நிலையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

5.16. அவசர நிலை ஏற்படுமேயானால் அதனை எதிர்நோக்கும் பொருட்டு, இந்தப் பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகள் உள்ளிருப்பு அவசர கால ஆயத்த நிலை திட்டத்தினைத் தயாரிக்க வேண்டும். 2007 ஆம் ஆண்டு வரை 143 பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளிலிருந்து உள்ளிருப்பு அவசரகால ஆயத்த நிலைத் திட்டங்கள் பெறப்பட்டு, அதில் 113 திட்டங்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

5.17. அவசர நிலை உள்ளிருப்பு ஆயத்த திட்டத்தினைக் கூர்ந்தாய்வு செய்து அதனை சிறப்பாகவும், சீரிய முறையில் சீர்படுத்திட பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் இத்துறை அலுவலர்களின் மேற்பார்வையில் அவ்வப்போது மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2007 ஆம் ஆண்டில் 128 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. மேற்படி வழிமுறைகளுடன், கூடுதலாக பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளிலிருந்து பாதுகாப்பு அறிக்கைகள் (Safety Reports) கோரப்பட்டு, இத்துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகின்றன.



5.18. மாநிலத்தில் ஏற்படும் பெரும் இரசாயன விபத்துக்களை மட்டுப்படுத்தவும் மற்றும் அவசர ஆயத்த நிலைகளைத் திட்டமிடவும், பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கும் தொழிற்சாலைகளில் அவசர நிலை திட்டத்தினை மதிப்பீடு செய்யவும், மாநில அரசுக்கு உதவி புரிந்திட மாநில, மாவட்ட மற்றும் உள்ளூர் நெருக்கடி நிலைக் குழுக்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர், மாவட்ட அவசர நிலை அதிகாரியாகவும், மாவட்ட நெருக்கடி நிலைக் குழுவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் அலுவலர்கள் மேற்படி குழுக்களில் உறுப்பினர் செயலர்களாகச் செயல்படுகின்றனர்.

5.19. மேலும், இந்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம், தமிழ்நாட்டின் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையை வலுப்படுத்துவதற்காக எக்ஸ்புளோஸிவ் மீட்டர் மற்றும் அனிமோ மீட்டர் (Explosive Meter and Anemometer) போன்ற உபகரணங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மேற்படி உபகரணங்கள் வாங்கப்பட்டு அலுவலர்களால் உபயோகப்படுத்தப்படுவதுடன் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுகிறது.

## மனை மதிப்பீட்டுக் குழு

5.20. 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 41-A-ன்படி மனை மதிப்பீட்டுக் குழு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இக்குழு நிர்வாகத்தினரிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து இடர்தரு தொழிற்சாலைகளின் மனை அமைவிடம் அல்லது விரிவாக்கம் குறித்து அனுமதி பெற்றிட அரசின் ஒப்புதலுக்காக பரிந்துரை செய்கிறது. மனை மதிப்பீட்டுக் குழு 2007 ஆம் ஆண்டில் 10 விண்ணப்பங்களைப் பரிசீலித்துள்ளது.

## மாநில அளவிலான பாதுகாப்பு தணிக்கைக் குழு

5.21. மாநில பாதுகாப்பு தணிக்கைக் குழு, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் வல்லுநர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, பெரும் விபத்து மற்றும் ஊறுவிளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகளிடமிருந்து ஆண்டுதோறும் பெறப்படும் பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளைக் கூர்ந்தாய்வு செய்து தொழிற்சாலைகளில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

[2008 ஏப்ரல் 25

5.22. இந்தப் பாதுகாப்பு தணிக்கைக் குழு, 2007 ஆம் ஆண்டில் 8 கூட்டங்களை நடத்தி 8 பாதுகாப்பு தணிக்கை அறிக்கைகளை கூர்ந்தாய்வு செய்துள்ளது. இதன் பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட நிருவாகத்தினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், அதனை அமல்படுத்த நிருவாகத்தினருக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

**பாதுகாப்பு விழிப்புணர்வுக் குழுக்கள்**

**பட்டாசுத் தொழிற்சாலைகள்**

5.23. பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் வெடி விபத்துக்களைக் கட்டுப்படுத்தி உயிர் இழப்பினைத் தடுத்திடும் நோக்கில் மதுரை தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் (பதிவு), அவர்களின் தலைமையில் ஒரு தொழிற்சாலைகள் ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட "பாதுகாப்பு விழிப்புணர்வுக் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பட்டாசு தொழிற்சாலைகளுக்கு காலமுறைதோறும் சென்று இத்தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்து விபத்துகளைத் தடுத்திட பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளைத் தொழிலாளர்களுக்கு பயிற்றுவித்து வருகின்றனர். இக்குழு 2007 ஆம் ஆண்டில் 76 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்களை நடத்தியதில் 6,853 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**இரசாயனத் தொழிற்சாலைகள்**

5.24. இதேபோன்று, இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயப்பட்டறைகளில் உயிர் இழப்பினைத் தடுத்திடும் நோக்கில், சென்னை மற்றும் கோவை, தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் (பதிவு) தலைமையில் ஒரு தொழிற்சாலை ஆய்வாளர் மற்றும் தொழிற்சாலை உதவி ஆய்வாளர் ஆகியோரைக் கொண்ட இரண்டு "பாதுகாப்பு விழிப்புணர்வுக் குழுக்கள்" அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் காலமுறைதோறும் மணலி, எண்ணூர் மற்றும் வேலூர், இராணிப்பேட்டை கடலூரில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டைகளில் உள்ள இரசாயனத் தொழிற்சாலைகள், திருப்பூரில் அமைந்துள்ள சாயப்பட்டறைகள் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்குச் சென்று இத்தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்தும் விபத்துக்களைத் தடுத்திடும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் பயிற்றுவித்து வருகின்றது. இக்குழுக்களால் 31-3-2008 வரை 14 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டதில் 625 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.



2008 ஏப்ரல் 25]

**உடல்நல மேம்பாட்டு பணிகள்**

5.25. இரசாயனம் மற்றும் இதர அபாயகரமான தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல்நலம் குறித்து கண்காணிக்க இத்துறையில் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இத்துறையின் மருத்துவ அலுவலர்கள், அபாயகரமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை காலமுறைதோறும் பரிசோதனை செய்து வருவதுடன் உடல்நலம் குறித்து கண்காணிக்க சுகாதார அளவீடு மேற்கொள்வதுடன் மருத்துவ மற்றும் தடுப்பு ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

5.26. இரசாயனத் தொழிற்சாலைகளில் அமோனியா, குளோரின், சல்பர்-டை-ஆக்ஸைடு, ஹைட்ரஜன் சல்பைடு போன்ற மாசு விளைவிக்கும் இரசாயன வாயுக்கள் தொழிற்கூடங்களில் கசிந்திருக்கும் அளவு மற்றும் பணிச் சூழலைக் கண்காணிக்க சோதனைக் கூடத்துடன்கூடிய தொழில் சுகாதார மையம் ஒன்று இத்துறையின்கீழ் இயங்கி வருகிறது. தொழிற்கூடங்களில் இரசாயன வாயுக்களின் நச்சுத் தன்மை கையடக்கமான மல்ட்டி கேஸ் அனலைசர் மூலம் கண்டறியப்பட்டு வருகிறது. மேலும், நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருட்களினால் ஏற்படக்கூடிய உடல் நலம் மற்றும் சுகாதாரக் கேடுகளைக் கண்டறிந்து, தேவையான தீர்வு ஆலோசனைகள் வழங்கி வருகிறது. ஒலி, தூசி மற்றும் வெப்பம் போன்ற பௌதீக காரணிகளால் உண்டாகக்கூடிய உடல்நல பாதிப்புகள் குறித்தும் தொழில் சுகாதாரப் பிரிவு ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

**ஒலி மாசு**

5.27. தொழிற்சாலைகளில், அதிகப்படியான இரைச்சல் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. இதன்காரணமாக தொழிலாளர்களது காதுகள் செவிடாதல் மற்றும் அவர்களின் மனநிலை பாதிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை தடுத்திடும் வகையில்,

[2008 ஏப்ரல் 25

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள ஒலி மாசு குறித்து அளவீடு செய்ய ஆய்வாளர்களுக்கு "ஒலி அளப்பான்" கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் அவற்றைப் பயன்படுத்தி ஆய்வுகளின்போது ஒலி அளவினைக் கண்காணித்து, தொழிலாளர்களை அந்த இரைச்சலிலிருந்து பாதுகாக்க தடுப்பு நடவடிக்கைகளைச் செய்து கொடுக்க நிருவாகத்தினருக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

**அழுத்தக் கலன் சோதனைப் பணிகள்**

*5.28.* தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதரச் சட்டங்களை அமல்படுத்துவதோடு, தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக் கலன்கள் பாதுகாப்புடன் செயல்படும் விதத்தில் அவற்றின் செயல்பாட்டு வழிமுறைகளை உறுதி செய்வதும், இத்துறையின் முதன்மைப் பணிகளில் ஒன்றானதாகும். காற்று அழுத்தத்திற்கு மேல் செயல்படும் அனைத்து அழுத்தக் கலன்களும் இந்திய கொதிகலன்கள் சட்டத்தின்கீழ் வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புறச் சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புறச் சோதனையும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்தச் சோதனையும், தொடர் உற்பத்தி முறைகளில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலிச் சோதனையும் செய்யப்படுகின்றன.

**பாதுகாப்பு விருதுகள்**

*5.29.* தொழிற்சாலை நிருவாகத்தினர் ஆண்டுதோறும் தங்களது தொழிற்சாலைகளில் விபத்துக்களைத் தடுத்திடும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகளின் அடிப்படையில் ஆண்டுதோறும் மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகள் செயல்பட்ட மனித நேரங்கள் அடிப்படையில், தொழிற்சாலைகள் *3* பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, (அ) முந்தைய ஆண்டினை ஒப்பிடுகையில் விருது வழங்கும் ஆண்டில் பணிபுரிந்த மனித நேரங்கள் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விபத்து நிகழ்வு எண்ணிக்கை விகிதம் குறைவு, (ஆ) நடப்பு ஆண்டில் ஏற்பட்ட குறைவான விபத்து நிகழ்வு எண்ணிக்கை, (இ) மிக அதிகமாக விபத்து



2008 ஏப்ரல் 25]

நிகழா மனித நேரங்கள் போன்ற காரணிகளின் அளவீடுகளை சீர்தூக்கி, இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், முதல் பரிசாக ஒவ்வொன்றும் ரூ.*2,500/-* மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் *90* நிறுவனங்களுக்கும், இரண்டாம் பரிசாக ஒவ்வொன்றும் ரூ.*1,500/-* மதிப்பில் வெள்ளிக் கேடயங்கள் *90* நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்றன.

*5.30.* இதைப்போன்று, விபத்துத் தடுப்பு நடவடிக்கை மற்றும் உற்பத்தித் திறன் மேம்படுத்தலில் முக்கியப் பங்கேற்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டும் 'சிரம் வீர் விருது' எனப்படும் "தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர்" விருது வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பணிச் சூழ்நிலைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்புத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றைக் குறித்து பயன்மிக்க கருத்துகள் தரும் தொழிலாளர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

**பாதுகாப்புப் பயிற்சிப் பணிகள்**

*5.31.* மண்டல அளவில், தொழிலாளர்களுக்கும் நிருவாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக, பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதுடன் அதிக அளவில் விபத்துக்கள் நிகழும் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அளவீடுகள் (Safety Surveys) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*5.32.* காலமுறைதோறும் தொழிலாளர் மற்றும் நிருவாகத்தினரிடையே பாதுகாப்புப் பணிமுறைகள் மற்றும் தொழிலியல் பாதுகாப்பு குறித்து பயிற்றுவிக்கும் வகையில் பயிற்சி வகுப்புகள் தொழிற்சாலை வளாகத்திலேயே கட்டணம் ஏதுமின்றி நடத்தப்பட்டு வருகின்றன. இந்த பயிற்சி வகுப்புகள் தமிழில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த பயிற்சி வகுப்புகள் தொழிலாளர் மற்றும் நிருவாகத்தினரிடம் விபத்துக்களைக் குறைத்திட பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் அதிகம் உதவி புரிவதால் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. *2007* ஆம் ஆண்டில் *158* பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு *8,913* தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

[2008 ஏப்ரல் 25

## அத்தியாயம்–VI

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு கீழ்க்கண்டுள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள், கருத்துப் பட்டறைகள், பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள், புத்தறிவுப் பயிற்சிகள் நடத்துவதை குறிக்கோளாகக் கொண்டு நிறுவப்பட்டது:

(அ) தொழிலாளர்கள்

(ஆ) தொழிற்சங்க அலுவலர்கள்

(இ) தொழிற்சாலை மேற்பார்வையாளர் மற்றும் மேலாண்மைப் பணியாளர்

(ஈ) தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலை ஆய்வக அலுவலர்கள்

(உ) வியாபாரிகள்

(ஊ) அரசு நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், உள்ளாட்சி அமைப்புகள்

6.2. இக்கல்வி நிலையம், தமிழ்நாடு அரசால், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட "ஆட்சி மன்றக் குழு" என்றழைக்கப்படும் உயர் மட்டக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

6.3. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்:—

1. தொழிலாளர் மேலாண்மையில் இளங்கலை, முதுகலை பட்டப் படிப்புகள் மற்றும் ஆய்வறிஞர்களுக்கான முனைவர் படிப்பு நடத்துகிறது.

2. தொழிலாளர் நிருவாகத்தில் ஓராண்டு பகுதி நேர முதுகலை பட்டயபடிப்பு நடத்துகிறது.

3. அபாயகரமான தொழிற்சாலைகளில் பணியாற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் உடல்நலம் பற்றி ஒருமாத சான்றிதழ் பயிற்சி நடத்துகிறது.



2008 ஏப்ரல் 25]

6.4. மொத்தத்தில், இக்கல்வி நிலையம் தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் உட்பட 1,827 நபர்கள் பயனடையும் வகையில் 30 கருத்தரங்குகள்/பயிற்சிகள் நடத்தியுள்ளது.

6.5. பணியாளர் மேலாண்மை மற்றும் தொழிலாளர் நலம் தொடர்பான பொருள் குறித்து ஆராய்ச்சிகள் செய்தல் இக்கல்வி நிலையத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். இக்குறிக்கோளை நிறைவேற்ற மத்திய தொழிலாளர் அமைச்சகம் மற்றும் வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையம், நொய்டா ஆகிய முகமைகளிலிருந்து தரப்படும் ஆராய்ச்சித் திட்டங்களை இக்கல்வி நிலையம் ஏற்றுக்கொள்கிறது.

6.6. அபாயகரமான தொழிற்சாலைகளில் பணியாற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்கு "பாதுகாப்பு மற்றும் உடல்நலம்" பற்றிய ஒரு மாத சான்றிதழ் பயிற்சி 15-10-2007 முதல் 3-11-2007 வரை நடத்தப்பட்டு, 25 பேர் பங்கு பெற்று பயன்பெற்றுள்ளனர்.

6.7. குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவது குறித்து மாவட்ட ஆட்சியாளர்கள் அனுப்பும் "குழந்தைத் தொழிலாளர்கள் இல்லா மாவட்டம்" என்ற முன்மொழிவுகள், இக்கல்வி நிலையத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு, மதிப்பீட்டு அறிக்கைகள் தொழிலாளர் நலத் துறையின் மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச் சங்கத்திற்கு அனுப்பப்படுகிறது.

6.8. மலேசிய நாட்டில் வேலைக்குச் செல்ல விரும்பும் அனைத்து இந்தியப் பணியாளர்களும் வேலைவாய்ப்பு விசா பெறுவதற்கு, உள்ளிணைப்புப் பயிற்சி முடித்து மலேசிய அரசால் வழங்கப்படும் உள்ளிணைப்புப் பயிற்சி (Induction Course) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் என மலேசிய அரசு அறிவித்தது. தமிழ்நாடு அரசு இந்த உள்ளிணைப்புப் பயிற்சியை நடத்த தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தைத் தெரிவு செய்து அனுமதியளித்துள்ளது. இதுவரை 78 பயிற்சிகள் நடைபெற்று 4,357 பேர் பங்கு பெற்று பயனடைந்துள்ளனர்.

[2008 ஏப்ரல் 25

## அத்தியாயம்–VII

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

**அ . வேலைவாய்ப்புப் பிரிவு**

*7.1.* வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், அறிவிக்கப்பட்ட காலிப் பணியிடங்களுக்கு அவர்களைப் பரிந்துரைத்தல், தொழில்நெறி வழிகாட்டிப் பணிகள் ஆற்றுதல், வேலையில் இருப்போர் மற்றும் வேலைவாய்ப்பற்றோர் பற்றிய புள்ளிவிவரங்களைக் காலமுறைப்படி சேகரித்து, அறிக்கைகள் தயார் செய்தல் மற்றும் வேலை வாய்ப்பற்றோர்க்கான உதவித் தொகைத் திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகியவை வேலைவாய்ப்புப் பிரிவின் பணிகளாகும்.

**நிருவாக அமைப்பு**

*7.2.* வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் ஆணையர், துறைத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக மூன்று இணை இயக்குநர்கள் உள்ளனர். சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 4 மண்டல துணை இயக்குநர் அலுவலகங்கள் உள்ளன. மாவட்ட அளவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களின் பொறுப்பில் உள்ளன.

**1. வேலைவாய்ப்பகங்கள்**

*7.3.* வேலைவாய்ப்பகங்கள் ஊதியத்துடன்கூடிய வேலை வாய்ப்புகளைக் கண்டறிவதில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. தொழில்முறை வழிகாட்டிப் பணிகள்மூலம் சுய வேலைவாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் வேலைவாய்ப்பகங்கள் உதவிபுரிகின்றன. தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 31 வருவாய் மாவட்டங்களில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்டத்தைத் தவிர எஞ்சியுள்ள மாவட்டங்களில் தலா ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. இதுதவிர, உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில் திறனற்றோருக்கான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் சென்னையில் செயல்பட்டு வருகின்றன. சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில்நுட்பக் கல்வித் தகுதியுடையவர்களுக்கு தலா ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இவ்வாறாக, தமிழ்நாட்டில் 35 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டி மையங்கள்



2008 ஏப்ரல் 25]

திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலும், பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஒன்று உதகமண்டலத்திலும் இத்துறையின் நிருவாகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

*7.4. 1-1-2007* முதல் *31-12-2007* வரை *11,21,479* மனுதாரர்கள் தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளனர். *30,056* நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். *1-1-2008* முதல் *31-3-2008* வரை *79,544* மனுதாரர்கள் பதிவு செய்துள்ளனர். *5,693* நபர்கள் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். *31-3-2008* நிலவரப்படி உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை *49,58,231* ஆகும்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிடங்கள் அறிவித்தல்) சட்டம், 1959**

*7.5.* வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (கட்டாயக் காலியிடங்கள் அறிவித்தல்) சட்டம் 1959-ன்கீழ், வேலையளிப்போரிடமிருந்து வேலைநிலவரத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் தொடர்புகொள்ளப்பட்டு பெறப்பட்ட, *30-6-2006* மற்றும் *30-6-2007* ஆண்டு முடிய அந்நிறுவனங்களில் பணியாற்றிய மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம் | 30-6-2006 உடன் முடிவுற்ற ஆண்டு | | 30-6-2007 உடன் முடிவுற்ற ஆண்டு | |
|---|---|---|---|---|---|
| | | பொதுத் துறை | தனியார் துறை | பொதுத் துறை | தனியார் துறை |
| 1 | தொடர்பு கொள்ளப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை | 12,166 | 13,016 | 12,244 | 13,303 |
| 2 | விவரங்கள் தந்துள்ள நிறுவனங்கள் | 12,166 | 12,335 | 12,186 | 12,715 |
| 3 | மொத்தப் பணியாளர் எண்ணிக்கை | 14,93,525 | 7,39,945 | 14,93,877 | 8,09,547 |

11-96—10

[2008 ஏப்ரல் 25

**தொழில் முறை வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்பு கலந்தாய்வு**

7.6. மாற்றங்களுக்கு ஏற்ப தொடர்ச்சியான உதவிகளை வேலைநாடுநர்களுக்கு வழங்குதல், மாற்றங்களுக்கு ஏற்ப வேலைவாய்ப்பிற்கான காரணிகளைச் சரிசெய்தல், வேலைவாய்ப்பு நிலவரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்பினை அதிகரிப்பதற்கு ஏதுவாக மற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் ஆகியன தொழில் முறை வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்பு கலந்தாய்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

7.7. மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்குத் தொழில்நெறி வழிகாட்டுதல் மிகவும் அவசியமானது. தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள் 17 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுகின்றன. பதிவின்போது வழிகாட்டல், தனி நபர் தகவல் அளித்தல், மூத்த பதிவுதாரர்களை ஆய்வு செய்தல், குழுக் கலந்துரையாடல் நடத்துதல், தொழில் தகவல்கள் பற்றிய விவரங்கள் அளித்தல், தொழிற் பழகுநர் பயிற்சியில் அமர்த்தல் மற்றும் பிற பயிற்சிகளில் அமர்த்தல், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தொழில்நெறிச் சொற்பொழிவாற்றுதல், வேலையளிப்போர்களுடனான தொடர்பை வளர்த்தல், தொழில்நெறிக் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் போன்றவை தொழில்நெறி வழிகாட்டல் செயல்பாடுகளில் அடங்கும்.

7.8. 1-1-2007 முதல் 31-12-2007 வரை 993 மனுதாரர்களும், 1-1-2008 முதல் 31-3-2008 வரை 52 மனுதாரர்களும் தொழிற் பழகுநர் பயிற்சியில் அமர்த்தப்பட்டனர். 2007 ஆம் ஆண்டில் 31-12-2007 வரை 594 தொழில்நெறி சொற்பொழிவுகளும், 17 தொழில்நெறிக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் 1-1-2008 முதல் 31-3-2008 வரை 131 தொழில்நெறி சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன.

**சுய வேலைவாய்ப்பு**

7.9. 1-1-2007 முதல் 31-3-2008 வரை சுய வேலைவாய்ப்பிற்காகக் கடனுதவி பெற்றிட 7,068 மனுதாரர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.



2008 ஏப்ரல் 25]

**உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம்**

7.10. சென்னை, சாந்தோமில் அமைந்துள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோவில், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உதகமண்டலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றோருக்கான 13 சிறப்புப் பிரிவுகள் ஊனமுற்றோருக்கு ஏற்ற வகையிலான பணியமர்த்தல் மற்றும் மறுவாழ்வுக்கான பணிகளை மேற்கொண்டுள்ளன.

7.11. 1-1-2007-லிருந்து 31-12-2007 வரை 390 கண்பார்வையற்றோரும், 413 செவிப்புலன் இழந்தோரும் மற்றும் 5,059 உறுப்பு நலம் குன்றியோரும், 1-1-2008 முதல் 31-3-2008 வரை, 55 கண்பார்வையற்றோரும், 66 செவிப்புலன் இழந்தோரும், 552 உறுப்பு நலம் குன்றியோரும் பதிவு செய்துள்ளனர். 31-3-2008 நிலவரப்படி 82,890 உடல் ஊனமுற்றோர்கள் பதிவு செய்து வேலைக்காக உயிர்ப்பதிவேட்டில் காத்திருக்கின்றனர். அவர்களில் 9,080 கண்பார்வையற்றோர், 7,830 செவிப்புலனிழந்தோர் மற்றும் 65,980 உறுப்பு நலம் குன்றியோர் ஆவர். 1-1-2007 முதல் 31-12-2007 வரை 982 உடல் ஊனமுற்ற பதிவுதாரர்களும், 1-1-2008 முதல் 31-3-2008 வரை 206 உடல் ஊனமுற்ற பதிவுதாரர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பற்றோர் நிவாரணம் வழங்கும் திட்டம்**

7.12. 2007-2008 ஆம் ஆண்டில், 1,092 நபர்களுக்கு ரூ.41.89 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**சிறப்பு தொழில்முறை வழிகாட்டும் மையம்**

7.13. பழங்குடி இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. பழங்குடியினருக்காக உதகமண்டலத்தில் சிறப்பு வழிகாட்டி மையம் இயங்கி வருகிறது. பழங்குடியினருக்கான துணைத் திட்டத்தில் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

[2008 ஏப்ரல் 25

| வ. எண் | செயல்பாடுகளின் விவரம் | 1-1-2007 முதல் 31-12-2007 வரை | 1-1-2008 முதல் 31-3-2008 வரை |
|---|---|---|---|
| 1. | நெடுந்தொலைவில் வசிக்கும் பதிவு செய்யப்பட்ட பழங்குடியின மனுதாரர்கள் எண்ணிக்கை | 113 | 88 |
| 2. | பதிவின்போது வழிகாட்டப்பட்ட பழங்குடியின மனுதாரர்களின் எண்ணிக்கை | 315 | 119 |
| 3. | தனிநபர் தகவல் வழங்கப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை | 297 | 119 |
| 4. | வழிகாட்டுதலுக்காக நடத்தப்பட்ட குழு விவாதங்கள் | 2,212 | 200 |
| 5. | குழு விவாதங்களில் கலந்து கொண்டு பயன் பெற்ற பழங்குடியின மனுதாரர்களின் எண்ணிக்கை | 1,137 | 72 |
| 6. | ஆற்றப்பட்ட தொழில் நெறி சொற்பொழிவுகள் | 139 | 113 |
| 7. | தொடர்பு கொள்ளப்பட்ட வேலையளிப்போர்/ நிறுவனங்களின் எண்ணிக்கை | 35 | 8 |
| 8. | பார்வையிடப்பட்ட பழங்குடியின பள்ளிகள் மற்றும் தங்கும் விடுதிகளின் எண்ணிக்கை | 17 | 3 |

**சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்**

*7.14.* தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மற்றும் வேலூர் ஆகிய 5 இடங்களில் ஆதிதிராவிட/ பழங்குடி இன மனுதாரர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டுவதற்காக பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் செயல்பட்டு



2008 ஏப்ரல் 25]

வருகின்றன. வாழ்க்கை நெறி வழிகாட்டல், தொழில் தகவல்கள் பற்றிய விவரங்கள் அளித்தல், வேலை மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல், உள்ளூர் வேலை வாய்ப்பகங்களுடன் இணைந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான உரிய தொழில் முறை வழிகாட்டும் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை வழிகாட்டும் நிலையங்களின் முக்கிய நோக்கமாகும்.

*7.15.* மேற்கண்ட ஆலோசனைப் பணிகள் தவிர, அவ்வப்போது பல்வேறு தேர்வுக் குழுக்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஆதி திராவிட/பழங்குடியின மனுதாரர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தும் பணிகளையும் இம்மையங்கள் ஆற்றி வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் ஆதி திராவிட/பழங்குடியின இளைஞர்களின் வெற்றிவாய்ப்பிற்கு வழிவகுக்கின்றன.

*7.16.* சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின்கீழ் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டும் மையங்களின் மூலமாகப் பயனடைந்த ஆதி திராவிட / பழங்குடியின பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :—

| வ. எண் | செயல்பாடுகளின் விவரம் | 1-1-2007 முதல் 31-12-2008 வரை | 1-1-2008 முதல் 31-3-2008 வரை |
|---|---|---|---|
| 1. | தொழில்நெறி மற்றும் பயிற்சி பற்றிய தகவல்கள் வழங்கப்பட்ட ஆதி திராவிட / பழங்குடியின பதிவுதாரர்களின் எண்ணிக்கை | 6,632 | 867 |
| 2. | ஆதி திராவிட / பழங்குடியின பதிவுதாரர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்க நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 309 | 36 |
| 3. | நிகழ்த்தப்பட்ட வேலைவாய்ப்பு சொற்பொழிவுகளின் எண்ணிக்கை | 270 | 60 |
| 4. | சுய வேலைவாய்ப்பிற்காக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 799 | 422 |

**தன்னார்வப் பயிலும் வட்டங்கள்**

7.17. ஊரகப் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களின் பயன்பாட்டிற்காக 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்டத் தலைமையகங்களில் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள போட்டித் திறனை அதிகப்படுத்துவதே இந்த தன்னார்வப் பயிலும் வட்டங்களின் நோக்கமாகும். பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படுகின்ற போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதுடன் போதுமான பாடப் புத்தகங்கள், மாத / வார இதழ்கள், நாளிதழ்கள் மற்றும் பாடக் குறிப்புகள் ஆகியவை தன்னார்வப் பயிலும் வட்டங்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளன.

7.18. 2007-08 ஆம் ஆண்டு வரை தன்னார்வப் பயிலும் வட்டங்களின் வாயிலாக 2,797 இளைஞர்கள் பணி வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

**தனியார் துறை வேலைவாய்ப்பில் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பங்கு**

7.19. கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழகத்தில் உற்பத்தி மற்றும் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள சிறப்பான வளர்ச்சியின் பின்னணியில் வேலைவாய்ப்பு அலுவலகங்களும் பணிநாடும் இளைஞர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தந்திட முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. புதுமையான இத்திட்டத்தின்கீழ் மாநிலத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை ‘தனியார் வேலைவாய்ப்பு வழங்கும் நாள்’ கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில், உள்ளூர் வேலையளிப்போர் மற்றும் வேலைநாடும் மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலேயே சந்திக்கின்றனர். தனியார் நிறுவனங்கள் அன்றைய தினமே பணிவழங்கும் பணியினையும் முடிக்கின்றனர். தனியார் துறை வேலையளிப்பவர்களுக்கு, தேர்வு செய்வதற்கான செலவினம் மற்றும் காலம் மிச்சமாவதால் இத்தகைய முகாம்கள் பரவலாக வரவேற்கப்படுகின்றன. இப்பணி, தனியார் துறை வேலையளிப்பவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகிறது. 1-1-2007 முதல் 31-12-2007 வரை மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களால் 2,683 மனுதாரர்களும், 1-1-2008 முதல் 31-3-2008 வரை 192 மனுதாரர்களும் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.



**வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்**

7.20. இம்மாநிலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கணினிமயமாக்க அரசு ரூ. 2,90,04,743/- வழங்கியுள்ளது.

7.21. மத்திய அரசு மின்னணு ஆளுமையைச் செயல்படுத்தும் துறைகளில் ஒன்றாக வேலைவாய்ப்பு அலுவலகங்களைக் கண்டறிந்துள்ளது. அதற்கேற்ப தமிழ்நாடு அரசு, மின் அணு ஆளுமையின்கீழ் கண்டறிந்துள்ள துறைகளைப்பற்றி ஒரு திட்ட அறிக்கை தயார் செய்ய விப்ரோ நிறுவனத்தினை ஆலோசகராக நியமித்துள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட கருத்துருவின் மீதான சில குறிப்புகள் / கருத்துகளின் அடிப்படையில், ஒரு திருத்திய வரைவு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு ஒப்புதல் அளித்த பின் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**பணியமர்த்தலை ஊக்குவிக்க இணையதளம் அமைத்தல்**

7.22. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில், வேலை வாய்ப்புப் பிரிவில் பணியமர்த்தலை ஊக்குவிக்க www.employment.tn.gov.in என்ற இணையதளம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.23. தனியார் துறையைச் சார்ந்த வேலையளிப்பவர்கள் அவர்களது தேவைக்கேற்ற மனுதாரர்களைத் தேர்வு செய்வதற்கு ஏதுவாக மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் மற்றும் செயல் கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ள 4.08 இலட்சம் மனுதாரர்களின் பதிவு விவரங்கள் அடங்கிய விவர வங்கி இந்த இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் சென்னை, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பதிவுகள் ஆன்லைன் முறையில் புதுப்பிக்கப்படவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் உயர்கல்வி வசதிகள், போட்டித் தேர்வுகள் மீதான விவரங்கள் போன்ற தொழில்நெறி வழிகாட்டல் பணிகள் குறித்த அனைத்து விவரங்களும் முழுமைப்படுத்தப்பட்டு மனுதாரர்களின் பயன்பாட்டிற்காக அளிக்கப்பட்டு வருகின்றன.

[2008 ஏப்ரல் 25

**வேலைவாய்ப்பு தடைச் சட்டத்தை நீக்கி, வயது உச்சவரம்பை 5 ஆண்டுகள் உயர்த்தியமை**

7.24. சில காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அரசுப் பணிகளில் நியமனத்திற்கான உச்ச வயது வரம்பை 5 ஆண்டுகள் தளர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனால் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள வேலை கிடைக்காத இளைஞர்கள் அரசின் பல்வேறு துறைகளில் பல்வேறு பணிகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

**புதுப்பித்தல் சலுகைகள்**

7.25. அரசு பல்வேறு புதுப்பித்தல் சலுகைகளை, பதிவுகளைப் புதுப்பிக்காத மனுதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இதனால் 3,80,138 மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

**2. வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டம்**

7.26. படித்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் பல்லாண்டுகள் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

7.27. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் காத்திருக்கும் இளைஞர்களில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/- வீதமும், மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/- வீதமும் மற்றும் பட்டதாரிகள் மற்றும் முதுநிலை பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/- வீதமும் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு உதவித்தொகையாக வழங்க இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு 45 வயது எனவும், இதர பயனாளிகளுக்கு 40 வயது எனவும் உச்ச வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

7.28. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு காலாண்டிற்கும் பயனாளிகளின் பட்டியல் தயார் செய்யப்பட்டு கருவூலங்களுக்கு அனுப்பப்படுகிறது. அக்காசோலைகள் பாரத ஸ்டேட் வங்கி வாயிலாகப் பயனாளிகளின் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 25]

7.29. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 3,53,488 இளைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31-3-2008 வரை உதவித் தொகையாக ரூ.116,59,23,454/- வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. பயிற்சிப் பிரிவு**

7.30. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் ஆணையர், துறைத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக ஆணையரகத்தில் இரண்டு இணை இயக்குநர்கள் மற்றும் ஐந்து மண்டல இணை இயக்குநர்கள் பணியாற்றி வருகின்றனர். தொழிற் நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு திறன் வாய்ந்த மனித ஆற்றல் தேவைப்படுகின்றது. தொழிலாளர்களின் திறனை மேம்படுத்த வாழ்வியல் பயிற்சித் திட்டம் வழிவகை செய்கிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் இயங்கும் பயிற்சிப் பிரிவு கைவினைஞர் பயிற்சித் திட்டம் மற்றும் தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகின்றது.

**1. கைவினைஞர் பயிற்சித் திட்டம்**

7.31. உள்நாடு மற்றும் வெளிநாட்டின் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப முறையான தொழிற் பயிற்சியின்மூலம் பல்வேறு தொழிற்பிரிவுகளில் திறமை வாய்ந்த செயல் திறன் மிக்க பயிற்சியாளர்களை உருவாக்க, கைவினைஞர் பயிற்சித் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்படுகிறது. இப்பயிற்சி தொழிற் சாலைகளின் உற்பத்தியின் அளவையும், அதன் தரத்தினையும் உறுதி செய்கிறது. பயிற்சி பெற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பெருக்கிக்கொள்ளும் அளவிற்கு இத்திட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

7.32. இம்மாநிலத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் குறிப்பாக, ஏழை எளிய மற்றும் நலிவுற்ற பள்ளிக் கல்வி இடையுற்று இளைஞர்களுக்கு பயன் அளிக்கக்கூடிய வேலைவாய்ப்பினை பெருக்கிக்கொள்ள தொழிற்திறன் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**அ. அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள்**

7.33. தமிழ்நாட்டில் உள்ள 59 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், 39 பொறியியல், 17 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகள் மற்றும் திறன்மிகு மையங்களின்கீழ் 11 பிரிவுகள்

ஆகியவற்றில் ஆறு மாதங்கள் முதல் மூன்று வருடங்கள் வரையிலுள்ள பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இவற்றின் மொத்த இருக்கைகள் 21,224 ஆகும். 59 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் மகளிருக்கென 12 நிலையங்களும், ஆதி திராவிடர்களுக்கென சிதம்பரத்தில் ஒரு நிலையமும், மலைவாழ் மக்களுக்கென சங்கராபுரத்தில் ஒரு நிலையமும் இயங்குகின்றன. 2007 ஆம் ஆண்டிற்கான சேர்க்கை எண்ணிக்கை 15,321 ஆகும். அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பிரிவுகள் மற்றும் பாடத் திட்டங்கள் அகில இந்திய அளவில் ஒரே சீராக இருக்கும் வகையில் தேசிய தொழில் நெறி கல்வி பயிற்சித் திட்டக் குழுவினால் வடிவமைக்கப்பட்டு அதனால் பயிற்சியாளர்கள், தேசிய அளவில் நடத்தப்படும் அகில இந்திய தொழிற் தேர்வில் பங்கேற்கவும், அகில இந்திய திறனாய்வுப் போட்டியில் பங்கேற்று நாட்டின் எப்பகுதியிலும் வேலைவாய்ப்பு பெறவும் வழிவகை செய்கிறது.

7.34. மேற்குறிப்பிட்ட 59 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆண்டிமடம், பெரம்பலூர் மற்றும் சிவகங்கை தொழிற் பயிற்சி நிலையங்கள் ரூ. 801.49 இலட்சம் செலவில் புதியதாக ஆகஸ்ட் 2007 முதல் தொடங்கப்பட்டன.

**7.35. முக்கிய அம்சங்கள்**

1. 39 பொறியியல் பிரிவுகளிலும், 17 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
2. தொழிற் பயிற்சி நிலையங்களில் சேருவதற்கு குறைந்த பட்ச கல்வித் தகுதி எட்டாம் வகுப்பு தேர்ச்சி ஆகும்.
3. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஆண்டுக்கு ஒரு முறை மதிப்பெண் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு அடிப்படையிலும் மாணவர் / மாணவியர் சேர்க்கை நடைபெறுகிறது.
4. அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் பயிற்சி துவங்குகிறது.
5. பயிற்சிக் காலத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது :—





| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆதி திராவிடர்களுக்கு | : | ரூ.150/- மாதந்தோறும் |
| (ஆ) | பழங்குடியினத்தவருக்கு | : | ரூ.175/- மாதந்தோறும் |
| (இ) | சீர்மரபினருக்கு | : | ரூ.140/- மாதந்தோறும் |
| (ஈ) | பர்மா/இலங்கை/வியட்நாம் அகதிகளுக்கு | : | ரூ.175/- மாதந்தோறும் |
| (உ) | மொத்த பயிற்சியாளர்களில் 1/3 பகுதியினருக்கு அவர்களது பெற்றோர் வருமானம் ரூ.16,100/-க்கு மிகாமல் இருத்தல் | : | ரூ.50/- மாதந்தோறும் |

6. பயிற்சியின் முடிவில் அகில இந்திய அளவில் ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதம் தொழிற் தேர்வு நடத்தப்பட்டு அரசின் இணைய தளத்தில் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

**நவீன தொழிற்பிரிவுகள்**

7.36. தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய தொழிற் பிரிவுகளான கம்மியர் தொழிற்சாலை மின்னணுவியல், கம்மியர் இயந்திர மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் சாதனங்கள் பராமரிப்பு, கம்மியர் கணினி வன்பொருள், கைவினைஞர், உணவு தயாரிப்பவர் (பொது), லித்தோ ஆப்செட் மெஷின் மைண்டர், எண்ணியியல் புகைப்படக் கலைஞர், ஓட்டுநருடன் கூடிய கம்மியர் போன்றவை, பல்வேறு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், நெட்வொர்க் தொழிற் நுட்ப பணியாள், மின்தூக்கி கம்மியர், தானியங்கி வாகன மின்சாரம் மற்றும் மின்னணுவியல், கணினி முறைப்படி பூ தையல் மற்றும் ஊசிவேலைப்பாடு போன்ற புதிய தொழிற் பிரிவுகள் 5 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ. 111.28 இலட்சம் செலவில் ஆகஸ்ட் 2007-ல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மதுரை, திருநெல்வேலி (பேட்டை), தருமபுரி, திருவண்ணாமலை, ஓசூர் ஆகிய 5 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி

நிறுவனம் (TIDCO) வழியாக ஏற்றுமதி, உள்கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய நடவடிக்கை வளர்ச்சிக்கு மாநிலத்திற்கு உதவி (ASIDE) மூலம் ரூ.2 கோடி செலவில் பின்னலாடை மற்றும் தையல் இயந்திரம் இயக்குபவர் எனும் தொழிற் பிரிவினை துவங்க ஒப்பளிக்கப்பட்டது. அரசும் இப்பயிற்சிக்காக ரூ.5.25 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

7.37. தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் கூட்டு நடவடிக்கையை முன்னேற்றவும், தொழில் திறன் மேம்பாட்டில் தொழில் நிறுவனங்களின் பங்கினை வளர்த்திடவும், அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் நிலைய மேலாண்மை குழு (Institute Managing Committee) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள தொழிற் நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் இக்குழுவின் தலைவராகச் செயல்படுகிறார்.

**அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள்**

7.38. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் திறமைவாய்ந்த கைவினைஞர்களை உருவாக்கும் அரசின் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் உறுதுணையாக உள்ளன. அந்த முயற்சியில் தமிழ்நாட்டில் 605 தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் 58,880 இருக்கைகளுடன் தேசிய தொழிற் நெறி பயிற்சித் திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் 50 விழுக்காடு இருக்கைகள் மதிப்பெண் மற்றும் அரசின் இட ஒதுக்கீடு அடிப்படையில் பூர்த்தி செய்யப்படுகின்றன.

**ஆ. தொழிற்பள்ளிகள்**

7.39. தமிழ்நாட்டில் 96,998 இருக்கைகள் கொண்ட 987 தொழிற் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இத்தொழிற் பள்ளிகளில் 60 நீண்ட கால மற்றும் 50 குறுகிய கால தொழிற் பிரிவுகள் என 110 தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. தொழிற் பள்ளிகள் துவங்கப்பட்டதன் முக்கிய நோக்கம் படித்த ஊரக மற்றும் கிராமப்புற ஏழை மாணவ மாணவியர் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு வாழ்வியல் பயிற்சி அளிப்பதாகும். இப்பள்ளிகளில் சேர குறைந்தபட்ச கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு ஆகும். இத்தொழிற் பள்ளிகளில் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பாடங்களுடன் உணவு தயாரித்தல், தையற் கலை, கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள், அழகுக்கலை போன்ற தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலம் 45 நாட்கள் முதல் 3 ஆண்டுகள் வரை ஆகும். இப்பயிற்சியாளர்களுக்கு மாநில அளவில் ஆண்டுதோறும்





ஜூன் மாதம் பொதுத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாநில அரசால் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 987 தொழிற் பள்ளிகளுள், 45 பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஒரு கோடி மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

**இ. திறன்மிகு மையங்கள்**

7.40. மத்திய அரசு, இந்தியா முழுவதும் 5 ஆண்டுகளில் 500 தொழிற் பயிற்சி நிலையங்களை, வருடந்தோறும் 100 தொழிற் பயிற்சி நிலையங்கள் வீதம் திறன்மிகு மையங்களாக மேம்படுத்தும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த கைவினைஞர்களை உருவாக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்கான செலவினத்தை 75 : 25 என்ற விகிதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன. இதுவரை 16 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாட்டில் திறன்மிகு மையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன. அம்பத்தூர், கோயம்புத்தூர், ஓசூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகியவை ஒவ்வொன்றும் ரூ.160 இலட்சம் செலவில் உள்நாட்டு நிதியிலும், 2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் கிண்டி (மகளிர்), மதுரை, பேட்டை, கிண்டி மற்றும் வேலூர் ஆகியவை சர்வதேச வளர்ச்சிக் குழுமத்தின் (IDA) நிதியுதவியிலும், செங்கற்பட்டு, வடசென்னை, தஞ்சாவூர், கடலூர், கோயம்புத்தூர் (மகளிர்) மற்றும் தூத்துக்குடி ஆகியவை ஒவ்வொன்றும் ரூ.3.5 கோடி செலவில் உலக வங்கி உதவியுடனும், திறன்மிகு மையங்களாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

**அரசு மற்றும் தனியார் பங்களிப்பில் தொழிற் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்**

7.41. 2008-2009 ஆம் ஆண்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் கீழ்க்கண்ட 12 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றும் ரூ.2.5 கோடி செலவில் மேம்படுத்தப்படவுள்ளன:

1. கடலூர் (மகளிர்)
2. திருப்பூர்
3. சேலம் (மகளிர்)
4. மேட்டூர் அணை
5. நாகர்கோவில்
6. தேனி
7. திண்டுக்கல் (மகளிர்)
8. செக்காணூரணி
9. நீடாமங்கலம்
10. விருதுநகர்
11. உளுந்தூர்பேட்டை
12. திருச்செந்தூர்

ஆகஸ்ட் 2008 முதல் பயிற்சிகள் தொடங்கப்படவுள்ளன.

[2008 ஏப்ரல் 25

### ஈ. வேலைவாய்ப்புத் திறன் எய்தும் பயிற்சி

7.42. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் வேலைவாய்ப்புத் திறன் எய்தும் பயிற்சி 2007 ஆம் ஆண்டு முதல் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. ரூ. 8 கோடி செலவில் 50,000 வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி 56 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் ஒரு அரசு அடிப்படை பயிற்சி மையத்திலும் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. தகுதி | (i) | வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை பெறுபவராக இருக்கவேண்டும். |
| | (ii) | மேலே பிரிவு I-ல் குறிப்பிட்டுள்ள விண்ணப்பதாரர்கள் போதுமான அளவில் இல்லையெனில் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். |
| | (iii) | மேலே பிரிவு 1 மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ளபடி போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்த அல்லது பதிவு செய்யாத நபர்களை தகுதிக்குட்பட்டு விளம்பரங்கள் மற்றும் தொழிற் சாலைகள் மூலம் பெற வேண்டும். |
| | (iv) | விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வதில் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டும். |
| 2. கல்வித் தகுதி | | 5 ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவிற்கு வரையறுக்கப்பட்டுள்ள தகுதி |
| 3. வயது | | 40 வயது தாண்டியவராக இருக்கக் கூடாது. ஆதி திராவிட / பழங்குடியின விண்ணப்பதாரர்களுக்கு வயது மேலும் 5 ஆண்டுகள் தளர்த்தப்படும். |
| 4. பயிற்சி நேரம் | | அனைத்து பணி நாட்களிலும் மாலை 5 மணி முதல் 8 மணி வரை; மேலும் வார இறுதி நாளில் (சனிக்கிழமை.) |



2008 ஏப்ரல் 25]

| | |
|---|---|
| 5. பயிற்சிக் காலம் | ஒரு பிரிவிற்கும் மற்றொரு பிரிவிற்கும் மாறுபடும். |
| 6. பரிசோதனை மற்றும் சான்றிதழ் | பயிற்சி முடிந்ததும் நிலைய அளவில் தேர்வு நடத்தப்பட்டு SCVT தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களால் வழங்கப்படும். |

### 2. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்

7.43. தொழிற்பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை தொழிற்சாலை உற்பத்தியில் ஈடுபடுத்தி தொழிற் திறமையை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். தொழில் நிறுவனங்களில் செய்முறைப் பயிற்சியும், செய்முறைப் பயிற்சி சார்ந்த கருத்தியல் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. பயிற்சிக் காலம் 6 மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை தொழிற்பிரிவுகளைப் பொறுத்து அமைகிறது. இத்தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டத்தை அமலாக்கம் செய்ய இத்துறையின்கீழ் 11 அரசினர் தொடர் அறிவுரை மையங்களும் 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்படுகின்றன. 31-12-2007 நிலவரப்படி 13,919 தொழிற் பழகுநர்கள் 2,183 தொழிற் நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

7.44. தொழிற்பழகுநர் பயிற்சி சட்டம் 1961-ன்படி மாநில தொழிற் பழகுநர் ஆலோசகரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழிற் பழகுநர்களுக்கு தேர்வு செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளில், தொழிற் நிறுவனங்களால் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

7.45. தொழிற்பழகுநர் பயிற்சியின்போது தொழிற்பழகுநர்களுக்கு மாதத்தோறும் ரூ.1090/- முதல் ரூ.1620/- வரை உதவித் தொகை சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் அகில இந்திய அளவில் தொழிற் தேர்வு ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் இத்துறையால் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் அரசின் இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. தேர்ச்சி பெற்ற தொழிற் பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய 13,000 தொழிற் பழகுநர்கள் அகில இந்திய தொழிற் தேர்வில் கலந்து கொள்கின்றனர்.

[2008 ஏப்ரல் 25

7.46. தொழில் நிறுவனங்களால் புதிய மாணவர்களை தொழிற் பழகுநர்களாக நியமித்துக்கொள்ளும்போது அவர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மேலும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தில் இடம் பெறாத தொழிற்பிரிவுகளுக்கு தொழிற்பழகுநர் திட்டத்தின்கீழ் அம்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை அடிப்படை பயிற்சி மையங்களில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டம்**

7.47. விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் பழங்குடியினருக்கென்று ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையமும், கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் ஆதி திராவிடர்களுக்கென்று ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையமும் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடிய பல்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற்பயிற்சி வழங்கி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதாகும். மேற்கண்ட ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று தொழிற்பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

7.48. மேலும் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 18 விழுக்காடு இருக்கைகள் ஆதி திராவிடர் வகுப்பினருக்காகவும், 1 விழுக்காடு இருக்கைகள் பழங்குடியினருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**பயிற்றுநர்களுக்கான பயிற்சி**

7.49. பயிற்றுநர்களின் கற்பிக்கும் திறனை மேம்படுத்தவும், அவர்கள் நவீன தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளவும் மத்திய அரசினால் நடத்தப்பட்டுவரும் மத்திய பயிற்சி நிலையங்கள் / உயர்நிலை பயிற்சி நிலையங்கள் போன்ற நம் நாட்டிலுள்ள பல்வேறு நிலையங்களுக்கு பயிற்றுநர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் மத்திய பயிற்சி நிலையம் / உயர்நிலை பயிற்சி நிறுவனத்திற்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டு வருகின்றனர். பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.

7.50. இளநிலை பயிற்சி அலுவலர் பதவியில் 5 ஆண்டு பணிக்காலம் முடித்தவர்களுக்கு கிண்டி, மத்திய பயிற்சி நிலையத்தில் "கற்பிக்கும் தத்துவம்" என்னும் பயிற்சி 3 மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 25]

7.51. மேலும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் பயிற்றுநர்களுக்கு 2 வார கால பயிற்சி டிசம்பர் 2007 முதல் செங்கற்பட்டு, கோயம்புத்தூர், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படுகிறது. பயிற்றுநர்கள் பயிற்சித் திட்டத்தின்கீழ் இளநிலை பயிற்சி அலுவலர் மற்றும் உதவி பயிற்சி அலுவலர்களுக்கு சிறப்புப் பயிற்சியாக ஒலி, ஒளி சாதனங்களை உபயோகித்தல், வகுப்பறை மேலாண்மை, கல்வி கற்பிக்கும் நுணுக்கம் போன்றவற்றில் 2 வார காலப்பயிற்சி அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி அவர்களது கற்பிக்கும் திறனை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. பயிற்றுநர்கள் பெற்ற பயிற்சித் திறமையைப் பயிற்சியாளர்களுக்கு அளித்திட இத்திட்டம் உதவி செய்கிறது.

**தகுதிகாண் தேர்வு**

7.52. மின்சார ஒப்பந்தக்காரர்களிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது 5 வருடங்கள் பணியாற்றிய முன் அனுபவம் உள்ள 21 வயதை அடைந்தவர்கள் மின் கம்பியாள் உதவியாளர் தகுதிகாண் தேர்வுக்குத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்தேர்வு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றது. அடுத்த தேர்வு 2009 ஆம் வருடம் நடத்தப்படும்.

7.53. குழாய் பொருத்துநர், கட்டடம் கட்டுபவர், சமையல் கலைஞர், இரு சக்கரக் கம்மியர், வாயுவினால் பற்றவைப்பவர், மின்சாரத்தால் பற்றவைப்பவர் மற்றும் ஆடை தயாரித்தல் ஆகிய பிரிவுகளில் உதவியாளர் தகுதிகாண் தேர்வு இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. குழாய் பொருத்துநர், கட்டடம் கட்டுபவர் மற்றும் சமையல் கலைஞர் ஆகிய துறைகளில் தொழில் செய்து 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்களும் இரு சக்கர கம்மியர், வாயுவினால் பற்றவைப்பவர், மின்சாரத்தால் பற்றவைப்பவர் மற்றும் ஆடை தயாரித்தல் போன்ற பிரிவுகளில் ஐந்து ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களும் தேர்வு எழுத தகுதி படைத்தவர்கள் ஆவர். மே 2008-ல் தேர்வு நடைபெறவுள்ளது. தேர்ச்சி பெறுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். வழங்கப்படும் சான்றிதழ் இவர்கள் தொழில் அனுபவத்திற்குக் கிடைக்கும் அங்கீகாரமாகும். மேலும் இது இவர்களின் பணி மேம்பாட்டிற்கும் வழி வகுக்கும்.

[2008 ஏப்ரல் 25

## அகில இந்திய திறனாய்வுத் தேர்வு

7.54. ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய திறனாய்வுப் போட்டிகள் 14 தொழிற் பிரிவுகளில் நடத்தப்பட்டு ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் வெற்றி பெறும் பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 ரொக்கப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. இதுவரையில் நடைபெற்ற 42 அகில இந்திய திறனாய்வுப் போட்டிகளில் தமிழ்நாடு, இணையற்ற சாதனை புரிந்து "சிறந்த மாநிலம்" என்ற பெருமையை 21 முறை பெற்று "இந்திய குடியரசுத் தலைவர் சுழல் கேடயத்தைப்" பெற்றுள்ளது.

## மாண்புமிகு முதலமைச்சர் விருது

7.55. தமிழ்நாட்டிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 18 தொழிற் பிரிவுகளில் மாநில அளவில் திறனாய்வுப் போட்டி நடத்தி ஒவ்வொரு தொழிற் பிரிவிலும் சிறந்த பயிற்சியாளராக தேர்ச்சி பெற்றவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் விருதாக ரூ.5,000/- ரொக்கத் தொகையாகவும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்க காரணமாக உள்ள பயிற்றுநர்களுக்கும் ரொக்கத் தொகை பரிசாக அளிக்கப்படுகிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவதாக வரும் சிறந்த பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

7.56. பயிற்சியாளர்களுக்கு நன்முறையில் பயிற்சியளிக்கும் சிறந்த பயிற்றுநர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 10 பயிற்றுநர்கள் (பயிற்சி அலுவலர்-2, உதவி பயிற்சி அலுவலர்-4, இளநிலை பயிற்சி அலுவலர்-4) மற்றும் 2 அரசு தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500/-க்கான கிசான் விகாஸ் பத்திரமும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றது.



2008 ஏப்ரல் 25]

# அத்தியாயம்–VIII

## அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

8.1. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், 1956 ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 30-11-1978 அன்று சேர்க்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இது தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். இந்திய குடிபெயர்வோர் சட்டத்தின் கீழ் இந்நிறுவனம் 1984 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிபெயர்வோரை அயல்நாட்டில் வேலைவாய்ப்புக்கு அனுப்பி வைக்க, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிறுவனத்தின் தலையாய நோக்கம், இந்திய வேலை தேடுவோருக்கு மனித சக்தியை வழங்குவதாகும்.

8.2. இந்நிறுவனத்தின் 2005-2006 ஆம் ஆண்டு நிகர இலாபம் ரூ.2.71 இலட்சம். 2006-2007-ன் நிகர இலாபம் வரிக்குப் பின், ரூ.22.94 இலட்சம்.

## அ. அயல்நாடுகளில் வேலை தேடுவோர்

8.3. கடந்த 1-5-2006 முதல் 31-3-2008 வரை வெளிநாட்டில் வேலைவாய்ப்பு வேண்டி 16,771 மனுதாரர்கள் இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர். இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து அயல் நாட்டு வேலைவாய்ப்புக்காகப் பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 40,591 ஆகும். 1-5-2006 முதல் 31-3-2008 வரை 367 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மலேசியா, மாலத்தீவுகள் ஓமன், பக்ரைன், துபாய் மற்றும் சவூதி அரேபியாவிற்குச் செல்வதற்கான 660 நபர்களின் விசா பரிசீலனையில் உள்ளது.

8.4. இந்திய தொழிலாளர்கள் கனடா நாட்டில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதுவரை 78 தொழில்நுட்ப பணியாளர்கள் இந்நிறுவனத்தின்மூலம் கனடா நாட்டில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கனடா நாட்டு வேலைக்கு விண்ணப்பிப்போர் தொழிற் பயிற்சி நிலைய கல்வித் தகுதி உடையவராகவும், முன்னணியில் உள்ள கட்டுமானம், பெட்ரோ கெமிக்கல், எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைகளில் ஆறு ஆண்டுகள் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மேலும், ஆங்கிலத்தில் உரையாடுவதில் திறன் பெற்றிருக்கவேண்டும். தேர்வுப் பட்டியலில் உள்ள மனுதாரர்களுக்கு உதவும் வகையில் கனடா நாட்டில் வேலை வழங்குவோரால் நடத்தப்படும் தொழிற் பிரிவு

11-96—10a

தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுக்கு முன், அவர்களுக்கு ஆங்கிலப் பேச்சு வகுப்பு மற்றும் அவர்களது சம்பந்தப்பட்ட தொழிற் பிரிவில் செயல்முறை பயிற்சி (Practical Training) வழங்க இந்நிறுவனம் ஏற்பாடு செய்கிறது. இந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெறும் மனுதாரர்கள் கனடா நாட்டில் வேலைவாய்ப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கனடா நாட்டிற்கு வந்த ஆறுமாதத்திற்குள் அல்பெர்ட்டா முன்னேற்ற கல்வி மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தால் நடத்தப்படும் சிவப்பு முத்திரைத் தேர்வில் (Red Seal Examination) தேர்ச்சி பெற வேண்டும். சிவப்பு முத்திரைத் தேர்வில் தேர்ச்சி பெற்றபின் கனடா நாட்டில் குடும்ப அந்தஸ்துடன் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்படுவர். இந்த சிவப்பு முத்திரைத் தேர்வை எதிர்கொள்ள இந்நிறுவனம் பயிற்சி வகுப்புகளை நடத்துவதோடு தேவையான பொருட்களையும் வழங்கி வருகிறது. மேலும், இந்நிறுவனம் ஆங்கில தகவல் தொழில்நுட்ப திறன் பயிற்சி, பாதுகாப்பு மற்றும் நிலையான தரம் குறித்த பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றது.

8.5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் வேலை செய்வதற்கான சூழலை ஏற்படுத்துவதில் மிகக் கவனமாக உள்ளது. இந்நிறுவனத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் 2006 முதல் அநேக நாடுகளிடமிருந்தும், கனடாவிலிருந்தும் இந்திய தூதரகம், வெளிநாட்டு தூதரகம் மற்றும் இந்நிறுவனத்தின் இணையதளம் வாயிலாக இந்நிறுவனம் பல்வேறு தகவல்களைப் பெற்றுள்ளது.

**அயல்நாட்டு விமான பயணச் சீட்டுகள்**

8.6. விண்ணப்பதாரர்கள் அயல்நாடு செல்லும்போது அவர்களுக்கான விமான பயணச்சீட்டு, ஐயட்டா (IATA) நிறுவனத்துடன் சேர்ந்து, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**ஆ. புத்தறிவுப் பயிற்சி அளிக்கும் திட்டம்**

8.7. இந்திய அரசு மாநில அரசுடன் இணைந்து வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் இந்திய தொழிலாளர்களுக்கு புத்தறிவுப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்காக 2006-2007-ல் ரூ.1.33 கோடி செலவினத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 31-3-2008 வரை 8,459 திறன்மிகு தொழிலாளர்களுக்கு அரசு தொழிற் பயிற்சி மையங்களில் மேற்கண்ட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



8.8. உள்ளபடியான குடிபெயர்ந்தவர்கள் தவிர, வெளிநாட்டு வேலைக்குச் செல்ல விழைவோருக்கு இப்பயிற்சித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒரு குழுவிற்கு 15 பயிற்சியாளர்கள் வீதம் 20 தொழிற் பிரிவுகளில் 28 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இப்பயிற்சி நடத்தப்படுகிறது.

**இ. மாநில அளவிலான ஆலோசனைக் குழு / அயல் நாட்டில் வாழும் இந்தியத் தொழிலாளர்களின் நலனைக் கண்காணிக்க குழு அமைத்தல்**

8.9. வெளிநாட்டில் வாழும் இந்தியர்களின் பிரச்சினைகளைக் கண்காணிக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மாநில உயர் அதிகார ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணையைச் செயல்படுத்தவும், அயல்நாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் நலன் குறித்த விவகாரங்களைக் கவனிக்கவும், கண்காணிக்கவும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பிரிவு ஒன்றை அமைக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்—IX

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்**

9.1. இந்திய அரசின் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் என்பது, ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இத்திட்டம் அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஏற்படும் உடல்நலமின்மை, பேறுகாலம், இறப்பு மற்றும் வேலையின்போது ஏற்படும் காயத்தினால் இயலாமை அல்லது பணியினால் ஏற்படும் நோய்கள் போன்ற நிகழ்வுகளில் கீழ்க்கண்டவாறு பாதுகாப்பளிக்கிறது:

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவப் பயன் | காப்பீட்டுடன் கூடிய வேலையில் சேர்ந்த நாள் முதல் தானும் தன்னைச் சார்ந்தவர்களும் மருத்துவ வசதிக்கு தகுதியுடையவர்களாவார்கள். தொடர் அமைப்பு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | மருத்துவமனைகள் மூலம் ஆரம்ப, சிறப்பு மற்றும் மிகச் சிறப்பு வாய்ந்த சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. |
| 2. | உடல்நலமின்மைக்கான பயன் | உடல்நலமின்மை காரணமாக வேலைக்குச் செல்லாமல் இருந்து, அங்கீகரிக்கப்பட்ட ஈட்டுறுதி மருத்துவ அலுவலரால் சான்று அளிக்கப்பட்டால் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு உடல் நலமின்மைக்கான பயன் ரொக்கமாக அளிக்கப்படும் |
| 3. | பேறுகாலப் பயன் | காப்பீடு செய்யப்பட்ட பெண்களுக்கு பேறுகாலம் தொடர்பான உடல்நலமின்மை, கருத்தரித்தல் மற்றும் கருக்கலைதல் போன்றவற்றிற்கு (அதிகபட்சமாய் 85 நாட்கள்) பேறுகால பயன் அளிக்கப்படுகிறது. |
| 4. | இயலாமைக்கான பயன் (ரொக்கமாக) | வேலையின்போது ஏற்படும் காயங்கள் அல்லது தொழில் தொடர்பான உடல்நலமின்மை போன்றவற்றிற்கு காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு இயலாமைக்கான பயனளிக்கப்படுகிறது. மேலும் காப்பீடு செய்யப்பட்ட நபர் வேலையாள் இழப்பீடு சட்டத்தின்கீழ் பயன்கள் பெறத் தகுதியுடையவராவர். |
| 5. | சார்ந்தோருக்கான பயன் (ரொக்கமாக) | தொழில் தொடர்பான நோய்கள் மற்றும் வேலையின்போது ஏற்படும் காயங்களால் இறப்பு ஏற்படும்போது காப்பீடு செய்யப்பட்ட நபரைச் சார்ந்தோருக்கு இப்பயன் அளிக்கப் படுகிறது. |



| | | |
|---|---|---|
| 6. | விரிவுபடுத்தப்பட்ட உடல்நலமின்மைக்கான பயன் (ரொக்கமாக) | நீண்டகால சிகிச்சை அளிப்பதற்கும், மருத்துவ ஆலோசனையின் பேரில் பணிக்கு வராமல் இருப்பதற்கும், குறிப்பிடப்பட்ட 34 நீண்ட கால நோய்களுக்கு சிகிச்சை பெற விரிவுபடுத்தப்பட்ட உடல்நலமின்மைக் கான பயன் அளிக்கப்படுகிறது. |
| 7. | உயர்த்தப்பட்ட உடல்நலமின்மை பயன் (ரொக்கமாக) | வாசக்டமி, ட்யூபக்டமி போன்ற அறுவை சிகிச்சை செய்வதற்காக கருத்தரிக்கும் வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு இந்தப் பயன் அளிக்கப்படுகிறது. |
| 8. | தற்காலிக இயலாமை பயன் (ரொக்கமாக) | தற்காலிக இயலாமை முடியும் வரை அங்கீகரிக்கப்பட்ட ஈட்டுறுதி மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட்டு ஊதியத்தில் 70% தற்காலிக இயலாமை பயன் அளிக்கப்படுகிறது. |
| 9. | நிரந்தர இயலாமைக்கான பயன் (ரொக்கமாக) | வாழ்நாள் முழுவதுமாக நிரந்தர இயலாமைக்கான பயன் அளிக்கப்படுகிறது. |
| 10. | இறுதிச் சடங்கிற்கான பயன் (ரொக்கமாக) | அதிகபட்சமாக ரூ.2500/- காப்பீட்டாளரின் ஈமச் சடங்கிற்காக வழங்கப்படுகிறது. |

9.2. இத்திட்டத்தின்கீழ், காலிழந்தோர் பயன்படுத்தும் ஊன்றுகோல், சக்கரநாற்காலி, பல்செட், மூக்குக் கண்ணாடி போன்ற உதவிச் சாதனங்கள் காப்பீட்டாளர்களுக்குப் பயன்படும் வகையில் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் வருமுன் காக்கும் திட்டங்களாக நோய்த் தடை காப்பு, குடும்பநலப் பணிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் உள்ளன. காப்பீட்டாளரின் மனைவி மற்றும் பெண் காப்பீட்டாளர்கள் பேறுகாலத்தில் தொழிலாளர்

[2008 ஏப்ரல் 25

அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறாதிருந்தால் மருத்துவ ஊக்கத் தொகையாக ரூ.250/- அளிக்கப்படுகிறது.

9.3. இத்திட்டம், 1948 ஆம் ஆண்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின்படி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பினால் நிர்வகிக்கப்படுகிறது. இத்திட்டம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டம் 1948-ல் உள்ள விதிமுறைகளின்படி இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குறிக்கோளையடைய, உடல் நலக் காப்பீட்டுத் திட்டம் தொழிலாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு முழுமையான மருத்துவ வசதிகளை அளிப்பதுடன், ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது ஈடுசெய்யும் வண்ணம், பண உதவியையும் வழங்குகிறது.

9.4. நிறுவனங்கள் மற்றும் அலகுகளில் பணிபுரியும் ரூ.10,000/- வரை மாத ஊதியம் பெறும் தொழிலாளர்கள், இந்த பல நோக்கு சமூக நலப் பாதுகாப்புப் பயன்களை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டம் 1948-ன்கீழ் பெறுவர். இத்திட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் ஊதியத்தில் 1.75 விழுக்காடும் அவர்களுக்கு வேலை அளிப்பவரால் 4.75 விழுக்காடுக்கு சமமான தொகையும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் முக்கிய நிதியாக பெறப்படுகின்றன.

9.5. மருத்துவ வசதிகளுக்காகும் செலவினை முதலில் மாநில அரசு ஏற்றுக்கொள்கின்றது. பின்னர், செலவினத்தில் 7/8 பங்கினை, காப்பீட்டாளர் ஒருவருக்கு ரூ.1000/- (1-10-2006-லிருந்து) என்ற உச்சவரம்பிற்குட்பட்டு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் மாநில அரசுக்கு திரும்பச் செலுத்துகின்றது.

9.6. தமிழ்நாட்டில் 190 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள், 5 நடமாடும் மருந்தகங்கள், 2 பயனீட்டாளர்கள் மருந்தகங்கள், 9 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் தொடரமைப்பின் மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 2,363.



2008 ஏப்ரல் 25]

**9.7. 2007–08–ல் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகள்:**

| வ. எண் | பகுதியின் பெயர் மற்றும் இணைக்கப்பட்ட மருந்தகத்தின் பெயர் | காப்பீட்டு நபர்கள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | சர்கார் பெரியபாளையம் (திருப்பூர்) | 1,537 | 1-7-2007 முதல் நடை முறைப்படுத்தப்படுகிறது. |
| 2. | பழனி புறநகர் (பழனி) | 160 | 1-2-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. |
| 3. | அவிநாசி புறநகர் (அவிநாசி) | 1,049 | 1-2-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. |
| 4. | திருநெல்வேலி நகரியம் பகுதிகள் (வண்ணாரப்பேட்டை, தாழையூத்து) | 391 | 1-2-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. |
| 5. | புளியங்குடி நகரியம் பகுதிகள் (சங்கரன்கோவில்) | 485 | 1-2-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. |
| 6. | கடையநல்லூர் நகரியம் பகுதிகள் (தென்காசி) | 400 | 1-2-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. |
| 7. | திருமங்கலம் (திருமங்கலம்) | 2,650 | 1-10-2007 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது. |
| 8. | காரியப்பட்டி புறநகர் (காரியப்பட்டி) | 379 | 1-2-2008 முதல்நடைமுறைப்படுத்தப்படுகிறது. |

**சித்த மருத்துவம் மற்றும் யோகா பிரிவுகள்**

9.8. சித்த மருத்துவப் பிரிவுகள், அயனாவரம் மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. யோகா பிரிவு அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் செயல்பட்டு வருகிறது.

**சுழற்சி நிதி**

9.9. காப்பீட்டாளர் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சைக்காக செலவிட்ட தொகையைத் திரும்பப் பெறுவதற்காக அரசால் சுழற்சி நிதி உருவாக்கப்பட்டது. தற்சமயம் அச்சுழற்சி நிதியிலிருந்து காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் மருத்துவ சிகிச்சைக்காக சிறப்பு மற்றும் உயர் சிறப்புப் பிரிவில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற பணம் திரும்ப வழங்கப்படுகிறது.

இந்த நிதி ஆண்டில், மார்ச் 2008 வரை இருதய அறுவை சிகிச்சைகள், சிறுநீரகவியல், நரம்பியல் தொடர்பான சிகிச்சைகள் மற்றும் புற்றுநோய் ஆகிய பல்வேறு சிகிச்சைகளுக்காக காப்பீட்டாளர்கள் செலவழித்த தொகையான ரூ.1,92,98,940/- திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

**செறிவுத் திட்டம் (பேக்கேஜ் டீல்)**

9.10. காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவம் பார்ப்பதற்கு வசதியாக 44 தனியார் மருத்துவமனைகள் சிறப்பு மற்றும் உயர் சிறப்பு மருத்துவத்திற்காக செறிவுத் திட்டத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைகளில் மருத்துவம் பார்க்கும் காப்பீட்டாளர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆகும் செலவினை, செறிவுத் திட்டத்திலிருந்து நேரடியாக மருத்துவமனைகளுக்கு திரும்ப வழங்கப்படும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையின் பரிந்துரையின்பேரில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தனியார் மருத்துவமனையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். சிகிச்சைக்குப் பின்பு தனியார் மருத்துவமனையின் பட்டியல்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் நேரிடையாக செறிவுத் திட்டம்மூலம் சரி செய்யப்படுகிறது. இவ்வகையில் இந்த நிதி ஆண்டில் மார்ச் 2008 வரை ரூ. 1,51,01,060/- தனியார் மருத்துவமனைகளுக்கு திரும்ப வழங்கப்பட்டுள்ளது.





# அத்தியாயம்–X

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம்

10.1. உழைக்கும் வர்க்கத்திற்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன், மத்திய அரசு, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழிவகைகள் சட்டத்தினை இயற்றியது.

10.2. கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள், மேற்கண்ட சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளன:—

1. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952.
2. தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995.
3. தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976.

**தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1952**

10.3. 1-11-1952 முதல் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் அமலுக்கு வந்தது. இச்சட்டம் முதலில் குறிப்பிட்ட ஆறு தொழில்களை [1. சிமெண்ட், 2. சிகரெட், 3. மின்சாரம், இயந்திரம் அல்லது பொது பொறியியல் உற்பத்தி, 4. இரும்பு மற்றும் எஃகு, 5. காகிதம், 6. முழுவதும் அல்லது பகுதி பருத்தியிலான துணி அல்லது கம்பளி அல்லது சணல் அல்லது இயற்கை அல்லது செயற்கைப் பட்டு] 3 ஆண்டுகளாக நடத்திவரும் ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு அமல்படுத்தப்பட்டது.

10.4. தற்போது வெவ்வேறு வகையான 181 தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடங்கியபோது, மாதம் ரூ. 300/- வரை ஊதியம் பெறும் ஓராண்டு பணிபுரிந்த தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகத் தகுதியுடையவராவர். தற்போது மாதம் ரூ.6,500/- வரை ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் அவர்கள் அந்நிறுவனத்தில் பணியில் சேர்ந்த நாள் முதல் இத்திட்டத்தில் உறுப்பினர் ஆவதற்குத் தகுதியுடையவராவார்கள்.

[2008 ஏப்ரல் 25

**தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1995**

10.5. 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம், 1952 ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை காப்புரைகள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக 16-11-1995 அன்று வகுக்கப்பட்டதாகும். இத்திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய பயன்கள் வருமாறு:—

- வயது முதிர்வு ஓய்வூதியம்
- குறைக்கப்பட்ட ஓய்வூதியம்
- இயலாமை ஓய்வூதியம்
- விதவை—குழந்தைகள் ஓய்வூதியம்
- அனாதை ஓய்வூதியம்
- நியமனதாரர் ஓய்வூதியம்
- நியமானதாரரின் தந்தைக்கும், தொடர்ந்து தாய்க்கும் ஓய்வூதியம்
- இயலாமையுற்ற குழந்தைகளுக்கான ஓய்வூதியம் (குடும்பத்திலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் வயது எதுவாயினும்)

மேலும், நிறுவனம் ஒன்றை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுக்கு, ஓய்வூதியப் பயன்களுடன் திட்டச் சான்றிதழ்கள் வழங்கவும், 1995 ஆம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் வகை செய்கிறது. வேறொரு நிறுவனத்தில் பணியில் சேரும்போது, அவர்களுடைய ஓய்வூதிய உறுப்பினர் தகுதியும் தொடரும்.

**தொழிலாளர் வைப்பீடு இணைந்த காப்புறுதித் திட்டம், 1976**

10.6. இத்திட்டத்தின்கீழ் வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்களாக உள்ள தொழிலாளர்களின் ஊதியத்தில் 0.5 சதவீதம் என்ற கணக்கில், வேலையளிப்போர் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். காப்புறுதி நிதிக்கு தொழிலாளர்கள் சந்தாத் தொகை செலுத்த வேண்டியதில்லை. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் உறுப்பினராக



2008 ஏப்ரல் 25]

இருக்கும் ஒருவர் பணியில் இருக்கும்போது இறந்துவிடும் நேர்வில், இத்தொகையைக் கோரும் நபருக்கு, இறந்துவிட்டவரின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் முந்தைய 12 மாத கால அளவில் இருப்பில் இருந்த சராசரித் தொகைக்குச் சமமாகக் கூடுதல் தொகை வழங்கப்படும். இத்திட்டம், 1-8-1976 முதல் செயலுக்கு வந்தது. இத்திட்டம் தொடங்கியபோது வழங்கப்பட்ட அதிகபட்சத் தொகை ரூ.10,000/-. இத்தொகை உயர்த்தப்பட்டு 1-3-1990 முதல் ரூ.25,000/- ஆகவும், 1-4-1993 முதல் ரூ.35,000/- ஆகவும், 24-6-2000 முதல் ரூ.60,000- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**குறைகளைக் களைதல்**

10.7. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம், தனது உறுப்பினர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் நலன் குறித்த கடமைகளையும், பொறுப்பினையும் எப்பொழுதும் உணர்ந்து செயல்படுகிறது. பொது மக்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனத்தின் வடிவமைப்பு உள்ளது. வருகை தரும் உறுப்பினர்களின் குறைகளைக் களைய சென்னை மண்டலம் மற்றும் துணை மண்டல அலுவலகங்களில், வரவேற்பு அறைகளில் மக்கள் தொடர்பு அலுவலர்கள், அனைத்து வேலை நாட்களிலும் உள்ளனர்.

**தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மறுவடிவமைப்பு இந்தியா**

10.8. இந்நிறுவனத்தின் பங்குதாரர்களின் வளர்ந்துவரும் எதிர்பார்ப்புகளைக் கருத்தில்கொண்டும் பணிப் பிரிவில் வளர்ச்சி மற்றும் வெளிநபர்களை பணிக்கமர்த்தல் ஆகியவற்றினால் இந்திய பொருளாதார வளர்ச்சியின் வேகத்திற்கேற்ப இந்நிறுவனத்தின் பணிநிலைகளை உயர்த்துதல் மற்றும் எழுகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மறுவடிவமைப்பு, இந்தியா திட்டம், 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கப்பட்டது.

10.9. இந்நிறுவனம் உலகத் தரம்வாய்ந்த பணிகளை அளிக்கும் வகையில் உலகத் தரம்வாய்ந்த நிறுவனமாக தன்னை நிலைநாட்ட எடுத்துக் கொண்ட இலட்சிய முனைப்பு இத்திட்டமாகும்.

மேலும் உழைக்கும் மக்களை தனது சமூகப் பாதுகாப்பிற்குள் கொண்டு வந்து இந்நிறுவனத்தை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**சமூகப் பாதுகாப்பு எண் ( எஸ்.எஸ்.என்.) ஒதுக்கீடு**

*10.10.* பதினான்கு இலக்கங்கள் கொண்ட எண்ணாக சமூகப் பாதுகாப்பு எண் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் மூன்று இலக்கங்கள் புலனாய்வு தொடர்பானவை. ஒரு இலக்கம் சரிபார்ப்புக்குரியது. இந்த வடிவமைப்பு, ஒரு எண் ஒன்றுக்கு மேற்பட்ட பங்களிப்பாளருக்கு ஒதுக்கப்படாமலும், ஒரு பங்களிப்பாளருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எண்கள் ஒதுக்கப்படாமலும் இருப்பதை உறுதி செய்கிறது. எஸ்.எஸ்.என். ஒதுக்கீட்டை செயல்படுத்துவதற்காக, விவரக்குறிப்பு சேகரிக்கும் முகமை ஒன்று நியமிக்கப்பட்டு, விவரக்குறிப்பு சேகரிக்க முகாம்கள் ஏற்பாடு செய்யும் பணி ஒப்படைக்கப்பட்டது. அந்த முகாம்களில், பங்களிப்பாளர்களிடமிருந்து படிவங்கள் வாங்கப்பட்டு, விவரக் குறிப்புகள் மின்னணுமூலம் சேகரிக்கப்பட்டன. படிவ விவரக் குறிப்பு, ஐ.சி.ஆர். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும் சேகரிக்கப்பட்டது. பெறப்பட்ட விவரக்குறிப்பின் மெய்த்தன்மையை உறுதிப்படுத்த, இவ்விரு நிலைகளும் ஒத்துப்பார்க்கப்பட்டன. அதன்பின்னர், எஸ்.எஸ்.என். விவரக்குறிப்பு எஸ்.எஸ்.என். மென்பொருள் வழியே செயல்முறைப்படுத்தப்பட்டு, தனித் தன்மை வாய்ந்த எண்கள் பங்களிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. எண்கள் ஒதுக்கப்பட்டவர்களுக்கு, எஸ்.எஸ்.என். அட்டைகள் வழங்கப்பட்டன. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் பணம் செலுத்தும் ஒவ்வொருவரும் வேலையளிப்பவரிடமிருந்து தன்னிச்சையாக ஒரு தனித் தன்மைவாய்ந்த எண்ணைப் பெறுவதே சமூகப் பாதுகாப்பு எண் திட்டத்தின் குறிக்கோளாகும். எஸ்.எஸ்.என். விவரக்குறிப்பு சேகரிப்பு, முதலில் முன்னோடியாக 6 அலுவலகங்களில் மட்டுமே நடைமுறையில் இருந்தது. பின்னர், அதன் செயல்வரம்பினை அதிகரிக்கும் வகையில், பிற அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**இணையதளம்**

*10.11.* இணையதளம் "www.epfochennai.tn.nic.in" மூலம் வைப்பு நிதி உறுப்பினர் கீழ்க்காணும் தகவல்களைப் பெறமுடியும்:



- மூன்று திட்டங்களிலும் உள்ள சட்டக் கூறுகள் மற்றும் பயன்கள்.
- முன்பணம் மற்றும் தீர்வுத் தொகைகள் பெறுவதற்கான தகுதி மற்றும் நிபந்தனைகள்.
- சட்டப் பூர்வமான அனைத்துப் படிவங்களையும் எடுத்தல்.
- தேசிய சமூகப் பாதுகாப்பு அட்டை மற்றும் வியாபார எண் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள்.
- கேட்பு மனுக்கள் மற்றும் தீர்வுகள் குறித்த நிலை குறித்த விவரங்கள்.
- நிறுவனங்களின் இணக்க விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது. நிறுவனக் குறியீட்டினை பதிவு செய்வதன்மூலம் நிறுவனம் எந்த ஆண்டு வரை பணம் செலுத்தியுள்ளது என்பது பற்றிய விவரங்களை அறிய இயலும்.
- இணைய தளம்மூலம் படிவம் 12-ஏ, படிவம் 5, படிவம் 10, படிவம் 2 போன்றவற்றினை சமர்ப்பிக்க, வசதிகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டு வருகிறது.

**தகவல் அறியும் கணிய பொறிகம்**

*10.12.* பொதுமக்களின் குறைகளைக் கையாளும் முறையுடன் ஒத்துழைக்க அனைத்து 5 மண்டல அலுவலகங்களில் உள்ள வரவேற்பு அறைகளில் தகவல் அறியும் கணிய பொறிகம் பொருத்தப்பட்டுள்ளது. வைப்பு நிதி உறுப்பினர்கள் தங்களது விவரங்களையும், வருங்கால வைப்பு நிதி உறுப்பினர்கள் தங்களது விவரங்களையும், கேட்பு மனுக்களின் தற்போதைய நிலையினையும் தானியங்கி பணப் பட்டுவாடா இயந்திரத்தில் உள்ளதுபோல் கணிய பொறிகப் பொத்தானை அழுத்தித் தெரிந்துகொள்ள முடியும்.

# இணைப்பு II

*(95 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 47—இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### முன்னுரை

சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நாட்டியக் கலை முதலான அருங்கலைகளின் கருவூலமாகத் திகழும் தமிழ்நாட்டில் விண்ணுயர்ந்த, எண்ணிலாத பெருங்கோயில்கள் கலைநயம் சிறந்த நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு "மண்ணகத்தில் விண்ணகம்" என்ற மாட்சிமையுடன் விளங்குகின்றன. பக்தர்கள் கூடி வழிபட்டு இறைவனை அடைவதற்கான வாயில்களாக அமைந்துள்ள திருக்கோயில்களுக்கு நாள்தோறும் மக்கள் பெரும் அளவில் வருவதால், இவற்றை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி, மனிதவள மேம்பாட்டு மையங்களாகவும் கருத வேண்டி உள்ளது. எனவே, இத்திருக்கோயில்களை நன்கு பராமரிப்பதும், அவற்றின் சொத்துகளை நன்முறையில் பாதுகாத்தலும், திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து தருவதும் அரசின் இன்றியமையாத கடமை என்பதை உணர்ந்து இந்த அரசு பல்வேறு திட்டங்களைக் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வருகிறது.

டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் 13-5-2006 அன்று தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்று,

> 'கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
> உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி'.

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப நடத்திவரும் நல்லாட்சியில், திருக்கோயில்களின் நிருவாகம் மிகவும் செம்மை பெற்று விளங்கி வருகிறது. திருக்கோயில்களைப் பராமரிப்பதிலும், சிதிலமடைந்தவற்றைச் செப்பனிட்டு புதுப்பிப்பதிலும், காலமுறைப் பூசை முறைகளையும், குடமுழுக்கு வைபவங்களையும் நடத்துவதிலும், ஆலயங்களின் சொத்துகளைப் பாதுகாப்பதிலும், திருக்கோயில்க

[2008 ஏப்ரல் 25

தமிழுக்கு உரிய இடத்தை அளித்து நிலை நிறுத்துவதிலும், திருக்கோயில்களை பக்தி, கலை, கருணை, கல்வி போன்றவற்றின் கருவூலமாக ஓங்கச் செய்வதிலும் இந்த அரசு பல புதுமைகளை நிகழ்த்தி வருகிறது.

**சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் நியமனம்**

"அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

"சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன்"

என்றெல்லாம் அன்பையும் கருணையையும் இணைத்துப் போற்றப்படும் இறைவனுக்குப் பூசைகள் செய்வதில் சாதி வேறுபாடு இருக்கக் கூடாது என்ற சமூகக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த இந்த அரசு உறுதி பூண்டு, "தேவையான தகுதியும், உரிய பயிற்சியும் பெற்ற எந்த ஒரு இந்துவும், சாதி வேறுபாடின்றி இந்து திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம்" என ஓர் ஆணையைப் பிறப்பித்தது. இதற்கென அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி நீதியரசர் ஏ.கே. ராஜன் அவர்களின் தலைமையிலான உயர் நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், முதற்கட்டமாக சென்னை-திருவல்லிக்கேணி, திருச்சி-திருவரங்கம் ஆகிய இரு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், திருவண்ணாமலை, மதுரை, பழனி, திருச்செந்தூர் ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்களில் தமிழுக்கும், தமிழ் அர்ச்சகர்களுக்கும் முக்கியத்துவம் அளித்து, ஆகம முறைப்படியான நடைமுறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆறு பயிற்சி நிலையங்களில் மொத்தம் 207 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இவற்றில், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 76 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 பேரும், ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த 34 பேரும் அடங்குவர்.



2008 ஏப்ரல் 25]

**திருக்கோயில்களில் தமிழுக்கு உரிய இடம்**

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தாங்கள் சென்று வழிபட்ட திருக்கோயில்களில் எல்லாம், இறைவனை தமிழிலேயே பாடிப் பரவி வணங்கியுள்ளனர். தன்னை நன்றாக தமிழால் புகழ்ந்து பாடுவதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று திருமூலரும், சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட இறைவன், "...... அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்; ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார்" என்று அன்புக் கட்டளையிட்டதாக சேக்கிழாரும், "..... பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே இங்கு இப்பரிசுரைப்பார்.... எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்" என்று ஆண்டாளும் தமிழ் வழிபாட்டை வலியுறுத்தியுள்ளனர். இவ்வகையில் திருக்கோயில் வழிபாட்டில் தமிழுக்கு உரிய சிறப்பிடத்தை நிலைநிறுத்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது.

தமிழ்த் திருமுறைகளின் உறைவிடமாக விளங்கிய தில்லை நடராசர் திருக்கோயிலில் தமிழ் மீண்டும் இசைக்கச் செய்திட ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்ததற்கிணங்க, 29-2-2008 அன்று அதற்குரிய சட்டபூர்வமான அரசாணை பிறப்பிக்கப்பட்டு, சிதம்பரம் கோயிலில் தமிழ்த் திருமுறைகள் எவ்விதத் தடையுமின்றி பக்தர்களால் ஓதப்படுகின்றன என்ற செய்தி உலகெங்குமுள்ள தமிழர்களாலும், ஆன்மீக அன்பர்களாலும் வரவேற்கப்பட்டுள்ளது.

**கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்**

கிராமங்களில் இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத சிறு கோயில்கள் ஏராளமாக உள்ளன. இக்கோயில்களில் பூசை செய்யும் பூசாரிகளின் நலனைப் பேணுவதற்கு ஒருமுறையான அமைப்பு இதுவரை இல்லாமல் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கிராமக் கோயில் பூசாரிகளின் நலனுக்காக, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு அலுவல்சார் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமித்து ஒரு தனி வாரியத்தை நிறுவி ஆணையிட்டுள்ளது. இந்த வாரியம் இரண்டுமுறை கூடி, பல்வேறு திட்டங்கள் பற்றி கலந்தாலோசித்துள்ளது. இந்த வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நல

[2008 ஏப்ரல் 25

வாரியத்தின்மூலம் கிராமக் கோயில் பூசாரிகளுக்கான பயன்களை வழங்குவதற்காக, முதல் கட்டமாக அரசு ரூ. 10 இலட்சத்தை மானியமாக ஒதுக்கியுள்ளது.

**ஆலோசனைக் குழு**

இந்து சமய நிறுவனங்கள் தொடர்பாக அரசுக்கும், ஆணையருக்கும் ஆலோசனைகளை வழங்கிட 1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்துள்ளபடி, 'ஆலோசனைக் குழுவை' இந்த அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட இந்த ஆலோசனைக் குழுவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், கீழ்க்கண்ட நபர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்:—

**அலுவல்சார் உறுப்பினர்கள்**

அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை - உறுப்பினர்

சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை - உறுப்பினர்/ செயலாளர்

**அலுவல்சாரா உறுப்பினர்கள்**

1. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், குன்றக்குடி.
2. தவத்திரு திருப்பனந்தாள் மடாதிபதி சீர்வளர்சீர் முத்துக்குமார சுவாமி தம்பிரான், திருப்பனந்தாள்.
3. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் தவத்திரு சிவப்பிரகாச பண்டார சன்னதிகள் திருவாவடுதுறை.
4. தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்.
5. தவத்திரு சாந்தலிங்க ராமசுவாமி அடிகளார், பேரூர்.
6. திருமதி சௌந்தரா கைலாசம், சென்னை.
7. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.
8. திரு. கருமுத்து கண்ணன், தொழிலதிபர், மதுரை.
9. திரு. எஸ்.வி. பாலசுப்ரமணியம், தொழிலதிபர், கோயம்புத்தூர்.



2008 ஏப்ரல் 25]

**சிறப்பு அழைப்பாளர்**

தவத்திரு தருமபுர ஆதீனகர்த்தர் அவர்களின் சார்பாளர். இந்த ஆலோசனைக் குழுவின் கூட்டம் கடந்த 17-10-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று, திருக்கோயில்களின் திருப்பணிக்காக அரசு வழங்கும் மானியத் தொகையை உயர்த்துவது உள்ளிட்ட பல ஆலோசனைகள் அரசுக்கு வழங்கப்பட்டு அதன்படி அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**சமய நிறுவனங்களின் எண்ணிக்கை**

இந்து சமய அறநிலையத் துறை நிருவாகக் கட்டுப்பாட்டில், பின்வரும் விவரப்படி 38,460 திருக்கோயில்கள், மடங்கள், கட்டளைகள் ஆகியன உள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,420 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | மடத்துடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட அறக்கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் | 38,460 |

மேற்காணும் சமய நிறுவனங்கள், அவற்றின் வருமான அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

1. அறிவிக்கப்பட்ட பட்டியலில் சேராத, சட்டப் பிரிவு 49 (i)-இன்கீழ் உள்ள சமய நிறுவனங்கள்:

   ஆண்டு வருமானம் ரூ.10,000/-க்குக் குறைவாக உள்ளவை. 34,246

2. அறிவிக்கப்பட்ட பட்டியலில் சேர்ந்த சமய நிறுவனங்கள்:

| | | |
|---|---|---|
| (i) | ஆண்டு வருமானம் ரூ.10,000/-க்கு அதிகமாகவும், ரூ. 2 இலட்சத்திற்குக் குறைவாகவும் உள்ள, சட்டப் பிரிவு 46 (i) -இன்கீழ் வருபவை: | 3,535 |
| (ii) | ஆண்டு வருமானம் ரூ. 2 இலட்சத்திற்கு அதிகமாகவும், ரூ.10 இலட்சத்திற்குக் குறைவாகவும் உள்ள சட்டப் பிரிவு 46 (ii)-இன்கீழ் வருபவை: | 498 |
| (iii) | ஆண்டு வருமானம் ரூ. 10 இலட்சத்திற்கு அதிகம் உள்ள, சட்டப் பிரிவு 46(iii)-இன்கீழ் வருபவை: | 181 |
| | மொத்தம் | 38,460 |

மேற்கண்ட சமய நிறுவனங்கள் அனைத்தும், 1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப்படி நியமனம் செய்யப்படும் அறங்காவலர்களாலும், செயல் அலுவலர்களாலும் நிருவாகம் செய்யப்பட்டு வருகின்றன.

**இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக அமைப்பு**

இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத் தலைவர், ஆணையர் ஆவார். இவர் இந்திய ஆட்சிப் பணியிலிருந்து நியமனம் செய்யப்பட்டு செயல்படுகிறார்.

ஆணையர், பிற அலுவலர்கள், சார்நிலை அலுவலர்கள், செயல் அலுவலர்கள், அயல்பணியில் அமர்த்தப்பட்டோர், அலுவலக உதவியாளர்கள், இரவுக் காவலர் மற்றும் துப்புரவாளர்கள் என பல்வேறு நிலைகளில் அனுமதிக்கப்பட்ட 2,409 பணியிடங்களில் தற்போது 1,450 பணியாளர்களுடன் இத்துறை செயல்பட்டு வருகிறது.

**தலைமை இடத்தின் நிருவாக அமைப்பு**

தலைமை இடத்தில் ஆணையருக்கு உதவும் பொருட்டு ஒரு கூடுதல் ஆணையர், ஒரு தலைமையிடத்து இணை ஆணையர், ஒரு இணை ஆணையர் (திருப்பணி), உதவி ஆணையர் நிலையிலான இரண்டு





நேர்முக உதவியாளர்கள், நீதிமன்றப் பணிகளைக் கவனித்திட உதவி ஆணையர் நிலையில் சட்டச் சேர்ம அலுவலர், திருக்கோயில்களில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளி இனங்களை சரிபார்த்து மதிப்பீடு செய்திட ஓர் உதவி ஆணையர் ஆகியோர் பணிபுரிகின்றனர்.

திருக்கோயில்களின் திருப்பணிகளைக் கண்காணித்திடவும் மதிப்பீடுகளைக் கூர்ந்தாய்வு செய்திடவும் ஒரு கண்காணிப்புப் பொறியாளர், ஒரு செயற் பொறியாளர், ஒரு உதவிப் பொறியாளர் மற்றும் வரைவாளர்களைக் கொண்ட பொறியியல் பிரிவு ஒன்று தலைமையிடத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவின் அலுவலர்கள் பொதுப் பணித் துறை அல்லது நெடுஞ்சாலைத் துறையிலிருந்து அயல்பணி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துகளைக் கண்டறிவதற்காகவும், நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நிலங்களின்மீது திருக்கோயிலின் உரிமையை நிலைநாட்டுதல் போன்றவற்றில் ஆணையருக்கு உதவுவதற்காகவும் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் இரண்டு தனி அலுவலர்களைக் கொண்ட நிலங்கள் பிரிவு ஒன்று தலைமையிடத்தில் செயல்படுகிறது. இந்தப் பிரிவு, திருக்கோயில் நிலங்களை ஆய்வு செய்தல், திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கு ஆதாரப் பதிவேடுகள் தயாரித்தல் மற்றும் சமய நிறுவனங்களின் குத்தகை/ விற்பனை கருத்துருக்களை பரிசீலித்தனுப்புதல் ஆகிய பணிகளையும் கவனித்து வருகிறது.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சேர்ந்த, ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலரும், ஓர் உதவிக் கணக்கு அலுவலரும் இத்துறையில் கணக்குப் பிரிவினை நிர்வகித்து வருகின்றனர். நிதித் துறையிலிருந்து பெறப்பட்ட அலுவலரை தலைமைத் தணிக்கை அலுவலராகக் கொண்டு, சமய நிறுவனங்களின் கணக்குகளை தணிக்கை செய்திட ஒரு தணிக்கைப் பிரிவும் செயல்பட்டு வருகிறது.

**மண்டலம் மற்றும் கோட்ட நிருவாக அமைப்பு**

மாநில அளவில் இணை ஆணையர் தலைமையில் இத்துறை 11 மண்டலங்களைக் கொண்டதாகவும், உதவி ஆணையர் தலைமையில் 27 கோட்டங்களைக் கொண்டதாகவும் வகுக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :—

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | | அதிகார வரம்பு |
|---|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை. | 1. | உதவி ஆணையர், சென்னை. | சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர் வட்டம். |
| | | 2. | உதவி ஆணையர், திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம். (அம்பத்தூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்கள் தவிர) |
| 2. | இணை ஆணையர், வேலூர். | 3. | உதவி ஆணையர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி வட்டம். |
| | | 4. | உதவி ஆணையர், வேலூர். | வேலூர் மாவட்டம். |
| 3. | இணை ஆணையர், சேலம் | 5. | உதவி ஆணையர், தருமபுரி. | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| | | 6. | உதவி ஆணையர், சேலம். | சேலம் மாவட்டம். |
| | | 7. | உதவி ஆணையர், நாமக்கல். | நாமக்கல் மாவட்டம். |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர். | 8. | உதவி ஆணையர், கோயம்புத்தூர். | கோவை, நீலகிரி மாவட்டங்கள். |
| | | 9. | உதவி ஆணையர், ஈரோடு. | ஈரோடு மாவட்டம். |
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர். | 10. | உதவி ஆணையர், தஞ்சாவூர். | தஞ்சாவூர் மாவட்டம். (திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டங்கள் தவிர) |
| | | 11. | உதவி ஆணையர், நாகப்பட்டினம். | நாகப்பட்டினம் மாவட்டம். (சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் தரங்கம்பாடி வட்டங்கள் தவிர) |
| | | 12. | உதவி ஆணையர், திருவாரூர். | திருவாரூர் மாவட்டம். |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை. | 13. | உதவி ஆணையர், கும்பகோணம். | தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் தரங்கம்பாடி வட்டங்களும். |
| | | | உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி வட்டங்கள். |
| 7. | இணை ஆணையர், விழுப்புரம். | 14. | உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி வட்டங்கள் தவிர. |
| | | 15. | உதவி ஆணையர், விழுப்புரம். | விழுப்புரம் மாவட்டம். |
| | | 16. | உதவி ஆணையர், திருவண்ணாமலை. | திருவண்ணாமலை மாவட்டம். |

[2008 ஏப்ரல் 25

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | இணை ஆணையர், திருச்சிராப் பள்ளி. | 17. | உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| | | 18. | உதவி ஆணையர், அரியலூர். | பெரம்பலூர் மாவட்டம் மற்றும் அரியலூர் மாவட்டம். |
| | | 19. | உதவி ஆணையர், புதுக்கோட்டை. | புதுக்கோட்டை மாவட்டம். |
| | | 20. | உதவி ஆணையர், கரூர். | கரூர் மாவட்டம் மற்றும் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை வட்டம். |
| 9. | இணை ஆணையர், மதுரை. | 21. | உதவி ஆணையர், மதுரை. | மதுரை மற்றும் தேனி மாவட்டங்கள். |
| | | 22. | உதவி ஆணையர், திண்டுக்கல். | திண்டுக்கல் மாவட்டம். |
| 10. | இணை ஆணையர், சிவகங்கை. | 23. | உதவி ஆணையர், விருதுநகர். | விருதுநகர் மாவட்டம். |
| | | 24. | உதவி ஆணையர், பரமக்குடி. | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 11. | இணை ஆணையர், திருநெல்வேலி. | 25. | உதவி ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி மாவட்டம். |
| | | 26. | உதவி ஆணையர், தூத்துக்குடி. | தூத்துக்குடி மாவட்டம். |
| | | 27. | உதவி ஆணையர், நாகர்கோயில். | கன்னியாகுமரி மாவட்டம். |



2008 ஏப்ரல் 25]

இவற்றுடன், இணை ஆணையருக்கும், உதவி ஆணையருக்கும் களப்பணியில் உதவிட, வட்ட அளவில் ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். திருவாரூரில் உதவி ஆணையர் நிலையில் ஒருவர் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மைய அலுவலராக உள்ளார். பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உதவியாக ஒரு துணை ஆணையரும், உதவி ஆணையர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் பணிபுரிகின்றனர். தற்போது புதிதாக இணை ஆணையர் நிலையில் செயல் அலுவலர்களைக் கொண்ட திருக்கோயில்களில் செயல் அலுவலருக்கு உதவிட உதவி ஆணையர் நிலையில் 6 நேர்முக உதவியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவை முறையே பழனி, திருச்செந்தூர், மதுரை, ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் மற்றும் திருத்தணி ஆகிய திருக்கோயில்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்து சமய நிறுவனங்களில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் பிற விலையுயர்ந்த இனங்களை மதிப்பீடு செய்திட நகைகள் சரிபார்க்கும் அலுவலராக துணை ஆணையர் நிலையில் ஆறு பேரும், உதவி ஆணையர் நிலையில் நான்கு பேரும் பணிபுரிகின்றனர். மாவட்ட அளவில் திருக்கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்திட, மண்டலத் தணிக்கை அலுவலர் மற்றும் உதவித் தணிக்கை அலுவலர்களைக் கொண்ட தணிக்கைக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. திருப்பணிகளைக் கண்காணிக்கவும், மதிப்பீடுகள் தயாரிக்கவும், ஒவ்வோர் இணை ஆணையர் அலுவலகத்திலும் ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும், ஒரு வரைவாளரும், ஒவ்வோர் உதவி ஆணையர் அலுவலகத்திலும் ஓர் உதவிப் பொறியாளரும் உள்ளனர்.

**செயல் அலுவலர்கள்**

திருக்கோயில்களை நிருவகிக்கும் பொருட்டு, அவற்றின் முக்கியத்துவம், வருமானம், சொத்துகள் மற்றும் நடைமுறை செயல்பாடுகளின் அடிப்படையில், பல்வேறு நிலைகளில் செயல் அலுவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட செயல் அலுவலர்கள் பணியிடங்களின் விவரம் பின்வருமாறு :—

| வ. எண் | நிலை | பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர்/செயல் அலுவலர் | 10 |
| 2. | துணை ஆணையர்/செயல் அலுவலர் | 10 |
| 3. | உதவி ஆணையர்/செயல் அலுவலர் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை–I | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை–II | 112 |
| 6. | செயல் அலுவலர் நிலை–III | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை–IV | 154 |
| | மொத்தம் | 629 |

திருவேற்காடு, சமயபுரம், திருவண்ணாமலை, சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் ஆகியவற்றின் துணை ஆணையர் நிலையிலான செயல் அலுவலர் பணியிடங்கள் இணை ஆணையரின் நிலைக்கு உயர்வு செய்யப்பட்டுள்ளன.

**மடங்கள்**

இத்துறையின் கட்டுப்பாட்டில், தற்போது மொத்தம் 56 திருமடங்களும், மடத்துடன் இணைந்த 19 கட்டளைகளும் உள்ளன. இந்த மடங்களின் நிருவாகத்தை இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தின் அடிப்படையில் சிறப்பாக கண்காணித்திட, ஆணையருக்கு உதவியாக ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர், இரு தணிக்கை ஆய்வாளர்கள் மற்றும் இரு உதவியாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு தணிக்கைப் பிரிவு தலைமையிடத்தில் செயல்பட்டு வருகிறது.



**அறங்காவலர்கள் நியமனம்**

ஒவ்வொரு திருக்கோயிலையும் சரிவர நிருவாகம் செய்வதற்காக பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்வதற்கு 1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டத்திற்கு 2006 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தத்தின்படி, இந்து சமய நிறுவனங்களில் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரம் திருக்கோயிலின் வகைப்பாட்டுக்குத் தக்கவாறு, அரசு, ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களுக்கு அளிக்கப்பட்டு, அறங்காவலர் நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு அறங்காவலர் குழுவிலும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர், மகளிர் ஒருவர் உட்பட மூன்று பேருக்குக் குறையாமலும், ஐந்து பேருக்கு மிகாமலும் உறுப்பினர்களாக இருப்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அதன் நிலைக்கேற்றவாறு ஆணையர் அல்லது இணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் சட்ட வழிவகைகளின்படி பரம்பரைசாரா அறங்காவலர் மூவரை நியமிக்க வேண்டும். இத்துடன் மேலும் இரண்டு பரம்பரைசாரா அறங்காவலர்களை அரசு நியமிக்கும். சட்டப் பிரிவு 46 (iii)-இன்கீழ் அறிவிக்கப்பட்ட திருக்கோயில்களுக்கு பரம்பரைசாரா அறங்காவலர்களை அரசே நியமிக்கும். இந்த விதிமுறைகளின்படி திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டடங்கள் மற்றும் மனைகள்**

இத்துறை சார்ந்த சமய நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் விவரப்படி 4,78,755.35 ஏக்கர் பரப்புடைய நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்களும், 22,599 கட்டடங்களும், 33,627 மனைகளும் சொந்தமாக உள்ளன:—

[2008 ஏப்ரல் 25

| நிலத்தின் தன்மை | திருக்கோயில் நிலங்கள் ஏ – செ | மடத்து நிலங்கள் ஏ – செ | மொத்த நிலங்கள் ஏ – செ |
|---|---|---|---|
| நன்செய் | 1,83,744.33 | 21,282.05 | 2,05,026.38 |
| புன்செய் | 2,18,439.49 | 34,543.15 | 2,52,982.64 |
| மானாவாரி | 20,746.33 | — | 20,746.33 |
| மொத்தம் | 4,22,930.15 | 55,825.20 | 4,78,755.35 |

திருக்கோயில் மற்றும் மடங்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களில் மொத்தம் 1,23,729 குத்தகைதாரர்கள் சாகுபடி செய்கிறார்கள். திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்களை 22,600 வாடகைதாரர்களும், மனைகளை 33,665 வாடகைதாரர்களும் அனுபவித்து வருகிறார்கள்.

**வருவாய் நீதிமன்றங்கள்**

திருக்கோயிலுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை சாகுபடி செய்து வரும், 1955 ஆம் ஆண்டு வேளாண் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களுக்கும், திருக்கோயில் நிருவாகத்திற்கும் உள்ள, திருக்கோயில்களுக்குச் சேரவேண்டிய குத்தகை நிலுவைகளை வசூலித்தல், நியாய வாடகை நிர்ணயம் செய்தல், குத்தகை செலுத்தாதவர்களை வெளியேற்றுதல் போன்ற இனங்களைக் கவனித்திட தனித் துணை ஆட்சியரால் நடத்தப்படும் வருவாய் நீதிமன்றங்கள் பின்வரும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன :—

**நீதிமன்றங்கள்**

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூர்
6. மதுரை

முகாம் நீதிமன்றங்கள்

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்
4. தென்காசி



2008 ஏப்ரல் 25]

இந்த நீதிமன்றங்களில் ரூ.26.42 கோடி குத்தகை நிலுவைக்காக கடந்த 31-12-2007 வரை 23,240 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றில் 10,737 வழக்குகளில் தீர்வு காணப்பட்டது. இவற்றில் ரூ. 8.89 கோடி தொகை திருக்கோயில்களுக்குச் செலுத்தப்பட வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தத் தொகையை வசூலித்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ரூ.17.53 கோடி நிலுவைத் தொகை குறித்து 12,503 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

**திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளில் குடியிருப்போருக்கு வாடகை சீரமைப்பு**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள், கட்டடங்கள் முதலியவற்றுக்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கு அரசாணை எண் 353, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள் 4-6-1999இல் வழிமுறைகள் வகுக்கப்பட்டன. இதன்படி, குடியிருப்போருக்கு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விகிதம் மிகவும் அதிகம் என்றும், பொதுவாக மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வாடகைத் தொகையை 33.3 விழுக்காடு உயர்த்த வேண்டும் என்பதைக் குறைக்க வேண்டும் என்றும் பரவலாகக் கோரிக்கைகள் அரசுக்கு வந்ததைக் கருத்தில் கொண்டு, ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளில் குடியிருப்போருக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகை விகிதத்தைப் பாதியாகக் குறைத்தும், மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பொதுவாக விதிக்கப்படும் வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைத்தும் அரசு ஆணை எண் 456, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, நாள் 9-11-2007-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் 56,265 நபர்கள் பயனடைவர்.

நிலவரித்திட்ட நடவடிக்கையின்போதும், நில உடைமை மேம்பாட்டுத்திட்ட செயலாக்கத்தின்போதும் பல திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் தவறுதலாக தனிப்பட்ட நபர்களின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளன. இதுபற்றி அனைத்து திருக்கோயில்களின் நிருவாகங்கள் செய்யும் சட்டரீதியான மேல்முறையீட்டு மனுக்களை காலதாமதமின்றி விசாரித்து ஆணை பிறப்பிப்பதற்காக மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களை தலைமையிடமாகக் கொண்டு இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடங்கள் இதர பணியாளர்களுடன் ஏற்படுத்தப்பட்டு 22-2-2008 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 25

**கல்வி நிறுவனங்களும், பிற நிறுவனங்களும்**

நன்னெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும், கலை மற்றும் பண்பாட்டினையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு, திருக்கோயில்கள் சமயம், கலை, பண்பாடு மற்றும் பொதுக் கல்வி தொடர்பான பள்ளிகள், கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் சமூக நல நிறுவனங்கள் ஆகியவற்றைப் பேணி வருகின்றன. திருக்கோயில்கள் மூலமாக ஐந்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், ஒரு தொழில்நுட்பக் கல்லூரி, பன்னிரண்டு மேல்நிலைப் பள்ளிகள், பத்து உயர்நிலைப் பள்ளிகள், மூன்று நடுநிலைப் பள்ளிகள், பத்து ஆரம்பப் பள்ளிகள், ஒரு மெட்ரிகுலேசன் பள்ளி, பன்னிரண்டு பாடசாலைகள், முப்பத்தி நான்கு கருணை இல்லங்கள் மற்றும் பதிமூன்று சமூக நல நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திருக்கோயில் திருப்பணி**

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு,
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புனைந்து ஏத்தி புகழ்ந்து பாடி ........."

என்னும் அப்பர் பெருமானின் வாக்கிற்கேற்ப திருக்கோயில்களின் பராமரிப்பில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. பொதுமக்களின் நன்கொடை, அந்தந்த திருக்கோயிலின் உபரி நிதி, நிதிவசதி உடைய திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதிமாற்றம் செய்தல், அரசு மானியம், பொதுநல நிதி, ஆலய மேம்பாட்டு நிதி, கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி ஆகிய ஆதாரங்களிலிருந்து திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

**(அ) நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து நிதி மாற்றம் செய்தல்**

1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டப்பிரிவு 36-இன்படி, நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து, நிதிவசதியற்ற திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு



2008 ஏப்ரல் 25]

நிதிமாற்றம்மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2007-2008ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின்கீழ் இதுவரை 39 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.461 இலட்சம் நிதிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) அரசு மானியம்**

திருக்கோயில்களின் திருப்பணி வேலைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு மானியமாக 45 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 1998-1999 ஆம் ஆண்டில்தான் இந்த ஒதுக்கீடு முதன்முறையாக ரூ.75 இலட்சமாக உயர்த்தப்பட்டது. மேலும் கலைநயமும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க நூற்றுக்கணக்கான திருக்கோயில்கள், சிதிலமடைந்து செப்பனிடப்படவேண்டிய நிலையில் உள்ளதையும், பல கோயில்களில் நிதிவசதியின்றி உரிய காலத்தில் குடமுழுக்கு வைபவம் நடத்தப் பெறாமல் இருப்பதையும் கருத்தில்கொண்டு, இந்த அரசு 2007-2008 ஆம் ஆண்டு முதல் திருக்கோயில்கள் திருப்பணிக்கான அரசு மானியத் தொகையை 3 கோடி ரூபாயாக உயர்வு செய்து, இத்தொகை 43 கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இனி ஆண்டுதோறும் திருக்கோயில்கள் திருப்பணிக்காக 3 கோடி ரூபாயை அரசு நிதியுதவியாக தொடர்ந்து வழங்கும்.

**(இ) பொது நல நிதி**

சமய நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நிதி உதவி மற்றும் தனிநபர்கள் அளிக்கும் தன்னார்வ நன்கொடைகள் ஆகியவற்றைக் கொண்டு சட்டப்பிரிவு 97-இன்படி பொது நல நிதி என்ற நிதியமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நலிவடைந்த திருக்கோயில்களின் பழுதுபார்ப்பு மற்றும் திருப்பணி வேலைகளுக்கு இந்த நிதியிலிருந்து நிதியுதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.271.19 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு 103 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

**(ஈ) ஆலய மேம்பாட்டு நிதி**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் 5 கோடி திரட்டி நிரந்தர முதலீடு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக் கொண்டு, சுற்றுலா முக்கியத்துவம் உள்ள சரித்திர பிரசித்தி பெற்ற கோயில்களுக்கும், ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடப் பெற்றும், வரலாற்று சிறப்பு, தொல்லியல்

[2008 ஏப்ரல் 25

மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்தும் உள்ள கோயில்களுக்கு திருப்பணி மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் செய்திட நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்நிதியிலிருந்து ஒருகால பூசை வைப்பு நிதித்திட்டத்திற்கான பங்குத் தொகையாக, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,200/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

**(உ) கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதி**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்து, ஒரு நிரந்தர ஏற்பாடாக கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டியிலிருந்து, கிராமப்புறங்களில் இத்துறை ஆளுகையின்கீழ் உள்ள, சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு தலா ரூ.25,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**(ஊ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி**

"திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என்பது செல்வந்தர்கள் மற்றும் பொதுமக்கள் அளித்த நன்கொடைகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட நிதியாகும். வரலாற்று மற்றும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த புராதனத் திருக்கோயில்களின் திருப்பணிக்கும், ஒருகால பூசைத் திட்டத்திற்கு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,300/- வீதம் பங்குத் தொகையாகவும் இத்திட்டத்திலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

**(எ) ஆதி திராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயில்களின் திருப்பணி நிதி**

நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியில் இருந்து நிதிமாற்றம் செய்வதன்மூலம் பெறப்படும் நிதியைக் கொண்டு, ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்கு தலா ரூ.25,000/- வீதம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை ஆதி திராவிடர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள 14,450 திருக்கோயில்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ள 3,127 திருக்கோயில்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 25]

**(ஏ) வரலாற்றுச் சிறப்பு மிக்க தொன்மை வாய்ந்த திருக்கோயில்களின் திருப்பணி**

தமிழகத்தில் பழம் பெருமையும், சிற்பச் சிறப்பும் வாய்ந்த பல புராதனத் திருக்கோயில்கள் நெடுங்காலமாக உரிய பராமரிப்பின்றி பாழடைந்த நிலையில் உள்ளன. இவற்றுள் வரலாற்றுச் சிறப்பு மிக்க, தொன்மை வாய்ந்த 48 திருக்கோயில்களைத் தேர்வு செய்து அவற்றின் பழமை மாறாமல் திருப்பணி செய்து புதுப்பிப்பதற்காக பன்னிரண்டாம் நிதி ஆணையத்தின் நல்கையிலிருந்து ரூ.9.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கோயில்களில் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் புகழ்ந்து பாடப்பெற்ற பல திருக்கோயில்கள் நெடுங்காலமாக பராமரிக்கப்படாமல் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளன. இவற்றில் 30 திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு நிதி வசதிமிக்க 13 திருக்கோயில்களின் உபரி நிதியினை நிதிமாற்றம்மூலம் பெற்று, ரூ.3.29 கோடி மதிப்பீட்டில், சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திட 22-8-2007 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 23 திருக்கோயில்களுக்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, 9 திருக்கோயில்களில் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

**பக்தர்களுக்கான வசதிகள்**

திருக்கோயில்கள் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு அங்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. திருக்கோயில்களில் தற்போதுள்ள விடுதிகள், பொருள் வைப்பறைகள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் போன்றவற்றை மேம்படுத்திடவும், கூடுதலாக தங்குமிடங்கள், குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருக்கோயில்களில் பக்தர்கள் விரைவாகவும், எளிதிலும் தரிசனம் செய்யும் வகையில் வரிசை வசதி அமைப்புகள், சாய்தளங்கள் போன்றவற்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சுற்றுலாத் துறையின் உதவியுடன் பக்தர்களுக்கான வசதிகள் ஏற்படுத்துதல்**

திருக்கோயில்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், பக்தர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து தருவதற்கு தமிழக

சுற்றுலாத் துறை பெருமளவில் உதவி செய்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு 21 திருக்கோயில்களில் ரூ.5.54 கோடி மதிப்பீட்டில் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காகவும், பக்தர்களின் வசதிக்காகவும் பல்வேறு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**திருக்கோயில் குளங்களைச் சீரமைத்தல்**

இத்துறையின் கட்டுப்பாட்டில், 1,552 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2,235 திருக்குளங்கள் உள்ளன. மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தவும், தெப்ப உற்சவங்கள் நடத்தவும் ஏதுவாக, இக்குளங்கள் தூர்வாரி, சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் பாதுகாத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்னும் தூர்வாரி செப்பனிடப்படாத நிலையில் உள்ள திருக்குளங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஆண்டுகளில் மாவட்ட உள்ளாட்சி நிர்வாகத்தின்மூலம் சீரமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருக்கோயில்களின் மரத்தேர்களைப் பழுதுபார்த்து சீரமைத்தல்**

தேர்கள் பழுதுபட்டதால் தேர்த் திருவிழா நடைபெறாமல் உள்ள திருக்கோயில்களின் தேர்களைப் பழுதுபார்த்து, மீண்டும் தேரோட்டம் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி, முதல் கட்டமாக 16 தேர்கள் அந்தந்த திருக்கோயில்களின் நிதியிலிருந்து ரூ.83.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து நிதி ஆதாரம் ஏற்படுத்தி, 225 தேர்களை ரூ.10.84 கோடி மதிப்பீட்டில் பழுது பார்க்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தேர்கள் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**திருக்கோயில்களில் தங்க ரதங்கள்**

இந்து திருக்கோயில்களில், உற்சவரை தங்க ரதத்தில் அமரச் செய்து, அதனை உலாவாக இழுத்து வருவது பக்தர்களின் ஒரு வகையான பிரார்த்தனையாக நடைமுறையில் உள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு கீழ்க்காணும் 8 திருக்கோயில்களில் தங்க ரதம் செய்து, தங்க ரத உலா நடத்தப் பெற்று வருகிறது:—





1. அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை.
2. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சி.
3. அருள்மிகு சந்திர சூடேஸ்வரர் திருக்கோயில், ஓசூர், கிருஷ்ணகிரி.
4. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.
5. அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், நாமக்கல்.
6. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரூர்.
7. அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில், கோவை.
8. அருள்மிகு கருநெல்லிநாதசுவாமி திருக்கோயில், திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

இவற்றுடன் சேர்த்து தற்போது 35 திருக்கோயில்களில் தங்க ரதம் உள்ளது.

**ஒரு கால பூசைத் திட்டம்**

தினமும் ஒரு வேளைகூட பூசை செய்ய இயலாத அளவு நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒருகாலப் பூசை நடத்தப்படுவதற்கு நிதியுதவி அளிப்பதை நோக்கமாகக்கொண்டு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் கால பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதில் கிராமப் பொதுமக்களும் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, ரூ.22,500/- துறை நிதியாகவும், ரூ.2,500/- பொதுமக்கள் நன்கொடையாகவும் ஒரு குறிப்பிட்ட திருக்கோயிலுக்கு நிதி ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் மொத்தத் தொகை. ரூ.25,000/-மும் குறிப்பிட்ட திருக்கோயில் பெயரில் நிரந்தர முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, அத்திருக்கோயிலில் தினமும் ஒருகாலப் பூசையாவது நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி, ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்தும், திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்தும் நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்தும் திரட்டப்பட்டுள்ளது. இதுவரை 10,947 திருக்கோயில்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளன.

[2008 ஏப்ரல் 25

## உலோகத் திருமேனிகள் மற்றும் இதர விலை உயர்ந்த பொருட்களின் பாதுகாப்பு

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் பிற விலையுயர்ந்தவற்றை பாதுகாத்திட, கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல், டெல்-டேல் கடிகாரங்கள் அமைத்தல், உட்பூட்டு முறை, இரும்பு கதவுகள் பொருத்துதல், திடகாத்திரமுடைய இளைஞர்களை இரவு காவலராக நியமனம் செய்தல், திருக்கோயில் பாதுகாப்புப் படையிலிருந்து காவலர்கள் நியமனம் செய்தல் ஆகிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட 14 இடங்களில் "உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்" கட்டப்பட்டு உள்ளன. இங்கு பாதுகாப்புக்கு வைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகளுக்கு தினசரி பூசைகள் செய்யப்படுகின்றன. விழாக்காலங்களில், குறிப்பிட்ட உலோகத் திருமேனியை தொடர்புடைய திருக்கோயிலுக்கு எடுத்துச் சென்று, விழா முடிவுற்றதும் பாதுகாப்பிற்காக மீண்டும் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் கட்டும்பணி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்று வருகின்றது :—

1. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.
   (கூடுதல் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம்)
2. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர்.
   (கூடுதல் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம்

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்ற வகையில் 2008-2009ஆம் ஆண்டில் திருவொற்றியூர், திருத்தணி, விருதுநகர், விழுப்புரம் மற்றும் தர்மபுரி ஆகிய ஐந்து இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்ட ரூ. 175 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

### திருக்கோயில் பாதுகாப்புப் படை

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள், உண்டியல்கள் மற்றும் இதர விலை உயர்ந்தவற்றை பாதுகாத்திட, "திருக்கோயில் பாதுகாப்புப்படை" என்ற ஒரு தனிப் பிரிவு அரசால்



2008 ஏப்ரல் 25]

அமைக்கப்பட்டது. தொடக்க காலத்தில், இரண்டாம் நிலை காவலர்கள் 1,000 பேரும், ஓய்வுபெற்ற இராணுவத்தினர்/காவலர்கள் 3,000 பேரும் இதில் நியமிக்கப்பட்டனர். தற்போது 1,933 ஓய்வுபெற்ற இராணுவத்தினரும் 904 காவலரும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு, 2,453 திருக்கோயில்களில் பாதுகாப்புப் பணியில் உள்ளனர்.

திருக்கோயில்களில் களவு, கொள்ளை முதலிய நிகழ்வுகளைத் தடுப்பதற்காக, 26-9-2007 அன்று மாண்புமிகு இந்து சமய அறநிலைய துறை அமைச்சர் தலைமையில் உள் துறை செயலாளர் மற்றும் காவல் துறை உயர் அலுவலர்களுடன் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் திருக்கோயில்களில் பாதுகாப்பு ஏற்பாட்டை வலுப்படுத்துவது தொடர்பாக, காவல் துறை உதவியுடன் விரிவான ஆய்வு செய்து, விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஒரு திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

### அர்ச்சகர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

திருக்கோயில் பணியாளர்களான அர்ச்சகர்கள், ஓதுவார்கள், உள் துறைப் பணியாளர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோர் திருக்கோயில்களில் இன்னும் சிறப்புற பணியாற்றுவதற்காக, அவர்களுக்குக் குறுகிய கால புத்தாக்கப் பயிற்சி வழங்கும் திட்டம் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. திருக்கோயிலின் முதுநிலை அர்ச்சகர்களுக்கு இத்தகைய பயிற்சி, வரும் ஆண்டில் தற்போது செயல்பட்டு வரும் ஆறு அர்ச்சகர் பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும்.

பிற பணியாளர்களான ஓதுவார்கள், உள் துறைப் பணியாளர்கள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு, வழக்கமான குறுகியகால புத்தாக்கப் பயிற்சித் திட்டம், சைவ ஆகமங்கள், சைவத் திருக்கோயில் திருவிழாக்கள், வைணவத் திருக்கோயில் திருவிழாக்கள், சைவம் மற்றும் வைணவ வரலாறு, சைவ சித்தாந்தம், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தத்தின் அமைப்பும் அழகும், சாக்தம், கௌமாரம், தல வரலாற்றுச் சிறப்புக்கள் போன்ற தலைப்புகளில் மீண்டும் வருமாண்டில் நடத்தப்படும்.

[2008 ஏப்ரல் 25

**தமிழில் அர்ச்சனை**

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், திருக்கோயில்களில் ‘தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்’ என்ற தகவல் பலகைகள் அகற்றப்பட்டு ‘தமிழில் அர்ச்சனை செய்யப்படும்’ என்ற தகவல் பலகைகள் பக்தர்கள் பார்வையில் எளிதில் படும் இடங்களில் வைக்கப்பட்டன. தமிழில் அர்ச்சனை செய்வதை மேம்படுத்திட தமிழில் அர்ச்சனை நூல்கள் பொதுமக்களின் தேவைக்கிணங்க 1997ஆம் ஆண்டு தயாரித்து வெளியிடப்பட்டன. திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்வதை ஊக்குவிக்கவும் நடைமுறைப்படுத்தவும் தமிழ் அர்ச்சனை நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் போற்றி நூல்கள், பொதுமக்களுக்கு மலிவு விலையிலும், திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு இலவசமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழில் ஆகமம்**

திருக்கோயில்கள் தொடர்பான ஆகமங்களை, வடமொழியிலிருந்து தமிழுக்கு மாற்றம் செய்து வெளியிட முடிவு செய்யப்பட்டு, 1999 ஆம் ஆண்டில் முதன்முதலாக “உத்தர காமிகா ஆகமம்” நூலை தமிழில் மொழியாக்கம் செய்து முதன்முதலில் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து “ஆலய நிர்மாண பிம்பலட்சணா” என்ற சிற்ப சாத்திர நூலும் “குமார தந்திரம்” என்ற நூலும் தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிடப்பட்டுள்ளன. திருக்கோயில்கள் தொடர்பான வேறு சில வடமொழி நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ் அருளாளர்களைச் சிறப்பிக்கும் விழாக்கள்**

சென்னைக்கு அருகில் உள்ள, சேக்கிழார் பிறந்த ஊரான குன்றத்தூரில் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் **தெய்வ சேக்கிழார் விழா** அரசு விழாவாக இந்து சமய அறநிலையத் துறையால் கொண்டாடப்படுகிறது.

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான திருஞான சம்பந்தருக்குச் சிறப்புச் செய்யும் வகையில், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், **திருஞானசம்பந்தர் இசை விழா** ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதத்தில் நடத்தப்படுகிறது. தமிழ்ப்பெரும் மூதாட்டி ஔவையாருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாபட்டினத்தில் உள்ள அருள்மிகு ஔவையார் திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் **ஔவை விழா** சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.



2008 ஏப்ரல் 25]

தத்துவம் நிறைந்த பக்தி வழிபாட்டை முன்னிலைப்படுத்திய தாயுமானவ சுவாமிகளைப் பெருமைப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவ சுவாமி திருக்கோயிலில் **தாயுமானவர் விழா** தை மாதத்தில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

உலகம் போற்றும் தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு சென்னை, மயிலாப்பூரில் அமைந்துள்ள அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் தை மாதம் 2 ஆம் நாள் “திருவள்ளுவர் தினத்தன்று” **திருவள்ளுவர் விழா** வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் ஆவணி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்று **அருளாளர் அருணகிரிநாதருக்கு முக்திப்பேறு விழா** திருக்கோயில் சார்பில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

63 நாயன்மார்களில் ஒருவரான அருள்திரு கோட்செங்கட்சோழ நாயனாருக்கு திருச்சி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில் ஆண்டுதோறும் அவர் அவதரித்த திருநாளான மாசி மாத சதய நட்சத்திரத் தினத்தன்று **கோட்செங்கட்சோழ நாயனார் விழா** வெகு சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

**தல வரலாறு மற்றும் தல புராணம்**

ஒவ்வொரு திருக்கோயிலிலும் வரலாற்று செய்திகள், புராண செய்திகள், கலை, கல்வெட்டுகள், அங்கு வழிபடுவதன் சிறப்பு இவற்றைப் பொதுமக்கள் அறிந்திடும் வண்ணம் தல வரலாறும், தல புராணமும் வெளியிடப்படுகின்றது. இத்தகைய வரலாறு அல்லது புராணம் இல்லாத திருக்கோயில்களில் அவற்றின் சிறப்புகள் குறித்து கையேடுகள் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அன்னதானத் திட்டம்**

திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தினமும் மதியம் அன்னதானம் வழங்கும் திட்டம் 360 திருக்கோயில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அன்னதானத் திட்டத்திற்கென தனியே ஆணையர் அலுவலகத்தில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டு, நன்கொடையாக ரூ.3.27 கோடி பெறப்பட்டுள்ளது. மேலும் நிதிவசதிமிக்க திருக்கோயில்களின் உபரிநிதியில் இருந்து ஒரு சிறப்பு நிரந்தர முதலீடாக ரூ.21.83 கோடி நிதி இத்திட்டத்திற்காக

[2008 ஏப்ரல் 25

ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகையிலிருந்து, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் நிதிப் பற்றாக்குறை ஏற்படும் திருக்கோயில்களுக்கு இதுவரை ரூ.5.5 கோடி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறி வகுப்பு**

அன்னதானத் திட்டம் நடைபெறும் திருக்கோயில்கள் உட்பட மொத்தம் 485 திருக்கோயில்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் சிறுவர்களுக்கு ஆன்மீக நெறி, நீதி மற்றும் ஒழுக்கத்தைக் கற்பிக்கும் ஆன்மீக வகுப்புகள் சான்றோர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

**கருணை இல்லங்கள்**

ஆதரவற்ற சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் உணவும், உடையும், உறைவிடமும் அளிக்கும் பொருட்டு, திருக்கோயில் சார்பில் கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. 31 திருக்கோயில்களால் நடத்தப்படும் கருணை இல்லங்களில் மொத்தம் 864 சிறார்கள் (573 சிறுவர்கள் மற்றும் 291 சிறுமிகள்) பயன் அடைகின்றனர். இச்சிறார்களுக்கு பள்ளிச் சீருடையும், பள்ளிக் கட்டணமும் கருணை இல்லங்களால் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தையின் பராமரிப்புச் செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.467/- வீதம் கருணை இல்லங்களுக்கு அரசு மானியம் அளித்து வருகிறது.

**சிறப்பு வழிபாடும், பொது விருந்தும்**

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்றும், பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்றும் சமுதாயத்தின் எல்லா நிலை மக்களும் வேறுபாடின்றி கலந்துகொள்ளும் வகையில், நிதிவசதியுடைய திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடத்தப்பட்டு வருகிறது. அமைச்சர் பெருமக்களும், முக்கிய பிரமுகர்களும் இந்தப் பொது விருந்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

**பரிவட்ட மரியாதை**

இந்த அரசு 2006 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னர் 'ஆண்டவன் முன் அனைவரும் சமம்' என்ற உயரிய கொள்கையை எடுத்துக்காட்ட, திருக்கோயில்களில் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்பட்டுவந்த "பரிவட்ட மரியாதை" நிறுத்தப்பட்டது.



2008 ஏப்ரல் 25]

**ஸ்தபதிகள்**

திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகள் அனைத்தும் சிற்ப சாத்திரங்களிலும், ஆகமங்களிலும் குறிப்பிட்டுள்ளபடி நடைபெறுவதை உறுதி செய்திட வேண்டும். இதற்காகத் தம் முன்னோர்மூலம் வழிவழியாக இக்கலையை நன்கு கற்றறிந்த வல்லுநர்களையும் சிற்ப சாத்திரக்கலையில் உரிய பட்டமோ அல்லது பட்டயமோ பெற்றுள்ளவர்களையும் முறைப்படி ஸ்தபதியாக அங்கீகரித்து, அதன் பின்னரே, அவர்கள் திருப்பணிகள் செய்திட அமர்த்தப்படுகின்றனர். திருக்கோயிலின் திருப்பணிக்கான வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் சாத்திரங்கள்படி சரியாக உள்ளனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு ஐந்து ஸ்தபதிகள் ஐந்து மண்டலங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் கூடுதலாக ஸ்தபதிகளை அங்கீகரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூன்று மூத்த ஸ்தபதிகள் கொண்ட ஸ்தபதி ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அவர்களிடமும் அவ்வப்போது ஆலோசனை பெறப்படுகிறது.

**திருக்கோயில்களில் நாதஸ்வர இசைப்பாளர்களை நியமித்தல்**

திருக்கோயில்களில், விழாக் காலங்களிலும், பூசைக் காலங்களிலும் நாதஸ்வரம் இசைப்பது தொன்றுதொட்டு வரும் ஒரு வழக்கமாகும். பல திருக்கோயில்களில் நிதிப் பற்றாக்குறை காரணமாக இந்த இசையை ஏற்பாடு செய்ய இயலவில்லை. எனவே, சில முக்கிய திருக்கோயில்களில், முறையே ரூ.1,500/-, ரூ.1,000/- மற்றும் ரூ.750/- மாத சம்பளத்தில் நாதஸ்வரம், தவில், தாளவாத்திய கலைஞர்களை பணியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி முதலீடு உருவாக்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள இந்து சமய நிறுவனங்களில் பல்வேறு நிலைகளில் உள்ள பணியாளர்களின் நலனுக்கான செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

1. குடும்ப நல நிதித் திட்டம்
2. சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

[2008 ஏப்ரல் 25

3. திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம்
4. அர்ச்சகர், ஓதுவார், இசைக்கலைஞர், வேதபாராயணர் ஆகியோருக்கு ஓய்வூதியத் திட்டம்
5. இதர பணியாளர்களுக்கு துறை நிலையிலான பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம்
6. திருமணம், பண்டிகைகள் மற்றும் வாகனம் வாங்குவதற்கு முன்பணம்
7. சலவைப்படி, மருத்துவப்படி
8. வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி
9. விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் மற்றும் இதர விடுப்பு சலுகைகள்
10. தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம்
11. கருணை அடிப்படையில் பணிநியமனம்
12. குடமுழுக்கு ஊக்கத் தொகை
13. ஆண்டுத் திருவிழா கூடுதல் நேரப்படி ஊக்கத்தொகை
14. அகவிலைப்படி
15. பொங்கல் கருணைக்கொடை

**குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு உதவுவதற்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி, இறந்த பணியாளரின் வாரிசுதாரருக்கு ரூ.75,000/- உதவித் தொகையாக வழங்கப்படும். ரூ.5.00 கோடியில் மூலதன நிதி உருவாக்கப்பட்டு, அதிலிருந்து பெறும் வட்டியிலிருந்து இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

**சிறப்பு சேம நல நிதித் திட்டம்**

ரூ.1.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் வருமானம் பெறும் திருக்கோயில்களின் பணியாளர்களின் நலனுக்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு திருக்கோயில் பணியாளரும் ஓய்வுபெறும்போது அவரது பணிநாளில் செலுத்திய மொத்த சந்தாத் தொகையுடன் இத்திட்டத்தின் மூலம் கூடுதலாக ரூ.1,000/- பணிக்கொடையாகப் பெறுவர். நிதிமிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.8.00 இலட்சம் பெற்று இத்திட்டத்திற்கென ஒரு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 25]

**திருக்கோயில் பணியாளர்கள் நல நிதித் திட்டம்**

இந்தத் திட்டம் ரூ.40,000/-க்குக் குறைவான ஆண்டு வருவாய் பெறுகின்ற திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களில் ரூ.400/-க்கும்கீழ் மாதச் சம்பளம் பெறுகின்றவர்களின் சம்பள நிலுவையை வழங்குவதற்காக பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிருந்து பெற்ற ரூ.5.00 கோடியை வைப்பு நிதியாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. இம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

**ஓய்வூதியத் திட்டங்கள்**

**அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், இசைக் கலைஞர்கள், அரையர்கள் முதலியோருக்கான ஓய்வூதியம்**

20 வருடங்கள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்த அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர், இசைக்கலைஞர், அரையர் முதலியோர் இத்திட்டத்தின்படி ரூ.750/- மாத ஓய்வூதியம் பெறுகின்றனர். இதுவரை இத்திட்டத்தில் 803 பேர்களுக்கு இந்த ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**கிராமப் பூசாரிகள் ஓய்வூதியம்**

இத்துறையின் ஆளுகையின்கீழ் வராத கிராமத் திருக்கோயில்களில் 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்துள்ள கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாத ஓய்வூதியம் ரூ.750/- வழங்க அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2,621 கிராமப் பூசாரிகள் பயன்பெற்று வருகின்றனர்.

**திருக்கோயில்களில் பணியாற்றும் இதர பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்**

திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பணி மூப்பில் ஓய்வு பெறும்

திருக்கோயில் பணியாளர்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் (இ.பி.எப்.) மூலம் மாத ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்ற பலன்களைப் பெறும் வகையில் அத்திட்டத்தில் சேர்ந்திட, நிதிவசதி மிக்க திருக்கோயில் நிருவாகங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

குறைந்த வருமானம் காரணமாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்திற்கு சந்தாத் தொகை செலுத்த இயலாத திருக்கோயில் பணியாளர்கள் பணி மூப்பில் ஓய்வு பெறும்போது மாதம் ரூபாய் 750/- ஓய்வூதியம் பெறும் வகையில் 1-1-2006 முதல் ஓய்வு பெறும் பணியாளர்கள் பயனடையும் வகையில் "துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்" ஒன்று தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம், முதல்கட்டமாக ஓய்வு பெற்ற திருக்கோயில் பணியாளர்கள் 109 பேருக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் திங்களிதழ்**

"திருக்கோயில்" என்ற தலைப்பில் மாத இதழ் இந்து சமய அறநிலையத் துறையால் 1958 ஆம் ஆண்டில் இருந்து வெளியிடப்பட்டு வருகிறது. இந்து சமயம் மற்றும் தத்துவங்கள், திருக்கோயில் வரலாறு, திருவிழாக்கள் பற்றி சிறந்த தமிழ் அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகள் இந்த இதழில் வெளியிடப்படுகின்றன.

**இ-பூஜா இணையதளம்**

இத்துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் அடங்கிய www.hrce.tn.nic.in. என்னும் ஒரு இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் ஒரு பகுதியான "இ-பூஜா" என்பதன்மூலம் உலகின் எப்பாகத்திலிருந்தும், எந்த நேரமும் எவரும் அவர் விருப்பப்படியான நாள் மற்றும் நேரத்தில் தான் விரும்பும் முக்கியத் திருக்கோயிலில் குறிப்பிட்ட பூசைகள் செய்திட முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளும் வசதி உள்ளது. இந்த இரண்டு இணையதளங்களையும் திருக்கோயிலின் வரலாறு, புராணம், வளர்ச்சி, செயல்பாடுகள் மற்றும் தெய்வத் திருவுருவங்களது கண்கவர் படங்கள் மற்றும் திருவிழாக்கள் போன்றவற்றைச் சேர்த்து, ஒளி, ஒலி வசதியுடன் எப்போதும் பார்த்திடும் வகையில் மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



[2008 ஏப்ரல் 25

**முடிவுரை**

மக்களிடத்தே அன்பு கொண்டு "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" எனக் கருணை உள்ளத்துடன் சமுதாயப் பணிகளை ஆற்றி வரும் இந்த அரசு, தமிழகத்தின் கலைப்பெட்டகங்களாகத் திகழும் திருக்கோயில்களையும், அவற்றின் சொத்துக்களையும் பேணிப் பாதுகாப்பதிலும், பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. திருக்கோயில்களில் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் உரிய இடமளிக்க அனைவரின் ஒருமித்த ஆதரவோடு உறுதி பூண்டுள்ள இந்த அரசின் ஆணைகளை நிறைவேற்றவும், ஆக்கபூர்வமாகச் செயல்படவும் இந்து சமய அறநிலையத் துறை தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறது.

## இணைப்பு-1

### 2008-2009 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

**நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்**

| | | 2007-08 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2007-08 திருத்த மதிப்பீடு | 2008-09 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 50,00 | 45,00 | 45,00 |
| 2250 | ஏனைய சமூகப் பணிகள் – 102 சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 34,65,65 | 36,84,70 | 48,03,07 |
| | 103 கோவில்கள், வழிபாட்டுத் தலங்கள் முதலியவற்றின் பராமரிப்பு | 19,70 | 1,00,00 | 1,00,00 |
| | கூடுதல் | 35,35,35 | 38,29,70 | 49,48,07 |

## இணைப்பு—2

### பகுதி II திட்டப் பணிகள் 2008-2009

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதிநிலைச் செலவு | | | 2008–2009–இல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவினம் | தொடரா செலவினம் | மொத்தம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | ஐந்து இடங்களில் உலோகத் திருமேனிகளுக்கான பாதுகாப்பு மையம் கட்டுதல் | 19.10 | 175.00 | 194.10 | 19.10 | 100.00 | -- | 119.10 |
| 2. | இந்து சமய அறநிலைய ஆணையரக கூட்ட அரங்கில் எல் சி டி புரொஜக்டர் வாங்கி பொருத்துதல் | 0.12 | 1.20 | 1.32 | 1.32 | -- | -- | 1.32 |
| 3. | இந்து சமய அறநிலைய ஆணையரகத்தின் கூட்ட அரங்கில் ஒளி / ஒலி சாதனங்கள் வாங்கி பொருத்துதல் | 0.15 | 1.50 | 1.65 | 1.65 | -- | -- | 1.65 |
| 4. | இந்து சமய அறநிலைய ஆணையரகத்தில் தானியங்கி டிஜிட்டல் தொலைபேசி இணைப்பு பொருத்துதல் | 0.16 | 2.60 | 2.76 | 2.76 | -- | -- | 2.76 |
| 5. | மதுரை இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல் | -- | 50.00 | 50.00 | -- | 30.00 | -- | 30.00 |
| 6. | ஆணையரகத்தில் மென்பொருள் மேம்பாடு மற்றும் மின் ஆளுமை கலந்தறி பணி | -- | 5.00 | 5.00 | 5.00 | -- | -- | 5.00 |
| 7. | உதவி ஆணையர்களுக்குப் பழைய ஈப்புகளுக்குப் பதிலாகப் புதிய ஈப்புகள் வழங்குதல் | -- | 16.00 | 16.00 | 16.00 | -- | -- | 16.00 |
| 8. | இந்து சமய அறநிலைய ஆணையரகத்தினை சேர்ந்த கண்காணிப்புப் பொறியாளருக்குப் பழைய சீருந்துக்குப் பதிலாகப் புதிய சீருந்து வாங்குதல் | -- | 4.00 | 4.00 | 4.00 | -- | -- | 4.00 |





## இணைப்பு—3

### கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்—5

| வ. எண் | கல்லூரியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழனி. |
| 2. | அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, பழனி. |
| 3. | ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம். |
| 4. | ஸ்ரீ தேவி குமரி மகளிர் கல்லூரி, குழித்துறை. |
| 5. | பூம்புகார் கல்லூரி, மேலையூர். |

11-96—12

## தொழில்நுட்பக் கல்லூரி—1

| வ. எண் | தொழில்நுட்பக் கல்லூரியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | அருள்மிகு பழனியாண்டவர் தொழில்நுட்பக் கல்லூரி, பழனி. |

## மேல்நிலைப் பள்ளிகள்—12

| வ. எண். | மேல்நிலைப் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | பெரியநாயகியம்மன் மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோவிலூர். |
| 2. | அருள்மிகு சுப்ரமண்யசுவாமி திருக்கோயில் மேல்நிலைப் பள்ளி, மருதமலை. |
| 3. | அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் மேல்நிலைப் பள்ளி, அய்யம்பாளையம். |
| 4. | அருள்மிகு பேரூர் சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப் பள்ளி, பேரூர். |
| 5. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை. |
| 6. | அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை. |
| 7. | அருள்மிகு திருமலை குமாரசுவாமி தேவஸ்தான பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பண்பொழி. |
| 8. | தேவஸ்தான மேல்நிலைப் பள்ளி, மண்டைக்காடு. |
| 9. | ஸ்ரீ காந்திமதி அம்பாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி. |
| 10. | டி. வேணுகோபால் செட்டி மேல்நிலைப் பள்ளி, சென்னை. |





| வ. எண். | மேல்நிலைப் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 11. | இந்து மேல்நிலைப் பள்ளி, சென்னை. |
| 12. | அருள்மிகு பர்வதவர்த்தினி அம்பாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமேஸ்வரம். |

## உயர்நிலைப் பள்ளிகள்—10

| வ. எண் | உயர்நிலைப் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | அருள்மிகு அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப் பள்ளி, கீழ்வேளூர். |
| 2. | அருள்மிகு கலியுகவரதராஜப் பெருமாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கல்லங்குறிச்சி. |
| 3. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு. |
| 4. | அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் திருக்கோயில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, திருவெண்காடு. |
| 5. | அருள்மிகு சுந்தரராசா உயர்நிலைப் பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 6. | தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, திற்பரப்பு. |
| 7. | தேவஸ்வம் உயர்நிலைப் பள்ளி, குழித்துறை. |
| 8. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி, மயிலம், திண்டிவனம். |
| 9. | ஸ்ரீகுருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளி, தருமபுரம். |
| 10. | அருள்மிகு முத்துக் குமாரசுவாமி தேவஸ்தான உயர்நிலைப் பள்ளி, சென்னை. |

## நடுநிலைப் பள்ளிகள்—3

| வ. எண் | நடுநிலைப் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | அருள்மிகு சுந்தரராசா நடுநிலைப் பள்ளி, அழகர்கோயில், மதுரை. |

[2008 ஏப்ரல் 25

2. திருவாவடுதுறை ஆதீனம் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை.

3. திருவாவடுதுறை ஆதீனம் அம்பலவான தேசிகர் நடுநிலைப் பள்ளி, திருவாவடுதுறை.

## ஆரம்பப் பள்ளிகள்—10

| வ. எண் | ஆரம்பப் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமம் தொடக்கப் பள்ளி, பாளையங்கோட்டை. |
| 2. | சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் தொடக்கப் பள்ளி, சங்கரன்கோவில். |
| 3. | ஸ்ரீ மெய்கண்டார் தொடக்கப் பள்ளி, திருவெண்காடு. |
| 4. | தேவஸ்வம் தொடக்கப் பள்ளி, குழித்துறை. |
| 5. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி உதவிபெறும் தொடக்கப் பள்ளி, பழனி. |
| 6. | திருவாவடுதுறை ஆதீனம் தொடக்கப் பள்ளி, திருவிடைமருதூர். |
| 7. | ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி, தருமபுரம். |
| 8. | அருள்மிகு சுந்தரராசா தொடக்கப் பள்ளி, அழகர்கோயில், மதுரை. |
| 9. | அஞ்சுகம் தொடக்கப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை. |
| 10. | பத்மாவதி கண்ணபிரான் தொடக்கப் பள்ளி, ஓட்டேரி, சென்னை. |

## மெட்ரிகுலேசன் பள்ளி—1

| வ. எண் | மெட்ரிகுலேசன் பள்ளியின் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| 1. | பழனியாண்டவர் மெட்ரிகுலேசன் பள்ளி, பழனி. |



2008 ஏப்ரல் 25]

## பாடசாலைகள்—12

| வ. எண் | திருக்கோயில் பெயர் மற்றும் ஊர் |
|---|---|
| | **வேத ஆகம பாட சாலைகள்—3** |
| 1. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. |
| 2. | அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில். |
| 3. | அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், மடவார்விளாகம், ஸ்ரீவில்லிபுத்தூர். |
| | **தேவார இசைப் பயிற்சிப் பள்ளிகள்—6** |
| 4. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. |
| 5. | அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன்கோயில். |
| 6. | அருள்மிகு சுப்ரமண்யசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| 7. | அருள்மிகு தாணுமாலையன் சுவாமி திருக்கோயில், சுசீந்திரம். |
| 8. | தருமபுர ஆதீனம், தருமபுரம், மயிலாடுதுறை. |
| 9. | மருதநாயக முதலியார் அன்னபூரணி அம்மாள் டிரஸ்ட், கோவை. |
| | **நாதஸ்வரம், தவில் இசைப் பயிற்சிப் பள்ளிகள்—3** |
| 10. | அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. |
| 11. | அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம். |
| 12. | அருள்மிகு சுப்ரமண்யசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |

## சமூக நல நிறுவனங்கள்—13

வ. எண் — திருக்கோயில் பெயர் மற்றும் ஊர்

### சித்த மருத்துவமனைகள்—9

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.
2. அருள்மிகு சுப்ரமண்யசுவாமி திருக்கோயில், குமாரவயலூர்.
3. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
4. அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், மருதமலை.
5. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.
6. அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி.
7. அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், திருத்தணி.
8. அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.
9. அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

### முதியோர் இல்லங்கள்—3

10. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.
11. அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், திருத்தணி.
12. அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

### காது கேளாதோர் பள்ளி—1

13. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.





## கருணை இல்லங்கள்—34

| வ. எண் | இடம் | திருக்கோயில் பெயர் அருள்மிகு : | கருணை இல்லங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | ஆண்கள் | பெண்கள் |
| 1. | திருவேற்காடு | தேவி கருமாரியம்மன் திருக்கோயில் | 1 | – |
| 2. | திருத்தணி | சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் | 1 | 1 |
| 3. | பழனி | தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் | 1 | 1 |
| 4. | சமயபுரம் | மாரியம்மன் திருக்கோயில் | 1 | – |
| 5. | மதுரை | மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் | – | 1 |
| 6. | திருச்செந்தூர் | சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் | 1 | – |
| 7. | இராமேசுவரம் | இராமநாத சுவாமி திருக்கோயில் | – | 1 |
| 8. | மயிலாப்பூர் | கபாலீஸ்வரர் திருக்கோயில் | 1 | – |
| 9. | மருதமலை | சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் | 1 | – |

[2008 ஏப்ரல் 25

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | பண்ணாரி | பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் | 1 | 1 |
| 11. | அழகர்கோயில் | கள்ளழகர் திருக்கோயில் | – | 1 |
| 12. | சோளிங்கர் | லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் | 1 | – |
| 13. | திருவண்ணாமலை | அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் | 1 | – |
| 14. | சுவாமிமலை | சுவாமிநாத சுவாமி திருக்கோயில் | 1 | – |
| 15. | சேலம் | சுகவனேஸ்வரர் திருக்கோயில் | 1 | – |
| 16. | தேக்கம்பட்டி | வனபத்ர காளியம்மன் திருக்கோயில் | 1 | – |
| 17. | அய்யம்பாளையம் | வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில் | 1 | – |
| 18. | திருப்பரங்குன்றம் | சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் | – | 1 |
| 19. | ஒப்பிலியப்பன் கோயில் | வெங்கடாசலபதி திருக்கோயில் | – | 1 |
| 20. | மணவாளநல்லூர் | கொளஞ்சியப்பர் திருக்கோயில் | 1 | – |
| 21. | திருநாகேஸ்வரம் | நாகநாத சுவாமி திருக்கோயில் | 1 | – |



2008 ஏப்ரல் 25]

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | கொடுமுடி | மகுடேஸ்வரர் வீரநாராயணப் பெருமாள் திருக்கோயில் | 1 | – |
| 23. | ஈச்சனாரி | விநாயகர் திருக்கோயில் | 1 | – |
| 24. | பேரூர் | பட்டீஸ்வர சுவாமி திருக்கோயில் | – | 1 |
| 25. | ஆனைமலை | மாசாணியம்மன் திருக்கோயில் | – | 1 |
| 26. | காரைக்குடி | கொப்புடை நாயகி அம்மன் திருக்கோயில் | 1 | – |
| 27. | சிவன்மலை | சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் | 1 | – |
| 28. | மடப்புரம் | அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயில் | 1 | – |
| 29. | திருநெல்வேலி | நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயில் | – | 1 |
| 30. | சென்னை | முத்துக்குமார சுவாமி திருக்கோயில் என்னும் கந்தசுவாமி திருக்கோயில் | 1 | – |
| 31. | தாயமங்கலம் | முத்துமாரியம்மன் திருக்கோயில் | 1 | – |
| | | மொத்தம் | 23 | 11 |

## இணைப்பு III

(174 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 47—இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

## அறிவிப்புகள், 2008–2009

### 1. ஒரு கால பூஜைத் திட்ட விரிவாக்கம்

தமிழகத்தில் தற்போது 10,947 திருக்கோயில்களில் ஒரு கால பூஜைத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இன்னும் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதி உதவி தேவைப்படும் திருக்கோயில்களின் எண்ணிக்கை 1,567 மட்டுமே ஆகும். இந்த 1,567 திருக்கோயில்களும் இந்த ஆண்டிலேயே ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஒரு கால பூஜைத் திட்டத்தில் கொண்டு வரப்பட்டு, இத்துறையில் ஒரு கால பூஜை கூட இல்லாத திருக்கோயில்கள் எதுவும் இல்லை என்ற வரலாறு படைக்கப்படும்.

### 2. புதிய கருணை இல்லங்கள்

தற்போது திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் 34 கருணை இல்லங்களில் 864 ஆதரவற்ற சிறுவர், சிறுமியர் தங்கிப் பயனடைகின்றனர். இந்தக் கருணை இல்லங்கள் அந்தந்த திருக்கோயில்கள் நிதியிலிருந்து மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். அன்பும் கருணையும் இருக்கும் இடமே ஆண்டவன் உறைவிடம் என்பதன் அடிப்படையில், அதிக அளவில் ஆதரவற்ற சிறுவர், சிறுமியர் பயன்பெறும் வகையில், மேலும் 10 கருணை இல்லங்களை, திருக்கோயில்கள் சார்பில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 3. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்துதல்

தமிழகம் முழுவதுமுள்ள திருக்கோயில்களில் உள்ள விலை மதிப்புள்ள நகைகள், தெய்வத் திருமேனிகள் போன்றவற்றின் விவரங்கள், அந்தந்தத் திருக்கோயிலில் உள்ள பாதுகாப்புக்

[2008 ஏப்ரல் 25

குறைபாடுகள் முதலியன சேகரிக்கப்பட்டு, திருக்கோயில்களில் தற்போதுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்த காவல் துறையோடு கலந்தாலோசனை செய்யப்பட்டு ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். அதன் ஒரு பகுதியாக, நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் ரூ.5 கோடியில் ஒரு மைய நிதி ஏற்படுத்தப்பட்டு அதில் கிடைக்கும் வட்டி வருவாயிலிருந்தும், நன்கொடையாளர்கள் உதவி பெற்றும் நிதி வசதியற்ற திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

**4. ஆதி திராவிடர் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்கு நிதியுதவி**

ஆதி திராவிட மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள, ஆயிரம் சிறிய திருக்கோயில்களில் தலா ரூ. 25,000/- மதிப்பீட்டில் பழுதுபார்க்கும் பணிகள் ரூ.2.50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். நிதி வசதி மிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம்மூலம் இதற்குத் தேவையான நிதி பெறப்படும்.

**5. நாயன்மார்களுக்கும், ஆழ்வார்களுக்கும் சிறப்பு விழா எடுத்தல்**

தற்போது சேக்கிழார், திருஞானசம்பந்தர், ஔவையார் தாயுமானவர் போன்ற சில அருளாளர்களுக்கு மட்டும்தான் ஆண்டுதோறும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. செம்மொழியாம் தெய்வீகத் தமிழில் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளையும் பிரபந்தங்களையும் பாடிப் பரவிய நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் போற்றும் வகையில், அனைத்து நாயன்மார்கள், ஆழ்வார்கள், இராமானுஜர் முதலிய அருளாளர்களுக்கும் அவரவர்களுக்கு உரிய நாளில், உரிய இடத்தில் ஆண்டுதோறும் சிறப்பு விழாக்கள் நடத்தப்படும். இதற்கு ஆகும் செலவு, இந்து சமய அறநிலையத் துறை பொது நல நிதியிலிருந்து வழங்கப்படும்.

**6. திருக்கோயில்களில் ஒழுக்கநெறி வகுப்புகள்**

ஒழுக்கம் விழுப்பம் தருவதால் அது உயிரினும் மேலானதாகக் காக்கப்பட வேண்டும் என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க, இளம் வயதில் சிறுவர் சிறுமியர்களுக்கு நன்னெறி புகட்டும் வகையில், இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 485 திருக்கோயில்களில் தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரங்களில் சிறுவர்,



2008 ஏப்ரல் 25]

சிறுமியர்களுக்கு ஒழுக்கநெறி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்த வகுப்பு சனிக்கிழமைகளிலும் நடத்தப்படும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

**7. திருக்கோயில்களில் நூலகங்கள்**

நிதிவசதியும், இடவசதியுமுள்ள 100 முக்கியத் திருக்கோயில்களில் பக்தர்களின் பயன்பாட்டுக்காக நூலகங்கள் அமைக்கப்படும்; இந்த நூலகங்களில் ஆன்மீக இதழ்கள், நூல்கள் முதலியவை அந்தந்தத் திருக்கோயில் செலவில் வாங்கி வைக்கப்படும்.

**8. தமிழில் நல்ல ஆன்மீக/நீதி நூல்கள் வெளியிடப்படுவதற்கு நிதியுதவி**

தமிழில் நல்ல ஆன்மீக/நீதி நூல்கள் வெளியிடப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழில் வெளியிடப்படும் சிறந்த ஆன்மீக/நீதி நூல்களுக்கு இத்துறையின் பொது நல நிதியிலிருந்து ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்படும்.

**9. வெளிநாட்டு திருக்கோயில்களுக்கு ஆன்மீக நூல்கள் நன்கொடை**

தமிழில் உள்ள சிறந்த ஆன்மீக, நீதி நூல்களை வாங்கி, வெளிநாட்டில் உள்ள இந்து திருக்கோயில்களுக்கு நன்கொடையாக அளிக்கப்படும்.

**10. திருக்கோயில்களில் யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி**

"உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்", "உடம்பார் அழியின் உயிரார் அழிவர், திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்" என்ற திருமூலரின் வாக்கின்படி, உடல் நலத்தையும், மன வளத்தையும் பேணிக் காப்பது இன்றியமையாததாகும். இதைக் கருத்தில் கொண்டு, உரிய இடவசதி உள்ள 50 பெரிய திருக்கோயில்களில் தினந்தோறும் காலை வேளையில் யோகாசனப் பயிற்சி செய்வதற்கும், அமைதியாக தியானம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

**11. கிராமப்புறங்களில் பக்தி இசை பரப்புதல்**

இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, நிதிவசதி இல்லாத, 2,000 கிராமப்புறத் திருக்கோயில்களில், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் திருவிழா நாட்களிலும், மற்ற நாட்களில் காலை/மாலை வேளைகளிலும் பக்தி இசை ஒலிப்பரப்பிட

ஒலிபெருக்கி வசதி ஏற்படுத்தித் தரப்படும். நிதிவசதியுள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் செய்தும், நன்கொடையாளர்கள் மூலமும் ரூ.1.50 கோடி மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**12. அறநிலையத் துறை நடத்தும் கல்லூரிகளை மேம்படுத்த சிறப்புத் திட்டம்**

இந்து சமய அறநிலையத் துறையால் நடத்தப்படும் குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி, குழித்துறை தேவி குமரி மகளிர் கல்லூரி, பூம்புகார் கல்லூரி ஆகிய மூன்று கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டடங்கள், ஆய்வகம், நூலகம், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், கணினிகள் முதலியவை போதுமானதாக இல்லை. இவ்வசதிகளைப் பெறுவதற்கு இந்தக் கல்லூரிகளில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், இந்த வசதிகளைச் செய்து தருவதற்காகவும், இக்கல்லூரிகளின் வளர்ச்சிக்காகவும், ஆண்டுதோறும் தலா ரூ.15 இலட்சம் வீதம் ரூ.45 இலட்சம் அளிக்கப்படும். இதற்காக நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றத்தின் மூலம் உதவி பெற்று ரூ.5 கோடி அளவில் மைய நிதி உருவாக்கப்படும்.

**13. திருக்கோயில் கல்வி நிலையங்கள் மேம்படுத்துதல்**

திருக்கோயில்களால் நடத்தப்படும் 36 பள்ளிகளில் அடிப்படை வசதிகள், கட்டடங்கள், ஆய்வகம், நூலகம், கணினிகள் போதிய அளவில் இல்லை. இங்கு பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த வசதிகளை அளிப்பதற்காக நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றத்தின் மூலம் ரூ.5 கோடி நிதி திரட்டி ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**14. திருக்கோயில் மடப் பள்ளிகள் மேம்படுத்துதல்**

திருக்கோயில்களில் உள்ள மடப்பள்ளிகளில் வசதிகள் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும். முதல் கட்டமாக 100 முதுநிலைத் திருக்கோயில்களில் ரூ.1 கோடி மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**15. திருக்கோயில்களில் தூய்மை**

முதுநிலை திருக்கோயில்களில் தூய்மை செய்யும் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றைப் பயன்படுத்தி திருக்கோயில் வளாகம் அன்றாடம் தூய்மைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படும்.





**16. திருக்கோயில் புரவலர் திட்டம்**

திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்வதற்காக ரூ.5 இலட்சம் பொது நல நிதிக்கு நன்கொடையாக அளிப்பவர்களுக்கும், ஏதேனும் ஒரு திருக்கோயில்களில் ரூ.5 இலட்சத்துக்குக் குறையாமல் திருப்பணி செய்பவர்களுக்கும் அல்லது அத்தகைய நிறுவனத்துக்கும் 'திருக்கோயில் புரவலர்' என்று பொறிக்கப்பட்ட தங்க நிற அட்டை வழங்கப்படும். இவர்கள் குடும்பத்தினருக்கு அல்லது அந்த நிறுவனத்துக்கு (ஐந்து பேருக்கு மேற்படாமல்) தமிழகத்தில் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் தரிசனம் செய்ய சிறப்பு நுழைவு அனுமதி வழங்கப்படும்.

**17. திருக்கோயில் திருப்பணி பெருங்கொடையாளர் திட்டம்**

தற்போது திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும் திருப்பணி வேலைகளில், தனியார் தொழில் நிறுவனங்களும், தொண்டு அமைப்புகளும், நன்கொடையாளர் என்ற முறையில் பங்கேற்று அத்தகைய பணிகளில் குறிப்பிட்ட சிலவற்றை ஏற்று நிறைவேற்றி வருகின்றனர். தமிழகத்தில் முற்றிலும் சிதிலமடைந்த, பெரும் பொருட் செலவில் திருப்பணி செய்திட வேண்டிய திருக்கோயில்கள் நூற்றுக்கணக்கில் உள்ளன. இத்தகைய திருக்கோயில்களை நன்கொடை அடிப்படையில் முழு அளவில் திருப்பணி செய்திட முன்வரும் பிரபல தொழில் நிறுவனங்கள், தனியார் தொண்டு அமைப்புகள் போன்றவற்றுக்கு அங்கீகாரம் வழங்கி ஊக்கப்படுத்தப்படும். இவ்வாறு புதுப்பிக்கப்படும் திருக்கோயில்களில் அந்தந்த நிறுவனத்தின் பெயர்ப் பலகை அமைக்கப்பட்டு கௌரவிக்கப்படும் வகையில் "திருக்கோயில் திருப்பணி பெருங்கொடையாளர் திட்டம்" என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

**18. இந்து சமய அறநிலையத் துறை பணியாளர் பயிற்சி நிலையம்**

திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கும் தனித்தன்மை வாய்ந்த ஒரு பயிற்சி தேவைப்படுகிறது. தமிழில் அடிப்படைக் கல்வி, சமய இலக்கியங்களிலும், ஆன்மீக நெறிகளிலும் போதிய அறிவு, மனிதநேயப் பண்புகள், ஒழுக்கம், நிருவாகத் திறன் போன்ற பல்வேறு துறைகளில் இப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பது அவசியம் ஆகிறது. தற்போது, நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் செயல் அலுவலர்களுக்கு களப்பயிற்சி மட்டுமே அளிக்கப்படுகிறது. அதுவும், பிற

[2008 ஏப்ரல் 25

அலுவலர்களுடன் சேர்ந்து, அவர்களாகவே பணி விவரங்களை அறிந்துகொள்ளும் வகையில் உள்ளதே ஒழிய, முறையான பயிற்சித் திட்டம் இல்லை. திருக்கோயில் பணியாளர்களுக்கு என எவ்விதப் பயிற்சி ஏற்பாடும் இல்லை. எனவே, இத்துறை அலுவலர்களுக்கும், திருக்கோயிலில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், அவர்கள் பணியில் சேரும்போதும், பின்னர் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையும் உரிய பயிற்சி அளித்திடும் வகையில் இத்துறைக்கென சென்னையில் ஒரு பயிற்சி நிலையம் உருவாக்கப்படும்.

## 19. திருக்கோயில் பணியாளர்கள் நலத் திட்டங்கள்

திருக்கோயில் பணியாளர்களின் நலன்களுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

(அ) திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படும் சிறப்பு பணிக்கொடைத் தொகை ரூ.1000/-லிருந்து ரூ.5000/-ஆக உயர்த்தப்படும்.

(ஆ) ஆண்டு வருமானம் குறைவாக உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவைத் தொகையை வழங்குவதற்கென ஒரு மைய நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து பணியாளர்கள் சம்பள நிலுவைத் தொகையைப் பெறுவதற்கென விதிக்கப்பட்டுள்ள, திருக்கோயில்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ.40,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

(இ) திருக்கோயில்களில் உள்ள நிலை-4 செயல் அலுவலர்கள் பணியிடங்களில் 25 சதவீதம் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒதுக்கப்படும். பணி மூப்பு, கல்வித் தகுதி, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் திருக்கோயில் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு இப்பணியிடங்களில் நியமிக்கப்படுவார்கள்.

(ஈ) பணியில் இருக்கும்போது இறக்க நேரிடும் திருக்கோயில் பணியாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் குடும்ப நலத் தொகை ரூ.75,000/-ஐ ரூ.1 இலட்சமாக உயர்த்தப்படும்.

(உ) சீருடை அணியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் சலவைப்படி ரூ.20/-லிருந்து ரூ.30/-ஆக உயர்த்தி வழங்கப்படும்.



2008 ஏப்ரல் 25]

## 20. இணை ஆணையர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள்

திருச்சி, சேலம், வேலூர், சிவகங்கை, விழுப்புரம் ஆகிய ஐந்து மண்டலங்களில், இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் தணிக்கை அலுவலகங்கள் ஆகியவை ஒரே இடத்தில் அமையுமாறு, திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் மொத்தம் ரூ.2.50 கோடி மதிப்பில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

## 21. அறநிலையத் துறை நடைமுறைக் கையேடு (Manual) தயாரித்தல்

இந்து சமய அறநிலையத் துறைக்கென நடைமுறைக் கையேடு (Manual) தயாரிக்கப்பட்டு 40 ஆண்டுகள் கடந்து விட்டன. திருக்கோயில்களில் நிருவாகம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், சட்டவிதி முறைகள், அரசு அவ்வப்போது வழங்கியுள்ள ஆணைகள், அறிவுரைகள் போன்றவை இந்த நிருவாக நடைமுறை கையேட்டில் உரியவாறு சேர்க்கப்பட்டு, புதிய கையேட்டை வெளியிட வேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே, ஓய்வு பெற்ற அலுவலர்களை தொகுப்பூதிய அடிப்படையில் அமர்த்தி, இப்புதிய கையேட்டை (Manual) வெளியிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். திருக்கோயில் பணியாளர்களுக்கான பணி விதிமுறைகளை வரன்முறை செய்யும் பணியையும் இந்த அலுவலர்கள் கவனிப்பர்.

## 22. அறநிலையத் துறைக்கென்றே பொறியாளர்கள்

இந்து சமய அறநிலையத் துறையில் திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணி வேலைகள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்து, பணிகளை மேற்பார்வையிட தனியாக ஒரு பொறியியல் பிரிவு உள்ளது. முன் எப்போதும் இல்லாத வகையில் பெரும் அளவில், தற்போது திருப்பணி வேலைகள் மாநிலம் முழுவதிலும் நடைபெறுகின்றன. எனவே, இத்துறையில் அனுமதிக்கப்பட்டுள்ள உதவிப் பொறியாளர் பணியிடங்களில் பாதி இடங்கள் இத்துறைக்கென்றே பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நேரடி நியமன அடிப்படையிலும், மீதிப் பாதி இடங்கள் பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையிலிருந்து அயற்பணி அடிப்படையிலும் நிரப்பப்படும்.

[2008 ஏப்ரல் 25

**23. மண்டலவாரியாக சிறப்பு வழக்கறிஞர்கள்**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக சிவில் நீதிமன்றங்களிலும், உயர்நீதிமன்றத்திலும் நடைபெறும் வழக்குகளில் வாதாடி வெற்றி பெறும் வகையில், திருக்கோயில்கள் சார்பில் திறமை வாய்ந்த வழக்கறிஞர்கள் அமர்த்தப்படுவர். இதற்கென, மண்டல வாரியாக, தேர்ந்த வழக்கறிஞர்கள் பட்டியல் தயாரித்து நடைமுறைப்படுத்தப்படும்.

**24. பழனி திருக்கோயில் சார்பில் குருவாயூரில் தகவல் மையம்**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு சென்னை, தியாகராய நகரில் ஒரு தகவல் நிலையம் உள்ளது போல், அருள்மிகு பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் கேரள மாநிலம் குருவாயூரில் ஒரு தகவல் மையம் ஏற்படுத்தப்படும்.

**25. ஓதுவார் பயிற்சி நிலையம்**

சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் சார்பாக, ஓதுவார் பயிற்சி நிலையம் ஒன்று துவங்கப்படும்.

**26. வேலூரில் தகவல் மையம்**

வேலூர் நகரில் இத்துறை சார்பில் ஒரு தகவல் மையம், பக்தர்கள் தங்கும் விடுதி மற்றும் வணிக வளாகம் ஆகியவை திருத்தணி அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**27. தங்கத் தேர்த் திருப்பணி**

அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில், அரியாக்குறிச்சி, அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை, அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில், உறையூர், அருள்மிகு அங்காளபரமேஸ்வரியம்மன் திருக்கோயில்,



2008 ஏப்ரல் 25]

மேல்மலையனூர், அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயில், பாரியூர், அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம், அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், கோபி, அருள்மிகு இலட்சுமிநரசிம்ம சுவாமி திருக்கோயில், சோளிங்கர், அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில், கன்னியாகுமரி, அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயில், அழகர்கோயில் ஆகிய பன்னிரண்டு திருக்கோயில்களில் புதியதாக தங்கத் தேர் செய்யப்படும்.

**தங்க விமானத் திருப்பணி**

*28.* திருப்பெரும்புதூர், அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பாஷ்யக்கார சுவாமி திருக்கோயிலில் தங்க விமானம் புதுப்பிக்கும் பணி உள்ளிட்ட திருப்பணிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் உபயதாரர்மூலம் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு, நன்னீராட்டு வைபவம் விரைவில் நடைபெறும்.

*29.* திருக்கோட்டியூர், அருள்மிகு சௌமிய நாராயணப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.20 கோடி மதிப்பீட்டிலும், திருவில்லிப்புத்தூர், அருள்மிகு ஆண்டாள் திருக்கோயிலில் ரூ.8 கோடி மதிப்பீட்டிலும், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் தங்க விமானம், தங்க கலசம் புதுப்பிக்கும் பணிகள் நிறைவேற்றப்படும்.

**30. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்குக் கூடுதல் வசதிகள் செய்து தரும் நோக்கத்துடன் கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படும்:

(1) மலைக்கோயிலில் மேல் விஞ்ச் நிலையத்தில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் செய்தல்.

(2) சின்னகுமார மண்டபத்தில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் இருக்கை வசதிகளுடன் கூடிய வரிசை வளாகம் அமைத்தல்.

(3) கீழ் விஞ்ச் நிலையத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில், தங்கும் கூடம் மற்றும் வரிசை வசதி அமைத்தல்.

[2008 ஏப்ரல் 25

(4) தண்டாயுதபாணி நிலைய வளாகத்தில் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் புதிய உணவுக்கூடம் மற்றும் தங்கும் அறைகள் கட்டுதல்.

(5) தண்டாயுதபாணி நிலைய வளாகத்தில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் தரம் வாய்ந்த தரைத் தளம் அமைத்தல்.

(6) மலைக்கோயில் வடக்கு வெளிப் பிரகாரத்தில் புதிய அலுவலகக் கட்டடம், பஞ்சாமிர்த விற்பனை நிலையம் ஆகியவை ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்தல்.

(7) மலைக்கோயிலுக்கு மின்சாரத்தை யூஜி கேபில் வழியாகக் கொண்டு செல்லும் வகையில் 'பேனல் போர்டு' அமைத்தல் மற்றும் சுற்றுலாப் பேருந்து நிலையத்தில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் அதி உயர மின் விளக்கு அமைத்தல்.

(8) அருள்மிகு பெரியாவுடையார் திருக்கோயிலில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டுதல்.

(9) நடுநிலைப் பள்ளிக் கூடத்தில் ரூ.41.00 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டுதல்.

**31. இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் – ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்**

பக்தர்களுக்குக் கூடுதல் வசதிகள் அளிப்பதைக் கருத்தில் கொண்டு, இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**பெரிய திருக்கோயில்களில் பல்வேறு திருப்பணிகள்**

32. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர்,. அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் ஒவ்வொரு மாத அமாவாசை விழாவும், பங்குனி விழாவும் மிகவும் பிரபலமடைந்து, இலட்சக்கணக்கில் பக்தர்கள் இத்திருக்கோயிலில் கூடுகின்றனர். இவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கும், பெருகி வரும் பக்தர்கள் விரைவில் தரிசனம் செய்திடும் வகையில் திருக்கோயில் வளாகத்தை விரிவுப்படுத்துவதற்கும், ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒரு பெரும் திட்டம் செயல்படுத்தப்படும்.



2008 ஏப்ரல் 25]

33. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், ஒப்பிலியப்பன் கோயில், அருள்மிகு வேங்கடாசலபதி சுவாமி திருக்கோயிலில் ஒருங்கிணைந்த திருப்பணிகள் ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

34. கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருகோயிலில் ஒருங்கிணைந்த திருப்பணிகள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

35. ஈரோடு மாவட்டம், சக்தி வட்டம், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக, பவானி ஆற்றிலிருந்து குழாய் மூலம் திருக்கோயிலுக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் ரூ.1.44 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

36. வேலூர் மாவட்டம், இரத்தினகிரி, அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டிலான அறுகோண திருக்குளத் திருப்பணி நிறைவேற்றப்படும்.

37. திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில் முன்பு உள்ள பதினாறுகால் மண்டபத்தின் இருபுறமும் அழகுபடுத்தி புல்வெளி அமைத்தல், பக்தர்களுக்குக் கூடுதல் தங்குமிட வசதி ஏற்படுத்துதல், கருணை இல்ல மாணவர்களுக்குப் புதிய கட்டடம் கட்டுதல், திருவண்ணாமலை நகரத்துக்கு வெளியில் சேவார்த்திகள் இளைப்பாறுமிடம் ஏற்படுத்துதல், அடி அண்ணாமலையார் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்தல் ஆகியவை ரூ.1.67 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

38. கடலூர் மாவட்டம், திருவகீந்திரபுரம், அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயில் மலைப்பாதை அமைத்தல், அன்னதானக்கூடம் அமைத்தல், முடிகாணிக்கை மண்டபம் அமைத்தல், குளியலறை மற்றும் கழிப்பறை, திருமண மண்டபம், அலுவலகக் கட்டடம் மற்றும் விருந்தினர் விடுதி ஆகிய பணிகள் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

39. விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை, அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில் ராஜகோபுரத்திற்கு முன்புறமுள்ள முன்மண்டபம் காளியம்மன்—பிரகார மண்டபம், தங்கும் விடுதி, கழிப்பறை மற்றும் குளியலறை வசதிகள் ஆகிய பணிகள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 25

*40.* சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலில் சுற்றுப் பிரகார மண்டலம், பொங்கல் மண்டபம், பெண்கள் கழிப்பறை, ஆண்கள் கழிப்பறை, பெண்கள் உடை மாற்றும் அறை மற்றும் நிழல் மண்டபம் கட்டும் பணிகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*41.* பக்தர்களின் வசதியினை மேம்படுத்தும் நோக்கத்துடன், திருத்தணி அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்படும்.

*42.* சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர்கள் குடியிருப்பு கட்டப்படும். ஈக்காட்டுத்தாங்கலில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் திருவூரில் உற்சவ சுவாமி எழுந்தருளல் மண்டபம் கட்டப்படும்.

*43.* மதுரை மாவட்டம், அழகர் கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் பணியாளர்களுக்கு, 12 குடியிருப்பு கொண்ட 3 அடுக்கு கட்டடம் ரூ.48 இலட்சம் செலவில் கட்டப்படும்.

*44.* மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயிலில் ரூ.49 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்படும்.

*45.* ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பாரியூர், அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயிலில் நிறைவு பெறாத திருமண மண்டபப் பணியை ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மற்றும் திருக்கோயில் நிதி மூலம் நிறைவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*46.* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அ. கோ. படவேடு, அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில் திருப்பணி மற்றும் இராஜகோபுரம் கட்டும் பணி ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*47.* திருவண்ணாமலை மாவட்டம், ஆலூர், அருள்மிகு அகத்தீஸ்வர் திருக்கோயிலில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஏப்ரல் 25]

*48.* கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர், அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*49.* கடலூர் மாவட்டம், வேங்கடாம்பேட்டை, அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*50.* ஈரோடு மாவட்டம், பவானி, அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக்கோயிலில் சேவார்த்திகள் தங்கும் விடுதி ரூ.49.50 இலட்சம் மதிப்பீட்டிலும், இரண்டு வணிக வளாகங்கள் ரூ.19.35 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

*51.* இராசிபுரம் வட்டம், அத்தனூர் அருள்மிகு அத்தனூரம்மன் திருக்கோயில் திருப்பணிகள் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

*52.* சிவகங்கை மாவட்டம், திருவாடானை வட்டம், திருவெற்றியூர், அருள்மிகு பாகம்பிரியாள் திருக்கோயிலில் 5 நிலை இராஜகோபுரம் மற்றும் திருப்பணி வேலைகள் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*53.* மானாமதுரை வட்டம், மடப்புரம் அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் நவீன கழிப்பறை, அலுவலக மதிற்சுவர், பெண்கள் உடை மாற்றும் அறை, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டும் பணி ரூ.52 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*54.* சிவகங்கை மாவட்டம், அரியாக்குறிச்சி அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயிலைச் சுற்றி சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, வாகன அறை, சேவார்த்திகள் தங்கும் விடுதி, மடப்பள்ளி மற்றும் கோயிலைச் சுற்றி மின் விளக்கு அமைக்கும் பணி ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

*55.* திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் திருப்பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 ஏப்ரல் 25

56. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், தேரிக்குடியிருப்பு, அருள்மிகு கற்குவேல் அய்யனார் திருக்கோயிலில் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் ஓய்வு இல்லம் கட்டப்படும்.

57. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.35 இலட்சத்தில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

58. சென்னை, கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் இராஜகோபுரம், சரபேஸ்வரர் விமானம், 16 கால் மண்டப தரைத்தளம், சாலை வசதிகள் உள்ளிட்ட பணிகள் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

59. விழுப்புரம் மாவட்டத்தில் கூகையூர், அருள்மிகு பஞ்சாட்சரநாதீஸ்வரர் திருக்கோயிலில் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

60. விழுப்புரம் மாவட்டம், பூவரசங்குப்பம், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் சுவாதி மண்டபம் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

61. பெரம்பலூர் நகர், அருள்மிகு மதனகோபால சுவாமி திருக்கோயிலில் 5 நிலை இராஜகோபுரம் ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

62. கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், அய்யம்பாளையம், அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயிலில் நுழைவு வாயில் முன்பாக உள்ள ஓடையின்மீது ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்புப் பாலம் அமைத்தல், ரூ.19.30 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலைப் பள்ளியில் கிழக்கு மற்றும் வடக்கு மதில்சுவர் கட்டுதல், ஆண்கள் கழிப்பறை மற்றும் நீர்த்தொட்டி கட்டுதல் ஆகிய பணிகள் செய்து தரப்படும்.

63. கோவை மாவட்டம், பேரூர், அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன் தேர் செய்யப்படும்.

64. கோவை மாவட்டத்தில், அவிநாசி வட்டம், சேவூர், அருள்மிகு கல்யாண வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் ரூ.20 இலட்சம்



2008 ஏப்ரல் 25]

மதிப்பீட்டிலும், பொள்ளாச்சி வட்டம், சூலக்கல், அருள்மிகு மாரியம்மன் மற்றும் விநாயகர் திருக்கோயில் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டிலும், உடுமலை வட்டம், கொழுமம், அருள்மிகு தாண்டவேஸ்வரர் திருக்கோயில் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டிலும் உபயதாரர்கள் மற்றும் திருக்கோயில் நிதி மூலம் திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

65. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், தண்ணீர்பந்தல்பாளையம், அருள்மிகு தம்பிக்கலை அய்யன் திருக்கோயிலில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

66. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், தென்முகம் வெள்ளோடு, அருள்மிகு இராசா திருக்கோயிலில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

67. சென்னை, செம்மஞ்சேரி, அருள்மிகு சீனிவாசப்பெருமாள் திருக்கோயிலில் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று நிலை இராஜகோபுரம் கட்டப்படும்.

68. சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் செய்யப்படும்.

69. விழுப்புரம் மாவட்டம் மற்றும் நகர், அருள்மிகு வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயிலில் முன் மண்டபம், தாயார் சன்னதி, பெருமாள் சன்னதி மற்றும் பிரகார மண்டபம் முதலிய பணிகள் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

70. விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

71. திருவாரூர் மாவட்டம், குடவாசல், அருள்மிகு கோனேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூ.10.35 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி மேற்கொள்ளப்படும்.

72. கோவை மாவட்டம், பல்லடம் வட்டம், அய்யம்பாளையம், அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோயிலின் உபகோயிலான அவிநாசி வட்டம், குட்டகம், அருள்மிகு முக்கனீஸ்வரர் திருக்கோயிலில் மதிற்சுவர் கட்டும் பணி ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

73. கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பிச்சாம்பாளையம், அருள்மிகு மாரியம்மன் மற்றும் விநாயகர் திருக்கோயில்களில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் மகாமண்டபம் கட்டப்படும்.

74. ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், மயில்ரங்கம், அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

75. ஈரோடு மாவட்டம், சத்தி வட்டம், பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் தங்கரதம் சுற்றி வரும் பிரகார மண்டபத்திற்கு சுதை வேலைப்பாடுகள் செய்யும் பணி ரூ.22.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

76. நீலகிரி மாவட்டம், உதகை, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். மேலும், நீலகிரி மாவட்டம், பொக்காபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் சுற்றுப்பிரகார மண்டபம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

77. நீலகிரி மாவட்டம், எல்க்ஹில்ஸ், அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்கள் மற்றும் திருக்கோயில் நிதி மூலம் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

78. சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், எளம்பிள்ளை, அருள்மிகு மாரியம்மன் காளியம்மன் திருக்கோயிலின் திருமண மண்டபத்திற்கு சமையலறை, உணவருந்தும் கூடம் மற்றும் கழிப்பறை கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் மேற்கொள்ளப்படும்.



79. சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், கஞ்சமலை, அருள்மிகு சித்தேஸ்வர சுவாமி திருக்கோயிலில் மகாமண்டபம் மற்றும் மடப்பள்ளி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

80. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி, அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதி ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

81. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சின்னதிருப்பதி, காருவள்ளி, அருள்மிகு பிரசன்ன வெங்கட்ரமண சுவாமி திருக்கோயிலில் சுற்றுச்சுவர் மற்றும் தங்கும் விடுதி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

82. சேலம் மாவட்டம், இராசிபுரம் நகர், அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயிலில் பிரகாரம் மற்றும் தரைத்தளம் அமைக்கும் பணி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

83. திருச்செங்கோடு வட்டம், காளிப்பட்டி, அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலில் முன்மண்டபம், சுற்றுப்பிரகார மண்டபம் மற்றும் செயல் அலுவலர் குடியிருப்பு மராமத்து ஆகிய பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

84. சேலம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் கர்ப்பகிரகம், அர்த்தமண்டபம் மற்றும் மகாமண்டபம் அமைக்கும் பணி ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

85. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலில் வணிகவளாகம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

86. திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வடமதுரை, அருள்மிகு சௌந்திரராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் 22 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்டப்படும்.

87. இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோயில், அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலின் தேர்த் திருப்பணி ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்.

## இணைப்பு IV

(194 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 32—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## அறிவிப்புகள், 2008–2009

### 1. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகக் கிளையினை மதுரையில் அமைத்தல்

*தற்போது, பட்ட மேல் படிப்பு, தொழிற்சார் கல்வி மற்றும் நிருவாகத் தகுதிக்கான பட்டம் பெற்றவர்கள், பதிவு செய்யவும், அவர்களை வேலைகளுக்காகப் பரிந்துரை செய்யவும், மாநில அளவில், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்று சென்னையில் இயங்கி வருகிறது. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்களின் துயர் துடைக்கும் நோக்கில் தென் மாவட்டங்களில் உள்ள மனுதாரர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மதுரையில் கிளை அலுவலகம் ஒன்று துவங்கப்படும்.*

### 2. மேல்நிலைக் கல்வி பயின்ற மாணவர்களுக்கு மின்னணு [On-line] முறையில் தொழில் நெறி வழிகாட்டும் திட்டம்

*மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரவும், ஆதாயம் தரக்கூடிய பணியினைப் பெறவும், பல்வேறு வேலைவாய்ப்புகளைத் தேர்வு செய்து கொள்வதற்காகவும், மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் உதவிடும் வகையில், பொதுவான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவது துறையின் அடிப்படை குறிக்கோளாகும். உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான முக்கிய தகவல்கள் குறித்த தொழில் நெறி வழி காட்டுதல் நிகழ்ச்சி, மின்னணு [on-line] மற்றும் தொலைக்காட்சி வழி கலந்தாய்வு [video conferencing] முறையில் நடைபெற ஏற்பாடு செய்யப்படும்.*

### 3. 2007ஆம் ஆண்டிற்கான சிறப்புப் புதுப்பித்தல் சலுகை

*2001-2006 ஆம் ஆண்டுகளில் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்கள் தங்கள் பதிவினைப் புதுப்பித்துக்கொள்ளவும், தங்களது முந்தைய பதிவு மூப்பினைத் திரும்பப்பெறவும், தாமதத்தைப் பொறுத்து,*

சிறப்புப் புதுப்பித்தல் சலுகையினை அரசு வழங்கி ஆணையிட்டது. இதுவரை 3,80,138 பதிவுதாரர்கள் பயன்பெற்றுள்ளனர். தற்போது 2007 ஆம் ஆண்டிற்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். இதனால் சுமார் 40,000 மனுதாரர்கள் பயன்பெறுவார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**4. மனுதாரர்களைப் பதிவு செய்தல்**

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைக் கல்வித் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் அதிக எண்ணிக்கையில் மனுதாரர்கள் பதிவு செய்ய வேலைவாய்ப்பகங்களை அணுகுகிறார்கள். மனுதாரர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு பதிவு செய்ய வருவதில் ஏற்படும் போக்குவரத்துச் செலவு மற்றும் இதரச் செலவுகள் போன்ற சிரமங்களைக் குறைக்கும் நோக்கத்தில், மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இடங்களில் பதிவுப்பணி மேற்கொள்ளப்படும்.

**5. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவிட பணியமர்த்தும் பிரிவு துவங்குதல்**

தொழிற் பயிற்சி நிலையங்கள் திறன் வாய்ந்த மனித சக்தியை உருவாக்குகின்றன. அவை, பயிற்சி பெற்றவர்களை தொழிற்சாலைகளுக்குப் பரிந்துரை செய்வதுடன், அவ்வாறு பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் தொழிற் நிறுவனங்களில் சேர்ந்து தொழிற் திறன்களை வளர்த்துக் கொள்வதை உறுதி செய்து, தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பெற வழி வகுக்கின்றன. இருப்பினும், பயிற்சி பெற்றவர்கள் சுய தொழில்/வருமானம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்புப் பெற உதவிட எவ்வித முறையான வழிவகைகளும் இல்லை. எனவே, முன்னோடி திட்டமாக பணியமர்த்தும் பிரிவு ஒன்று சென்னை மண்டல பயிற்சி இணை இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்படும்.

**6. அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கு நல்லாசிரியர் விருது**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பயிற்றுநர்களுக்கு தற்போது நல்லாசிரியர் விருதுடன் ரூ. 500/- ரொக்கப் பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை தற்போது ரூ.1,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.





**7. பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் மிகையான இடங்களின் சதவீதத்தினை உயர்த்துதல்**

தமிழ்நாட்டில் தற்போது 39 பொறியியல் மற்றும் 17 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்துவதனை உறுதி செய்யும் பொருட்டும், தேசிய தொழிற் நெறி பயிற்சி கல்விக் குழு கூட்டத்தில் முடிவெடுத்ததன்படியும், மிகையான இடங்கள் நடப்பிலுள்ள பொறியியல் தொழிற் பிரிவுகளுக்கு 10 சதவீதத்திலிருந்தும், பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளுக்கு 20 சதவீதத்திலிருந்தும் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று 30 சதவீதமாக உயர்த்தப்படும்.

**8. தமிழ்நாடு கட்டுமான கலைக் கழகம் ஏற்படுத்துதல்**

மாநிலத்திலுள்ள கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை அதிகரிக்கவும், மனித வளத்தை மேம்படுத்தவும் கட்டுமான கலைக் கழகம் ஒன்று நிறுவப்படும்.

**9. உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு நவீன அச்சுப் பயிற்சி அளித்தல்**

பதிவு செய்யப்பட்ட உடலுழைப்புத் தொழிலாளர்களில் 100 பேர்களுக்கு, நபருக்கு ரூ.3,000/- வீதம் நவீன அச்சுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காகும் மதிப்பீட்டுச் செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும்.

**10. முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கு அழகுக் கலை பயிற்சி அளித்தல்**

பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களில், நபருக்கு ரூ.4,000/- வீதம் 100 பேர்களுக்கு அழகுக் கலை பயிற்சி அளிக்கப்படும். இதற்காகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும்.

**11. தையல் தொழிலாளர்களுக்கு பூத்தையல் பயிற்சி அளித்தல்**

பின்னலாடை மற்றும் பூத்தையலில் ஒரு உடலுழைப்புத் தொழிலாளிக்கு ரூ.3,000/- என்ற அடிப்படையில் 100 தையல் தொழிலாளர்களுக்கு பூத்தையலில் பயிற்சி அளிக்கப்படும். இதற்காகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும்.

[2008 ஏப்ரல் 25

**12. கைவினைத் தொழிலாளர்கள் மற்றும் பனைமரத் தொழிலாளர்களுக்கு கைத்திறன் தொழிலில் பயிற்சி அளித்தல்**

பனைமரப் பொருட்களான கூடைகள், மாலைகள், பொம்மைகள் மற்றும் இதர பொருட்கள் தயாரிப்பில் ஒரு தொழிலாளிக்கு ரூ.2,000/- வீதம் 100 தொழிலாளர்களுக்கு கைத்திறன் பயிற்சி அளிக்கப்படும். இதற்காகும் மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும்.

**13. காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்**

ஒரு தொழிலாளிக்கு ரூ.1,500/- வீதம் 100 தொழிலாளர்களுக்கு காலணி தயாரித்தல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்படும். இதற்காகும் மொத்த மதிப்பீட்டு செலவினம் ரூ.1.5 இலட்சம் ஆகும்.

**14. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் மருத்துவ பட்டப் படிப்பு, பொறியியல் பட்டப் படிப்பு, சட்டம், வேளாண்மை பட்டப் படிப்பு, பொறியியல் பட்டயக் கல்வி, மருத்துவ பட்டயக் கல்விபடிக்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது. இதனுடன் இளநிலை பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக் கல்வி, உடற்பயிற்சி பட்டப்படிப்பு ஆகியவற்றை கற்கும் 25 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ.2,400/-ம் ஆசிரியர் பயிற்சி பட்டயக் கல்வி, உடற்பயிற்சி பட்டயக் கல்வி கற்கும் 150 குழந்தைகளுக்கு வருடத்திற்கு ரூ. 1,440/-ம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். இதற்காகும் செலவினம் ரூ.5.50 இலட்சத்தை வாரியம் ஏற்கும்.

**15. 45 தின ஊதிய காவலர்களின் பணியினை வரன்முறை செய்தல்**

தொழிலாளர் துறையில் 10 வருடங்கள் பணி முடித்த 45 தின ஊதிய காவலர்களின் பணி வரன்முறை செய்யப்படும்.



2008 ஏப்ரல் 25]

**16. முன்னாள் குழந்தைத் தொழிலாளர்கள் 50 பேருக்கு உதவித்தொகை வழங்குதல்**

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் பயின்ற முன்னாள் குழந்தைத் தொழிலாளர்கள் 50 பேர்களுக்கு, அவர்கள் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும்போது மாதம் ரூ.250/- வீதம் உதவித்தொகை 2 வருடங்களுக்கு வழங்கப்படும்.

**17. குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்பு முறையினை செயல்படுத்துவதற்கு உணர்வூட்டல் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி அளித்தல்**

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்றுவதற்காக குழந்தைத் தொழிலாளர் கண்காணிப்பு முறையினை செயல்படுத்துவதற்கு உணர்வூட்டல் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஒப்புதலுடன், ரூ.26.80 இலட்சம் நிதி உதவியுடனும் மேற்கொள்ளப்படும்.

**18. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் மற்றும் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் உள்ள சிறந்த ஆசிரியர்களுக்கு விருது வழங்குதல்**

இண்டஸ் மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் இயங்கும் 17 மாவட்டங்களில் உள்ள சிறப்புப் பள்ளிகளில் மாவட்டத்திற்கு ஒரு ஆசிரியர் வீதம் சிறந்த ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ.3,000/-மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**19. மிகச் சிறு தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு விருது**

தொழிற்சாலைகளில் விபத்துக்களைக் குறைக்கவும், பாதுகாப்பை மேம்படுத்தவும், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு ஒவ்வொரு வருடமும், அவர்களது தொழிற்சாலைகளில் விபத்துகளைக் குறைத்திட மேற்கொண்ட சாதனைகளின் அடிப்படையில், தொழிற்சாலைகளுக்கு மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது அரசு மிகச் சிறிய தொழிற்சாலைகளுக்கும் பாதுகாப்பு விருதுகளுக்கான சான்றிதழ் வழங்குகிறது.

[2008 ஏப்ரல் 25

**20. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் ஏழு புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் தற்போதுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 7 புதிய பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும் :—

1. கம்பம் நகராட்சி
2. முத்தல்லாபுரம் (தூத்துக்குடி)
3. புதுக்கோட்டை (தூத்துக்குடி)
4. சின்னமனூர் (தேனி)
5. நாகர்கோவில் (புறநகர்)
6. கன்னியாகுமரி (நகரம்) மற்றும்
7. உத்தமபாளையம் நகராட்சி (தேனி)

D N 21/3/08 808 50.1

**21. சித்த மருத்துவப் பிரிவு துவக்குதல்**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் சித்த மருத்துவப் பிரிவு சிவகாசி, ஓசூர் மற்றும் திருச்சி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் துவங்கப்படும்.

**22. யோகா மருத்துவப் பிரிவு துவக்குதல்**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் ஒப்புதலுடன் யோகா மருத்துவப் பிரிவு கோயம்புத்தூர் மற்றும் மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் துவங்கப்படும்.

**23. ஸ்ரீபெரும்புதூர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தை ஒரு மருத்துவர் வகையிலிருந்து மூன்று மருத்துவர் வகையாக உயர்த்துதல்.**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழக ஒப்புதலுடன் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம், ஒரு மருத்துவர் வகையிலிருந்து மூன்று மருத்துவர் வகையாக உயர்த்தப்படும்.

கன்னிமாரா பொது நூலகம் 228382 சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.